BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 05 Issue - 100 29 Friday August 2008 ஐரோப்பாவில் ஆகக் கூடிய விலை 1 யூரோ



நோ சான்ஸ்... திருந்த இடமேயில்லை

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

ANNAM CATERING
020 8561 8316

SOLO MOVIES
07932 375 281

BALAN TAMIL KADAI
020 8540 2249

SPICELAND RESTAURANT
020 8667 1700

TK SIYA BHAVAN
020 8902 8083

ELE POS
020 84726661

JENNY MUSKET
020 8427 9755

SINTHU MAHAL
020 8477 1356

MANOR ROYAL STORES
01293 520 408

LAKSHAN THAMIL KADAI
020 8644 9532

NIRU
020 8640 8228

GLOBAL ESTATES
020 8682 5100

VBR
020 8540 8886

CHENNAI DOSA
020 8470 6566

SIVAYOGAM
020 8795 4258

PORTMAN ESTATES
020 8683 1313

தரத்தைப் பேணி
இலட்சியத்தில் உறுதியாய்
நின்று
புலம் பெயர் தமிழ் மக்களின்
குரலாய்
நூறு பூக்கள் மலர்ந்துள்ள
ஒரு பேப்பருக்கு
எங்கள் இதயம் நிறைந்த
வாழ்த்துக்கள்.

MONEY EXPRESS
020 8665 2555

K & K STATIONERS
020 8767 5149

MR K SIVASUBRAMANIAM
020 8549 2162

SOUTH HARROW FOOD & WINE
HARIN RESTAURANT
020 8423 6321

SELECT MORTGAGE
020 8548 0006

YHAAL HOUSE
020 8767 8585

PORTLAND ESTATES AGENTS
020 8683 1313

MIERRA JEWELLERY
020 8648 7750

KATPAGAM CASH & CARRY
020 8694 8810

PALM BEACH
020 8900 8664

SANGAMAM JEWELLERY
020 829 7221

JAFFNA HOUSE
020 8672 7786

EMREGAS
020 8472 6661

JOIN & MOVE - Satheeswaran
07960 120 424

SUVAI ARUVI
020 8543 6266

RAJ LAW SOLICITORS
020 8516 7730

BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர் ORU PAPER

Paper - 05 Issue - 100 29 Friday August 2008 ஐரோப்பாவில் ஆகக் கூடிய விலை 1 யூரோ

• நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
• வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
• உங்களுக்கு தேவையான **Tax Advice,** வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை **Accountancy Services**களுக்கும் நாட வேண்டிய இடம்...

Forward Consultants
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052

VBR Visual Business Retail Ltd.

Special Offers... Call: 020 8540 8886
2 EPOS & 1 Back Office PC for £3999*
1 EPOS FOR £1799*
Free 3 years POS PACK Warranty!!! Pricing, Promotion & Stock Control!!! Online Product, Order & Promotion!!!
Costcutter Nisa Today's Premier
Well over 200 retail, hospitality and cash & carry clients in the UK since 2004 * Offer valid from July 25th 2008 to August 24th 2008.

CLOCKWISE PROPERTY SERVICES
SALES | LETTINGS | MANAGEMENT | MORTGAGE | INSURANCE
LETTINGS & MANAGEMENT
▶ Free valuation & Advice
▶ Legal Documentation
▶ Full tenent referencing
▶ Inventory Preparation
▶ Regular inspections
▶ Rental collection
▶ Competitive fees
SALES (FREE APPRAISAL)
▶ Competitive fees
▶ Friendly service
FINANCIAL SERVICES
▶ Commercial & Residential
▶ Remortgage
▶ Buy to let
▶ Secured loans
415 B London Road, Mitcham, Surrey CR4 4BJ
E: info@clockwiseproperty.co.uk CALL
W: www.clockwiseproperty.co.uk 020 8646 0891

ABBEY TRAINING.NET
வகுப்புகள் NCPLH Certificate Course Life in the UK
Off Licence / Restaurant வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் Personal Licence & Premises Licence எடுத்து தருவோம்
Call: 020 8640 9900 / 07960 669 575
NESS & Co.
Immigration, Conveyancing, Licencing, Family Disputes & Others
Call: S.Thavanessan (NESS)
020 8665 2226 / 020 8640 5050 / 07956 913 164
38 London Road, Tooting SW17 9HP

RAJA & CO SOLICITORS
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
▶ Criminal Cases
▶ Civil Litigation
▶ Family
▶ Immigration
TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900
COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

Tiling Marble & Granite Flooring Plastering & Decoration
Electrical Wiring Plumbing & Heating - Conventional Boilers - Combination Boilers - Mega Glow - Kitchen Design & Fitting - Custom Built Units - Granite Work Tops
Bathrrom Design & Fitting - Vanity Units - Jacuzzi Power showers
S & S CONTRACTORS
Planning – Drawing – Construction
Project Management Architects, Engineers & Designers.
Tel: 020 8262 3885 Mob: 079 5658 6655
19, Carrick Drive, Barking Side, Essex, IG6 2LX

RAJ LAW SOLICITORS
உங்களுக்கு என்ன இடர் வந்தாலும் சட்டத்துடன் அதனைச் சந்திக்க நட்புணர்வுடன் நாம் இருக்கின்றோம்
This firm is authorised by the legal services commission to provide free legal advice for you for all types of criminal matters.
▶ Free 24 Hrs Police Station Attendance
▶ Magistrates, Crown Court & Court of Appeal
▶ Serious Crime, Murder/Attempted Murder
We speak Tamil, French and Creole
Experts in Criminal Defence Service (UK)
M: 07947 641 876 / 07956 067 587
T: 020 8516 7730/020 3133 0000
Trident Business Centre, 89, Bickersteth Road, Tooting Broadway, London SW17 9SH
24 hour police station emergency service

Prestige Creations
Let our International Award winning Sugar Crafter create the cake of your dreams...
Designs are made to order and are fully tailored to the clients specifications...
We have been creating exquisite cakes for over ten years using only the finest ingredients and craftmanship techniques.
Add an extra touch to your special day with a cake from Prestige Creations...
46 Belsize Park, Swiss Cottage, NW3 4EG
020 7449 2524 079 4686 3479 079 3924 6169

PERSONNALISED EELAM T-SHIRT
தாயக நினைவுடன் கூடிய T-shirt, Mugs & Caps உங்கள் விருப்பப்படி செய்து தரப்படும்
Call Guna on 07882 107 652
E-mail j.gunanesan@yahoo.co.uk

SANGAMAM JEWELLERY
ஆபரணம்
£500 மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு
OPEN ALL 7 DAYS. 10.00 AM - 7.00 PM.
377A Rayners Lane, Pinner, HA5 5EN Tel: 020 8429 7221

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்



Āyurveda

The Holistic Science of Healing

ARE YOU SUFFERING?

We have **health rejuvenation** and **therapeutic programmes** available to help you in many more ailments.

WHAT IS AYURVEDA?

The **"Science of Life"** that teaches us to live life in a true and natural balance.

NEED PAMPERING?

Treat yourself to a professional massage or herbal facial.

FREE CONSULTATION

- Herbal Oil Massages
- Medicated Steam Bath
- Genuine Oils & Medicines

Santhigram

KERALA ĀYURVEDA

80 Bradwell Road, Bradville, Milton Keynes, Bucks MK13 7AD

Tel: 01908 322154

Mob: 07976 951511

OTHER BRANCHES:

60 King Street, Southall, Middlesex, UB2 4DB

Tel: 020 8571 1770

Mob: 07932 730711

www.santhigramayurvedauk.com

info@santhigramayurvedauk.com

WE ACCEPT ALL MAJOR CREDIT & DEBIT CARDS

10% DISCOUNT FOR ALL TREATMENTS

RIVERSIDE CREATIONS

DJ Services
Party Planners
Design & Print
Webdesign
Video & Photography



"Everyone had a great time at my sisters wedding because of you. Thanks for making it special" - Shan, Harrow

"Yo! Great DJ'ying tonight! We all had a wicked time! You play good mixes of Tamil and English songs! Keep it up!" - Jeevan and family

"Hi bro, I like your editing and creative ideas. Keep it up and goodluck." - Sujo, High Wycombe

Say you saw it in ORU PAPER and get 10% discount!

DJ Vijay: 0208 205 1638 / 07984 550 043

Elango 07903753559 / Kannan07960555969

www.djvijay.com / www.riversidecreations.net

riversidecreations@gmail.com

NEW DESIGNS ARRIVED

நகைச்சீட்டு ஆரம்பம்

முன்கூட்டியே

பதிவு செய்யுங்கள்

Anthoorium

JEWELLERY & TEXTILES

FINEST QUALITY 22CT GOLD DIAMOND JEWELLERY & TEXTILES

பட்டுப் புடவைகள்

பஞ்சாபி வகைகள்

சுரிதார்கள்

சிறுவர் ஆடைகள்

102b Burlington Road,
New Malden, Surrey, KT3 4NT,

Tel: 0208 942 8001
Fax: 0208 942 8007
web: www.anthoorium.co.uk
email. sales@anthoorium.co.uk

வைரத்தாலிக் கொடி, அத்துடன் பழையதங்கத்தில் புதிய டிசைன் நகைகளை செய்து கொள்ள நாடுங்கள் இத்துடன் வாத்திய கருவிகளும் விற்பனைக்கு உண்டு.

போலி இல்லையா?

செ.பத்மநாதன் என்பவர் எழுதிய வாசகர் கடித்தத்தில் சாயிபாபாவின் மாஜாஜாலங்களை விளக்குவதற்கு, அவரது நண்பரினது வீட்டில் சாயி பாபாவின் படங்களிலிருந்து திருநீறு ஏளமாய் கொட்டுப்படுவதாக எழுதி யிருந்தார். ஒன்று கேட்கிறேன் இதனால் ஆருக்கு லாபம்? அவரது நண்பர் திருநீறை இங்கையுள்ள கோயிலு களுக்கு சப்பிளை செய்துதான் சீவிக் கிறாரோ தெரியவில்லை?

- இரகுநாதன், சட்பரி.

பாமரன் எங்கே?

என்ர அபிமானத்துக்குரிய பாமரன் எழுதிறார் எண்டு அமர்க்களப்படுத்தினியள். அவரும் இரண்டு தரம் எழுதினார். பிறகு காணயில்லை என்ன நடந்தது. தயவு செய்து அவரை எழுதச் சொல் லுங்கோ.

-மதுரா, ரூற்றிங்.

ஒட்டிக் கொண்டிருப்பவர்களுக்காய்..

கடந்த பேப்பரில் பிரசுரமான ஒட்டிக் கொண்டிருப்பவர்களுக்காய் ஒரு நாடகம் மிகவும் சிறந்த கட்டுரை. மகிந்தவுடன் பலர் இப்போது ஒட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அவர் கழட்டி விடக்கிள்ளைதான இவயளுக்கு விழங்கும். ஆனால் அதுக்கு முன்னம் இவயள் மகிந்தவிடமிருந்து வேறை ஆ ளொடை ஒட்டினாலும் ஆச்சரி யப்படேலாது. ஏனென்டா இதுகள் குருவிச்சை மாதிரி ஒட்டுண்ணியாய் வாழ்ந்து பழகீட்டினம்.

- செந்தில், கரோ.

ஈழத் தமிழருக்கென ஒரு தொலைக்காட்சி

எங்களுக்கு என ஒரு தொலைக்காட்சி இல்லை. அதனால் சினிமா குப்பையளையும், சின்னத்திரை எண்ட அறுவையளையும் எல்லா தொல்லை காட்சியளும் போட்டு எங்களுக்கு ஒரு மாந்த நிலையை உருவாக்குகினம். இதிலை விளக்கு கொஞ்சம் வித்தியாசமாய் விளையாட்டுகாட்டப்பாக்குது. அதை நீங்கள் புட்டு வைத்திருக்கிறியள்.

-பாபு ஒற்றாவா.

எழும்புக்காக அலையுதுகளே.

எப்போ வன்னி விழும் என்று வாயூறிக் காத்திருக்கும் பேரினவாத நாய்களுக்கு பாடம் புகட்டப்படும் என்பது நிச்சயம். ஆனால் எப்போ என்பதுதான் புரியாத புதிராக உள்ளது கிளிநொச்சி பிடிபடும் என்ற மாயையில் அதுகள் குரைக்கும் ஒலி, எலும்புக்காக அலையும் தங்க ளையும் தாக்குகின்றது என்பதை எங்கள் துரோகிகள் உணருவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

-ரவி, கனடா

கைகொடுப்போம்

சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் திரும்ப அது வரும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. ஆண்டுக்கணக்கில் நாட்டுக்காகப் போரிடும் எம் மற வர்களுக்கு கை கொடுப்பதும் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்து அல்லல் உறும் உறவுகளுக்கு உதவ வேண்டியதும் இன்றைய கட்டாயம். சந்தர்ப்பத்தை தவறவிட்டுப் பின் கவலைப் படுவதில் அர்த்தம் இல்லை.

-ஆனந்தம், ஈஸ்ற்காம்

கொச்சைப் படத்தாதீர்

தமிழ்நதி எழுதியபெண்கள் சந்திப்புப் பற்றிய கட்டுரை நன்ற ாக இருந்தது. பெண் பொலிகளை அது அம்பலப்படுத்தியது. இவர்கள் வாய்விச்சில் வல்லவர்களாக இருக்கிறார்கள். செயல்ப்பாட்டில் ஒன்றுமில்லை. தமிழீழ விடுதலைப் போரை கொச்சைப் படத்துவது கண்டனத்துக்குரியது.

- மதுமிதா, மிச்சம்,

ஆய்வாளர்களே

இவர்கள் அரசியல் ஆய் வாளர்களா? இராணுவ ஆய்வாளர் களா? சபேசன், வன்னியன்போன் றோர் செய்யும் ஆய்வு என்ன வகை யில்வரும்? ஆய்வென்பதுமக்களுக்க உண்மையையும் நம்பிக்கையையும் தரவேண்டும் கருணம் தப்பினால் மரணம் என்பார்கள். இராணுவ ஆய்வும் அத்தகையதே. கொஞ்சம் பிசகினாலும் பிழையான முடிவைக் கொடுத்து விடும். என வே ஆய்வாளர்கள் மக்கள் நலனையும் போராட்டம் மீதான நம்பகத் தன்மையையும் கொடுக்க வெண்டும்.

-கணேஸ் வெம்பிலி .

அறுசுவைதானா?

அறுசுவைதரும் அன்னையின் பால் என்று உமா மகாலிங்கம் எழுதி யுள்ளார். தமிழர் பலர் சொற்களை கவனமாகப் பாவிப்பதில்லை. என்ப தற்கு இது நல்ல உதாரணம். அறு சுவை என்பது உவர்ப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, இனிப்பு, உறைப்பு, எனபனவாகும். அன்னையின் பாலில் உறைப்பும் கசப்பும் எங்கிருக்கிறது. ஆனால் அறுசுவை தரும் அன்னையின் பால் என்று எழுது கின்ற போது கவனமாக இருக்க வேண்டாமா?

- மித்திரா, பிரான்ஸ்

இக்காலத்துக்குப் பொருந்துமா?

தமிழரும் அவர்கள் மதங்களும் என்னும் தலைப்பில் எழுதிவரும் சிவ தியாகராஜா அவர்கள் பழைய கால வரலாறுகளை அதாரப் படுத்தி எழுதுகிறார். அதை நான் வரவேற்கிறேன் அனால் அவை புலம் பெயர் சமூகத்திற்குப் பொருந்தாது. உண்மையைச் சொன்னால் இத்தொடரை வாசிப்போரின் வீதமும் மிகக்குறைவு எனவே அவர் பாதையை மாற்றி புலம்பெயர் சமூகத்துக்கும் இக் காலத்துக்கும் பொருந்தக் கூடிய வகையில் நகைச்சுவை கலந்த தமிழில் எழுத வேண்டுகிறேன். இல்லாவிட்டால் அவருடைய கருத்துக்கள் இலகுவில் நம்போன்ற வர்களைச் சென்றடைவது சிரமம். எனவே அவரை இத்தொடரில் கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

- சதீஸ், கனடா

அஞ்சாதே

உங்கள் உளியின் ஓசை விமர்சனம் பார்த்து நல்ல படமென்று நம்பி. அதைப்பார்த்து ஏமார்ந்துபோனேன். இம்முறை ஒரு பேப்பரில் அஞ்சாதே, சுப்ரமணியபுரம் ஆகிய படங்களின் குறிப்புகளைக்கண்ணுற்றபொதுஇப் படங்களைப் பார்ப்பதில்லை. என முடிவெடுத்தேன். ஆனால் பாரதிராஜா. பேட்டி ஒன்றில் இவ்விரு திரைப்படங்களையும் பிரமாதம் என்று சொல்லியிருந்தார். அப்படிப் பார்க்கையில் ஒரு பேப்பரும் சரியானதைத்தான் எழுதுகின்றது போல நான் அவ்விரு படங்களையும் பார்க்கப் போகிறேன்.

- சந்தியா, போர்ன். சுவிஸ்

வாசகர் கழிதம்

நன்றி ஒரு பேப்பர்

'படம் காட்டுறம் வாங்கோ' என்ற தலைப்புடன் வண்ணத்தில் சினிமாப் பத்திரிகைபோன்று இலவசப் பத்திரிகை ஒன்று கண்ணில் பட்டது. அதுவே ஒரு பேப்பரின் முதலாவது இதழ். வாசித்துப் பார்த்ததில் இங்கு இதுவரை வெளிவந்த பத்திரிகைகளிலிருந்து சற்று வித்தியாசமாக இருந்தமை மகிழ்வைத் தந்தது. இது நடந்து நான்கு ஆண்டுகளாகிறது. தொடர்ந்து வந்த தொண்ணூற்று ஒன்பது இதழ்களையும் வரி தவறாமல் வாசித்தவன் என்ற வகையில். ஒரு பேப்பர் பற்றிய சில கருத்துக்களை மனந்திறந்து கூறுகிறேன்,

ஒரு பேப்பர், நல்ல பல விடயங்களைத் தாங்கி வெளிவருகின்ற போதும், ஆரம்பத்தில், பத்திரிகையின் பெயர் மனதை உறுத்தியது. தமிழ்நாட்டு வெகுசன ஊடகங்களினைப்போல், தமிழைக்கொலை செய்து, தமிங்கிலத்தில் ஆக்கங்களை பிரசுரிக்கப் போகிறார்களா? என்ற கவலை ஏற்பட்டது. எல்லோரும் விளங்கிக் கொள்ளக் கூடிய இலகு மொழியில பத்திரிகை வெளியிடுகிறோம் என்று அதனை நீங்கள் நியாயப்படுத்தியிருந்தாலும், ஒரு பேப்பர், ஒசிப் பேப்பர் என்ற ஆங்கிலம் கலந்த வாசகங்களை என் போன்ற பலரால் ஏற்க முடியவில்லை.

திருஸ்டி பரிகாரம் போல் இவை அமைந்திருந்தாலும், உள்ளடக்கம் தரமாக இருந்தமையினால், வாசிக்க எடுக்கிற பேப்பரை முழுவதுமாக வாசிக்காமல் கீழே வைக்க முடியவில்லை. புலம்பெயர் தமிழ் மக்களுக்கு ஏற்ற மாதிரி, ஒரு சமூகப் பத்திரிகையாக ஒரு பேப்பர் வெளிவருவது, தமிழ் ஊடகப் பரப்பில் ஒரு மாறுதலை ஏற்படுத்தியிருக்கிறது என்று துணிந்து கூறலாம். எழுத்தாற்றல், மொழியறிவு கொண்டவர்கள்தான் எழுதலாம் என்ற நியதியை புறந்தள்ளிவிட்டு, எல்லோருக்கும் களம் அமைத்துக் கொடுப்பதால், மக்கள் மத்தியில் உள்ள பல்வேறுபட்ட கருத்துக்கள் இப்பத்திரிகை மூலம் வெளிவருவது அதன் சிறப்பு அம்சமாக அமைகிறது.

புலத்தில் வெளிவரும் சில தமிழ்ப் பத்திரிகைகளும், மற்றய சில ஊடகங் களும் தனிநபர் அல்லது குழுநிலை சார்ந்த விருப்பு வெறுப்புகளுடன் செயற்படும்போது ஒரு பேப்பர் அவ்விதம் செயற்படுவதில்லை என்றே கூறலாம். அதற்காக சுயதணிக்கையினை ஒரு பேப்பர் மேற்கொள்ளுவதில்லை என வாதிட நான் வரவில்லை. இருந்தாலும் தமிழ் தேசிய இனத்தின் நலனில் ஒரு பேப்பர் ஆசிரியர் குழு கொண்டுள்ள அக்கறை பலவிடங்களில் வெளிப்பட்டுள்ளது.

தனிநபர் தாக்குதல்களும், ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களும் ஒரு பேப்பர் ல் நிறையவே பிரசுரமாகியிருக்கிறது. இவை தவிர்க்கப்பட வேண்டும் அல்லது குற்றச்சாட்டுக்கள் ஆதாரங்களுடன் முன்வைக்கப்படவேண்டும். ஒளிந்திருந்து கல்லெறிவதுபோல் புனைபெயர்களில் தனிநபர் தாக்குதல் மேற்கொள்ளபடுகிறது. அவற்றிற்கான பொறுப்பினை அவற்றை எழுதிய அநாமதேயங்களிடம் விட்டுவிட்டு ஆசிரிய பீடத்தினர் நழுவிவிடும் போக்கினை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒரு பேப்பர் ல் வெளிவரும் ஆக்கங்களை எடுத்து நோக்கினால், அவை பலதரப்பட்டவர்களையும் கவரக் கூடியவிதமாக வெளிவருவது அதன் சிறப்பு. இங்கு வாழும் இளைய தலைமுறையினரின் கவனத்தையும் ஒரு பேப்பர் ஈர்த்துள்ளது என்பதில் நீங்கள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

வேறு ஊடகங்களில் வெளியான ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யும் போதுகூட அவை பொருத்தமாகத் தெரிவு செய்யப்பட்டு நேர்த்தியாக தொகுக்கப்படுவது, ஆசிரியர்களின் திறனை பறைசாற்றுகிறது. வெறுமனே 'வெட்டி-ஒட்டுதல்' போன்ற குற்றச்சாட்டுகளுக்கு இங்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை.

காலத்தின் தேவை கருதி, அரசியல் சார்ந்த கட்டுரைகள் அதிகமாகப் பிரசுரிக்கப்படுவது தவிர்க்க முடியாதது. இருப்பினும் இலக்கிய நயம் சார்ந்த ஆக்கங்களையும் ஒரு பேப்பர் ல் எதிர்பார்க்கிறோம். ஈழத்து இலக்கிய கர்த்தாக்களையும் படைப்பாளிகளையும் ஒரு பேப்பர் புறந்தள்ளிவிடக் கூடாது.

நூறாவது இதழை வெளியிடும் தருணத்தில் உங்களுக்கு ஒன்றைக் கூறவேண்டும், ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர வேண்டும் என் மனதார விரும்புபவர்கள் என்போல் ஆயிரமாயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரு வரி எழுதி தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்துவார்கள் என எதிர்பார்க்க முடியாது. அவர்களின் சார்பில், ஒரு பேப்பர் வெளியீட்டில் இணைந்திருக்கிற உங்கள் அனைவருக்கும் எனது வாழத்துக்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- தே. இரவீசங்கர்

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, AUGUST 29, 2008, ISSUE 100

நம்பிக்கையுடன் செயற்படுவோம்!

சிறிலங்கா அரச படைகள் வன்னியின் சில்பகுதிகளை ஆக்கிரமித்து நிற்பதனால், பாதுகாப்பான பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் பெரும் அவலத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். இம்மக்களுக்கு உதவுவதற்கு, தமிழ் உதவி அமைப்புக்களைத் தவிர வேறு எந்த அமைப்புகளும் முன்வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அவர்களது நலனில் எவ்வித அக்கறையுமில்லாத கொழும்பு அரசு, இடம்பெயர்ந்த மக்களின் உளவுரனை சிதைப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

விடுதலைப்புலிகளை கொன்றொழித்து, தமிழர் பிரதேசங்களை தமது படைகள் விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடும் என்ற நம்பிக்கையே இன்று சிங்கள மக்களின் பிணிதீர்க்கும் 'சர்வரோக நிவாரணியாக' இருக்கிறது. இந்த நம்பிக்கையை மூலதனமாக்கொண்டு மகிந்த இராஜபக்சவின் ஆட்சி தொடர்கிறது. அபிவிருத்திப் பாதையிலிருந்து விலகிப்போய், தோற்றுப்போன நாடுகளின் பட்டியலில் முதலிடத்தை நோக்கி முன்னேறிவரும் சிறிலங்கா அரசுக்கு யுத்தத்தை தவிர்த்தால், வேறு எதைத்தான் சாதிக்க முடியும்?

சிறிலங்கா அரசுக்கு இராணுவ, மற்றும் புலனாய்வு உதவிகளை செய்துவரும் இந்திய அரசின் கொள்கை வகுப்பாளர்களும், தமிழர்களுடனான யுத்தத்தை காரணங் காட்டியே சிறிலங்கா அரசை தம்பக்கம் வைத்திருக்க முடியும் என நம்புகிறார்கள். சமரசத்தீர்வு முயற்சிகளை மேற்கொள்ளுவதன் மூலம், மேற்குலக நாடுகள் சிறிலங்காவில் கால் பதித்துவிடும் என்ற அச்சமும் அவர்களிடம் உள்ளது.

தமிழ் மக்களால் கைவிடப்பட்டு, இந்திய, சிறிலங்கா அரசுகளினது தயவில் வாழும் ஒட்டுகுழுக்களும் எப்போது விடுதலைப் புலிகள் அழிக்கப்படுவார்கள் தாங்கள் மீண்டும் தங்களது மக்கள் விரோத நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம் எனக் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில், இனி நடக்கப் போவதை சரியாக எதிர்வுகூற முடியாத நிலையில், வெளிச்சக்திகளின் பக்கபலமின்றி நடைபெறும் எமது போராட்டத்தையிட்டும் ஈழத்தமிழ் மக்களின் எதிர்காலத்தையிட்டும், புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் அச்சம் கொள்வதனை விளங்கிக்கொள்ள முடிகிறது.

இருப்பினும் பல்வேறுபட்ட தரப்பினரது எதிர்ப்புகளையும், சூழ்ச்சிகளையும் ஈழத்தமிழர்கள் எதிர்கொள்வது இதுதான் முதற்தடவையன்று. இதுபோன்ற பெரும் நெருப்பாற்றை நீந்திக் கடந்து வந்த அண்மைக்கால வரலாற்றை நாம் திரும்பிப் பார்த்துக் கொள்வோம். எத்தகைய இடர்வரினும், வெல்வோம் என்ற நம்பிக்கையுடன், தமிழர்களின் வாழ்வாதாரமாக அமைந்துள்ள போராட்டத்துக்கு வலுச்சேர்ப்போம்.

ஒரு பேப்பர்

வணக்கம்!

பேப்பர் அடிக்கத் துவங்கிய நாளிலிருந்து 1.. 2.. 3.. என எண்ணத் தொடங்கி இப்ப 100வது பேப்பரில் வந்து நிற்கிறோம். இந்தத் தருணத்தில் கொஞ்சம் கடந்து வந்த பாதையையும் திரும்பிப் பாரக்கிறோம். எங்களுடன் கூடவந்தவர்களை இன்னும் வருபவர்களை.. நன்றியுடன் நினைந்து கொள்கிறோம்.

இது ஒரு மைல் கல்.. அல்லது கொஞ்சம் குறை வாய் கிலோ மீற்றர் கல் என்றெல்லாம் புழுகித் தள்ளவில்லை, ஆனால் இந்த 100 பேப்பருக்கு பின்னால் பலரினது உழைப்பு இருந்தது என்பதும் அது வேறெந்தப் பலனையும் எதிர்பாராமல் ஒரு பேப்பரின் வளர்ச்சியின்பால் பட்டது என்பதும் உண்மை.

ஒவ்வொரு பேப்பரையும் வெளிக்கொண்டு வருவதிலும் நாம் பட்ட வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அந்த சிரமங்களிலிருந்து இப்போதும் நாம் மீண்டுவிடவில்லை. 101வது பேப்பரை வெளிகொணரும்போதும் அது தொடரத்தான் போகிறது. இருந்தாலும் எமக்கு வாசகர்களாகிய நீங்களும் விளம்பரதாரர்களும் வெளிப்படுத்தும் ஆதரவில் எந்தத் துயரும் எங்களை நிலை குலைய வைத்ததில்லை.

'விடுகாலிகள்', 'பரதேசிகள்', 'அட்டமத்து சனியன்கள்', 'நாசமறுத்ததுகள்' இவை சில ஊர்ப் பெரிசுகளால் எங்களுக்கு வழங்கப்பட்ட மகுடப் பெயர்கள். 'இது ஒண்டு இரண்டு பேப்பரோடை நிண்டு போயிடும்.' 'பேப்பர் அடிக்கிறதுக்கு ஒரு தகுதி வேண்டாம்?' 'இவையளுக்கு ஏனிந்த தேவையில்லாத வேலை.' இவை எங்களை நோக்கி வந்த சில விமர்சனங்கள்.

இவற்றுக்கு நாங்கள் உரித்தானவர்களோ இல்லையோ, ஒரு பேப்பர் ரை தொடர்ந்து வாசித்து விட்டுத்தான் இந்தத் திறனாய்வுகள் நடைபெறுவதால் அவர்களுக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். இப்படி நீங்கள் திட்டுவதானால்தானோ என்னவோ எங்களால் தொடர்ந்து இயங்க முடிகிறது. இத்தனைக்கும் மத்தியில் எங்களுடன் கரங்கோத்துச் செயற்பட எப்போதும் ஒரு கூட்டம் தயாராய் இருக்கிறது.

உங்களைப் போல் எங்களுக்கும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மீது அக்கறையிருக்கிறது. அதனால் சிலநேரம் தமிழ் சமூகத்திற்கு இரண்டகம் செய்வோரை வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது.

தனிநபர்களினதும், பொது நிறுவனங்களதும் செயற்பாடுகள் தொடர்பாக விமர்சனங்கள் வரும்போது, அதனால் சிலர் சீற்றமடைவது வழமையான நிகழ்வாகிவிட்டது. விமர்சனத்திற்கான பதிலை தருவதை காட்டிலும், குறித்த நபர் அல்லது நிறுவனம் மீதான காழ்ப்புணர்வு காரணமாக நாம் அவ்விமர்சனங்களை பிரசுரிப்பதாகக் கூறி தப்பித்துக் கொள்கிறார்கள். ஒன்றை உறுதி செய்து செய்கிறோம், தங்களது சொந்த விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்துவதற்கு எவருக்கும் நாங்கள் தளம் அமைத்துக் கொடுப்பதில்லை. தவறி அப்படி நடந்தாலும் அதற்கான உரிய நடவடிக்கையை நாங்கள் எடுக்கத் தவறுவதில்லை. ஆகவே விமர்சங்களை ஆக்கபூர்வமான திசைக்கு திருப்புவதில் உங்களது பங்களிப்பு அவசியமாகிறது.

செப்ரெம்பர் முதலாம் நாள் கரங்கோத்துக் கொள்ளும் நண்பன் இளங்கோவுக்கும் அவரது இணை ஜெனிக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

நோய்வாய்ப்பட்டு, மருத்துவமனையிலிருந்து கொண்டு, வழமை போல் உற்சாகத்துடன் ஒரு பேப்பர் ன் 100வது இதழைக் காணத் துடித்துக் கொண்டிருக்கும் பாலாண்ணாவிற்கு இந்தப் பேப்பர் மகிழ்வைத் தரட்டும்..

மீண்டும் பேப்பர் 101 ல் சந்திப்போம்.

ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்

EDITORIAL

Fantasies

The anti-Tamil war in Sri Lanka grinds forward with its terrible human toll. According to independent reports in Tamil Vanni, more than two hundred thousand Tamil civilians have been uprooted from their homes and living in Darfur like conditions.

According to the report by the Vanni Justice and Peace Commission "the Sri Lankan security forces heavily bombard villages after villages forcing the people to flee from their traditional homeland. Not once, but again and again displacements continue. Even before the displaced people begin to settle down in one place, they are shelled to flee again. This inhuman exodus goes on and on."

The Government of Sri Lanka (GOSL) carries on with raids and widespread detentions of Tamils in other parts of Sri Lanka. For us, the Tamils 2008 is rapidly turning into Kumaratunge- Kadirgama's Operation Jayasikurui's 1998 and this unfolding tragedy is largely ignored by the international community especially by India as in 1998.

In the meantime the (American) Wall Street Journal op-ed article dated 28/8/8 encourages the Government of Sri Lanka (GOSL) to take "the battle to the Tigers in the north" and to "deal with the moderate Tamils left behind when the rebels are gone".

We say that the op-ed of the Wall Street Journal symbolises the real attitude of the international players towards the Tamils of Sri Lanka. They sincerely believe what the GOSL has been telling them. That is why they come out with predictions like "an end finally may be in sight to the war that has roiled the country for a quarter century" etc.

Whatever the Tamils have been telling the international community in the last fifty years or so have been ignored. This is similar to someone asking in the morning, "What is Rama's relationship with Seetha?" after listening to the whole Ramayana epic through the night- as our much missed Taraki Sivaram would have put it.

Do the cheerleaders for the war in Vanni know any history? Have they studied what happened to the previous GOSL's military adventures or the Indian military adventure in Vanni heartland?

"We had fed the heart on fantasies," William Butler Yeats wrote, "the heart's grown brutal from the fare."

From where we are standing the military adventurism of the GOSL and the cheerleaders' final victory predictions seem like fantasies.

Failed Agreements & Shelf-Agreements

Some opinion makers in the international community seem to think that the GOSL is genuinely interested in finding a just and lasting solution to the Tamils. The only party blocking this peaceful path is the Tamil Tigers and thus they have to be eliminated; these important players tell every one.

According to press reports India is trying to formulate a solution based on its 1987 peace plan and hoping that this will bring peace to Sri Lanka in some vague point in future.

We the Tamils, in side and out side Sri Lanka do not believe in this simple and dangerous myth making.

This is not due to eternal pessimism. This is because of our bitter experience in dealing with the GOSL in many peace talks even before the appearance of Tamil Tigers in our political scene.

We all know that all those talks ended up in failure or with "shelf agreements". The 1987 Indian led peace plan and the Post-Tsunami Operational Management Structure (P-TOMS) are good examples of shelf-agreements.

Peace talks are supposed to lead to a peace agreement, which would in turn lead to peace. What this reported Indian led negotiations may lead to is at best another shelf agreement.

Again this reported peace plan seems to indicate what the Indians want. This is an important issue in Indian political discourse. During the last few decades, this has been a central point of controversy between the Tamil Nadu people and their political masters in Delhi.

In the meantime nothing changed on the ground, at least not for the better: the oppression of Tamils in Sri Lanka by the GOSL institutions has been worsening all the time and the attitude of the Sinhala polity towards Tamils is worsening too.

The New, Generous Offer!

So let's see what the international community is offering the Tamils these days. The final-status proposal, according to the Wall Street Journal, includes the following points:

* Military annihilation of the Tamil Tigers

* Offer a political settlement to separate the moderate Tamils from the rebels

Now this sounds familiar to the 1987 advice given by the Indian Government to the GOSL led by Mr Jayewardene.

What the international community (and GOSL) means by a "comprehensive devolution plan" is essentially the Tamil Northeast with GOSL military supervision on its borders crossings, full of Sinhalese soldiers, Sri Lankan Air Force jets, GOSL military stations – and, of course, GOSLs right to send even more soldiers into Tamil Northeast whenever it wants.

This "comprehensive devolution plan" of the international community – as the Indian led 1987 proposals reveal – proves once again that Tamil do not have any saying in any thing that matters. In the meantime on the ground, all that GOSL seeks is time to expand the military occupation and to strangle Tamils, hoping the "Tamil terrorist problem" will eventually disappear.

On the discourse level among the Sinhalese, however, things are just as bad. Despite the false contrary impression cultivated by the GOSL propaganda machine and the international community, majority of Sinhalese clearly rejects even the notion of a "comprehensive devolution plan". The only solution they can offer is some Tamil living space under total Sinhalese control.

If you wonder why the GOSL-Tamil conflict remains unresolved, this is the simple answer: a peaceful, just and respectable solution is still unacceptable to the Sinhalese military and political leadership and to the majority Sinhalese civilians.

மாற்றப்பட்ட படைத்துறை உத்திகளும் படையினர் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும்.

அரூஸ்
(ஒரு பேப்பருக்காக)

இன்றைய உலகில் ஊடகங்கள் கணிசமான பங்கை வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. அரசியல், விளையாட்டுத்துறை, போர் என அதன் பங்களிப்புக்கள் அதிகமானது. எந்த ஒரு துறைக்கும் மக்களை கவர்ந்து இழுப்புதிலும், மக்களிடம் கருத்துருவாக்கங்களை ஏற்படுத் துவதிலும் அவற்றின் பங்கு அளப்பரியது.

அமெரிக்காவின் அரச தலைவர் ஆபிரகாம் லிங்கன் படுகொலை செய்யப்பட்ட போது அந்த செய்தி இந்தியாவை சென்றடைய அன்று 6 மாதங்கள் எடுத்திருந்தது. ஆனால் தற்போது அப்படியல்ல எந்த ஒரு சம்பவம் நடைபெற்றாலும் அது தொடர்பான தகவல்கள் ஒரு சில நிமிடங்களில் உலகின் எந்த ஒரு மூலை யையும் சென்றடைந்து விடும்.

இந்த தொழில்நுட்ப அனுகூலங்களை தற்போ தைய உலகம் தனக்கு சாதகமாக அதிகம் பயன் படுத்தி வருவதும் கவனிக்கத்தக்கது. அண்மை யில் ஜோர்ஜியா மீதான ரஷ்யாவின் படை நடவடிக் கையின் போது மேற்குலகமும், ரஷ்யாவும் மேற் கொண்ட பிரச்சாரங்கள் எதிர்மறையானவை.

ஜோர்ஜியாவின் கோரி நகரில் உள்ள சந்தைப் பகுதி ஒன்றின் மீது ரஷ்யாவின் மிக்-29 ரக தாக்கு தல் விமானங்கள் நடத்திய தாக்குதலில் பெருமளவான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அமெரிக்க சார்பு ஊடகமான சிஎன்என் தகவல் வெளியிட்டிருந்தது. ஆனால் அந்த சந்தை பகுதி யில் எந்த தாக்குதல்களும் நடைபெறவில்லை எனவும் தாக்குதல் நடைபெற்ற தடையங்கள் எதுவுமற்ற சந்தைப் பகுதியையும் ரஷ்யா ருடே (Russia Today) செய்தி நிறுவனம் ஒளி பரப்பு செய்திருந்தது.

அதே போலவே ஜோர்ஜியாவின் அனைத் துலக விமானநிலையம் தாக்குதலுக்கு உள்ளான தாக ஜோர்ஜியாவும், மேற்குலகமும் தெரிவித் திருந்த நிலையில் அந்த விமானநிலையத்தில் பிரான்ஸ் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வந்திறங்கிய போது அங்கு எந்த சேதங்களையும் கணமுடியவில்லை என ரஷ்யா செய்தி நிறுவனம் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

சிறீலங்காவின் நிலமையும் இதுவே அங்கு நடைபெறும் படை நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள் அதிக மானது. வெள்ளங்குளம் நோக்கி 58 ஆவது படையணியின் இராண்டாவது பிரிகேட் படையினர் நகர்ந்த போது படையினர் கிளிநொச்சியை அடைந்துவிட்டதாக அரச ஊடகங்கள் தெரிவித்திருந்தன. அதனை போல மணலாற்று களமுனையில் பிரிகேடியர் நந்தன உடுவத்த தலைமையில் நகரும் படையினர் மண்கிண்டிமலை பகுதியின் எல்லைகளை தாண்டு வதற்கே பெரும் சிரமப்படும் வேளையில் அவர் கள் முல்லைத்தீவை அடைந்துவிட்டதாக பிரச் சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மணலாற்று களமுனையை பொறுத்தவரையிலும் அங்கு விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல் அதிகம்.

மணலாற்று களமுனையை பொறுத்தவரை யிலும் அங்கு விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்கு தல் அதிகம். அடர்ந்த காட்டுப் புறத்திற்கு சமர் விரிவாக்கம் பெற்றுள்ளதால் அங்கு படையினர் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருவதாக படைத்தரப்பே பல தடவைகள் தெரிவித்திருந்தது. என வே தான் மன்னாரில் ஏ-32 நெடுஞ்சாலையை குறிவைத்து நகரும் 58 ஆவது படையணியும், மல்லாவியை குறிவைத்து நகரும் 57 ஆவது படை யணியும் பிரதேசங்களை கைப்பற்றியதாக அறிவித்துவரும் அரசு 59 ஆவது படையணி விடுதலைப் புலிகளின் முகாம்களை கைப்பற்றி வருவதாக தெரிவித்து வருகின்றது.

எனினும் தற்போதைய படை நடவடிக்கை படை யினரின் பிரச்சாரங்களை போல முன்னர் எப்போதும் இல்லாத அழுத்தங்களை விடுதலைப் புலிகளுக்கு கொடுத்துள்ளதா என்றால் அதற்கு சிறீலங்காவின் வரலாற்றில் மிகப்பெரியதும், நீண்ட துமான இராணுவ நடவடிக்கையான வெற்றி நிட்சயம் படை நடவடிக்கையின் சில பகுதி களையாவது ஆராய்வது பொருத்தமானது.

1997 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் நாள் (பௌத்த துறவிகளால் நல்லநாள் என குறித்து கொடுக்கப்பட்ட நாள் இராணுவத்தின் 55 ஆவது மற்றும் 53 ஆவது படையணிகளினால் ஆரம்பிக்கப்பட்ட வெற்றி நிட்சயம் படைநடவடிக் கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எதிர்த் தாக்குதல்கள் தற்போதைய படை நடைவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கையில் இருந்து வேறுபட்டது.

மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட வெற்றி நிட்சயம் படை நடவடிக்கை டிசம்பர் மாதத்தை அடைந்த போது படையினாரின் இலக்கான வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான 74 கி. மீ தூரத்தில் ஏறத்தாள 50 கி.மீ தூரத்தை படையினர் அடைந் திருந்தனர். இந்த காலப் பகுதியில் முன்நகர்ந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் 5 ஊடறுப்பு தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர். தென்னி லங்கை ஊடகங்களின் பார்வையில் அது செய் அல்லது செத்துமடி என்பதாகும் (Do or Die).

ஜூன் 10: தாண்டிக்குளம் ஆட்டிலறி மற்றும் கவசவாகன பிரிவு மீதான ஊடறுப்பு தாக்குதல் 180 இற்கு மேற்பட்ட இராணுவம் கொல்லப்பட்ட துடன், 320 பேர் காயமடைந்தனர், 27 பேர் காணாமல் போயினர்.

ஜூன் 24: ஓமந்தை - இறம்பைக்குளம் முன்ன னி நிலைகள் மீதான ஊடறுப்பு தாக்குதல் 75 பேர் பலி, 201 காயம்

ஆகஸ்ட் 01: ஓமந்தை - புளியங்குளம் பகுதியின் மேற்குபுற முன்னரன்கள் மீதான ஊடறுப்பு தாக்குதல் 70 இற்கு மேற்பட்ட படையினர் பலி.

செப்ரம்பர் 30: கரப்புகுத்தி முன்னனி நிலைகள் மீதான ஊடறுப்பு தாக்குதல் 48 பேர் பலி, 20 பேர் காணாமல் போயினர், 308 பேர் படுகாயம். ஒக்டோபர் 06: கரிப்பட்டை முறிப்பு, விஞ்ஞான குளம் முன்னனி அரண்கள் மீதான ஊடறுப்பு தாக்குதல் 30 பேர் பலி, 42 பேர் படுகாயம்.

இவைதவிர மன்னங்குளம் நோக்கி முன்நகர்ந்த சிறப்பு படையணிகள் மீதா தாக்குதலில் 170 இற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன், 396 பேர் படுகாயமடைந்திருந்தனர். மேலும் முன் நகர்ந்த படையினர் மீதான தொடர் தாக்கு தல்களும் அதிகம் இடம்பெற்றிருந்தன.

மேற்கூறப்பட்ட இழப்புக்கள் அனைத்தும் அரசின் தகவல்கள் ஆனால் படையினரின் இழப்புக் கள் பல மடங்கு அதிகம். மே முதல் டிசம்பர் வரையான இந்த ஏழு மாத காலப்பகுதியில் 1000 இற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்ட துடன், 5,000 இற்கு மேற்பட்டோர் காயமடைத்துள்ள தாக அரசு தெரிவித்திருந்தது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

நாறு பூக்கள் மலரட்டும்

நாறும் கீழ்மைகள் தகரட்டும்

Don't Forget Yugoslavia

John Pilger
THE NEW STATESMAN

The secrets of the crushing of Yugoslavia are emerging, telling us more about how the modern world is policed. The former chief prosecutor of the International Criminal Tribunal for Yugoslavia in The Hague, Carla Del Ponte, this year published her memoir The Hunt: Me and War Criminals. Largely ignored in Britain, the book reveals unpalatable truths about the west's intervention in Kosovo, which has echoes in the Caucasus.

The tribunal was set up and bankrolled principally by the United States. Del Ponte's role was to investigate the crimes committed as Yugoslavia was dismembered in the 1990s. She insisted that this include Nato's 78-day bombing of Serbia and Kosovo in 1999, which killed hundreds of people in hospitals, schools, churches, parks and television studios, and destroyed economic infrastructure. "If I am not willing to [prosecute Nato personnel]," said Del Ponte, "I must give up my mission." It was a sham. Under pressure from Washington and London, an investigation into Nato war crimes was scrapped.

Readers will recall that the justification for the Nato bombing was that the Serbs were committing "genocide" in the secessionist province of Kosovo against ethnic Albanians. David Scheffer, US ambassador-at-large for war crimes, announced that as many as "225,000 ethnic Albanian men aged between 14 and 59" may have been murdered. Tony Blair invoked the Holocaust and "the spirit of the Second World War". The west's heroic allies were the Kosovo Liberation Army (KLA), whose murderous record was set aside. The British foreign secretary, Robin Cook, told them to call him any time on his mobile phone.

With the Nato bombing over, international teams descended upon Kosovo to exhume the "holocaust". The FBI failed to find a single mass grave and went home. The Spanish forensic team did the same, its leader angrily denouncing "a semantic pirouette by the war propaganda machines". A year later, Del Ponte's tribunal announced the final count of the dead in Kosovo: 2,788. This included combatants on both sides and Serbs and Roma murdered by the KLA. There was no genocide in Kosovo. The "holocaust" was a lie. The Nato attack had been fraudulent.

That was not all, says Del Ponte in her book: the KLA kidnapped hundreds of Serbs and transported them to Albania, where their kidneys and other body parts were removed; these were then sold for transplant in other countries. She also says there was sufficient evidence to prosecute the Kosovar Albanians for war crimes, but the investigation "was nipped in the bud" so that the tribunal's focus would be on "crimes committed by Serbia". She says the Hague judges were terrified of the Kosovar Albanians - the very people in whose name Nato had attacked Serbia.

Indeed, even as Blair, the war leader was on a triumphant tour of "liberated" Kosovo, the KLA was ethnically cleansing more than 200,000 Serbs and Roma from the province. Last February the "international community", led by the US, recognised Kosovo, which has no formal economy and is run, in effect, by criminal gangs that traffic in drugs, contraband and women. But it has one valuable asset: the US military base Camp Bondsteel, described by the Council of Europe's human rights commissioner as "a smaller version of Guantanamo". Del Ponte, a Swiss diplomat, has been told by her own government to stop promoting her book.

Yugoslavia was a uniquely independent and multi-ethnic, if imperfect, federation that stood as a political and economic bridge in the Cold War. This was not acceptable to the expanding European Community, especially newly united Germany, which had begun a drive east to dominate its "natural market" in the Yugoslav provinces of Croatia and Slovenia. By the time the Europeans met at Maastricht in 1991, a secret deal had been struck; Germany recognised Croatia and Yugoslavia was doomed. In Washington, the US ensured that the struggling Yugoslav economy was denied World Bank loans and the defunct Nato was reinvented as an enforcer. At a 1999 Kosovo "peace" conference in France, the Serbs were told to accept occupation by Nato forces and a market economy, or be bombed into submission. It was the perfect precursor to the bloodbaths in Afghanistan and Iraq.

ஒரு பேப்பர் ORU PAPER

ஒரு பேப்பர்
ORU PAPER

ஏண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - அ.இரவி
அகிலன் - மயூரன்
கனடா
தயா - மணி
பாரிஸ்
சிறி
ஜேர்மனி
சபேசன் - சாந்தி
சுவிஸ்
சயந்தன்
பொறுப்பாசிரியர்
- கோபி -
மக்கள் தொடர்பு
பாலா
விளம்பரம்
கௌரி - சசி - நிஷா - சுபா
அச்சு
குமார் (ஜெர்மனி)
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
முருகானந்தன்
வழங்கல்
உதயகுமார்-ராஜா-கரன்

உங்கள் தொடர்புகட்கு:
தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277
தொலைநகல் (Fax)
020 7043 4312
ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழிந்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

நூற்றுக்கு நூறு

இது ஒரு பேப்பரின நூறாவது இதழ். இந்நூறு இதழ்களிலும் ஆசிரியர்களில் ஒருவனாக இருந்திருக்கிறேன். ஆறு இதழ்கள் தவிர அனைத்து இதழ்களிலும் சற்று மாறுதலுக்காக என்னும் இப்பத்தியை எழுதியிருக்கிறேன். எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமான சிந்தனையுடன் எழுதி உள்ளேன். என்றாலும் மொழியின் கடுமை காரணமாக சில பந்திகள் தவிர்க்கப்பட்டன.

அவைபோக ஏன் அப்படி எழுதுகிறேன் என்று எனக்குள்ளும் விமர்சனங்களும், கேள்விகளும் எழாமல் இல்லை. சிறுமை கண்டபோது, சின்னத்தனம்கண்டபோது பொங்குகிறேன்என்று மாத்திரம் இதற்குப் பதில் சொல்லிவிட முடியாது. சகிப்புத் தன்மை குறைவு என்பது முக்கிய காரணம். அப்போது சரி அதனை எழுதி வருகிறேன். அது எப்போதும் சரிதானா என்ற கேள்வியை ஏனோ ஏற்க மறுக்கிறேன். அதுவே சில சமயம் எழுத்தின் பலவீனமாகிவிடுகிறது. இப்பத்தியை ஏன் எழுதுகிறேன் என் மன ஆதங்கத்தை வெளிப்படுத்த மட்டும்தானா மன ஆதங்கத்தை ஏன் எழுத்தில் சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும். சமூகம் திருந்துவதற் காகவா சமூகத்தை திருத்த நான் யார் தவறே செய்யாத ஒருவனா நான்.

இன்னோரன்ன கேள்விகள் என்னுள் இருக்கின்றன.

> பன்னாடைகளுக்குப் பொன்னாடை என்று ஒரு பத்தி எழுதினேன். அதன் பிறகு பொன்னாடை போர்த்துவதற்கு ஒரு சிலர் யோசித்தனர். இன்னும் சிலர் வெட்கப்பட்டனர்.

இப்பத்திகளைத் தொடர்ந்து எழுதியதில் அதிகம் எதிரிகளைச் சம்பாதித்தேன். இது சரிதானா சேயோன் எழுத்து தன்னை மாற்றியது என்றோ, இதனால்தான் திருந்தினேன் என்றோ சொல்வார் எவருமில்லை. அண்ணை ஏன்அப்படி எழுதினீங்கள்? என்று கேட்டவரும் அதிலை என்ன பிழை இருக்கு. என்று சொன்னவரும்தான் இருக்கிறார்கள். மேலும் அலுவலகத்தில் உள்ள தொலைபேசிகளும் பாராட்ட மணி அடித்ததாக இல்லை.

சரி அப்ப நான் என்ன செய்யலாம்? ஏதும் எழுதாமலே விடுவதா? அல்லது எல்லோரும் ஏற்கக் கூடியது மாத்திரம் எழுதுவதா எல்லோரும் ஏற்கக் கூடியது என்றால் அது என்ன? கிழக்கின் எதிர்த்திசை மேற்கு, பாலின் நிறம் வெள்ளை என்கின்ற மாதிரி எழுதுவதா? அதை எல்லோரும் ஏற்பார்கள்தானே

> மேடை கிடைத்தால் எமது விடுதலைப் போராளி களையும் தலைமையையும் நக்கலடித்துத் தாக்குவதையே தொழிலாகக் கொண்ட ஒருவர் இப்பத்தியால் 'குடுத்த' குடுவையில் இப்போது கப்சிப் ஆனார்.

அப்படித்தான் எழுத வேண்டுமென்றால் ஏன் எழுதவான் அதனால் யாருக்கு என்ன பயன் சிறு பொறியாகவாவது எழுத்து இருக்கக் கூடாதா பாருங்கள் பன்னாடைகளுக்குப் பொன்னாடை என்று ஒரு பத்தி எழுதினேன். அதன் பிறகு பொன்னாடை போர்த்துவதற்கு ஒரு சிலர் யோசித்தனர். இன்னும் சிலர் வெட்கப்பட்டனர். அதனை நான் உணர்ந்தேன். பொன்னாடை போர்த்தப்படுபவர்களே பன்னாடை என்கிற

சற்று மாறுதலுக்காக

எழுதுவது: சேயோன்

நிலைமை இப்போது ஏற்பட்டுப் போயிற்று.

மேடை கிடைத்தால்எமதுவிடுதலைப்போராளி களையும் தலைமையையும் நக்கலடித்துத் தாக்குவதையே தொழிலாகக் கொண்ட ஒருவர் இப்பத்தியால் 'குடுத்த' குடுவையில் இப்போது கப்சிப் ஆனார். அவ்வாறு இதில் எழுதி தடைசெய்யப்பட்ட பத்திகள் பிரசுரமாகி யிருந்தால் இன்னும் சிலர் திருந்த வாய்ப்பிருந் திருக்கிறது. அதனைஆசிரியர் பீடம் கொஞ்சம் கவனிக்குக.

ஒரு பத்திரிகையின் பணி கட்சி கட்டுவதல்ல. ஒரு வேளை ஒரு கட்சிப் பத்திரிகையின் பணி கட்சி கட்டுவதற்காக இருக்கலாம். பொதுவான ஒரு பத்திரிகை சமூகம் மீதான அக்கறையுடனும் மக்கள் நலன் சார்ந்தும், தவறுகள் நிகழும்போது தட்டிக் கேட்டும், குற்றம் காணும்போது குமுறி எழுந்தும், சிறுமை கண்டபோது பொங்கியும் செயற்பட வேண்டும். நடு நிலை என்று எதுவும் இல்லை. மக்கள் நலன் என்ற ஒன்று மட்டுமே உண்டு.

அதுவே என் எழுத்தின் நோக்கமாக இருக்கும். எனக்குத் தெரிந்ததை, எனக்குச் சரியானதை, நான் எழுதுவேன். இயன்றளவு நேர்மையுடன், இயன்றளவு உண்மையுடன், நீதிக்காக, நியாயத் திற்காக என் எழுத்து அமையும். நீதியை நியாய த்தை மறுத்த எழுத்து என்னுடையது என்று உணர்ந்தாலும் தட்டிக் கேட்கலாம், சுட்டிக் காட்டலாம். உண்மையை ஒப்புக் கொள்வதில் எனக்கு எந்த ego (சுயம்)வும் கிடையாது, தயக்கமும் கிடையாது.

சமீபத்தில் ஒரு சம்பவம். ஒரு கோயிலில் தேர்த் திருவிழாவுக்குச் சென்றிருந்தேன். எனக்குத் தெரிந்த அய்யா ஒருவர் தமிழ் அகதிகளுக்காக உண்டியல் குலுக்கிக் கொண்டிருந்தார். இயலாக் காலத்திலும் அவர் பணியே அது. சிறு பான்மையோர் அகதிகளின் உண்டியலில் பணத் தைப் போட்டனர். அச்சிறுபான்மையோரை நான் மனசார நேசித்தேன். அந்த உண்டி யலைக் குலுக்கிக் கொண்டு அய்யா போகிறார். தேரிலிருந்து இறங்கி தட்சனை களுடன் பஞ்சகச்சம் கட்டிய ஐயர் இறங்கி வருகிறார். இந்த அகதிகளுக்காகன உண்டிய லைக் கண்டவுடன் ஐயர் என்ன செய்கிறார்?

தட்சணையாகக் கிடைத்த பணத்தை எல்லாம் எடுத்து விபூதி போக ஊதிவிட்டு உண்டியலுக்குள் இடுகிறார். அவ்வாறு இட்டதில் பத்துப் பவுண்ட் தான்க் காசையும் நான் கண்டேன். என் மனசு நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்து கை கூப்பித் தொழுதது. மனிதம் சரகவில்லை என்ற வசனத் தில் இதனைச் சொல்ல மாட்டேன். மனிதம் அவ்வப்போது பல இடங்களில் துளிர்த்தபடியே இருக்கிறது.

மனிதம் உயிர்க்க, மானுடம் தளிர்க்க என எழுத்து அமையும். அப்போதுதான் எழுத்தின் பெறுமதி நூற்றுக்கு நூறில் இருக்கும்.

புறங் கூறாமை

புறங் கூறுவது என்பது ஒருவருடைய குறை குற்றங்களை, அவை உண்மையாக இருக்கலாம் அல்லது கற்பனையாக இருக்கலாம், அவர் இல்லாத இடத்தில் பழித்துக் கூறுவது ஆகும். இதைச் சிலர் கோள் சொல்லுதல் எனவும் கூறுவர். எமது சமுதாயத்தில் இக் கோள் சொல்லும் பழக்கம் தாராளமாகப் பரவியுள்ளது. ஒருவர் தான் பயன் பெறுவதற்காக வேறெ ருவரிடம் மற்றையவரைப் பற்றி பழி சொல்வது மிகவும் சாதாரணமான செயலாக உள்ளது. தன்னுடன் போட்டி போடும் ஒருவனைப் பற்றி அலுவலகத்திலோ அன்றி கல்லூரியிலோ அல்லது வேலைத் தளத்திலோ மேலிடத்திற்குக் குறை கூறி மேலிடத்தின் அனுதாபத்தைப் பெறுவதோ அல்லது ஒரு ஆசானின் நன்மதிப்பைப் பெறுவதோ நாம் தினமும் அனுபவத்தில் கண்டுகொள்ளும் நிலைப்பாடாகும். இப்படியான புறங்கூறல் தவிர்க்கப்பட வேண்டும் என்பது வள்ளுவர் கருத்தாகும். ஏனெனில் புறங்கூறுதலே தீய குணங்களிலெல்லாம் மிகவும் கூடிய தீமையுடையதாகும்.

ஒருவன் எவ்வளவுதான் தீய குணங்களைக் கொண்டிருந்தாலும் அவன் புறங்கூறலைத் தவிர்க்கும் குணம் கொண்டிருப்பானேயாகில் அவன் புறம் கூறும் ஒருவரிலும் பார்க்க சிறந்தவனாகக் கருதப்படுவான். அதாவது ஒருவனிடம் இருக்கக்கூடிய தீய குணங்களில் புற ங்கூறுவதே அதிக தீய குணமாகும் (குறள் 181)

தீயகுணம் என்றால் என்ன? அறத்திற்கு ஒவ்வாத செய்கைகளைச் செய்வது தீயகுணம் என ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. இத்தகைய தீய குணங்களில் அதிகமான தீயது எனக் கருதப்படுவது முகத்தில் ஒரு புன்னகையைத் தவழ விட்டுக்கொண்டு, (தான் சொல்வது உண்மையே அல்லது நட்பின்பால் சொல்லப் படுவதே என உணர்த்திக் கொண்டு) ஒருவரைப் பற்றி புறம்கூறுவது ஆகும். (குறள் 182)

புறம்கூறி வாழ்வதிலும் பார்க்க கேடுகெட்ட வாழ்க்கை வேறெதுவும் இருக்க முடியாது. அப்படியான வாழ்க்கையை வாழ்வதிலும் பார்க்க செத்து மடிவதே சிறந்தது ஆகும். (குறள் 183)

வள்ளுவர் காட்டும் வழி

எழுதுவது: இராம. கே. நாதன்

பிறருடைய குறைகளை, தீய குணங்களை சுட்டிக்காட்டுவதில் தவறில்லை. ஆனால் அவை சம்பந்தப் பட்டவர்கள் முன்னாலேயே சுட்டிக் காட்டப் பட வேண்டியவை. அப்படிச் சுட்டுதல் அவர்களுக்கு நன்மை பயக்கும். தமது தவறுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். ஆனால் அவர்கள் இல்லாத நேரத்தில் அவர்களைப் பழித்துச் சொல்லல் தவிர்க்கப்பட வேண்டும். (குறள் 184)

> புறம் கூறியே பழக்கப் பட்டுவிட்ட ஒருவன் தனது நண்பர்களையும் புறம்கூறித் தூற்றுவர். உறவினர்களையும் நண்பர்களையும் பற்றி புறம்கூறும் இவர்களுக்கு பகைவர்கள் அகப்பட்டு விட்டால் அவர்களின் நிலை என்னவாக இருக்கும்.

ஒருவன் தன்னை எவ்வளவுதான் அறம் செய்யும் விருப்பு உடையவனாகக் காட்ட முனைந்தாலும், அவன் புறம் கூறும் பழக்கத்தை உடைய வனாக இருப்பானேயானால் அவன் மனதிலிருந்து அறம் செய்யும் எண்ணம் இல்லாது போய்விடும். அவன் செய்யும் அறம் சிறுமை பெறற்று விடும். (குறள் 185)

பிறருடைய குறைகளைக் கண்டு பழிதூற்றிப் புறங்கூறுபவனுடைய தன்மையை மற்றையோர் புரிந்து கொண்டு அவனையே குறைகூறிப் பழிப்பர். மற்றவரது குணங்களை எவ்வாறு ஒருவன் புறம்கூறிப் பழிக்கின்றானோ அதே போன்று மற்றையோர் அவனது புறங்கூறும் குணத்தை குறிப்பிட்டுப் பழிப்பர். (குறள் 186)

புறங்கூறும் ஒருவனுடன் நட்பு பாராட்டுதல் இயலாது. ஏனெனில் ஒருவருடைய நல்ல குண த்தை உணர்ந்து அவனது நட்பை பாராட்டாது அவனுடைய குறைகளைப் பற்றிப் பேசியே அவனிடமிருந்து பிரிந்து போய் விடுவர். இத்தகையோரின் நட்பு அபாயகரமானது. ஏனெ னில் இவர்கள் தாம் பிரிந்து போவது மட்டுமின் றி பிறருடைய நட்பையும் பிரித்து விடுவர். (குறள் 187)

புறம் கூறியே பழக்கப் பட்டுவிட்ட ஒருவன் தனது நண்பர்களையும் புறம்கூறித் தூற்றுவர். உறவினர்களையும் நண்பர்களையும் பற்றி புறம்கூறும் இவர்களுக்கு பகைவர்கள் அகப்பட்டு விட்டால் அவர்களின் நிலை என்னவாக இருக்கும். (குறள் 188)

புறம்கூறும் தீயவர்களை எதற்காக இந்தப் பூமி தாங்கிக் கொள்கிறது? இவ்வுலகில் வாழுகின்ற எல்லா மனிதர்களையும் பூமி தாங்கிக் கொள்கிறது. நல்லன் தீயவன் என்ற வேறுபாடு பூமிக்குக் கிடையாது. அதுவே பூமியின் அறம். அந்த அறத்தின் காரணமாகவே பிறரைப் பழித்துப் புறம்கூறும் கீழோரையும் பூமி தாங்கிக் கொள்கிறது. (குறள் 189)

ஒருவன் பிறரைப் பற்றி தான் கூறும் குற்ற ங்களோடு தனது குற்றங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பானேயானால் இந்த உலகில் வாழும் உயிர்களுக்கு ஒருபோதும் தீங்கு நேராது. அப்படியாக பிறர் குறைகாணும் முன்பு தம் குறை காண்பவர்களினால் மற்றையவர்கள் யாருக்கும் தீங்கு நேர முடியாது. (குறள் 190)

வான்புலிகளின் தாக்குதல் சொல்லும் செய்திகள்:

அரசியல் அலசல்

வி.சபேசன் (ஒரு பேப்பர் - ஜெர்மனி)

2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து சம்பூரை வல்வளைப்பு செய்யும் நோக்கில் பாரிய படை நடவடிக்கை ஒன்றை சிறிலங்கா அரசு ஆரம்பித்தது. விடுதலைப் புலிகளின் எறிகணை வீச்சில் இருந்து திருகோணமலை துறைமுகத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கை என்று சிறிலங்கா அரசு அதை குறிப்பிட்டிருந்தது.

மாவிலாறு மீதான சிறிலங்காப் படையினரின் தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகள் மூதூர் மீது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையை செய்திருந்தனர். அப்பொழுது திருகோணமலை கடற்படைத்தளம்மீதுதொடர்ச்சியான எறிகணைத் தாக்குதலையும் விடுதலைப் புலிகள் மேற் கொண்டிருந்தனர்.

படையினர் சம்பூரை ஆக்கிரமித்தாலும் திருகோணமலையின் படைத் தளங்கள் மீது எம்மால் தாக்குதல் தொடுக்க முடியும் என்ற செய்தியை அந்த அறிக்கை மூலம் விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தார்கள்

இதைச் சுட்டிக்காட்டிய சிறிலங்கா அரசு திருகோணமலையை விடுதலைப் புலிகளிடம் இருந்து காப்பதற்கு சம்பூரை கைப்பற்றுவது அவசியம் என்று பிரச்சாரம் செய்தது. உலக நாடுகளும் மௌனமாக இருக்க ஒரு கொடிய போரை நடத்தி சம்பூரை சிறிலங்கா அரசு கைப்பற்றிக் கொண்டது. ஒரே நாளில் மட்டும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான எறிகணைகளை சம்பூர் மீது சிறிலங்காப் படையினர் வீசினார்கள்.

நூற்றுக் கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட, பல ஆயிரம் பேர் அகதிகளாக சம்பூரையே தரைமட்டமாக்கி சிறிலங்காப் படை வெற்றி விழாவைக் கொண்டாடியது. சம்பூரில் இருந்து பின்வாங்குவதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்பு விடுதலைப் புலிகள் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள்.

படையினர் சம்பூரை ஆக்கிரமித்தாலும் திருகோணமலையின் படைத் தளங்கள் மீது எம்மால் தாக்குதல் தொடுக்க முடியும் என்ற செய்தியை அந்த அறிக்கை மூலம் விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தார்கள். வான்புலிகள் களத்தில் இறங்காத காலகட்டம் அது. அந்த நிலையில் இந்த அறிக்கையை சிங்களத்தின் ஊடகங்களும், ஒட்டுக் குழுக்களின் ஊடகங்களும் கிண்டல் செய்தன.

தற்பொழுது சம்பூர் மீதான படை நடவடிக்கை ஆரம்பித்து சரியாக இரண்டு ஆண்டுகள் கழித்து விடுதலைப் புலிகளின் விமானங்கள் திருகோணமலைத் துறைமுகத்தில் அமைந்துள்ள சிறிலங்கா கடற்படைத் தளம் மீது குண்டுகளை வீசி விட்டுச் சென்றிருக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை (26.08.08) இரவு 9:05 மணியளவில் விடுதலைப் புலிகளின் விமானங்கள் திருகோணமலைத் துறைமுகத்தில் அமைந்தள்ள சிறிலங்கா கடற்படைத் தளத்தின் மீது குண்டுகளை வீசின. விடுதலை புலகளின் விமானங்கள் வருவதை தாக்குதல் நடப்பதற்கு ஒரு பத்து நிமிடங்களுக்கு முன்னர் சிறிலங்காப் படையினரின் ராடர்கள் கண்டுபிடித்த போதும் விடுதலைப் புலிகளின் விமானங்களை சிறிலங்காப் படையினரால் தாக்கி அழிக்க முடியவில்லை.

வான்புலிகளின் வருகையை அறிந்ததும் கடற்படையினர் வானை நோக்கி கண்முடித்தன மாக தாக்குதல் நடத்தினர். ஆயினும் தாக்கு தலை முடித்துக் கொண்டு வான்புலிகளின் வானூர்த்திகள் வெற்றிகரமாக திரும்பின.

தங்களுக்கு ஏற்பட்ட அவமானமான தோல்வியை சிறிலங்கா அரசு மூடி மறைக்க முற்பட்டது. விடுதலைப் புலிகளின் விமானங்கள் வீசிய இரண்டு குண்டுகளில் ஒன்று வெடிக்கவில்லை என்றும், மற்றைய குண்டு வெடித்ததில் நான்கு கடற்படையினர் காயமடைந்துள்ளனர் என்றும் சிறிலங்காப் படைத் தரப்பு முதலில் தெரிவித்தது. பின்பு பத்துப் படையினர் காயமடைந்ததாக கூறியது.

ஆயினும் சிங்கள ஊடகங்கள் படையினருக்கு ஏற்பட்ட இழப்பை அம்பலப்படுத்தின. நான்கு படையினர் கொல்லப்பட்டும் இருபதிற்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்தும் உள்ளன ர் என்று படையினர் மத்தியில் இருந்து பெற்ற செய்திகளை வெளியிட்டன. கடந்த முறைகளை விட இம் முறை வான்புலிகள் வீசிய குண்டுகள் வீரியம் மிக்கவை என்பதும் அவர்கள் தருகின்ற தகவல்களில் ஒன்று.

தாக்குதல் நடந்து இரண்டு நாள் கழித்து விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிக்கையில் தாக்குதல் வெற்றிகரமாக நடந்ததாகவும், நான்கு படையினர் கொல்லப்பட்டு, 35 படையினர்கள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப் பட்டிருந்தது. தாக்குதல் நடத்திய வான்புலிகள் தேசியத் தலைவருடன் நிற்கின்ற படங்களும் வெளியிடப்பட்டிருந்தன.

வான்புலிகளின் தாக்குதல் நடத்திய ஒவ்வொரு முறையும் படையினர் அதில் காயம் அடைந்துள்ளார்கள் என்று சிறிலங்கா அரசு ஒத்துக் கொள்வதானது, வான்புலிகளின் திறமைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது

இதே வேளை ஆறு படையினர் கொல்லப்பட்டன ர் என்றும், 35 படையினர்கள் காயமடைந்தனர் என்றும், கடற்படையின் இரண்டு தாக்குதற் படகுகள் அழிக்கப்பட்டன என்றும், பல கட்டடங்கள் சேதமாகின என்றும் கொழும்பு ஊடகம் ஒன்றில் படைத்துறை ஆய்வாளர் ஒருவர் எழுதியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

ஆனால் விடுதலைப் புலிகள் வான் தாக்குதல் நடத்துகின்ற ஒவ்வொரு முறையும் சிறிலங்கா அரசு ஒரே மாதிரியான அறிக்கையை விடும். விடுதலைப் புலிகளின் குண்டுகள் இலக்குத் தவறி விழுந்தன என்று அந்த அறிக்கையில் சொல்லிக் கொள்ளும். வீசப்பட்ட இரண்டு குண்டுகளில் ஒரு குண்டு வெடிக்கவில்லை என்பதையும் தன்னு டைய அறிக்கையில் மறக்காமல் சேர்த்துக் கொள்ளும்.

விடுதலைப் புலிகளின் குண்டுகள் இலக்குத் தவறி விழுந்தன என்று அந்த அறிக்கையில் சொல்லிக் கொள்ளும். வீசப்பட்ட இரண்டு குண்டுகளில் ஒரு குண்டு வெடிக்கவில்லை என்பதையும் தன்னுடைய அறிக்கையில் மறக்காமல் சேர்த்துக் கொள்ளும்.

இலக்குத் தவறிக் குண்டுகள் விழுகின்றன, விழுகின்ற குண்டுகளும் வெடிக்கவில்லை என்று ஒவ்வொரு முறையும் சொல்வதன் மூலம் வான்தாக்குதலில் விடுதலைப் புலிகள் இன்னும் முறையான பயிற்சியைப் பெறவில்லை என்றும் அவர்கள் சரியான வான்படையாக வளர்ச்சி அடையவில்லை என்றும் மொத்தத்தில் விடுதலைப் புலிகளை வான்படையை கொண் டிருக்கும் ஒரு இராணுவமாக மதிப்பிட முடியாது என்றும் சிறிலங்கா அரசு சொல்லி தனக்கு ஏற்பட்ட அவமானத்தை குறைத்துக் கொள்ள முற்படும்.

ஆனால் வான்புலிகளின் தாக்குதல் நடத்திய ஒவ்வொரு முறையும் படையினர் அதில் காயம் அடைந்துள்ளார்கள் என்று சிறிலங்கா அரசு ஒத்துக் கொள்வதானது, வான்புலிகளின் திறமைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது. பலாலிப் படைத் தளம் மீது வான்புலிகள் குண்டு வீசிய போது, நான்கு படையினர் கொல்லப்பட்டனர் என்று சிறிலங்கா அரசு கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது.

மிக நவீன வான்கலங்களை வைத்திருக்கும் சிங்களப் படைகளின் வான் தாக்குதல் பெரும்பாலும் பொதுமக்கள் மத்தியில் விழுகின்ற பொழுது, சிறியரக விமானங்களையே வைத்திருப்பதாக சொல்லப்படும் வான்புலிகள் போடுகின்ற குண்டுகள் சரியாக படையினர் மீது விழுவது உண்மையிலேயே ஆச்சரியமா னதுதான்.

வான்புலிகள் தாக்குதல் நடத்தி விட்டு வெற்றிகரமாக தளம் திரும்பியதும் சிறிலங்கா அரசுக்கு உலக அரங்கில் பெருத்த அவமானத்தை ஏற்படுத்தி விட்டது. கடந்த ஆண்டு வான்புலிகள் யுத்தத்திற்குள் நுழைந்த தை அடுத்து சிறிலங்கா அரசு உலகின் பல நாடுகளில் இருந்து மிக நவீன ராடர்களை வாங்கிக் குவித்தது. வுவனியாவில் அதிக தூர வீச்சு எல்லை கொண்ட ராடர்களை நிறுவியது. வன்னியில் இருந்து புலிகளின் விமானங்கள் மேலெழுந்த உடனேயே தம்மால் அதை அறிந்து கொள்ள முடியும் என்றும் சொன்னது. இனி புலிகளின் விமானங்கள் வந்தால் அவைகளால் திரும்பிப் போக முடியாது என்று கொக்கரித்தது.

ஆனால் திருகோணமலையை வான்புலிகள் அண்மித்த பின்புதான் சிறிலங்காப் படையினரால் வான்புலிகளின் வருகையை அறிந்து கொள்ள முடிந்தது. தாக்குதலை வெற்றிகரமாக நடத்தி வான்புலிகளின் விமானங்கள் திரும்பிய பிற்பாடு, கிபீர் விமானங்கள் வன்னிக்கு விரைந்து 'பரா' குண்டுகளை வீசி புலிகளின் விமானங்களை தேடியதாக சொல்லி சிறிலங்கா அரசு அசடு வழிந்தது.

சில வாரங்களுக்கு முன்பு சிறிலங்காவின் படைத் தளபதி சரத் பொன்சேகா ஊடகவியலாளர்கள் மத்தியில் ஒரு விடயத்தைக் கூறினார். விடுதலைப் புலிகளால் இனிமேல் மரபு வழி இராணுவமாக செயற்பட முடியாது, அவர்களால் இனி கொரில்லா குழுக்களாகத்தான் செயற்பட முடியும் என்று சொன்னார்

கடைசியில் வான்புலிகளின் திருகோணமலை மீதான தாக்குதல் சரத் பொன்சேகா கூறியதை அர்த்தமற்றதாக்கி விட்டது. விடுதலைப் புலிகள் ஒரு மரபு வழி இராணுவமாக செயற்படுகிறார்கள் என்பதை உலகிற்கு உணர்த்தி விட்டது.

அவருடைய இந்தக் கூற்று பலரால் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகப் பார்க்கப் பட்டது. சிங்கள மக்கள் அதை உண்மை என்று நம்பினார்கள் ஒட்டுக் குழுக்களும் சரத் பொன்சேகாவின் கூற்றை அப்படியே ஏற்று கட்டுரைகள் வரைந்தன. தமிழர் தரப்பில் அதை மறுத்து ஆய்வுகள் செய்ய வேண்டிய அளவிற்கு சரத் பொன்சேகாவின் கூற்று முக்கியத்துவம் பெற்றது.

கடைசியில் வான்புலிகளின் திருகோணமலை மீதான தாக்குதல் சரத் பொன்சேகா கூறியதை அர்த்தமற்றதாக்கி விட்டது. விடுதலைப் புலிகள் ஒரு மரபு வழி இராணுவமாக செயற்படுகிறார்கள் என்பதை உலகிற்கு உணர்த்தி விட்டது.

ஒரு கொரில்லாப் படையால் வான்படையை வைத்திருக்க முடியாது. வான்படையை வைத்திருப்பதற்கு பரந்த பிரதேசம், சீரான வினியோக வழிகளும் தேவை. வன்னியில் பல முனைகளில் சிறிலங்காப் படையினர் படை நடவடிக்கைகளை செய்தும், நாச்சிக்குடா, உயிலங்குளம் போன்ற பகுதிகள் வரை முன்னேறியும் விடுதலைப் புலிகளின் போரிடும் வலிமை அப்படியே இருக்கிறது என்பதே வான் புலிகளின் தாக்குதல் சொல்கின்ற முக்கிய செய்தி.

தமிழர்களுக்கு நம்பிக்கை கொடுக்கின்ற செய்தி யும் அதுவே ஆகும்.

கொக்கரிக்கும் சிங்களமே கொஞ்சம் பொறு கொடி உயர்த்தி குமுறி நாம் வருவோம் பார்த்திரு

ஒரு பேப்பர் ORU PAPER

ஞாபகம் வருதே

கோடானு கோடி பணத்தை அள்ளிக் குவிக்கும் மக்டொனால் (Mc Donnalds) கென்ரக்கி (Kentucky) போன்ற உணவு விற்பனை நிலையங்களுக்கு உருளைக் கிழங்கு கிடைக்காதுபோனால் இவ்ரக்ளுடைய வியாபாரம் என்னாவது? இத்தகைய சக்திவாய்ந்த இயற்கையின் படைப்பு, தென் அமெரிக்காவின் அன்டீஸ் (Antes) மண்வலயத்தின் அரிய நனகொடையாகும். 1536ம் ஆண்டளவில் ஸ்பானியர்களினால் கடத்திவரப்பட்ட இந்த எளிமையான கிழங்கு ஐரோப்பிய நாடுகளில் பரவ 200 ஆண்டுகள்வரை சென்றாலும், அதன் உன்னத மகிமையை விவசாயிகள் அறியத்தவறவில்லை.

உருளைக்கிழங்கு இன்று உலக உணவுத் தட்டுப்பாட்டைப் போக்கும் ஒரு புதிய மாற்றீடாக மாறிவருவது கண்கூடு. உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஆசிய பிராந்திய வளையத்துக்குள் அதிகக் கூடிய பங்கை வகிக்கும் சீனாவும், இந்தியாவும் வருடத்தில் மூன்று விளைச்சல்களை ஊக்கு விக்கவும், தானிய உற்பத்திக்குப் பதில் ஊடுபயிராகவும் பயிர் செய்யப்படுவது ஆரோக்கியமான செய்தியாகும்.

உடலின் வளர்ச்சிக்கும், ஊட்டத்திற்கும் தேவைப்புடம் உயிர்ச்சத்தான வைட்டமின் டீ.ஊ வகையான புரதங்களை வாரி வழங்கும் உருளைக்கிழங்கு, அதனைப் பூண்டோடு அழிக்கவல்ல வாடல் நோயினின்று தப்பித்துக் கொள்ள முடியாமல் தவிப்பது ஒரு சாபக்கேடு. 1840ல் அயர்லாந்தில் உருளைக்கிழங்கு உற்பத்தியில் பாரிய அழிவை உண்பெண்ணிய இக்கொடிய வாடல் நோய் மீண்டும் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை அழிந்துவிடாமல் தடுப்பதற்கு 1880ல் கண்டுபிடிக்கப்பட்ட கிருமி நாசினிகள் கைகொடுத்தன. உருளைக் கிழங்கு பயிர்ச்செய்கையின் மூலம் ஈட்டப் படும் வருவாயில் ஆறில் ஒரு பங்கு கிருமிநாசினிகளின் செலவுக்கு தேவைப் படுவதாக ஐரோப்பிய ஒன்றியம் மதிப்பிட் டுள்ளது. இந்த விதத்தில் செலவை ஈடுகொ டுக்க, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தாங்க முடியாமல் அவஸ்த்தைப் படுகின்றன. எது எப்படியிருப்பினும், உருளைக் கிழங்கு தான் உயிர்ப் பிச்சை கொடுக்கும் ஒரு நிவாரனி என்ற அனுபவத்தை, ஐரோப்பிய நாடுகளின் போர்காலச் சுவடுகள் சான்று பகிர்கின்றன.

தகவல் களஞ்சியம்

சுவாசிப்பவர்: உமா மகாலிங்கம்

இலங்கையின் வடபகுதி ஈழத்தில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை அமோக மாக நடைபெற்றதை எனது அனுபவம் ஞாபகப்படுத்துகின்றது. செம்மண் வலயப் பூமியில் ஒரு அங்கமாகத் திகழ்ந்த திரு நெல்வேலிப் பகுதியில் வாழ்ந்த காலத்தில், எமது தோட்டத்தில் திரண்டு விளைந்த வாளிப்பான உருளைக்கிழங்குகளை சாக்குகள் நிறைய சந்தைக்கனுப்பிய சங்கதி நினைக்கவே இனிக்கிறது.

கண்களுக்குள் கமேரா

அதி நவீன கமராக்களைக் கண்டுபிடித்து, அவை மூலம் சேகரிக்கப்படும் காட்சிகள் எவ்வளவு தூரம் தத்ரூபமாகவிருந்தாலும், கண்களினால் காணப்படும் துல்லியமான காட்சிளை இதுவரை அடையமுடியாமல் இருப்பதின் காரணத்தை அறிய இலிநொய்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜோன் றோ ஜர்ஸ் என்பவர் ஆய்வு செய்துள்ளார். கண்களின் பிற்பகுதியில் இயற்கையாக அமைந்த வளைந்த விழித்திரைதான் இதன் இரகசியம் என்பதைக் கண்டுபிடித்துள்ளார். கண்கள் அமைந்துள்ள மண்டலத்தில், காட்சிகளைக் காண உதவும் விழி வெண் படலமும் கண்ணாடி வில்லையும் தான், செயற்கையாக வடிவமைக்கப்பட்டுள்ள கமராவின் செயல்பாட்டுக்கு அடிப்படைக் காரணிகளாக அமைந்துள்ளது.

இயற்கையாக அமைந்த வளைந்த விழித்திரைபோன்று, எலக்ரோனிக் முறையில் செயல்படும் டிஜீற்றல் கமராக்களில் மாற்றங் கள் செய்ய வேண்டிய அவசியத்தை இவர் களது ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தியுள்ளன.

கமராவில் பொருத்தப்பட்டுள்ள காட்சியைக் பதிவு செய்யும் தட்டையான கருவியை வளைந்த விழித்திரைபோல மாற்றியமைக்கும் முயற்சியில் சித்ததியடைய முடியாமல் ஆராய்ச்சியாளர்கள் சிரமப்பட்டது வீண் போகவில்லை. செயற்கையான விழித்திரையைச் செய்வதற்கு வளைந்து கொடுக்கக் கூடிய இப்பரிபாலன கருவியைப் பயன்படுத்தி ஒருவழியாக் கமராவின் எலெக்ரோணிக் கண்களை உருவாக்கி யுள்ளார்.

ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த றெடிங் (reading) பல்கலைக்கழக ஆய்வாளர் kmma Jhonson மேற்படி கண்டுபிடிப்பை வெகுவாகப் பாராட்டி, இதுபோன்ற ஒரு அதிநவீன ஆராய்ச்சி இதுவரை மேற் கொள்ளப்படவில்லையென்று சரமாரியாகப் புகழ்ந்துள்ளார். ஆகவே கமராப்பிரியர்களின் ஆசைதீர செயற்கையான கண்கள் மூலம் காட்சிகளையும் படம் பிடித்து வைக்க நெடுங்காலம் வழி வகுக்கலாம்.

இதைவிட விழிப்பார்வை இழந்தவர்கள் கூட செய்கை முறையிலாகக் தயாரிக் கப்படும் இவ்விழித்திரையை பயன்படுத்த அதிக காலம் எடுக்காது என்பதே நம்பிக்கையாகும். இயற்கையாக படைக்கப் பட்ட விழிகளின் அருமை தெரியாது இறக்கும் தருவாயிலும் அவைகள் தேவைப்படும் இன்னுமொருவருக்கு தானம் செய்ய முன்வருபவர்கள் எத்தனை பேர்? கமராவி னால் அனுபவிக்கும் காட்சிகளுக்கு ஈடாகுமோ என்பதே அனுபவஸ்த்தவர்களின் அங்க லாய்ப்பு.

ஜேடிப் பொருத்தம்.

மனித உறவு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியில் ஒரு இனத்தைச் சேர்ந்த உயிரினம், தமக்கு எதிர்மாறான இன்னுமொரு இனத்தை நாடுவது இயற்கையென பலர் நினைப்பதுண்டு. அதெல்லாம் சுத்தப் பொய். அப்படி யொரு கவர்ச்சி இருக்குமானால் இத்தனை விவாவரத்துக்குள் எப்படி என்று அங்க லாய்ப்பவர்களும் இல்லாமல் இல்லை. எனவும் பாலியல் ரீதியான கவர்ச்சிமட்டும் ஆண் பெண் உறவை நீடிக்கவைப்பதில்லை. இதற்கு மேலும் பல காரணங்கள் உண்டு என்பதே புதிய ஆராய்ச்சியின் தெளிவாகும்.

சும்மா சொல்லக்கூடாது, ஜேர்மனி நாட்டின் மன்னேகம் ஆராச்சி மையத்தைச் சேர்ந்த பிராட்ரி ராம்செட் என்பவரும் பேளின் நகர பொருளாதார ஆய்வாளரான யூர்ஜென் ஸ்கிறப் என்பவரும் கூட்டமாகச் சேர்ந்து 6000 ஜோடிகளை அக்குவேறு, ஆணிவேறாக துளைத்து ஐந்து பெரும் காரணிகளை அடிப் படையாக வைத்து அலசியுள்ளார்.

அவர்கள் ஆராய்ந்த ஐம்பெரும் காரணிகளான குடும்பசகிதம் கூடிவாழும் ஆண், பெண் உறவு, உடன்பாடுள்ளதாகவும், நேர்மைக்குட்பட்டதாகும், வெளிப்படையான மனப்பக்குவமுடையதாகவும் ஒருமித்துக் காணப்பட்டவர்கள் குடும்பவாழ்க்கைக்குள் நீண்ட காலம் கட்டுண்டு இருப்பதைக் கண்டறிந்துள்ளார்கள். இவ்விதம் வாழும் ஆண் பெண் உறவுக்கு உணர்ச்சி வசப்படும் சம்பவங்களே, சுதந்திர எண்ணம் கொண்ட ஒழுக்கமோ எவ்வித பாதிப்பையும் உண்டு பண்ணவில்லையென்பதையும் உறுதிப்ப டுத்துப்பட்டுள்ளது.

இக்காரணிகளுக்குள் அடங்காமல் வேறு விதமாகப் பழகும் ஜோடிகள் நிடித்த உறவை அனுபவிக்கவில்லை என்பதும் ஆராய்ச்சியின் இறுதியில் நிரூபணமாகி யுள்ளது. உங்கள் பொருத்தம் எப்படி?

"Weakness Gone.. Energy On.."
இது உறுதி - இன்றைய இரவ இனிமையானது - இனிவரும் இரவுகளும்
மூலிகையில் தயாரிக்கப்பட்ட மாத்திரை ஆண்மை விருத்திக்கான தைலம் இது.
"Recharge Your Life" ஆண்களின் நண்பன் Performance Enhancer for Men
Mascula Massage Oil for Men
மஸ்குலா மசாஜ் ஒயில்
எண்ணெய் Massage மூலம் ரத்த ஓட்டத்தை அதிகரித்து புத்துயிருட்டி மீண்டும் சக்தி கொடுத்து ஆண்மையைப் பெருக்கி இளமையாக்கும் அரிய மருந்து.
To Tone Up The Under-developed Penile Muscles & Nerves of Male Sex Organ For Improved Performance
£ 20
Herbal 1-Top Capsules
கேர்பல் வன் டொப் கப்சியூல்ஸ்
உலகத்தின் அனைத்து ஆண்களாலும் விரும்பப்பட்ட ஆண்மை அதிகரிக்கும் ஒரே நிவாரணி.
• ஆண்மைக் குறைவு • உடலுறவு பலவீனம் • அனைத்தும் ஒரே மருந்தில்
Herbal 1-Top Capsules for Male Problems & Impotence Management
£ 30
HEART CARE
£ 10 கார்ட் கெயார் கப்சியூல்ஸ்
அனைத்து இதய சுவாச நோய்களை கட்டுப்படுத்த
• இதயத்தை பலப்படுத்த
• இதய அழுத்தத்தை சீராக்க
• இரத்த ஓட்டத்தை சீராக்க உடன் அணுகுங்கள்
AVAILABLE FROM YOUR LOCAL CHEMIST NATIONWIDE
Bristol 60 Almavale Road, Clifton, Tel : 011 7973144
Birmingham
1. Spark Hill, 491 Startford Road, Tel: 0121-4720174
2. 115 Soho Road, Handsworth, Tel: 01215512444
Bradford 127, Great Horton Road, Tel: 0845 257 0181
Coventry
1. 5 Station St. West, Tel: 0871 310 6443
2. 304, Walsgrave Road, Tel: 02476 454523
Derby 299 Normanton Road, Tel: 01332 366644
Gravesend 2 Living Stone Rd, Tel: 01474 365140
Glasgow 405 Great Western Rd, Tel: 0141 3395979
Hayes 788 Uxbridge Road, Tel: 020 8848 4612
Hounslow 322 Great West Road, Tel: 020 8577 7436
ILLFORD:
1. Eden Pharmacy, 79-85 Goodmayes Rd. Tel: 020 85973477
2. Munro Pharmacy, 303 Green Street, Tel: 020 8471 2575
3. Weston Pharmacy 3 St Stephen Parade (Near Post office), Green Street, Tel : 020 8470 5858
Kingsbury 511 Kingsbury Road, Tel : 020 8204 8731
London 82A Baker Street, Marylebone, Tel : 020 7935 9667
Leyton 694 High Road, Tel : 020 8558 5416
Leeds 255-257 Roundhay Road, Tel: 0113 2490557
Leicester 68 Hartington Road, Tel: 0116 253 7985
Luton 453 Dunstable Road, Tel: 01582 572523
NORBURY - 301 Northborough Road Tel : 020 8704 1828
NorthHampton 4 Kingsley Park Terrace, Tel: 0160 471 3297
Reading 104a Oxford Road, Tel : 0118 9572687
Slough 400 Farnham Road, Tel : 01753 517263
SouthHall
1. Gill Chemist, 31-33 King Street, Tel: 020 8571 1555
2. Dokal Cash & Carry, 133-135, Southall Broadway, Tel: 020 8574 1647
Tooting 246 Upper Tooting Rd, Tel: 020 8672 5417
Wembley
1. 282 Ealing Road, Tel: 020 8902 5047
2. 182 Ealing Road, Tel: 020 8902 0173
3. 210 Ealing Road, Tel : 020 8902 4698
WolverHampton 311 Dudley Road, Tel: 01902342 000
டயாநில் பென்டா கப்சியூல்ஸ்
Dianil Penta Capsules
இனிப்பு சிற்றுண்டிகளை ஏன் தவிர்க்க வேண்டும்?
சர்க்கரை வியாதிக்கோர் அரிய இயற்கை மூலிகை மருந்து
கணைய சுரப்பிகளை தூண்டி இன்சுலின் ஓமோனை சுரக்க வைப்பதன் மூலம் சர்க்கரை நோயினால் வரும் அனைத்துப் பாதிப்புகளிலிருந்தும் விடுபட ஒரு புதிய நிவாரணி.
£ 10
LIVER CARE
£ 10
லிவோ ஸ்மைலின் கப்சியூல்ஸ்
• ஈரல் வீக்கம்
• hepatitis (A & B) virus இன் தாக்கத்தால் ஈரல் பெரிதாகல்
• அதீத குடிப்பழக்கம்
• மலக் கறுப்பு
• ஜீரண சக்தியில் குழப்பம்
• ஈரல் தொழிற்பாட்டில் பிரச்சனை இதற்கெல்லாம் சிறந்த நிவாரணி
BRAIN CARE
£ 10 செரபிக்ஸ் கப்சியூல்ஸ் (பிரெய்ன் கெயார்)
• ஞாபக சக்தியைக் கூட்டவும்
• மன அழுத்தத்தைக் குறைக்கவும்
• மனப் பயத்தைத் (anxiety) தவிர்க்கவும்
• இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தவும்
கிமாலயன் வொண்டர் கார்லிக்
Himalayan Wonder Garlic
உங்கள் உடம்பில் கொழுப்பைக் குறைத்து கலங்களுக்கு புத்துயிர் அளிக்கும். இமய மலையின் இயற்கை சூழ்நிலையில் விளைந்த மாசடையாத பூண்டு.
இதயநோய், கொழுப்பு நோய் நிவாரணி.
Supports anti-clotting mechanism in arteria and veins.
£ 10
Pentax Hair Tonic
பென்ரக்ஸ் கெயர் டொனிக்
வழுக்கைத் தலையர்களுக்கு ஒரு வழி
• தலை வழுக்கை
• தலை முடி உதிர்தல்
• தலைமுடி சன்னமாதல்
• அலோபேசியா (aloepacia) நோய் அனைத்தும் குணமாக்கலாம்
£ 10
PURE SHILAJEET
£ 10
பியோர் சிலாயீட் கப்சியூல்ஸ்
வாழ்க்கையின் ஓட்டத்தால் மன அழுத்தமா?
மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி வயதாகும் தன்மையைக் குறைத்து இளமையைப் பாதுகாக்கும் ஒரே நிவாரணி.
அனைத்துப் பாதிப்புக்கும் ஒரே மருந்து
Contact: Mr. J.B. Singh 0781 541 9103 * Dr. R.N. Sharma (B.A.M.S. M.D. (Ayurvedic)
Pentavox (UK) Ltd, P.O. Box 409, Northolt UB5 9AJ Middx. Tel: 020 8423 8800, 07815 419 103
e-mail: info@pentavoxuk.com * Online Shopping: www.pentavoxuk.com
Postage & Packaging Free over order worth £30
"Distributors/Stockist required all over UK & Europe"

அக்கராயனைப் பிடித்தது அப்பட்டமான பொய்....

கடந்த வாரங்களில் இடம்பெற்ற சண்டைகளானது மன்னார் மாவட்டத்தைக் கடந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி என்று விரிவடைந்து கொண்டே செல்லுகின்றது. இது படைகளை உசார்ப்படுத்தி மேலும் புலிகளின் பகுதிகளுக்குள் முன்நகர வைப்பதுடன் கிளிநொச்சி நகரை மிக விரைவில் கைப்பற்றிவிடலாம் என்ற உணர்வுகளையும் அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. இதற்கு விடுதலைப் புலிகள் தந்திரமான பின்நகர்வுகளை மேற்கொண்டு தமதுவளங்களை எல்லாம் பின்நகர்த்துவதுடன் முன்னேறும் படையினருக்கெதிராக பாரிய அளவிலான யுத்தத்தை மேற்கொள்ளாததே காரணம் ஆகும்

மன்னார் - பூநகரி வீதியில் நாச்சிக்குடாச் சந்திக்கு அண்மையில் அதாவது ஏ32 வீதியில் (நாச்சிக்குடாவிற்கு செல்லும் வீதி ஆரம்பிக்கும் இடம்) அண்மையில் இராணுவம் தரித்து நிற்கின்றது. இவ்விடம் பூநகரியில் இருந்து 21மைல் தெற்கே அமைந்துள்ளது.நாச்சிக்குடாவை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டால் அடுத்துவரும் பூநகரி வரையான பகுதி வெறும் பொட்டல் வெளிக் காடுகளையும் சதுப்பு நிலத்தன்மையும் உடைய நிலத் தரைத்தோற்றமாக இருப்பதால் புலிகள் அவ்விடத்தில் நிலைகொள்வது சாத்திய மல்ல. எனவே தாம் வேகமான முன்னகர்வது இலகுவானது என படைத்தரப்பு கணக்குப் போட்டிருக்கிறது.

வவுனியாவிலிருந்து பார்த்தால் வடக்கு நோக்கி படையினர் நிலை கொண்டுள்ள பகுதி ஒடுங்கல் வலயப் பிரதேசமாகவே காணப்படுகிறது. ஆகவே தாங்கள் நாச்சிக்குடாவரை முன்னேறிய படைகளுக்க பக்கவாட்டில் பாதுகாப்பு வழங்குவதற்குரிய பாதுகாப்பு வலயம் போதாது இதனால் விடுதலைப்புலிகள் பக்கவாட்டில் தாக்கினால் முன்னகர்ந்த படையினரின் நிலை அதோ கதிதான்

ஆகவே தான் 57வது படைத்தளபதி மேஜர். ஜென்ரல் ஜெகத் டயஸ் துணுக்காய் மல்லாவிப் பகுதியைக் கைப்பற்றாது ஏ32 வீதியில் மேலும் முன்னேறி எதவித பயனும் இல்லை. இது புலிகளின் ஊடறுப்புத் தாக்குதலுக்கு இலகுவாக வழிவகுக்கும் எனவும் அவ்வாறு புலிகள் ஒரு ஊடறுப்புத் தாக்குதல்களை நடாத்திவிட்டால் பாரிய படைநடவடிக்கைகளை மேற்கொள்ளும் படைகளுக்கு பேரிடியாக அமைவதுடன் தப்பியோடும் படைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவிடும் என்றெண்ணி உடனடித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தினார்.

ஏ32 வீதியில் முன்னேறும் படையினருக்கு சமாந்தரமாக கிழக்கு நோக்கியிருக்கும் துணுக்காய், மற்றும் மல்லாவி ஆகியவற்றைக் கைப்பற்ற வேண்டும். அவ்வாறு செய்வதால் ஏ32 வீதியில் உள்ள படைகளுக்கு பக்கவாட்டு ஆதரவினை வழங்க முடியும் எனவே இத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த அவர் முனைப்புடன் இருந்தார்.

இதனால் கல்விளான் பகுதியில் இருந்த படையணிகள் (57-3) வெள்ளாங்குளத்தி உள்ள படையணிகளுடன் (58) இணைந்து தாக்குதலை ஆரம்பித்தனர். அதன்படி 58வது படையணி வெள்ளாங்குளத்திலிருந்து வேட்டையடைப்பு நோக்கி திடீர்ப்பாய்ச்சலை காடுகளினூடாக மேற்கொண்டு அப்பிரதேசத்தைக் கைப்பற்றி உடனடியாக உயிலங்குளம் வரை முன்னகர்ந்திருந்தன. அதேபோல் கல்விளான், ஒட்டங்குளம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டுள்ள 57-3 படையணி. கல்விளானிலிருந்து கிழக்காக துணுக்காய் நோக்கியும் அதேவேளை ஒட்டங்குளத்திலிருந்து வடக்காக துணுக்காய் நோக்கியும் பாரிய தாக்குதலை மேற்கொண்டனர்.

உயிலங்குளம் கைப்பற்றப்பட்டபின் அங்கிருந்தும் துணுக்காய் நோக்கிப் படைகள் ஒரு நகர்வை மேற்கொண்டு துணுக்காய் பகுதியில் நிலைகொண்டுள்ள புலிகளை பின்புறமாக வால் வளைப்புச் செய்ய முனைந்தனர். இத்தந்திரத்தினை உணர்ந்த புலிகள். தந்திரமாக துணுக்காய் பகுதியில் இருந்து பின்நகர்ந்தனர்.

களமுனைப் பதிவுகள்

பதிப்பிப்பவர் வன்னியன்

படைகள் தமக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்று கொண்டாடின. இது சப்ரகமுவ மாகாண சபைத்தேர்தலுக்கும் இறுதி நேரப் பிரச்சாரமாக அரசுக்கு அமைந்தன. அத்துடன் இம்மாகாண சபைத் தேர்தல் பிரச்சாரத்தில் வெளியிடப்பட்ட ஒரு செய்தி கிளிநொச்சியிலிருந்து நாங்கள் 12 கி.மீற்றர்கள் தூரத்தில் நிற்கின்றோம். அக்கராயனையும் பிடித்து விட்டோம் என்பதே. உண்மையில் இது சரியான தகவலா என நோக்கினால் இல்லை காரணம்

கடந்த வாரம் அக்கராயன் பகுதிவரை இராணுவத்தின் ஆள ஊடுருவும் அணியுடன் ஒரு தாக்குதல் அணி ஊடுருவி அக்கராயன் வரை நகர்ந்திருந்தன. இவ்வாறே சிறு சிறு குழுக்களாக படைகள் உள் நுழைந்து புலிகளின் இலக்குகளை முன்னும் பின்னுமாக தாக்க. புலிகளும் படைகள் தமது நிலைகள் மீது பலமாக நுழைந்து விட்டார்கள் என்றெண்ணி பின்நகர்ந்து விடுவார்கள். இதுவே மன்னார்க் களமுனையில் படைகள் இதுவரை செய்து வந்த தந்திரோபாயமாகும். அதுபோல் ஒன்றே அக்கராயன் பகுதியிலும் நடந்தன. ஆனால் அத்தாக்குதல் பிசுபிசுத்துப் போயின.

படைகள் அக்கராயன் காட்டுப்பகுதிக்குள் நுழைந்தவுடன் ஒரு வீடியோக் கிளிப் ஒன்றை வெளியிட்டன. அதில் அக்கராயன் பகுதியில் தாங்கள் நிற்பதாகவும் அவ்விடத்திலேயே இவை எடுக்கப்பட்டன என படைத்தரப்பு கூறினாலும் அதை உறுதிப்படுத்துதற்கான ஆதாரம் அதில் இல்லை. இவ்வாறு வீடியோப் பதிவு வெளியிட்ட கையோடு புலிகளின் தாக்குதல் அணிகளின் கண்களின் ஊடுருவிய இராணுவத்தினர் மாட்டுப்பட ஊடுருவிய கையுடனேயே அவர்கள் உயிலங்குளம் வந்து விட்டனர். ஆனால் படைகள் முதல் வெளியிட்ட வீடியோக் கிளிப்பை வைத்துக்கொண்டு படைகள் பிரச்சாரப் போரில் இறங்கின. தாம் தற்போதும் அக்கராயனிலேயே நிற்பதாகவும் தென்னிலங்கைக்கு மட்டுமல்ல. புலம்பெயர் மக்களையும் நம்பச் செய்திருக்கிறது. எனவே படைகள் தற்போது கிளிநொச்சியிலிருந்து 12 கி.மீ. தூரத்தில் தாங்கள் நிற்கின்றோம் என்று கூறுவதில் எதுவித உண்மையும் இல்லை.

படைகள் தற்போது நிற்கும் உயிலங்குளத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி நகர வேண்டுமாயின் அவர்களுக்கு இரண்டு வழிகள் உண்டு ஒன்று. உயிலங்குளத்திலிருந்து தேறாங்கண்டல், ஜங்கங்குளம், புத்துவெட்டுவான் கொக்காவில், முறுகண்டி ஆகியபகுதிகளை அடைந்து உயிலங்குளத்திலிருந்து கிட்டத்தட்ட 23 மைல் தூரத்தில் உள்ள கிளிநொச்சிக்குச் செல்ல வேண்டும்.

இரண்டாவது வழி உயிலங்குளத்திலிருந்து கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள், புதுமுறிப்பு ஆகிய பகுதிகளைக் கிட்டத்தட்ட 12 மைல்தூரம் கடந்து அக்கராயன் பகுதியை அடைந்து அக்கராயனில் இருந்து கோணாவிலைக் அடைந்து கிளிநொச்சியை அடைய வேண்டும். அல்லது அக்கராயனில் இருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ள முறுகண்டிச்சந்தி வந்து கிளிநொச்சியை அடைய வேண்டும். எனவே மேற்குறிப்பிட்ட அக்கராயனுக்கு இடைப்பட்ட பகுதிகளை படைகள் கைப்பற்றியதாக அறிவிக்கவில்லை. எனவே இது அப்பட்டமான ஒரு பிரச்சாரமாகும்.

அத்துடன் நாச்சிக்குடாச் சந்திக்குத் தெற்கே உள்ள படைகள் கிளிநொச்சி நோக்கி நகர வேண்டுமாயின் நாச்சிக்குடாவில் இருந்து 4மைல் தூரத்தில் உள்ள பல்லவராயன் கட்டை அடைந்து அங்கிருந்து ஆறுமைல் தூரம் கடந்து ஜெயபுரத்தை அடைந்து அங்கிருந்து கிட்டத்தட்ட 4மைல் தூரத்தில் உள்ள வன்னேரியைத் தாண்டி 5மைல் தூரம் நகர்ந்து அக்கராயனை அடைய வேண்டும். இங்கேயும் அக்கராயன், வன்னேரி தவிர்ந்த எந்தப் பகுதியையும் படைகள் கைப் பற்றியதாக அறிவிக்வில்லை. எனவே படைகள் ஆளஊடுருவி பிடிக்கப்பட்ட ஒளிப்பதிவினைக் காட்டி தென்னிலங்கையில் தாம் அக்கராயனைப் பிடித்துவிட்டதாக பிரச்சாரம் பண்ணி படைகளுக்கு ஆட்களைத் திரட்ட முனைகின்றது. இது ஒரு நல்ல தந்திரோபாயமும் கூட

இனி துணுக்காய்ப் பகுதிகளை நோக்கி பார்த்தால் கடந்த 26ஆம் திகதி படைகள் துணுக்காயிலிருந்து துணுக்காய்க்கும் மல்லாவிக்கும் இடையில் உள்ள கொக்காவில் நோட் நோக்கி மேற்கோண்ட பாரிய ஆட்லறியுடன் கூடிய முன்னகர்வு தோல்வியில் முடிந்தது. படைகள் எப்பாடுபட்டாவது மல்லாவி, ஒட்டறுத்தகுளம், வடகாடு ஆகியவற்றைக் கைப்பற்றி வன்னிவிளாங்குளம் மாங்குளம் பகுதிகளை அடைய முனைகின்றது. அத்துடன் மல்லாவி நோக்கிய நகர்வில் துணுக்காயில் இருந்து ஒரு படையணி மாங்குளம் நோக்கியும், வவுனிக்குளம் பகுதியில் உள்ள 57-1 படையணி ஒட்டறுத்தகுளம், வடகாடு ஆகியவற்றைக் கைப் பற்றி மல்லாவியைப் பின்புறமாக வால்வளைப்புச்செய்ய முயல்கின்றது.

மேலும் உயிலங்குளத்திலிருக்கும் படைகள் தெற்குப் பக்கமாகத் திரும்பி ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தைத் தடந்து மல்லாவியைப் பின்புறமாக முற்றுகையிட முனைகின்றன. அத்துடன் படைத்தளபதிசரத்பொன்சேகா அடுத்த இரண்டு வாரங்களில் தாம் மல்லாவி, வன்னிவிளாங்குளம், மாங்குளம் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி பாலமோடையில் உள்ள புலிகளுக்கு ஆப்பு வைப்போம் எனக்கூறியிருக்கின்றார். அத்துடன் படைகள் பூநகரிநோக்கி எவ்வளவு வேகமாக முன்நகர முடியுமோ அவ்வளவுவேகமாக முன்நகர்ந்துபருவமழைக் காலத்திற்கு முன் பூநகரியைக் கைப்பற்ற முனைகிறது. எனவே அடுத்து வரப்போகும் வாரங்கள் படைகளின் நடவடிக்கைகளுக்கு ஆப்பாகும் வாரங்களாக அமையலாம் ஏனெனில் படைத்தரப்பே தாங்கள் அதிகம் இழப்புக்களைச் சந்திப்பதாக கூறியிருக்கின்றது.

தற்போது அனைவரையும் பரபரப்புக் குள்ளாக்கியிப்பது வான்புலிகளின் தாக்குதலாகும். கடந்த 26ஆம் திகதி இரவு திருகோணமலைக் கடற்படைத் தளத்திற்கு வான்புலிகள் நடத்திய தாக்குதலில் படைகளுக்க ஆளணி ஆயுத இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவையும் படைகளின் பிரச்சாரப் போரை பிசுபிசுக்க வைத்துவிட்டன. அத்துடன் வான்புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலில் தமக்கு எதுவித இழப்பும் இல்லை என கெகலிய ரம்புக்வெல என்கின்ற கொமடியன் கொமடி பண்ணியிருக்கின்றார். இது பற்றி திருகோணமலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கும் போது காலை ஆறு மணிவரை 14 கடற்படையினரின் சடலங்களைத் தாங்கள் கண்டதாகத் தெரிவித்தனர்.

படைகள் இந்த இராணுவ நடவடிக்கைக்கு கொட்டிய பணம் மதிப்பிட முடியாது. நாளை களமுனை நிலமைகள் தலைகீழாக மாறினால் நிலமையை சிந்தித்துப் பாருங்கள் நாட்டின் பொருளாதாரம் எதுவரை சென்றுவிடும் என்று. ஆனால் புலிகள் தமது படைபலத்தை பாதுகாப்பாக நகர்த்தி இறுதி யுத்தம் நடைபெறும் போது பயன்படுத்தினால் படைகளின் நிலமை செல்ல வேண்டிதில்லை. அத்துடன் ஆரம்பத்தில் வன்னி மீதான நடவடிக்கைக்கு புலிகள் கடும் எதிர்ப்பை தந்திரோபாயமாகக் காட்டியதனால் படைகளின் முன்னணி வலுவுள்ள அணிகளை எல்லாம் அரசு களமிறக்கியிருந்தன. இதனால் அப்படைகளே அதிகம் சேதப்பட்டும் இறந்தும், களமுனைக்கு வரமுடியாமலும் போயின. ஆனால் புலிகள் தமது போரிடும் ஆற்றல் மிக்க படையணிகளை இதுவரையும் பாதுகாப்பாகவே வைத்திருப்பதனால் அவர்கள் ஒரு பெரும் தாக்குதலை மேற்கொள்ளும் போது படைத்தரப்பில் போரிடும் ஆற்றல் மிக்க படையினரின் எண்ணிக்கையில் நிச்சயமாக பெரும் வீழ்ச்சியடையும். அதன்போதே புலிகளின் இதுவரை கால மவுனத்தையும், தந்திரோபாயப் பின்நகர்வையும் சிங்கள தேசம் உணரும். அத்தருணம் எப்போது என்பதே அனைவரினதும் பெரும் கேள்வியாக உள்ளது. அதுவரை புலிகளின் பலம் குறித்த மிக மோசமான ஊகங்கள் அனைவரிடமும் எழத்தான் செய்யும்.

With Compliments

Nathan & Co.

Solicitors and Administrators of Oaths

Mr.V Shanmuganathan

Mr.S.Sivadasan

Tel: 020 8542 1805
Fax: 020 8540 9773

106 Kingston Road, Wimbledon,
London SW19 1LX

காட்டு வேட்டைக் கலை

படித்த வாலிபர் (குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட 1965 காலப்பகுதியில்) வட பகுதிக் காடுகள் அழிக்கப்பட்டு விவசாய பூமி ஆகின. காட்டு மிருகங்கள் அகதியாகி அயல் காடுகளில் குறிப்பிட்ட பரப்பளவு காடுகளில் ஒதுங்க நேரிட்டது. வெட்டிய காடுகளின் இலை குழைகளும், உக்கி எரிந்த புதுமண்ணில் பயிர் விளைச்சல் பீறிப் பொலித்தன. விளைச் சல்களை உணவாக்க மிருகங்கள் குடியேற்றத் திட்டங்களுக்கு வருவதும், வேட்டைப் பிரியர் கள் காட்டை நோக்கிப் போவதுமாக காட்டு மிருகங்களின் இறைச்சி பரவலாக கடை விரிக்கத் தொடங்கிய காலகட்டம் அது.

காலை வேளை குடியேற்றத்திட்ட கடைத் தெருச் சந்திகளில் விருட்சமாக வளர்ந்த மரத்தின் கீழே இறைச்சி கடை விரிக்கப்பட்டி ருக்கும். மான், மரை, பன்றி, உடும்பு, முயல், காட்டுக்கோழி, கௌதாரி என அகப்பட்டவை அங்கு துண்டுகளாக வெட்டப்பட்டிருக்கும்.

பழைய தராசும் கையுமாக ஒருவர் இறை ச்சியை நிறுத்துக் கொண்டும், இறைச்சியை மொய்க்கக் குவியும் இலையான்களை ஒரு கையால் கலைத்துக் கொண்டும் இருப்பார். விஸ்வமடு, உடையார்கட்டு, நெத்தலியாறு, முத்தையன் கட்டு பக்கம் இருந்து வீட்டுப் பக்கம் வருவோர் இறைச்சி அல்லது இறைச்சி வத்தல் கொண்டுவருவது வழமை என்ற நிலை அக்காலகட்டத்தில் இருந்தது.

கிளிநொச்சி, வவுனியா விவசாயத் திட்டங் களில் வீட்டுக் காணியாக அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருந்தது. வீட்டுக் காணிக்குள்ளும் மரக்கறிப் பயிற்ச் செய்கை நிறைந்திருக்கும். காணி எல்லை வேலிகள் நெருக்கமான காட்டுக் கதியால் அல்லது அலம்பல் கொண்டு நெருக்கமாக அடுத்த வீட்டுக் கோழியும் உட்புகுந்து அழிவை ஏற்படுத்த முடியாதபடி அடைக்கப்பட்டிருக்கும். இந்த நெருக்கமான வேலிக்குள் வீட்டுக்காரர் இலகுவாக நடத்துவது முயல் வேட்டைதான்.

இரவு வேளை பொட்டு வைத்து வேலி வழிவரும் முயல் அதே வழியில் திரும்பிவிடும். முயல் வந்து போன அடையாளத்தைக் கண்டு அந்த வேலிப் பொட்டுடன் வளையமாகச் சுருட்டிய ஒரு கம்பித் தடத்தை பொருத்திக் கட்டி வைப்பார்கள். அடுத்த நாள் ஆசையோடு மேயவரும் முயல் சுருக்குத் தடத்தில் அகப்பட்டு விடுவார். அடுத்தநாள் மதியம் முயல்க் கறிச்சோறுதான்.

'தவிச்ச முயல் அடிப்பது' என்பது இன்னொரு முயல் வேட்டை. இதற்கு ஏற்றது மழை காலம் தான். நாட்டுப்புறப் பனங்காணிகளுக்குள்ளும் இந்தத் தவிச்ச முயல் அடிப்பு நடைபெறும். மழை பெய்து வெள்ளம் தேங்க முயல் திடலை நாடி ஓடி வரும். முயல்ப் பாய்ச்சல் வெள்ளத்துக் குள் இலகு அல்ல. திடலில் தவித்து நிற்கும் திடலில் தவித்து நிற்கும் முயலைத் தடியால் அடித்துக் கொல்வது தவிச்ச முயல் அடிப்பு.

உரசின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

இரவு நேரம் வெட்ட வெளியில் மேய்ந்து கொண்டிருக்கின்ற முயலை நோக்கி ரோச் வெளிச்சத்தைப் பாய்ச்ச வெளிச்சம் வந்த திசையை முயல் அசையாமல் பார்த்துக் கொண்டிருக்கும் துவக்கோடு நிற்பவரின் ஒரு சன்னத்தில் அந்த முயல் துடித்து விழும்.

அதிகமாக இன்றும் கூட கிடைக்கக் கூடிய தாய் இருப்பது பன்றி இறைச்சிதான். பன்றி பல குட்டி பெறுவதும் இதற்குக் காரணமாகலாம். வன்னி நிலப்பரப்பில் நெல் வயலில் பயிர் முற்றிப் பால் பிடிக்கத் தொடங்கினால் வயலு க்குப் பன்றிக் கூட்டம் படையெடுப்பதும், இறைச்சி விலை மலிவதும், விற்பனையாகாத இறைச்சியை வேட்டைக் காரர்கள் வற்ற லாக்குவதும் இந்தக் காலத்தில் தான். பன்றி கட்டுத் துவக்கில் அகப்பட்டு சூடுவாங்கி இறப்பது அதிகம். அவை கூட்டமாக வருவதால் இதன் சாத்தியப்பாடு கூட ஒரு குறிப்பிட்ட அகல த்தில் கயிற்றால் அல்லது கம்பியால் வைக்கப் பட்ட தடத்தில் பன்றியின் கால் முட்டினால் போதும். நேரெதிரே உள்ள துவக்கின் விசை தானாகத் தட்டுப்பட்டு வெடிக்கும்.

ஒன்று சில வேளை இரண்டு என பன்றி சுருண்டு விழும். காட்டை நோக்கி மரை வேட்டை, மான் வேட்டை என்று கிளம்புவோர் கையில் பன்றி ஒன்றேனும் அகப்படும் என்ற நம்பிக்கை இருக்கும். ரோச் வெளிச்சத்தைப் பாய்ச்ச ஒடுகின்ற பன்றிக் கூட்டத்தை நோக்கிச் சுட ஒன்று என்றாலும் சுருண்டு விழும். வேட்டையாடிய பன்றியை தாமதிக்காது நெருப்புச் சுவாலையில் வாட்டி அவற்றின் தோல் மயிர் போகக் கருக்கி எடுத்தால் தான் இறைச்சியைப் பயன்படுத்தலாம். கருக்கல் என்ற தோலோடு சேர்ந்ததுதான் பன்றி இறைச்சி. கடிக்கச் சிரமம் என்றாலும் ருசி தனிரகம். பன்றியை இறைச்சிக்காக வளர்க் கின்ற பண்ணைகளும் வன்னி நிலப்பரப்பில் அதிகம்.

மான், மரை என்பன தேடிப்போய் வேட்டை யாடி வேண்டியவையாகத்தான் இருந்தன. விவசாயக் குடியேற்றங்களில் 1970 ற்கு முன் வரை பாதுகாப்புக்காக ஏ.கே.47 துப்பாக்கிகள் பதிவு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டன. 1970 சேகுவேரா புரட்சிப் போராட்டத்தின் பின் இவை முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டன. துப்பாக்கிகள் மீள அரசாங்கத்தால் பெறப் பட்டன. ஆனாலும் வெறும் சன்னங்களுக்குள் மருந்தை அடைத்தும், சுய தயாரிப்பான கட்டுத் துவக்கு மூலமும் மிருக வேட்டைகள் தொடர்ந்தன.

இறைச்சி வாங்குவோர் இது மான் இறைச்சி அல்லது மரை இறைச்சி என நம்பவேண்டும் என்பதற்காக இறைச்சி விற்கப்படும் இடத்தே அதன் தலை கிடத்தி வைக்கப்பட்டிருக்கும். இருவர் மூவராக உழவு இயந்திரத்தில் நடுக் காட்டுக்குள் வேட்டைக்குப் போவதும் உழவு இயந்திரத்தை நிறுத்திவிட்டு சுற்றுப் புறங் களில் அல்லது குளக்கரைகளில் மான் மரை யைத் தேடிக் காத்திருப்பதும் அன்றாட வேட்டை அம்சங்கள். மான், மரை இறைச்சியும் மற்ற வையை விட அதிகம்.

இரவிரவாக விழித்திருந்தும் மிருகம் அகப்படாவிட்டால் துவக்குக்கு நாணம் ஏற்படுத்த மிருகம் விழும் என்ற நம்பிக்கையும் சில வேட்டைப் பிரியர்கள் மத்தியில் இருந்தது. துவக்கை நிலத்தில் கிடத்தி அதன் அருகே சிறுநீர் பெய்து விட்டு மூன்று தரம் துவக்கைக் கடந்தால் தனக்கு மிருகம் உடன் அகப்படும் என விஸ்வமடு வான் தேவர் அடிக்கடி சொல்லுவார். அவர் சகபாடி விநாயக மூர்த்தி அது நூற்றுக்கு நூறு வீதம் உண்மை என்பார். அவர்கள் நம்பிக்கை அப்படி.

சீன வெடியை அல்லது நெருப்புக் குச்சி யைப் பிரித்து அதன் வெடிமருந்தை வெற்றுச் சன்னத்தில் அடைத்து அந்த இந்த பாகங் களைப் பொருத்தி தாம் தயாரித்த கட்டுத் துவக்குக்கு அந்த சன்னத்தைப் பயன்படுத்த இரவிரவாக காடுகளில் அலையும் வேட்டைப் பிரியர்களின் ஆர்வம் பிரமிக்க வைக்கும். வேட்டைக்குப் போவோரை குளுவன்மாடு கலைப்பதும் பாம்பு தீண்டுவதும் தனிக்கதை. சூடுவாங்கிப் புண்ணோடு அலைந்த அலியன் யானை. தன்னைச் சுட்டவரை அடையாளம் கண்டு துரத்திவந்து விஸ்வமடு குளக்கட்டில் கை வேறு கால் வேறாக போட்ட கதையை சோதி முருகேசு அடிக்கடி சொல்லுவார்.

காட்டுக் கோழி சின்னவை. இறைச்சி ருசிக்கு நிகரற்றவை. இலகுவில் எழும்பித் தூரப்பறக்கக் கூடியவை. வெடிக்குள் அகப்படுவதும் அபூர்வம். கௌதாரி வகையும் இவை போலத் தான். காலத்துக்குக் காலம் மாரி வேளைகளில் பல்லாயிரம் மைல் தாண்டி பருவத்தை அனுப விக்க உல்லாசப் பறவைகளாக வன்னிக் குளக்கரைக்குப் பறந்துவரும் வெளிநாட்டு இன சூழங்கடாய்ப் பறவைகள்தான் பாவம். இலகுவாக வேட்டையர்களிடம் அகப்பட்டு விடும். மாரிப்பருவங்களில் சாரிசாரியாகப் பறந்து வந்து குளங்களை அண்டியும் நடிவிலு மாக உள்ள பட்டமரங்களில் கூடு கட்டுவது அவற்றின் வழக்கம். உல்லாசமாக வந்த இடத்தே கூடிக்கலப்பதும், முட்டை இடுவதும், குஞ்சு பொரிப்பதும் வழமைதானே. தாய்ப் பறவை குஞ்சுகளோடு கூட்டில் இருக்கும். சூழங்கடாக் குஞ்சுகள் கூடக் கனமானவை. இரண்டு கிலோ வரை எடையிருக்கும். குளக் கரைப் பக்கமாக பட்டமரத்தில் குஞ்சுகளோடு படுத்திருக்கும் சூழங்கடாவைப் பிடிக்க ஒரு தடியோடு குளத்திற்குப் போய் கூட்டைத் தட்டிவிட்டால் போதும்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

Do you run a business?

Do you employ staff?

Do members of public have access to your business premises?

*Give **Ragarfield** Insurance Brokers a call to arrange a no obligation quotation for your business / property insurance and if you like the competitive rates we can arrange, you may qualify for free access to a lot of features advising you comprehensively on*

- **Health & Safety**
- **Risk Management**
- **Legal Expenses**

Covers for shops and businesses can be arranged with excesses as low as

£50 for Glass Claims
for Money Claims
for Frozen Food Claims
and for Goods in Transit Claims

Discounts are also available if you have the following

Alarm, CCTV, Roller Shutters, Claims free experience, Staff living above the shop

Your business insurance can also be extended to include the contents in the flat above if required

ஆபத்து வருமுன் ஆவண செய்யுங்கள்!

நீங்கள் ஏதும் வியாபாரம் செய்கின்றீர்களா? உங்கள் நிலையத்தில் பணியாளர்களை அமர்த்தியுள்ளீர்களா?

உங்களது ஸ்தாபன காப்புறுதித் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள். எமது சேவையினை ஏற்கும் பட்சத்தில் உங்கள் வியாபாரம் சம்பந்தமான கூடுதல் அறிவுரைகளை இனாமாகப் பெறுவதற்கு சாத்தியம் உண்டு.

உங்கள் அனைத்து காப்புறுதித் தேவைகளுக்கும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய 35 வருட அனுபவம் கொண்ட முறைக்கேற்றபடி தொழில் புரியும் (Professionlism) நிபுணர்களைக்கிய எம்மை நாடுங்கள்.

பல முன்னணி காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும் மிகக் குறைந்த கட்டணத்தில் எங்கள் சுகல காப்புறுதித் தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்ள அழையுங்கள்.

Most Trades are considered including the following

Supermarkets	Builders Merchants
Grocers	News Agents
Off Licenses	Boutiques
DIY & Hardware	Heating & Plumbing
Fish & Chips	Retail & Wholesale
Restaurants	Manufacturers
Clothing Retail	Wholesalers
Hairdressers	Production
Beauty Saloons	Distribution

Need Van Insurance?

We can arrange best available rates and also Protect your **No Claims Bonus** from 1 year onwards.

Have 3 or more vehicles?

We have access to exclusive motor fleet products and can arrange cover with any driver {17+ without any higher excesses} and many more features.

Ragarfield can source you great insurance products on excellent terms, to cover **EVERYTHING** that your business needs

We've been around for a While. For 35 years. So we have first rate relationships with leading insurers all over the marketplace.

இன்றே அழையுங்கள்.

Talk to us now...

Tel: **01474 32 88 88**

Ragarfield Limited
Insurance & Mortgage Brokers
31 Milton Road Gravesend Kent DA12 2RF
Authorized & Regulated by Financial Services Authority

நிகரில்லாத் தலைவனும் நிலை தளும்பா மக்களும்

இராணுவ முற்றுகையால் அவலப்படும் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட, உள்ளக இடம்பெயர்விற்குள்ளான மக்கள் குறித்து விசனம் கலந்த அறிக்கை ஒன்றினை சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ளது.

ஓமந்தை நுழைவாயிலை பலவந்தமாக மூடியவாறு ஏதிலியாக்கப்பட்ட மக்களிற்குத் தேவையான அடிப்படை நிவாரணப் பொருட்களைக் கூட கொண்டு செல்லவிடாது இராணுவம் தடுப்பதாக அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எவர் சொன்னாலும் அதை உடனடியாக நிராகரிக்கும் மகிந்த அரசுக்கு மன்னிப்புச் சபைகளின் அறிக்கைகள் மனமாற்றத்தைக் கொண்டுவரப் போவதில்லை.

நான்கு தடவைகள் உள்ளக இடப்பெயர் வுக்கு உள்ளாக்கப்பட்ட வன்னி மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழையாமல் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசத் திற்குள் நகர்ந்த விவகாரமே அரசின் நிகழ்ச்சி நிரலைத் தலைகீழாக மாற்றிவிட்டது.

இடம் பெயர்ந்த மக்களைப் பாதுகாப்புக் கேடயமாக விடுதலைப் புலிகள் பயன்படுத்து கிறார்கள் எனக் கூறும் மகிந்தர் நிவாரணப் பொருட்கள் உள் நுழையக் கூடாதென்பதில் உறுதியாகவுள்ளார்

தென்னாசியப் பிராந்தியத்தின் முதன்மை வல்லரசாளராகத் தன்னை ஏற்பிதம்கொள்ளும் காந்தி தேசம் மனித அவலம் குறித்து வாய் திறப்பதில்லை. ஏற்கனவே வாடகைக் காரில் சென்ற இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன். (மயன்கொதே. கெலத். நாராயணன்), .ஸ்ரெயிட்ஸ் ரைம்ஸ் இற்கு வழங்கியளானஉபதேச நேர்காணலால் விசன மடைந்திருக்கும் சிங்களத்தை வன்னிமக்கள் அவலம் பற்றிப் பேசி மேலும் வெறுப்பேற்ற இந்தியா விரும்பாது.

இந்தியா பேச வேண்டுமென எதிர்பார்ப்பது இலவு காத்த கிளிக் கதையை நிதர்சன மாக்கிவிடும். தமிழ் மக்கள் மனதை ஸ்ரீலங்கா அரசு வெல்லும் வரை களமுனைச் சமர்களில் பெறப்படும் வெற்றி, முழுமையான போர் வெற்றிக்கு இட்டுச்செல்லாதென ஆலோசகர் வங்கும் அறிவுரையை மகிந்தர் ஏற்றுக் கொள்ளவில்லை.

மரத்தின் கீழ் படுத்துறங்கும் இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் மனதை சிங்களம் வென்றெடுக்க வேண்டுமென மனிதாபிமான ஆலோசனை வழங்கும் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் நோர்வே வழங்க முடியாத அரிதான அறிவுரையை இந்தியா மட்டுமே முன்வைக்க முடியுமெனச் சத்தியம் வேறு செய்கிறார்.

கைப்பற்றப்பட்ட மன்னார் நிலங்களில் மக்கள் இடம் பெயராமல் இருந்திருந்தால் அவர்களை ஒரு பாதுகாப்புக் கேடயமாக இராணுவம் நிச்சயம் பயன்படுத்தியிருக்கும். மட்டக்களப்பு ஆக்கிரமிப்பின் போது அவ்வுத்தியினை இராணுவம் முழுமையாகப் பயன்படுத்தியது.

அரசியல் பார்வை

பார்ப்பவர் இதயச்சந்திரன்

விடுதலைப் புலிகளின் பிரதேசத்தை நோக்கி நகரும் மக்கள் அங்கு உருவாகும் மக்கள் படைக் னட்டுமானத்துள் உள்வாங்கப்படக் கூடிய சாத்தியப் பாடுகள் உண்டென்பதே அரசிற்கு இருக்கும் பெரிய தலைவலி..

குடும்ப வாழ்வில் இணைந்து கொண்ட முன்னாள்ப் போராளிகளும் அரசியல்த் துறையின் அழைப்பை ஏற்று நிலம் மீட்கப் புறப்பட்டுள்ளனர். மகிந்தரின் இறுதி 'பயாப்ரா' முற்றுகையை உடைத்தெறிய சகல மக்களும் அணிதிரள்வதை உணர்ந்து கொள்ளும் சிங்களம் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங் கள் வன்னிக்குள் நுழைவதைத் தடுத்து மக்களை தம்பக்கம் இழுத்தெடுக்க முனை கின்றது. வான்வெளித் தாக்குதல்களும் நீண்ட தூர எறிகணை வீச்சுக்களும் மரணத்தின் விளிம்புக்கு மக்களை அழைத்துச் செல்கிறது.

வடமத்திய சப்ரகமுவ மாகாண சபைத் தேர்வுக்கு முன்பாக பூநகரியைக் கைப்பற்ற வேண்டுமென்பதே கோத்தபாயவின் ஆசை. காந்தி தேசத்தின் மாயக்கரங்கள் வன்னி மண்ணில் நிற்கும் ஆக்கிரமிப்பு இராணுவத் தோடு இணைந்து இருப்பதாகவே ஊர்ஜித மான தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜயசிக்குறுய் 01 இன் போது 32 நாடுகளின் அரவணைப்போடு புறப்பட்ட சிங்களத்தின் முதுகெலும்பு தனிப்படை கொண்ட தேசியத் தலைவரால் முறியடிக்கப்பட்ட வரலாற்றினை இப்போது நினைவில் கொள்ளலாம். இனி நிகழப் போகும் ஊடறுப்பின் பரிமானங்கள் கொண்ட முற்றுகைச் சமர் ஆளணிப் பேரிழப் பையும், படைக்கலக் கையகப்படுத்தலையும் முல்லைத்தீவு, ஆளையிறவு வரிசையில் நிஜமாக்கப் போகிறது.

57வது படைப்பிரிவின் மீது புலிகள் குறி வைப்பதாக பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருது கின்றனர். ஏ9 பாதையைக் கடப்பதற்கு காத்திருக்கும் இப்படையணி அழிக்கப்பட்டால் இதுவரை உருவேற்றப்பட்ட இராணுவத்தின் உளவுரண் ஒரு நொடியில் சிதைக்கப்படலாம். அதேவேளை வானிலிருந்து வன்னி மக்களுக்கு இன உறவு மேம்பாட்டுக் கடிதங்களைப் போடும் அரச விமானங்கள் மூன்றாவது பாரிய தாக்குதலை எதிர் கொள்ளும் நிலையும் ஏற்படலாம்.

களமுனை நிலவரம் எவ்வாறு இருந்தாலும் புலம்பெயர்ந்த உறவுகளின் அரசியல் எழுச்சிப் பணிக்கான தேவையும் அதிகரிக்கிறது. களையெடுக்கும் தனிநபர் தாக்குதல்களை தவிர்த்து சுய முனைப்பை ஒரு பக்கம் ஓரமாக வைத்து வேரழியாமல் நிலத்தைக் காக்கும் வீரம்மிக்க மக்களுக்கு பக்க பலமாக இருப்பதே தமிழர்களின் முன்னுள்ள தலையாய பணி.

மரத்தில் தொங்கும் வெளவ்வாலுடன் படுத்துறங்கும் எம் மக்களின் துயர் துடைக்க அனைவரும் அணிதிரழும் காலம் வந்து விட்டது. அக்கினிக்களமாகும்மட்டக்களப்பில் தமிழ்த் தேசியத்தின் எழுகை தெரிகிறது.

ஏட்டளவில் படுத்திருக்கும் 13வது திருத்தச் சட்டம் மாகாண சபையில் நிஜமாக்க வில்லை என்று முன்னாள் புலனாய்வுத் தலைமகன் கேணல் ஹரிகரன் அவர்களே மனம் வருந்திக் கூறுகின்றார். பேருமாளுக்கும் காணி உரிமை இல்லை. ஒட்டுக்குழுவின் பிரதித் தலைவர் பிள்ளையானுக்கும் காணி, கல்வி உரிமை இல்லை. இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடிய சிங்களத்தை சேர்ந்திருந்தே தெரிந்து கொள்ளலாமென அன்றும் சிலர் நம்புகிறார்கள்.

ஆனாலும் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தலுக்கு கூலிப்படையாக தொழிற் படும் வேலையை மட்டும் பிள்ளையானுக்கு மகிந்தர் கொடுத்துள்ளார். கிழக்கின் விடிய லுக்கு மகிந்தருக்குத் தோள் கொடுத்த கருணாக் கும்பல் தற்போது கூலிப்படையாகிக் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

வன்னி விழும் நாள் வெகு தூரத்தில் இல்லை யென்று சிங்களத்தின் முதுகைத் தடவுகிறார் கருணா. வன்னி விழுமா இல்லையா என்கின்ற ஆராய்ச்சியை விட்டு டக்ளசைப் போல் மந்திரி யாகும் மாயத்தைத் தெரிந்து கொள்வதே கருணாவுக்கு நல்லது.

தமிழர் தாயகம் விடுதலை பெறும் போது இந்த ஒட்டுக் குழுத் தலைவர்களின் சரணாலயம் கொழும்பாக இருக்கும். அது வரை எதையாவது உளறட்டும். சோதனைகள் வரும் பொழுதே உறுதியான மனம் வேண்டும். மன வறுதியைக் குழப்பும் குசும்பர்கள் அதிகம் உலா வருகிறார்கள் கவனம் நிகரில் லாத் தலைவனும் நிலை தழும்பா மக்களும் இருக்கும் வரை எந்தக் வல்லரசுக் கொம்பர் களாலும் எம் விடுதலையைக் களவாட முடியாது.

அடங்காப்பற்று

கோடிகளாய் கொட்டினாலும்
கொடூரங்கள் மறக்காது
வந்தவரும் வசைபாடி
வாயினிக்க பேசினாலும்
வன்னியின் களமுனையில்
காத்திருக்கு பொறியுனக்கு

அயலவர்க்கு பாய்விரித்து
பல்லாயுதம் வேண்டினாலும்
உலகெல்லாம் பறந்து திரிந்து
இரந்திரந்து வந்தாலும்
எம் விடுதலையின் விருட்ஃத்தை
முகரவும் முடியாதுன்னால்

முட்டி முட்டி நின்றுவிட்டு
முட்டாமல் பின்வாங்க
அடிமேல் அடிவைத்து
அடங்காப்பற்றில் அடிவைக்க
வலியவே நினைவுவரும்
வன்னியரின் வரலாறு

மணலாற்றில் மட்டும் முகமாலையிலும்
முன்னேறத் தடையிருக்க
பாலமோட்டையிலும் பதறுகிறாய்
படையினரைத் தினமிழந்து
மன்னாரில் மட்டும் மறிப்புக்கள்
குறைவேன்?
ஏறிவாமுன் இழப்புக்குத் தயாராய்

அடங்காப்பற்றுமண் அடிபணியாதுனக்கு
வெள்ளையனும் தோற்றமண்
இந்தியரும் ஏமாந்தமண்ணது
திரும்பவும் ஒருமுறை
உனக்குமங்கே விளையுதொரு
விரிந்ததொரு வலைப்பின்னல்

-வ. கணேஷ்

(காட்டு வேட்டை....)

கூட்டோடு குஞ்சுகள் விழும். தாய்ப் பறவை அனேகமாகப் பறந்து தப்பிவிடும். கோணாவில், ஸ்கந்தபுரக் குளங்கள் வருடா வருடம் கூழங்கடாக் கூடல் களமாவது வழமை. மென்மையான கூழங்கடா இறைச்சி மாரி தோறும் மலிவாக இப்பகுதியில் கிடைக்கும்.

பல்லவராயன்கட்டு, வேரவில் பகுதியில் புலிகளின் நடமாட்டம் 1980களில்கூட இருந்தது. ஆடு, மாட்டுக்கன்று என்று அகப்பட்டதை அடித்து இறைச்சியாக உண்டுவிட்டு மீதியை விட்டுவிட்டு அவை போய்விடும். மீதியை உண்ண மறுநாள் வரும். இதை எதிர் பார்த்து மீதமான அந்த உடலத்தில் நச்சுத் திரவத்தை ஊற்றி விடுவார்கள். மோப்ப சக்தி அற்ற புலி அதை உண்பதும் இறப்பதும் வழமை. மறுநாள் அந்தப் புலியை உரித்து நகம், பல், தோல் என்பவற்றை பயன்படுத்த எடுப்பார்கள். நஞ்சு ஊறிய தோல் விரைவில் மயிர் கொட்டுப் பட்டு விடும்.

மிருக வேட்டைக் காலம் கடந்து இராணுவம் தமிழர் வேட்டையில் இறங்கிய காவம் இது. என்றாலும் அந்த நாள் நினைவுகள் எந்த நாளும் மாறாதே.



ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் **அர்ஜூனா ராஜூ குருஜி ஜெங்கம்மா**



கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒரு முறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சனை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். ஆயுர் வேத மருந்துகள் சகல விதமான வியாதிகளுக்கும் நாடி பார்த்து மருந்து தரப்படும்.

07951 631 883 / 020 8470 5209

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12 Open Seven days a Week

Will Kilinochchi be the Stalingrad of Eelam War 4?

By S. Makenthiran
WWW.SANGAM.ORG

At the beginning of this year 2008, I wrote an article "What the year 2008 holds for the people of Sri Lanka." It is relevant now in mid year, to take stock of the present civil war situation. Singhalese chauvinists are raving over the 'defeat' of the Tamil Tigers, and the successful 'liberation' of the Eelam Tamils. The East has been subjugated by the Sri Lankan armed forces and a puppet administration established under Pillayan with a Singhalese governor wielding most of the powers. The Mannar district is claimed to have been 'liberated' and the Sri Lankan army is said to be within sight of Kilinochchi, Elephant Pass and Mullaitivu, the last Tamil Tiger strongholds.

In the 'liberated' East, the Tamil Tigers have carried out guerilla attacks culminating in the claymore mine attack on the army in Thoppikal [Kudumbimalai], killing 24 soldiers and wounding five. This is denied by the Sri Lankan government. The return of Karuna to Sri Lanka from a UK jail can have unforeseen consequences for Pillayan's provincial government in the long run. In the short run, Karuna is lying low out of necessity, but he is not going to forget Pillayan, his one-time second in command, for usurping his position. It is a revolt within a revolt. The Muslims and Hisbullah are also grinning and bearing the Pillayan administration. The Rajapkse government is spending large sums of money to keep the lid on the boiling East. We have to wait and see what will happen in the future in the East.

In the North, the Army was stuck at the Mannar border for many months. Suddenly, it has advanced within a few days deep into the Tamil Tiger homeland and occupied Iluppaikadavai and Vavunikulam, thereby bringing Mannar District under its control. The chauvinist Singhalese are jubilant and claim that Kilinochchi, Elephant Pass and Mullaitivu are within sight and Eelam War 4 is nearing completion.

Some of the reputed international media even claimed gullibly, that the Sri Lankan army had victoriously entered Kilinochchi, and that they were looking for Prabaharan who is hiding there. Such is blissful ignorance and the effect of Sri Lankan propaganda. President Rajapakse also thundered that he will force Prabaharan to kneel before him. Eelam Tamils know one thing with certainty. Prabaharan is not the type of man to surrender or be taken alive by the Sri Lankan army to enable this wishful thinking to materialise.

It is apparent that the Sri Lankan government is spending large sums of money to spread anti-LTTE and anti-Tamil propaganda among the international community, not without success. In the process, there are very few neutral powers left that can mediate a peaceful solution to the civil conflict. There are an army of journalists such as Mahindapala, Dayan Jayatileke, Dushy Ranatunga, Walter Jayawradena, Daya Gamage, etc. serving the cause of the Sri Lankan government to influence international opinion on the civil war.

In the propaganda war, there have been ridiculous reports by anti-Tamil media that Prabaharan is long dead, that his leg has been amputated in Kerala, that his daughter held her birthday party in the U.K., that he is planning to flee Eelam, and so on. According to figures published by the pro-government media and the Sri Lankan army commander Sarath Fonseka, they have killed more Tigers than the number of total LTTE fighters. These sources have lost all credibility. Rambukwela has outdone Goebbels, the Nazi propaganda chief.

Anti-LTTE media, including Asian Tribune and Tamil Week, who make it appear that they have inside information, have reported that the Sri Lankan army has brilliantly outmaneuvered the Tigers by infiltrating and penetrating their defences with pinzer movements and trapping them. They report that the Tigers are a spent force and are no match for the Sri Lankan army. Tamil Week went to the extent of expressing a strange opinion that the army is at an advantage in the jungle terrain. It is generally presumed that jungle terrain is more favourable for lightly armed guerilla fighters than for heavily armed conventional armies.

As guessed by me, the Sri Lankan army has chosen to advance through the A32 highway along the North West coast line. They did not advance along the A9 highway as was done in the disastrous Jayasikuru operation. The pro-Tamil media opine that Tamil Tigers have enticed the Singhalese army into the Tiger den to trap them and annihilate them. Though it is premature to come to conclusions, there are persistent reports in recent weeks, of successful counter-attacks, and ambushes by the Tamil Tigers, inflicting heavy casualties on the advancing Singhalese army. The Sri Lankan government has prevented journalists from reporting anything about these attacks.

There is no hope of a ceasefire or peace talks as President Rajapakse wants the LTTE to surrender arms, and accept a unitary form of government. Prime Minister Ratnasri Wickremanayake wants 'terrorism' eradicated before peace talks. None of these will happen. We are in for a long haul.

Bruce Fein, an American Lawyer is pursuing action to get Sarath Fonseka, the Sri Lankan army commander, Gothabaya Rajapakse and Basil Fonseka, who are President Rajapakse's brothers, all of whom who are residents or citizens of the USA, to be prosecuted as war criminals.

Sri Lanka is financially bankrupt. Inflation is at a high of 28 %. War expenditure has escalated. Prices have rocketed. Tourism is down. The EU is threatening to stop the preferential treatment for the Sri Lankan garment industry. Tamils are displaced and suffering. The Singhalese common man is also suffering. About 18,000 men are reported to have deserted from the military.

In the propaganda war, there have been ridiculous reports by anti-Tamil media that Prabaharan is long dead, that his leg has been amputated in Kerala, that his daughter held her birthday party in the U.K., that he is planning to flee Eelam, and so on.

Defence Secretary Gothabaya Rajapakse has declared publicly that the Sri Lankan army will capture Kilinochchi by the end of this year. The army commander Sarath Fonseka had also promised to win the war before he retires towards the end of this year. The lessons of the past and happenings in other parts of the world have not made the Singhalese leaders wiser. The debacles of Jayasikuru, Agni Kela and the two subsequent forays into Muhamalai have not allowed them to learn from the past. It is reported that a Tiger Deep Penetration Unit killed 21 soldiers at Muhamalai today.

Are the Sri Lankan forces advancing in Vanni, or are they getting bogged down in a fatal quagmire? I am skeptical about the sudden advance of the army after the occupation of Vidataltivu. Military analysts will ponder how it took about an year to advance from Mannar to Vidattaltivu, but only a few days to reach Iluppaikadavai and Vavunikulam. Are they reaching a point of no return ?

The Tamil Tigers have two constraints – manpower and supplies. If they overcome these two constraints, the fate of the Sri Lankan army is sealed. Even if the Singhalese army reaches Kilinochchi, Elephant Pass and Mullaitivu, the Tamil Tigers can carry out guerilla attacks indefinitely. The ambushes at Thoppikal and Muhamalai are a warning of things to come.

By the end of the year 2008, we will know whether the Eelam War 4 has been won by the Sri Lankan armed forces, enabling the Rajapakse government to dictate their terms to the Tamils or whether at Kilinochchi they will meet with the 'Stalingrad' of Eelam War 4. Readers will be aware how during World War 2, the mighty Nazi army crashed through Russia's vast land and defences up to Stalingrad, Moscow and Leningrad till their massive surrender and their general, Von Paulas at Stalingrad, resulting in the routing of Hitler's mighty military machine. The mighty Nazi army was at the suburbs of Moscow and Leningrad, but failed miserably to capture them. The mightiest army of the time was defeated due to the fact that they were spread throughout Europe and Russia and a severe winter arrived.

It is difficult to foresee the future of the civil war. The Sri Lankan government is running the risk of bankruptcy. They want to prosecute the war to the bitter end, even if it means the ruin of the Singhalese. Let us wait and see till the end of the current year the outcome of the undeclared Eelam War 4.

On the international front, Tamil Nadu is getting agitated over the killings of the Eelam Tamils, and the Tamil Nadu fishermen by the Sri Lankan army and navy. Action is being filed in the Indian Supreme Court to declare the cession of Kachativu by the Indian government to Sri Lanka as void. A change of government in India can result in India enforcing a Cyprus or Georgia type of situation. Any peace talks should involve the Tamils of Tamil Nadu as an interested party. Any solution to the Sri Lankan ethnic problem should satisfy the Eelam Tamils and Tamils of Tamil Nadu as much as the Singhalese. The Singhalese cannot decide the destiny of Eelam.

INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய **LIFE IN THE UK** பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: **07908 866 300**

Victory Bollywood Style But Coming Colours No Good

Kusal Perera
SERENDIBINC.COM

What was Sri Lanka doing the whole of last week? At least, what was the South doing? Not very many. But there was enough to keep the days going, like the protests that targeted the IGP for not arresting Dr. Mervyn as ordered by the Colombo Additional Magistrate. It wasn't the Dr. Minister had gone underground or had got himself warded in the Merchant's Ward. It was probably the Dr. Minister did not know he was ordered to be arrested. He probably came to know about the arrest when the media organisations came on the Colombo streets asking for the IGP to "go home" if he cannot arrest "Morviya". It took the law abiding Minister less than an hour to present himself in Courts and have himself bailed out. The efficiency of the whole process was damn too quick for Sri Lanka.

But it wasn't that easy for Journalist Tissainayagam, who was indicted on Wednesday and remanded after almost 165 days in TID custody. He was in fact held responsible by the TID for the murder of a lone police constable the previous night, who was sent unarmed to guard a printing press that had also been sealed by the TID. This printing press had till that fateful night been guarded by two police constables with weapons in hand. Journalists do arm and disarm people in their reporting, but with Tissainayagam, it had been far more spectacular. With no elaborations as to how Tissainayagam and his group (?) could be responsible, one could assume that Tissainayagam sent one police constable from the Kotahena police station on duty instead of two as usual and sent him unarmed too.

These are peculiar arguments according to legal sources. Its much more peculiar when the Magistrate says the best he could do for the five remand prisoners, who had to be handed over to the police for custody, is to allow them to appeal against their hand over to the police in a higher Court. It was history in Sri Lanka to hand back to police custody, anyone who had been duly remanded by a Magistrate. This was on the orders of the Defence Minister, who is also the President. The five, unfortunately happened to be Tamil and the reason for such historic transfer.

The war in the two provinces heightened meanwhile, sending the second India – SL ODI into the shades of Rangiri-Dambulu hinterland. But then, India managed to win the ODI leaving no reason for the South to take any interest in the match, except that the Russian female cheerleaders were taken off the ground to save our culture. South was unaware though, that in defeat, some of the Sri Lankan cricketing stars were turned into real Bollywood stars by playing for the 10 million dollar movie "Victory" shot on location in most cricketing countries to include top international cricketers. Ajithpal Mangal took to the grounds at the P. Sara Stadium in Wanathamulla to direct Murali, Sanga, Sanath and Dilhara with Bollywood stars Harman Baweja and Amrit Rao and expects his film to be a better hit than even "Lagaan".

The provincial elections differ very much. There weren't any stars other than Ramanayake turned prospective Chief Minister. Most governing politicians who turned up in the two provinces were playing the villain's role instead of the hero's. The Police were often accused for not playing at least a "no nonsense" role they have to play when the cameras role for teledramas. The governing UPFA has to win for the South to win the war against the LTTE. And they did win convincingly. All the electorates in the two provinces went to the government party leaving the JVP with the worst defeat ever they did not even dream of. Wickramasignhe would have to formulate a theory for his own survival now and the week proved its worth a sacrifice in many a meal that goes with ever increasing prices.

It's no cheap price for peace. Sacrifices are many. The teachers sacrificed too but have not been put right over their salary anomalies for over 12 years. Last year they refused to mark A/L answer scripts till their grievance was solved and then went to marking centres under police escort with a promise to have the anomalies removed. This year the teachers had a better answer for their security without police escort, for they did not apply to mark A/L papers. By Thursday the media said there's trouble in some marking centres and two had been closed down. So this year too the students would have to sacrifice their future in some way, if luck does not play cupid.

It wouldn't be difficult to solve these issues any way now with the President taking over powers to extend the service of all public officers after their stipulated date of retirement. It's only that the President should extend that power he already used to postpone the retirement of his long time associate "Bulla" as the AG, to the rest of the public servants. All those who refuse to mark answer scripts could then be sent on retirement and vacancies found for the unemployed. Students could then find their cupid in this lovable Mahinda while the people would have to find alternatives to live their life after this week, as Azadek says "ena pota honda nehe goiyo".

Editorial Eelam Nation

The latest exercise in Tamil genocide

More than 12,000 families are literally on the run for their lives moving away from bombardments by the Sri Lankan army deliberately aimed at civilian targets killing and maiming the innocents. The civilian hospital in Mullaitivu is one of the major casualties in the list of civilian institutions recently destroyed denying even the last remnants of medical help. The plight of the destitute people now living in the jungles and under trees has been exacerbated by the complete breakdown of the state apparatus on them engineered by the Sri Lankan State itself, and the forbidding cost of transport. The position will get worse with the onset of the monsoons. An army that should assist in providing relief to the displaced people has turned hostile towards them.

They are left with postal services denied and even without the rudimentary state services hitherto rendered by the central government agencies of Mullaitivu and Killinochi with services now having been transferred to the district secretariat in Vavuniya, which is as good as no service. This is another phase of genocide in the anticipated final solution to the Tamil question. The State is unwilling to protect its citizens, whom it calls its own, from the atrocities of its own armed forces.

This is a another stage in the continuing programme of the wanton extra judicial murders of Tamil civilians, Members of Parliament, Christian priests, human rights activists; abductions, disappearances, unlawful arrests, detentions and assaults of Tamil journalists, torture, embargos, blockades of trunk routes essential for the transport of food and essential items designed to starve the people. Now it is the turn of the rural Tamil masses to participate in the programme of the decimation of the Tamil people. If the percentage of the Tamil population is reduced, then the Sinhala polity has a greater majoritarian claim to deny equality to the Tamil people in the typical Sri Lankan style.

In a display of absolute callousness and cynical disregard for the suffering humanity and their dire plight, the defence spokesperson, Minister Rambukwella has the audacity to say that those displaced families should bear their adversity with a grin because it is sacrifice worthwhile making in return for the elusive liberation in the horizon. The only final liberation that these displaced people could hope for is a state of Nirvana.

The greater the sufferings heaped on the Tamil people, the more popular President Rajapakse becomes within the Sinhala constituency. Keeping the plight of the Tamil people in tact as a convenient subject for his experiment, Rajapakse wants to use the coming Sabaragamuva Provincial Council elections to assess his popularity among the Sinhalese people in order to test the waters of his eventual chances in the Presidential elections with the spiralling cost of living and escalating inflation vis-a-vis his Tamil genocidal expeditions.

Abandoning the State's responsibility of protecting and providing relief to its suffering people whom they are purporting to liberate, they make a ridiculous request to the international community to get the LTTE to allow these displaced families to go over to the government controlled areas--a classic example of the mournful crocodile pleading for the lamb to be sent over to its side to save the lamb from drowning.

The perception cultivated in the south is that all Tamils are terrorists and therefore should be treated so. Killing a Tamil therefore is killing a terrorist. Acts of the Sri Lankan army under the command of one who perfectly fits and lives up to the English dictionary meaning of a racist, sincerely believing that the country should be "ruled by the Sinhalese community which is the majority representing 74 percent of the population", apparently signifying that the ethnic minorities, without question, should endure all the atrocities heaped upon them done with impunity with the patronage of the state.

The muted response to the current Tamil calamity from the mainstream media and the Tamil God fathers in the Tamil Mafia is all part of the "Southern Consensus".

First Indian Guru Rishi Ji
From India

In the Spirit of true Spiritualism who writes your problems before you speak. A classical fantasy in the spiritual world

Doctrine in Tantra Practising
since 1973 world-wide.
(No Consultation Fees)
By using the tools of Ancient Indian Tantra:
Juju, Black Magic, Evil effects of any kind etc. are removed.

பார்வையொன்றே போதும் உங்கள் ஜாதகத்தை கணிப்பதற்கு...

முதன் முறையாக இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் குரு ரிஷிஜி. உங்களது பிரச்சனைகளை நீங்கள் கூறுமுன்பே எழுத்தில் தரும் உண்மையான ஆன்மீகவாதி. "தந்திர" வழிமுறைப்படி ஒழுகும் ஆன்மீகவாதி. 1973ஆம் ஆண்டு தொடக்கம் உலக புகழ் பெற்ற "தந்திர" நிபுணத்துவம் உள்ளவர். பண்டைய இந்திய "தந்திர" வித்தையை உபயோகித்து சூனியம், பில்லி, பிசாசு ஆகியவற்றை அகற்றுதல், பணக்கஷ்டம், நோய், நொடி, காதல் தோல்வி ஆகியவற்றிற்கு நிவாரணம்.
இந்த செய்தியை உலகிற்கு தெரியப்படுத்துவதிற்காக ரிஷிஜியின் அனுமதி பெற்று விளம்பரம் செய்கின்றோம்.

To give this message worldwide we requested Rishi Ji to allow his followers to advertise
For appointment ring: **020 8518 2201 / 020 8554 2177**
50 Vaughan gardens, Gants Hill, Ilford, Essex IG1 3PD

வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயம்
Walthamstow 'Katpahaga Vinagar' Ahalayam

2-4 Bedford Road, Walthamstow, London. E17 4PX, Tel: 020 8527 3819

ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவமும் ஆலய வரலாறும்

வரலாறு

இங்கிலாந்து நாட்டின் தலைநகரான இலண்டன் மாநகரின் கிழக்குப் பகுதியில் அமைந்த வோல்தம்ஸ்ரோ நகரின் மத்தியில் ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமான் 2000 ஆண்டு ஆவணித்திங்களில் எழுந்தருளினார்.

ஆரம்பத்தில் மீனாட்சியம்மன், சுந்தரேஸ்வரர், வன்னி தெய்வானை சமேத முருகப் பெருமான், நவக்கிரகங்களை பரிவார மூர்த்திகளாகத் தன்னருகே அமைய பெற்ற கற்பக விநாயகர் இன்று லக்சுமி, நாராயணர், ஆஞ்சனேயர், பாலமுருகன், ஐயப்பன், தெட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், துர்க்கை, நடராசர், பார்வதி, பிரதோச நாயகர், சகுந்தலாம்பாள், காயத்திரியம்மன், ராகு, சந்தான கோபாலர், ஆத்மலிங்கம், வைரவர், சண்டேஸ்வரர் எனப் பரிவார மூர்த்திகளாகக் கொண்டு வீற்றிருக்கின்றார்.

2008ம் ஆண்டு ஆவணித் திங்களில் சதய நட்சத்திரமும் பொர்ணமியும் கூடிய நன்னாளில் கும்பாபிசேகம் நடைபெற்று வருடாவருடம் மகோற்சவமும் வசந்த நவராத்திரி அலங்கார உற்சவமும் நடைபெற்று வருகின்றன. இவற்றிற்கு மேலாக சகல விரத நாட்களிலும் அபிசேக ஆராதனையும் திருவிழாக்களும் இடம்பெறுகின்றது.

எல்லா விடயங்களுக்கும் வினாயக பூஜையுடன் ஆரம்பிப்பது போல சகல இங்கிலாந்து இந்து ஆலயங்களுக்கும் அவற்றின் திருவிழாக்கள் ஆரம்பமாகுமுன் இவ்வாலய வசந்த நவராத்திரி உற்சவமும் சந்திர ரத உற்சவமும் ஆரம்பமாகி எல்லா ஆலய உற்சவங்களும் முடிந்ததன் பிற்பாடு இவ்வாலய மகோற்சவம் முத்தேர் பவனியுடன் நிறைவேறுகிறது. இவ்விரு தேரோட்டங்களுக்கு மத்தியிலேயே அனைத்து ஆலய மகோற்சவங்களும் அமைய பெற்றது இத்தலத்திற்குரிய ஒரு தனிப் பெருமை.

மேலும் 22 அடி உயர ஆழித் தேர், 18 அடி உயர பொன்ரதம் 16 அடி உயர ரதம் என பஞ்சமுக வினாயகர் மீனாட்சி சுந்தரேஸ்வரர், வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான், காவடிகள், பறவைக் காவடிகள், பால்குடம் போன்ற அடியார்களது வேண்டுதல்களுடன் மாநகரின் வீதிகள் உலாவருவது கண் கொள்ளா காட்சியாகும்.

மேலும் மகிசாசுர சம்காரம், சூரசம்காரம், கஜமுக சம்காரம் எனபன ஆலய முன்றலில் நடைபெறுவதும் இவ்வாலயத்திற்கான ஒரு தனிப்பெரும் சிறப்பு.

இவ்வாலயம் காலம்சென்ற சிவசிறீ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு அவரது மருகர் சிவசிறீ பாலகுமார் அவர்களது மேற்பார்வையில் சகல கட்டட வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டு கும்பாபிசேகம் நடைபெற்றது. தொடர்ந்து சிவாச்சாரியார் அவர்கள் மருமகர் சிவசிறீ செல்லப்பா பட்டர் அவர்களது தலைமையில் நித்திய பூஜைகள் இடம்பெற்றது. அவரைத் தொடர்ந்து சிவசிறீ பாலசந்திர குருக்கள் (கிருப்பனை மயூராவதி அம்மன் ஆலய தலைமை குருக்கள்) சிவசிறி ஆதித்த உருத்திர மூர்த்தி குருக்கள் (இனுவில் கந்தசாமி கோவில்) சிவசிறீ சர்வேஸ்வர குருக்கள் (வசந்தன்) (BA பண்டிதர்) சிவசிறீ சுரேன் சர்மா, சிவசிறீ கணேச குருக்கள் ஆகியோர் நித்திய பூஜைகள், திருவிழாக்கள், மகோற்சவம் என்பனவற்றை சிறப்பாக நடாத்தி வருகின்றார்.

மகோற்சவம்

இலங்கையில் நடைபெற்றுவரும் மகோற்சவங்களைப் போல இங்கிலாந்து நாட்டில் சகல ஆலயங்களிலும் மகோற்சவங்கள் நடைபெற்றுவருகின்றது. இலங்கை வாழ் இந்துக்களது திருவிழா, மகோற்சவங்களும், இந்திய வாழ் இந்துக்களது மகோற்சவங்களிலும் ஒரு சில வேறுபாடுகள் இருந்தாலும் எல்லோரும் இறைவனை அழகுபடுத்தி திருவீதி உலா வருவதையே மூலமாக சிந்தித்துள்ளது வரவேற்க வேண்டிய ஒன்று. ஆலயங்களில் 10, 15 நாட்கள் திருவிழாவும் மடாலயங்களில் 25 நாள் திருவிழாவும் நடைபெற்று வருகிற்து. மடாலயம் எனப்பதுவது மூலமூர்த்திக்கு விமானம் (கோபுரம்) இல்லாத ஆலயம் – இலங்கையில் நல்லூர் மாவிட்டபுரம், மண்டூர் ஆகிய முருகன்கோவில்களிலேயே 25 நாட் திருவிழா நடைபெறுகிறது. இங்கிலாந்தில் கனகதுர்க்கை, விம்பிள்டன் பிள்ளையார், செல்வ விநாயகர் ஆகிய ஆலயங்களில் மட்டுமே 25 நாள் திருவிழா நடைபெறுகிறது.

சுகல இந்துக்களும் மகோற்சவ காலங்களைப் புனித நாட்களாக கொண்டு மனச் சுத்தியுடன் இறைவனை தியானித்து வேண்டுவன வேண்டும் நாட்களாகும். இக்காலங்கள் இறைவனை அலங்கரித்து எமது மனம் குளிரும் போது இறைவனும் குளிர்ந்து எமக்கு வரமருளுகிறான்.

இம்மகோற்சவ காலங்களில் இறைவனை பல வடிவங்களில் கண்குளிராகாண பலஅலங்காரங்களைச்செய்துமகிழ்கின்றோம். ஒவ்வொருவகையான திருவிழாக்களைச்செய்து மேலும் எம்மை நாம் மகிழ்வித்து எம்மையறியாமலேயே இறைவனிடத்தில் எம்மை நாம் அற்பணிக்கின்றோம். தினமும் வேலை, குடும்பம் என்று இருக்கும் நாளும் இம் மகோற்சவ காலங்களில் எல்லாவற்றையும் மறந்து எம்மை கோவிலுடன் இணைத்து விடுகிறோம். இதுவே மகோற்சவத்திற்கான ஒரு தனிச்சிறப்பு – நாளும் பொழுதும் எமது சிந்தனை சொல் செயல் எல்லாமும் இறைவனிடத்தில் இக்காலத்தில் மட்டுமே இருக்கும் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இவ்வாண்டு எமதாலய மகோற்சவம் வெள்ளிக்கிழமை 29-08-08 காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா இடம்பெற்று ஞாயிறு 7.09.08 தேரோற்சவமும் 8.09.08 திங்கள் தீர்த்தோற்சவம் 9.09.08 செவ்வாய் சங்காபிசேகம் பூங்காவமனம் 10.09.08 புதன் வைரவர் மடையுடன் சிவசிறீ சர்வேஸ்வர குருக்கள் (வசந்தன்) தலைமையில் இனிதே நடைபெற எம்பெருமான் திருவருள் புரிந்துள்ளார்.

சகல இந்து பக்தப் பெருமக்களும் இவ்வுற்சவ காலங்களில் எம்பெருமானின் திருவருளை பெற்றேற்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

மங்கள நிகழ்ச்சிகளுக்கு மேளம் நாதஸ்வரம் ஏற்பாடு செய்து தரப்படும்

மாற்றப்பட்ட படைத்துறை உத்திகளும் படையினர் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும்.

(05ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த காலப்பகுதியில் வெற்றிநிட்சயம் படை நடவடிக்கையில் 92 விகிதமானது முடிவடைந்து விட்டதாகவும், கிளிநொச்சியில் உள்ள 54 ஆவது படையணியுடன் 55 மற்றும் 53 ஆவது படையணிகள் இணைந்து கொள்ள 24 கி.மீ தூரமே உள்ளது எனவும் அன்றைய பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித் திருந்தார். எனினும் அந்த 24 கி.மீ தூரம் தான் வெற்றி நிட்சயம் படைநடவடிக்கையின் வரலாற்றை தலைகீழாக்கியது.

இந்த (2008) ஆண்டின் முதல் ஏழு மாத காலத்தில் படையினரின் இழப்பு தொடர்பாக அரசு தெரிவித்துள்ள தாகவல்களில் 741 பேர் கொல்லப்பட்டும், 4915 பேர் காயமடைந்தும் உள்ளனர். வெற்றிநிட்சயம் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட முதல் ஏழு மாத காலத்தில் நடைபெற்ற உக்கிர மோதல்களில் இழக்கப் பட்ட படையினாரின் எண்ணிக்கைக்கு இது ஏறத்தாள சமனானது.

இதனை நோக்கும் போது ஒன்று மட்டும் தெளிவானது, அதாவது தற்போதைய படை நடவடிக்கையில் அரசு புதிய உத்திகளை கையாழுவதை போலவே விடுதலைப் புலி களும் கைாண்டு வருகின்றனர். அதிக படை வளத்துடன் நகரும் படையினரை நகரவிட்டு தாக்கும் உத்தியையே விடுதலைப் புலிகள் நான்காவது ஈழப்போரில் கையாண்டு வருகின்றனர்.

இந்த நகரவிட்டு தாக்கும் உத்திகளில் ஊடறுப்பு தாக்குதலுக்கு இணையான சேதங்களை படையினர் தினமும் சந்தித்து வருவதுடன், சில தாக்குதல்களில் இராணுவம் பேரழிவை சந்தித்ததும் உண்டு.

உதாரணமாக 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் நாள் கிளாலி - முகமாலை - நாகர்கோவில் களமுனையில் முன்நகர்ந்த படையினர் மீதான தாக்குதலில் 300 பேர் கொல்லப்பட்டதுடன், 600 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஓய்ப ரணையில் கடற்படையினர் மீது மேற்கொள்ளப் பட்ட தற்கொலை தாக்குதலில் 127 கடற்படை யினர் கொல்லப்பட்டதுடன், 150 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்தனர்.

2007 ஆம் ஆண்டு நவம்பர் 07 ஆம் நாள் கிளாலி - முகமாலை - நாகர்கோவில் களமுனையில் முன்நகர்ந்த படையினர் மீதான தாக்குதலில் 60 பேர் கொல்லப்பட்டதுடன், 100 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

2008 ஆம் ஆண்டு ஏப்பிரல் 23 ஆம் நாள் கினாலி - முகமாலை - நாகர்கோவில் கள முனையில் முன்நகர்ந்த படையினர் மீதான தாக்குதலில் 120 பேர் கொல்லப்பட்டதுடன், 400 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இவை தவிர 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் விளாத்திக்குளம் - முள்ளிக்குளம் பகுதியில் 57 ஆவது படையணியினரின் முன்னனி நிலைகள் மீதான ஊடறுப்பு தாக்குதலில் பெருமளவான படையினர் கொல்லப்பட்டதுடன் பவள் கவச வாகனம் உட்பட பெருமளவான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருந்தன.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலும் முகமாலை முன்னரங்க நிலைகள் மீது ஊடறுப்பு தாக்குதலையும் விடுதலைப்புலிகள் மேற்கொண்டிருந்தனர். இந்த மோதல்களிலும் 300 இற்கு மேற்பட்ட படையினர் கொல்லப் பட்டதுடன், 600 இற்கு மேற்பட்ட படையினர் காயமடைந்திருந்தனர்.

அதாவது தற்போதைய மோதல்களில் இராணுவம் புதிய உத்திகளை கையாண்டு வருகின்றது. அதிக சுடுவலு, அதிக படை வளங்களுடன் நகரும் படையினருக்கு உதவி யாக வான்படையினரும், ஆழ ஊடுருவும் படையினரும் ஈடுபட்டு வருகின்றனர். அதனை எதிர்கொள்ளும் முகமாக விடுதலைப் புலிகளும் தமது உத்திகளை மாற்றியுள்ளனரே தவிர மோதல்களின் உக்கிரத்திலும் படை யினரின் இழப்புக்களிலும் மாற்றமில்லை.

இந்த நகரவிட்டு தாக்கும் உத்திகளில் ஊடறுப்பு தாக்குதலுக்கு இணையான சேதங்களை படையினர் தினமும் சந்தித்து வருவதுடன், சில தாக்குதல்களில் இராணுவம் பேரழிவை சந்தித்ததும் உண்டு.

இந்த மாதத்தின் ஆரம்பத்திலும் வவுனிக் குளம் பகுதிற்கு கேணல் ஜி.வி. ரவிபிரியா தலைமையில் நகர்ந்த 57 ஆவது படையணி யின் I ஆவதுபிரிகேட் மற்றும் கல்விளான் பகுதி க்கு லெப். கேணல் செனராத் பண்டாரா தலை மையில் நகர்ந்த 57 ஆவது படையணியின் 2 ஆவது பிரிகேட் படையணிகள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடுமையான எதிர்த் தாக்குதல் துணுக்காய் மற்றும் மல்லாவி நோக்கிய படை நகர்வை கடுமையாக பாதித் துள்ளதாக படைத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

துணுக்காய் பகுதிக்கு தென் மேற்காக நிலைகொண்டுள்ள இராணுவத்தின் 57 ஆவது படையணியின் 2 ஆவது பிரிகேட் படையினர் விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப் புக்களை எதிர்கொள்வதுடன், பொறி வெடிகள் மற்றும் மிதிவெடிகளும் அந்த பகுதிகளில் அதிகமாக புதைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

எனினும் கடந்த இரண்டு வாரங்களாக வன்னி யின் ஆழமான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கடுமையான வான்தாக்குதல்கள், இராணுவத் தின் செறிவான எறிகணை மற்றும் பல்குழல் உந்துகணை தாக்குதல்களுடன் இராணுவத் தின் 58 ஆவது மற்றும் 57 ஆவது படையணிகள் முழங்காவிலுக்கு தெற்காகவும், கல்விளான் பகுதிக்கும் நகர்ந்துள்ளனர்.

ஆனால் அகலக்கால்வைக்கும் இராணுவத் திற்கு கைப்பற்றப்படும் பாரிய நிலப் பரப்புக்களும், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்போகும் பருவமழையும் பாரிய நெருக்கடியை கொடுக்கலாம் என்பது படைத் துறை அவதானிகளின் கருத்துக்கள்.

தற்போது இராணுவம் கொக்குத்தொடுவாய் முதல் - மன்னாரின் மேற்கு கடல் கரையோரம் வரையிலுமாக 115 கி.மீ நீளமான அச்சில் நிலைகொண்டுள்ளதுடன், வெள்ளாங்குளம், கல்விளான் என உள்நோக்கியும் 65 கி.மீ தூரத்தற்கு நகர்ந்துள்ளது. இந்த பரந்த நிலப் பரப்புக்களை தக்கவைப்பதற்கு தேவைப்படும் படை பலம் அதிகம்.

இந்த உண்மையை அரசும் தற்போது உணர்ந்துள்ளது போலவே தோன்றுகின்றது. எனவே தான் படையில் இளைஞர்களை சேர்ப்பதற்கான கவர்ச்சிகரமான விளம் பரங்களையும், தப்பிஓடிய படையினரை மீள சேர்ப்பதற்கான கடுமையான எச்சரிக்கை களையும் அது விடுத்து வருகின்றது.

கடந்த இரு வருடங்களில் படையில் இருந்து தப்பி ஓடிய படையினாரில் 12,000 பேரையாவது திரும்பவும் பணியில் இணைந்து கொள்ளுமாறு படைத்தரப்பு கோரிக்கைகளை விடுத்து வருகின்றது. அரசின் தகவல்களே கடந்த இரு வருடங்களில் 12,000 பேர் தப்பி ஓடியதை ஒத்துக்கொண்டுள்ள நிலையில் தப்பி ஓடியவர்களின் எண்ணிக்கை மிக அதிகம்.

அரசின் தகவல்களை பொறுத்தவரையில் கடந்த 7 மாதங்களில் இராணுவம் 5656 பேரை களமுனைகளில் இருந்து அகற்றியுள்ளது (741 கொல்லப்பட்டும், 4915 பேர் காயமடைந்தும் உள்ளனர்), மேலும் தப்பி ஓடுபவர்களின் எண்ணிக்கையும் ஒரு வருடத்திற்கு சரா சரியாக 6,000 இற்கும் மேற்பட்டதாகவே இருக் கின்றது. எனவே ஏறத்தாள 15,000 இற்கு மேற் பட்ட படையினர் ஒருவருடத்தில் களமுனை களை விட்டு அகற்றப்படுவது படை நடவடிக் கைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த வல்லது.

எனவேதான் கடந்த மாதம் அனுராதபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய சிறீலங்காவின் அரச தலைவர் மகிந்த ராஜ பக்சா படைகளில் இருந்து தப்பி ஓடியவர் களை மீண்டும் திரும்பி வருமாறு அவசர அழைப்பை விடுத்திருந்தார் அதன் பின்னர் பாதுகாப்பு செயலாளரும் அவசர அழைப் பொன்றை விடுத்திருந்தார். அதன் பின்னர் இராணுவ பேச்சாளர் உதய நாணயக்காரா விடுத்துள்ள அறிவிப்பில் தப்பி ஓடியவர்களுக் கான இராணுவ நீதிமன்ற தண்டணைகள் கடுமையானதாக இருக்கும் என தெரிவித் திருந்தார்.

இந்த அறிவிப்பானது இராணுவத்தில் இருந்து மேலதிகமான படையினர்தப்பி ஓடுவதை தடுப்பதற்காகவே கொண்டு வரப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அவர்களின் இந்த அறிவித்தல்களில் இருந்து களநிலமையின் உண்மை தன்மையை ஓரளவு புரிந்து கொள்ள முடியும். தற்போதைய கள நிலமைகளை பொறுத்தவரையில் எதிர் வரும் ஒக்டோபர் மாதமளவில் பருவமழை ஆரம்பிக்க உள்ளதால் அதற்கு முன்னர் இராணுவம் ஒரு நிலையான பாதுகாப்பு ஒழுங் கமைப்பை மேற்கொள்ள வேண்டும் என்பது அரசின் ஆவல்.

சேறும் சகதியுமாக மாற்றமடையும் வன்னி களமுனைகளில் கனரக வாகனங்களின் பயன் பாடுகளும், வான்படையினரின் பயன்பாடு களும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவையாக மாற்றமடையலாம் என்பதுடன், படையினாரின் எறிகணை வீச்சக்களும் முழுமையான செயற் திறன் உள்ளதாக இருக்க மாட்டாது. இரண்டு மாதங்களில் கடுமையான மாற்றமடையப் போகும் களநிலமைகளை சமாளிப்பதற்கு புதிதாக சேர்க்கப்படும் படையினர் பயன்படப் போவதில்லை. அவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு அதிக காலம் எடுக்கும் (ஏறத்தாள 6 மாதங்கள்) எனவே தான் படையில் இருந்து தப்பி ஓடியவர்களை இராணுவம் தேடிவருகின்றது.

அரசின் பிரச்சாரங்களை போல களமுனை கள் இலகுவானதல்ல என்பதையே படையினர் சந்தித்துவரும் இழப்புக்களும், களமுனை களில் இருந்து தப்பி ஓடும் படையினாரின் எண்ணிக்கைகளும் எடுத்துகாட்டுகின்றன.

சிறீலங்காவின் வரலாற்றில் சிங்கள தேசம் கண்டுவரும் ஒவ்வொரு தோல்விகளுக்கும் 'தமது சொந்த பிரச்சாரங்களை தாங்களே நம்பு வது' தான் முதன்மையான காரணி என்பது தென்னிலங்கை ஆய்வாளர்கள் சிலர் தொடர்ந்து கூறிவரும் கருத்துக்கள் அது நான்காம் கட்ட ஈழப்போரிலும் உணரப் படலாம்

ஒரு பேப்பருக்கு வாழ்த்து

ஒரு பேப்பர்| வாழ்கவே! ·
அருமைச் சகோதர ஆங்கில நாட்டில்
அழகாய் ஒளிரும் அற்புத விளக்கே,
ஒரு பேப்பர் வாழ்கவே...! (ஒரு பேப்பர்)

பன்னாட்டுத் தமிழர்தம் ஒறவினைப் பரங்காய்
வளர்த்திடும் இதழே வண்ணத்தமிழ் அமுதே,
இனமொழி பதம்நாடு எனபேதம் பாராது
மனமொழி மெய்யாலே அனைவர்க்கும் நலஞ்செய,
ஒரு பேப்பர் வாழ்கவே... (ஒரு பேப்பர்)

யாதும் ஊரே யாவருமாம் கேளிர்
தீதிலை இதனை நம்பிடல் நலமே,
ஒன்றே குலமாம் ஒருவனே தேவன்
என்றிடில் எல்லோர்க்கும் ஏற்றமுண்டாகும்,
ஒரு பேப்பர் வாழ்கவே! (ஒரு பேப்பர்)

நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்
கொன்றும் வரையும் புகழுடன் வாழ்வோம்,
மன்பதை உலகில் மற்றோரும் நல்லவர் என்பதை எண்ணி ஏற்றமுடன் வாழ,
ஒரு பேப்பர் வாழ்கவே! (ஒருபேப்பர்)

– நாங்கூர் எஸ். ஈஸ்வரன் எம்.ஏ
கோயமுத்தூர் இந்தியா

அகதித் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டிருக்கின்றீர்களா?

உங்கள் விண்ணப்பங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ளீர்களா?

நாடு கடத்துவதற்காகத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளீர்களா?

"தமிழ் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றது"

தஞ்சக் கோரிக்கை முற்றாக நிராகரிக்கப்பட்டு, திரும்பவும் நாடு செல்ல விரும்பாத தமிழர்களை – கட்டாய நாடு கடத்தலில் இருந்து நிற்பாட்டிக் கொண்டிருக்கின்றோம்.

ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்தில் (European Court of Human Rights) உங்கள் நாடு கடத்தலை ஐக்கிய ராச்சியத்திற்கு எதிராக தடை உத்தரவை பிறப்பித்து நிற்பாட்டி பினையின்றி தடை முகாம்களிலிருந்து வெளியில் எடுத்து விடுவதில் முன்னனியில் நின்று வேலை செய்து கொண்டிருக்கும் தமிழ் கொமியூனிற்றியை உடன் அழையுங்கள்

020 8444 6655.

கடந்த 10 மாதங்களில் 130க்கும் அதிகமான தமிழர்களின் நாடு கடத்தலைத் தடுத்து, தடுப்புக் காவலில் இருந்து பினையின்றி வெளியில் எடுத்து விட்டிருக்கின்றோம்.

இன்று 300க்கும் அதிகமான தமிழர்களை திருப்பி அனுப்புவதை தடை செய்யப்பட்டமைக்கு தமிழ் கொமியூனிற்றி தொண்டர் நிலையமே முதற் காரண கர்த்தாவாக அமைந்துள்ளது.

மனச்சாட்சியற்ற, கண்ணியமற்றவர்களின் சேவையினால் பயந்த நிலையில் கவலை கொண்டுள்ளீர்களா?

"யாமிருக்கப் பயம் ஏன்?"

அழையுங்கள்:

தமிழ்க் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றோம்

0208 444 6655

தமிழர் அறங்காவற் கட்டளை
(இலக்கம்: 1117267)

tamil community
"building a better community"
CA House
28-30 Muswell Hill Broadway
London N10 3RT
Tel: 020 8444 6655
Fax: 020 8444 6244
Email: info@thamilcommunity.org
www.thamilcommunity.org

அடிமை வியாபாரம்

பாகம் 56

ஒரு பேப்பரின் நூறாவது இதழ் இது. அரை நூற்றைத் தாண்டி தொடராக வந்து கொண்டிருக்கும் இந்த அலசு வாரம் பத்தியைப் பிரசுரிக்கும் ஒரு பேப்பர் நிர்வாகத்திற்கும், அவ்வப்போது காட்டமான விமர்சனங்களால் இத்தொடரை நெறிப்படுத்த முயலும் வாசகர்களுக்கும் எனது பணிவான நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

வன்னியை நோக்கிச் சிங்களம் தனது முழுப் பலத்தையும் பிரயோகித்து முன்னேற முயல்கின்றது. செய்திகளின்படி சில ஊடுரு வல்களும் நடைபெற்றுள்ளன. காலம் ஓர் மாயாவி. அது செய்யும் வித்தைகள் சிலவேளை நம் கண்களைக் கட்டிவிடும். நாம் ஒன்றை நினைக்க அது வேறொன்றைச் செய்யும். வரலாறு எப்போதும் ஒரே சீராகச் சென்றதாக வரலாறில்லை. பள்ளங்களும் மேடுகளும் வீழ்ச்சிகளும் நிமிர்வும் இல்லாமல்:

அலசுவாரம்

அலசுபவர்: **மட்டைக்கிளப்பான்**

காலக் கலைஞனவன் கதையெழுதிச் சென்றதில்லை.
கோலத்தை நேரான கோடாய்க் கிழித்ததில்லை
நேராய் வரையை நிமிர்த்தி வரைந்த தில்லை
பொய் நாரெடுத்துப் புழுகு மலர் தொடுக்கும்
பையாக்கள் போர்ப் பரணி பாடுகிறாரென்பதால்
விட்டில்களாகி விளக்கில் உடலெரிக்கும்
முட்டாள்களாக முழு அழிவைத தேடாமல்
பாயும் வரை தருணம் பார்த்துப் பதுங்குவதே
தேயத்திற்கின்று பெரும் தேவை எனக் காத்திருப்போம்.

வன்னிக்குள் எமது உறவுகள் எதிரியின் ஆக்கிரமிப்புக்குப் பயந்து புகலிடம் தேடுகிறார்கள். எப்போது எதிரியின் விமானங்கள் குண்டு வீச வரப்போகின்றனவோ என்னும் பயத்தில் வானத்தைப் பார்த்தவாறு தவித்துத் தடுமாறுகிறார்கள்.

எப்போது இந்த இழிவு நிலை மாறும்?

உள்ளத் தனல் பெருகி உயிர்த்து நெடு மூச்சு
வன்னிக்குள் நைந்து மரநிழலில் வாழுகிற
எங்கள் உறவுகளை எண்ண மனம் வேகிறதே
பாமினியை நாவிருத்திப் பாடிவிட்ட
பாக்களெல்லாம்
போமா இனியாதும் பொருளின்றி? சே! சே!
நாவிலிருப்பவளே நற்றமிழே தேவீ! என்
ஆவி புகுந்து அடியெடுத்துத் தந்தவளே
சந்த மரபில் சளைக்காத நற் கவிதை
தந்தவளேயம்மா நின் தாழ் பணிந்து
நிற்கின்றேன்
என்ன உனதெண்ணம் எதற்காயெனைப்
பிடித்தாய்
அன்னையே என் நா அமர்ந்தேன்
உரைப்பித்தாய்
சொன்னவைகளெல்லாம் சுரத்தின்றி வீணான
பொய்யாய்க் கனவாய்ப் புனை கதையாய்ப்
போவதுவோ!
வெல்வோம் பகையை என வீறோடுரைத்திட்ட
சொல்லிழிய எங்கள் துயர் நிலைக்க
வைப்பாயோ!
நீதிக்காய் இந்த நிலமீதோர் மானுடத்தின்
வேதனைகளுக்காய் விழிதிறக்க வைத்தவளே!
சொல்ல வைத்த சொற்கள்தனைச்
சோத்தியாய் ஆக்குவையோ?
எல்லை வரை சென்று எதிரி புறங்காட்ட
உன் கண் எரி தீ உமிழ்வதினி எக்காலம்?
அல்லற் பட்டாற்றா தரற்றிடுமோர்
மானுடத்தைக்
கொல்லப் பகைவன் குறிவைத்துத்
தாக்குகையில்
நீதியின் பக்கலிலே நில்லடாவென்றெனக்குச்
சோதியே நீதானே சொல்லெடுத்துத்
தந்திட்டாய்!
பாவில் உரைத்தவைகள் பலிக்காது
போகுமெனில்
நாவில் அமர்ந்திருந்து நல்ல தமிழ் தந்த
நீயும் பொய்யாமோ நிலமீதில்? இல்லையம்மா!
தேவீ! மெய் ஞானத் திருவுருவே தெய்வதமே
ஆவியுருக அடிபணிந்து நிற்கின்றேன்
நெஞ்சுருகி நின்னை நினைந்து
வணங்குகிறேன்
தாயே! எனது தமிழினத்தைக் காப்பாற்று
எங்கள் உரிமைகளை எம்மினிய தாயகத்தை
செங்களத்தில் ஆடும் எம் செல்வப்
புதல்வர்களை
எண்ணி உனது இனிய முகம் காட்டு!
கண்ணைத் திறந்து கருணை ஒளி பாய்ச்சு!
முன்னேறிச் செல்லுகிற மூர்க்கப் பெரும்
பகையை
அன்னாய் உனது அழகுப் பிறை நுதலின்
மூன்றாம் விழியால் முடித்துவிடு. எங்கெல்லாம்
ஆட்சியதிகாரம் அதர்மம் புரிகிறதோ
பாய்ச்சு உன் சூலப் படையைத் தருமங் கோல்
ஓச்சச் செய்! என்று உயிர் கரைந்து
வேண்டுகிறேன்
தாயே! உனது தயை எம்மேற் சேரட்டும்!
அன்னையே! உன்றன் அருளெம் மேற்
பாயட்டும்!
நீதியாய் நின்று நிலத்தில் ஒளிபாய்ச்சும்
சோதியே எம்மினத்தைச் சோதித்தது போதும்
ஆதியே துர்க்கா அருளை நிலை நிறுத்து
வேதப் பொருளே நல் வித்யா அறமுரைக்கும்
நாதமாய் நின்றெனக்கு நல்ல தமிழ் தந்தாய்

தேவீ நினது திருவருளாலன்றோ என்
நாவில் கவிதை நயம் சேர வாழ்ந்திருந்தேன்!
ஆழ அளந்து அறஞ்சோர்த்துச் சொல்லிய என்
நீள வரிகளிலே நீயிருந்தாய் என்றன்றோ
அன்று நினைந்திருந்தேன் அத்தனையும்
பொய்யாமோ!
வென்று அதம்புரியும் வெம்பகையின்
பக்கலில்தான்
நீதியுண்டாமோ! நியாயம் சரிந்திடுமோ!
வன்னியினுட் சென்று வதம் புரியக்
காத்திருக்கும்
சிங்களத்தின் ஆணவத்தைச் சிதைத்தழிக்க
வேண்டுமடி
தாயே உனது தயை வேண்டி நிற்கின்றேன்
மாயா மனமிரங்கி வா!

- (தொடருவம்)

பெண் தெய்வம்

சொல்லாதே பெண்ணே நீயும்
உன்
-சொல்லுக்கு பொருளில்லை
இங்கு
பொற்சிலையாக 08கி1ருந்த
நேரம் மொய்த்ததோ
-ஆண்கள் கூட்டம்
சிந்தையிலே திடம் கொள்ளு
தாயே நீ
-புகட்டிடு பாடம் சில பேர்க்கு
பண்பாடு பேசிடும் மனிதர்
கூட்டம் பெண்ணுக்கு
-மட்டும் ஏனோ
காதலென்னும் வலையில் நீ
கவிழ்ந்திடாமல்
-வாழ்ந்திடு பெண்ணே
கற்புக்கு அரசி நீதான் உன்
கற்பினை
-களபாடுபவன் யாரோ?
நீ செப்பிடு நல் வார்த்தை இவன்
-சிந்தையெல்லாம்
சிதறிடும்வண்ணம்
போற்றிடு பெண்ணே உன்னை
உன் - புகழுக்கு மாரிங்கும்
தடையில்லை
வீண்கதை பேசித்திரியும் பலரும்
இங்கு -பிறந்ததும் உன்னால்
தானே பெண் எனும் தெய்வம்
இல்லையேல் உலகில்
-இன்பத்தின் வழியது எங்கு
வணங்குகிறேன் பெண்ணே
உன்னை நீயும்
-ஒரு தாயல்லோ
படிப்பாய் சமூகத்தின் மூடர உன்
-பெண்ணடிமையை அவிழ்த்து

- சுப்பண்ணர

ELC Solicitors Understanding your needs...

சட்டத்தரணிகளின் அடிப்படைத் தகைமைகள் என்ன?

- வாடிக்கையாளர்களின் நலனில் முதற் கவனம்.
- பல மொழிகளில் தேர்ச்சி.
- எப்போதும், எவரிடத்தும் பாரபட்சம் பாராத நேர்மை.
- தகுதி, திறமை, மதிப்புமிக்க உயர்தரம்.
- வெற்றி ஒன்றைத் தவிர வேறொன்றும் அறியாதவர்கள்.

இத்தனைத் தகைமைகளும் கொண்ட சட்டத்தரணிகள் இருக்கும் ஒரு நிறுவனம்.

Don't just take our word for it ...

"...This is to say a big thank you for your fast and professional way of dealing with my case. I think the service was excellent - I will definitely use you in the future and recommend the company to family & friends."

- Karen Sommers

As a well established firm whose reputation precedes us, superior client care is at the heart of our philosophy.

Our highly skilled, multi-lingual team provide honest and impartial advice, seeking always to act in your best interests.

We are Law Society Lexcel accredited, an honour bestowed on only 4% of law firms nationwide.

அனைத்து விதமான immigration பிரச்சனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

SPECIALISTS IN:

- Residential Conveyancing
- Commercial Conveyancing
- Debt Recovery
- Civil Litigat ion
- Re-mortgages
- Family Law
- Immigration

COMPETITIVE PRICES - EXPERT ADVICE - QUALITY SERVICE

CALL US TODAY!

0800 027 8977

ELC Solicitors

Understanding your needs...

St James House
105-11 3 The Broadway
West Ealing, London W13 9BE

www.elcsolicitors.com

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனை மிகக் கடுமையாக தாக்கி முதல்வர் கருணாநிதி கவிதை எழுதியுள்ளார்.

நெடுமாறன் எழுதிய ஒரு கட்டுரையில், முதல்வர் குறித்து விமர்சித்திருந்தார். காதோரம் ஒரு முடி நரைத்ததற்கே தசரதன் ராமனை மன்னராக்கினான். ஆனால் கருணாநிதியோ இன்னும் முதல்வர் பதவியை விடாமல் பிடித்திருக்கிறார் என்று அதில் நெடுமாறன் தெருவித்திருந்தார்.

அதற்குப் பதிலடியாக இந்தக் கவிதையைப் புனைந்துள்ளார் கருணாநிதி.

முதல்வரின் கவிதை இதோ...

விடுதலைப் போர் நாயகராம்
விருதுநகர் மாவீரர் காமராஜரின்
விசுவாசமிக்க சீடர் என்று
விரிவுரைகள் பல நிகழ்த்தி – பின்னர்
வேறு கொடி பிடிப்பேன் என்று – அவர்
விலாவில் குத்திய விபீஷ்ண ஆழ்வார்!
அண்ணாவின் அணிவகுப்பில் நானும்
ஒருவன் என நவின்று
கண்ணான அண்ணாவின் கழுத்தறுக்க
முனைந்திட்ட சுக்ரீவன்!
மூப்பனாரின் காலடியே மோட்சமென்றும்
சொர்க்கமென்றும்
முகஸ்துதி பல செய்து மோசடியால்
புதுக்கொடி ஏற்றி விட்ட எட்டப்பன்!
குன்றணைய குமரி அனந்தரின்
புகழ் மறைக்க
குறுக்குச் சுவர் கட்டி, தடை மீறிய தமிழ்
ஈழப் பயணமென
தவிக்க விட்டு கடல் நடுவே அவரை
தான் மட்டுமே தப்பி வந்த ஆஞ்சநேயன்!
வலியின்றி புலிக் கூட்ட முதுகினிலே
குத்திக் கொண்டே பணம் பறிக்கும்
இனத் துரோகி!
தரணிதனில் பல புராணங்கள் இருக்க
தசரதன் புராணத்தில் இவர் இறங்கி
அவன் காதோரம் நரைத்த மயிரின்
கதையை– தன் கட்டுரைக்கு
விதையாக்கி விஷத்தைக்
கக்கியிருப்பததுதான் பெரும் விந்தை!
சீராக்கவே முடியாத சீழ் பிடித்த சிந்தை!
கூராக்கவே இயலாத மூளையிலே விஷம்
ஒரு மொந்தை!

நெடுமாறன் மீதான முதல்வர் கருணாநிதியின் வசைமொழிக் கவிதைக்கு ஒரு மறுப்பு

- கீரன்

முதல்வருக்கு அகவை காரணமாக அறளை பிறந்துவிட்டது. தன்னைப்பற்றிய விமர்சனங்களை சொரிக்கத் தெரிந்தவனே நல்ல அரசியல்வாதி ஆவான். இல்லையேல் இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடுவான் என வள்ளுவர் சொன்னது போல கெட்டொழிந்து விடுவான். . முதல்வர் ஆட்சிக் கட்டிலில் இருப்பவர். சொற்களை அளந்து பேச வேண்டும். எழுத வேண்டும். முதல்வர் எழுதிய கவிதையில் கண்ணியம் கடுகளவும் இல்லை. அண்ணாவின் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை தனது வசதிக்கேற்ப பயன்படுத்துவதோடு நின்றுவிடுகிறார். அதனை முதல்வர் கடைப்பிடிப்பதில்லை.

50 ஆண்டுகளுக்கு மேலாக பொதுவாழ்வில் இருக்கும் நெடுமாறன் போன்ற ஒரு தமிழ் உணர்வாளரை தமிழினப்பற்றாளரை எட்டப்பன் என்றும் ஆஞ்சநேயன் என்றும், விபீஷணன் என்றும் பணம் பறிக்கும் இனத் துரோகி என்றும் திட்டுவது முதல்வருக்கு அழகல்ல. இந்தப் பட்டங்களை திருப்பி முதல்வர் மீது வீச எத்தனை வினாடி எடுக்கும்?

அப்படி என்றால் திமுக என்பது ஆண்டிகள் மடமா? முதல்வர் என்ன மூத்த தம்பிரானா? அறிவுடையோர் கேட்கமாட்டார்களா?

'வைகோ புலிகளோடு சேர்ந்து கொண்டு என்னைக் கொல்லச் சதி செய்தார் என்று முதல்வர் உளறினாரே? அது நெஞ்சாரச் சொன்ன பொய்தானே? முதல்வர் ஒரு பொய்யன் என்பதுதானே அதன் பொருள்?

நெடுமாறன் அன்றும் சரி இன்றும் சரி வி.புலிகளையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் மனம், மொழி இரண்டினாலும் நேசிப்பவர். அவரைப் பார்த்து 'வலியின்றி புலிக் கூட்ட முதுகினிலே குத்திக் கொண்டே பணம் பறிக்கும் இனத் துரோகி!' என்பது

கொஞ்சமும் பொருந்தாது. வேண்டுமென்றால் அது முதல்வருக்குத்தான் பொருந்தும். முதல்வர்தான் இலாபம் இருந்தால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பது, இழபபென்றால் காததூரம் விலகி ஓடுவது என்ற கொள்கையை வைத்திருக்கிறார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் நெடுமாறனுக்கு இருக்கும் ஆதரவில் நூற்றில் ஒரு பங்கு கூட முதல்வருக்கு இல்லை என்பதை மறந்துவிட வேண்டாம்!

இந்திரா காந்திக்கு எதிராகக் கறுத்தக் கொடி பிடிததீர்கள். கற்களை எறிந்து இந்திரா காந்தியை கொல்ல நினைத்தீர்கள். அப்போது இந்திரா காந்தியைக் காப்பாற்றியவர் இன்று நீங்கள் எட்டப்பன், ஆஞ்சநேயன், துரோகி என்று அர்ச்சிக்கும் பழ.நெடுமாறன்தான். இல்லையா? பின்னர் மானம், வெட்கம் இரண்டையும் கக்கத்தில் வைத்துக்கொணடு 'நேருவின் மகளே வருக !நல்லாட்சி தருக' எனத் தட்டை மாற்றி லாலி பாடினீர்களே? இதனை வைத்து முதல்வர் கருணாநிதியை ஒரு கடைந்தெடுத்த சந்தர்ப்பவாத அரசியல்வாதி என்றால் அது பிழையாமோ?

பாரதிய ஜனதா கட்சியினரைப் பண்டாரங்கள், பரதேசிகள் எனத் திட்டிவிட்டு 'அரசியலில் தீண்டாமை இல்லை' என்று சொல்லிக்கொண்டு அவர்களோடு கை கோர்த்த குத்துக்கரண வீரர் கருணாநிதியா? நெடுமாறனா?

'நள்ளிரவில் ஜெயலலிதா ஏவிவிட்ட காவல்துறை அன்றைய கருணாநிதியைக் குண்டுக் கட்டாகக் கட்டித் தூக்கிக் கொண்டு போனபோது 'அய்யோ என்னைக் கொல்றான்களே' என்று கூக்குரல் விட்டு அழுதீர்களே? அது கோழைத்தனம் இல்லையா?

ஜெயலலிதா முதல்வராக இருந்த காலத்தில் சட்டசபைக்குப் போகாமல் கையெழுத்தை மட்டும் போட்டுவிட்டு சம்பளத்தை ஒழுங்காக எடுத்த முதல்வர் வீரத்தைப் பற்றிப் பேசலாமா?

'வைகோ புலிகளோடு சேர்ந்து கொண்டு என்னைக் கொல்லச் சதி செய்தார் என்று முதல்வர் உளறினாரே? அது நெஞ்சாரச் சொன்ன பொய்தானே? முதல்வர் ஒரு பொய்யன் என்பதுதானே அதன் பொருள்?

தமிழகத்தில், ஊழலை எப்படி செய்யவேண்டுமென கற்றுத்தந்தவர் முதல்வர் தான். நெடுமாறன் அல்ல. வீராணம் என்றாலே ஊழல்தான் நினைவுக்கு வருகிறது. 23 கோடி செலவில் தீட்டப்பட்ட வீராணம் திட்டத்தில் நடைபெற்றது ஊழலா இல்லையா என்பதற்கு சான்றாக இன்றும் கூட வீராணத்திலிருந்து சென்னை வரை அன்றைக்கு வாங்கப்பட்ட சிமெண்ட் குழாய்கள் சாலையோரமாகப் பரிதாபமாகக் கிடக்கின்றன.. இந்த ஊழலை விசாரித்த சர்க்காரியா ஊழலை விஞ்ஞான முறையில் செய்திருக்கிறார் என முதல்வரை எள்ளி நகையாடினார். தமிழர்கள் கூனிக் குறுகிப் போனார்கள்!

'தமிழகம் நோக்கி தஞ்சம் புகும் ஈழத்தமிழர்கள் ஏதிலிகள் அல்ல. அவர்கள் எங்கள் விருந்தினர்கள்' என்று சட்டசபையில் கொட்டி முழக்கினீர்கள். இப்போது யார் யார் வீடுவாங்கி இருக்கிறார்கள், யார் யார் வண்டிவாகனம் வைத்திருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து அவர்களை கைது செய்து வழக்குப் போடுமாறு முதல்வர் தனது காவல்துறையை ஏவிவிட்டிருக்கிறாரே? இது இரண்டகம் (துரோகம்) இல்லையா? இதுதான் 'மோப்பக் குழையும் அனிச்சம் - முகம்திரிந்து நோக்கக் குழையும் விருந்து' என்று குறளுக்கு உரை எழுதியவர் விருந்தினர்களை நடத்தும் அழகா?

சிங்களப் படையெடுப்பால் வீடு வாசல் இழந்த ஈழத்தமிழர்களுக்கு பழ. நெடுமாறன் ஊர் ஊராகச் சென்று உணவும் உடையும் திரட்டினாரே? தமிழக முதல்வர் என்ன செய்தார்? இன்று கூட தமிழீழம் எதிரி படையெடுப்பால் நெருப்பில் வேகிறது. ஒன்றரை இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து குடிக்கத் தண்ணீர் இன்றி ஒரு நேரக் கஞ்சிக்கு வழியின்றி மரநிழல்களில் வாழ்கிறார்கள். தமிழினத் தலைவர் நான்தான் என்று மார் தட்டும் முதல்வர் கருணாநிதி உரோம் எரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னன் போல் கோட்டையில் இருந்து கொண்டு குழல் வாசிக்கிறாரே? இது அந்த மக்களுக்குச் செய்யும் இரண்டகம் இல்லையா?

புறநானூற்று வீரம் என்றால் ஆகா என்று மேடையில் பேசுவது எழுதுவது. அதே வீரத்தை புலிகள் போர்க்களத்தில் செய்து காட்டும் போது 'எனக்கு வன்முறை பிடிக்காது' என்று சொல்லும உங்களை உங்கள் நடையில் கோழை என்று சித்திரிப்பதில் தவறு ஏதாவது இருக்கிறதா? 'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி, வஞ்சனை சொல்வாரடி! - கிளியே! வாய்ச்சொல்லில் வீரரடி!' என்றும் ' கூட்டத்தில் கூடி நின்று கூவிப்பிதற்றலின்றி நாட்டத்தில் கொள்ளாரடி நாளும் மறப்பரடி!' எனற பாரதியின் கவிதை வரிகள் முதல்வருக்கு அச்சொட்டாகப் பொருந்துகிறதா இல்லையா?

'உருசிய குடிமக்கள் எங்கிருந்தாலும் அவர்களது உயிரையும் தன்மானத்தையும் பாதுகாக்க வேண்டியது எமது கடமை. அவர்களது கொலைக்குப் பொறுப்பானவர்கள் தண்டனையில் இருந்து தப்ப முடியாது. அவர்களுக்குரிய தண்டனை வழங்கப்படும். அதற்கான நடவடிக்கைகளையே உருசியா மேற்கொண்டுள்ளது' ("I must protect the life and dignity of Russian citizens wherever they are. We will not allow their deaths to go unpunished. Those responsible will receive a deserved punishment") என உருசிய ஆட்சித்தலைவர் டிமித்ரி மித்விடெவ் தோள் தட்டினாரே? அவரிடம் இருக்கும் இனப்பற்றில் முதல்வருக்கு நூற்றில் ஒரு விழுக்காடுதானும் உண்டா? .நெஞ்சை நிமிர்த்தி சொல்ல முடியுமா?

கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு முதல்வர் மற்றவர்கள் மீது கல்லெறியக் கூடாது. ஏன் ஆடையையும் களைப்பக் கூடாது! கல்லெறிந்தால் அது தனக்குத்தான் இழப்பு. ஆடை களைந்தால் அது அவருக்குத்தான் வெட்கக்கேடு.

இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம். அதற்கு எல்லை இருக்காது. கீழ்க்கண்ட 'அவ்வையார் பாடலை மட்டும் உங்கள் பார்வைக்கு வைத்து இப்போது விடை பெறுகிறேன்.

ஆலைப் பலா ஆக்க லாமோ
அருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமோ – நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ
கருணையிலா
மூர்க்கனைச் சீர் ஆக்கலா மோ ?



Engine Tec Motors

We Offer Facilities For:

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre-MOT Checks
- All types of Repair & Body Work
- Insurance Work Undertaken

உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்.

Ask for: Vel or Rajan
Tel: 020 8640 8000 / 020 8640 1230
Mob: 07860 226 476 / 07860 770 945

Engine Tec Motors
Unit 5, 339 London Road,
Mitcham., Surrey CR4 4BE
Email: vel@etmluk.com
Web:www.etmluk.com

இருவேறு தராசுகளுடன் அலையும் சர்வதேசம்

மணிவாசகன்
(ஒரு பேப்பருக்காக)

மாமியார் உடைத்தால் மட்குடம். மருமகள் உடைத்தால் பொற்குடம் என்பது ஊரில் வழக்கிலுள்ள ஒரு பழமொழி. இது மனிதாபிமானம், மனித உரிமை மீறல்கள், பயங்கரவாதம் என்று கூப்பாடு போடும் சர்வதேச நாடுகளுக்கும் அவர்களது கைப்பாவைகளான ஊடகங்களுக்கும் பொருந்தும்.

தமக்கு வேண்டப்பட்ட, அல்லது தனது நலன்களுக்காக. நட்புறவினைப் பேண வேண்டிய நாடுகளையும் அமைப்புக்களையும் ஒரு தராசிலும், தமது நலன்களுக்கு அவசியமில்லாத, அல்லது தான் சொல்லும் வார்த்தைகள் எல்லாவற்றிற்கும் ஆமாம் போட மறுக்கும் நாடுகளையும் அமைப்புகளையும் மற்றொரு தராசிலும் அளவிடுவதை வழக்கமாகக் கொண்டுவிட்ட இந்தச் சர்வதேச சண்டியர்கள் தமது 'முடிந்த முடிவை' நிறுவுவதற்காக பிரச்சாரப் போரையும் முடுக்கி விட்டிருக்கிறார்கள்.அந்த வகையில் அண்மையில் உலகின் கவனத்தை ஈர்த்த இரண்டு விடயங்கள் மிகவும் முக்கியமானவை.

சோவியத் ஒன்றியம் உடைந்து சின்னாபின்னமான போது (உடைக்கப்பட்டது என்பதே உண்மை) உதயமான நாடு தான் ஜோர்ஜியா. அதன் எல்லைக்குள் தமது உரிமைக்காகப் போராடும் ஒரு மக்கள் கூட்டத்தை அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான ஜனாதிபதி, தனது படைகளை ஏவியும் விமானக் குண்டு வீச்சுக்களை நடாத்தியும் அழித்தொழிக்க முற்பட்டு பெரும் தாக்குதலைத் தொடங்கிய போது அதற்கெதிராக ரஸ்யா விரைந்து செயற்பட்டது.

உடனடியாக அந்தப் பகுதிக்குத் தனது படைகளையும் ஆயுதத் தளபாடங்களையும் அனுப்பி ஜோர்ஜியப் படைகளுடன் மோதத் தலைப்பட்டது. இதன் காரணமாக கணிசமான மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் பெரும் வல்லரசு நாடுகள் உள்ளிட்ட பலரின் உதவிகளுடன் அந்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டு அவர்களது அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருந்தன.

தமக்குப் பிடிக்காத ரஸ்யாவின் தாக்குதலால் இந்த மக்கள் இடம்பெயர்ந்த காரணத்தினால் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளின் ஊடகங்கள் இந்தச் செய்திக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்ததுடன் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள இடங்களில் கூடாரமடித்து அந்த மக்கள் படும் துன்பங்களை அடிக்கடி தமது ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

ஆனால் இன்றைக்கு சிங்கள அரசின் இன அழிப்பு வெறி காரணமாக இடம்பெயர்ந்து மரங்களின் கீழ் உணவு உள்ளிட்ட எந்த அடிப்படைத் தேவைகளும் சரியாகக் கிடைக்காமல் அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான மக்களின் துயர் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசுவதற்கு இந்த ஊடகங்கள் தயாராயில்லை.

சிங்கள அரசின் விமானத்தாக்குதல், செல் தாக்குதல் போன்றவற்றால் மட்டுமன்றி பாம்புக் கடியினால் கூட மக்கள் இறந்து கொண்டிருக்கின்ற அவலச் செய்தி சர்வதேசத்தையே கண்காணித்துக் கொண்டிருப்பதாகத் தம்பட்டமடித்துக் கொண்டிருக்கும் இவர்களுடைய கண்களுக்குத் தெரிவதில்லை.

அடுத்ததாக நான் குறிப்பிடும் சம்பவம் சீனாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் தொடர்பானது.

சீனாவில் கோலாகலமாக நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டிகள் அனைத்து ஊடகங்களின் கவனத்தையும் ஈர்த்திருந்தது. அனைவருமே சீனாவின் வளர்ச்சியையும் ஒலிம்பிக் விளையாட்டை நேர்த்தியாக நடாத்திய விதத்தையும் பார்த்து வியந்து பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர். இந்த நேரத்தில் பிரித்தானியாவின் பிபிசி உள்ளிட்ட சில ஊடகங்கள் வேறு ஒரு செய்திக்கும் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

இந்த ஒலிம்பிக் விளையாட்டுக்களுக்கான மைதான நிர்மாண வேலைகளுக்காக பலர் சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு வேறு இடங்களில் குடியேற்றப்பட்டனர். 'மனித உரிமை இரட்சகர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ளும் இந்த 'நடுநிலமையான ஊடகக்காரர்கள்' அவ்வாறு குடிபெயர்ந்தவர்களை தேடிப்பிடித்து அவர்களைப் பேட்டி கண்டு அவர்களது மன உணர்வுகளைத் துயரங்களைப் படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருந்தனர்.

'ஐயகோ! தாங்கள் காலம் காலமாக வாழ்ந்த இடங்களை விட்டு அப்புறப்படுத்தியது எவ்வளவு கொடுமையானது. இதோ பாருங்கள், இந்த மக்களின் கண்களில் தெரியும் சோகத்தை. எல்லாரும் சந்தோச வெள்ளத்தில் மூழ்கியிருக்கிறோமே. ஆனால் இவர்களால் சந்தோசப்பட முடியவில்லையே. அழுது கொண்டல்லவா இருக்கிறார்கள். இது எவ்வளவு அநியாயம் என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள்.

I felt being open on a sensitive topic such as this one would help bring to light some of the realities of growing up outside our place of origin. Some parents find it hard to come to terms with accepting how being brought up, since day one, with an array of influences can have such a direct impact on how their child turns out to be. But it is the truth. Though, the point is we can't simply abandon our roots and attempt to discard our identity. Despite being influenced by various culture, we must strive to be aware of and not forget our own. This way we really and truly will fit in.

orulove

Can't wait for the next semester to start to check you out!! Lol... out of jokes I'm serious

Kannu, Kings Cross

Poda Baeku....have you ever tried looking at your own face?

P.S: do NOT attempt its dangerous for the mirror.

Sanjana, France (Yes I know English)

If I had guts to confront you in Park Royal, I would have. But u still looked good that day. Wana meet up in Trafalgar Square this weekend?

Kannama, London

Adiyae manam nilluna nikathae dee....what do you say? I'm still up for it! Think about it, don't rush into decision!

Mr. Vambu, Lewisham

I miss you too much these days....hopefully your reading this! Are you up for dinner on Tuesday? Get bck to me

Nathiya, Canada

To the tall guy in Harrow station I'm very sure you will read this as to my surprise I saw u reading oru paper in the tube. Hope to see you on Friday, again!

Miss Mystery, South Harrow

breaktherules

OH My GOD it's the 100th issue of Oru Paper and you still changed! What can change you dad...U love Tamil....U read Oru paper but you *don't take the messages they give*. Appa please think for once.

- Mannavan

Reply to Pauline from last week:

Alias! I have read your complaint young lady. I will try trusting if you try to build the trust back. Take care.

- Appa

If I'm late from I do let you know, I am not loitering. I wonder where you get your assumptions from....

- Jana

I had a lovely summer holiday amma and appa. Thank you and I love you so much.

- Nisha

REGAL VIDEO

டிஜ்ஜிரல் வீடியோ படப்பிடிப்பிற்கும்
டிஜ்ஜிரல் புகைப்படம் எடுத்திடவும்
நம்பிக்கையானவர்கள்

LONDON - யாழ் - Regal

ரீகல் வீடியோ

0208 478 2205 - 078 80520 558

L.T TRANSPORT

Please call **Nesan** on **07949277478**

AKILAN ENTERPRISES

Tamil, Telugu, Hindi Videos, Audio CD's, MP3 CD's, DVD and VCD, DVD's for rental.

மற்றும் இசைக் கருவிகள், தெய்வீக வழிபாட்டுப் பொருட்கள், அழகுப் பொருட்கள், பூமாலை கட்டுதல், பூக்கள் விநியோகம் ஆகிய சேவைகளும் வழங்குகிறோம்.



274 High Street North, Manor Park, London E12 6SA
Tel: 020 8548 0033 / Fax: 020 8548 0300
Web: www.akilanenterprises.com

ரூற்றிங் முத்துமாரியம்மன் தேர்த் திருவிழா (25.08.08)

சிவயோகம்

இலண்டன் முத்துமாரி அம்மன் வருடாந்த தேர் உற்சவம் இம்முறை பல சிறப்பு அம்சங்களுடன் வெகு கோலாகலமாக வங்கி விடுமுறைத் தினமான திங்களன்று (25.08.2008) நடைபெற்றது. நகரின் பல பகுதி களிலும் இருந்தும், அண்டை நாடுகளிலிருந்தும் அனே கர் கலந்கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அடியார்களுக்கு ஆசி வழங்குவதற்காக மதுரை ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் வருகை தந்திருந்தார்கள்.

ஆலயத் தலைவர் 'சக்தி ஆன்மீகச் சுடரொளி' நாகேந்திரம் சீவரத்தினம் அவர்கள் குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்று ஈழத் தமிழர்கள் இன்று அனுபவித்துவரும் கஷ்டங்கள் பற்றி எடுத்துக்கூறி ஆதீன ங்கள் சைவத்தையும், தமிழையும், ஈழத் தமிழர்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஈழ மக்கள் இன்று அனுபவித்துவரும் கஷ்டங்களையும், துன்பங்களையும் கலாநிதி பொன் பாலசுந்தரம் அவர்கள் விரிவாக எடுத்துரைத்ததுடன் ஆதீனங்கள் ஒன்றுசேர்ந்து ஆவன செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

சிறப்பான கலை நிகழ்ச்சிகள் அம்பாள் ஆலயத்த?ரு எழுந்தருளும் வரையில் நடைபெற்றன. கரகம், கும்மி, கோலாட்டம், தேசிய எழிச்சி நடனம் ஆகிய கிராமியக் கலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கட்டிருந்தது.

மேடை நிகழ்ச்சிகளை வித்தியாசமாகவும், மிக சிறப்பான முறையிலும் தொகுத்து வழங்கிய திரு ரவி, திரு. சதீஸ் இருவரும் பாராட்டிற்குரியவர்கள். நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர்களைப் பேட்டி கண்டு, பேச்சுத்தமிழில் நகைச்சுவையாக பேசியது சிறப்பாக அமைந்ததுடன், பொதுமக்களின் பலத்த கரகோஷ வரவேற்பையும் பெற்றன.

TSSA விளையாட்டு நிகழ்ச்சி 2008



25.08.08 இலண்டன் சவுத்தோல் பிரதேசத்தில் TSSA யின் 15வது விளையாட்டுப் போட்டி வெகு சிறப்பாக இடம்பெற்றது. இதில் பல போட்டியாளர்கள் மிக உற்சாகத்துடன் கலந்து கொண்டமை பெருமைக்குரிய விடயமாகும்.

அத்துடன் தாயக உணர்வுகளைப் பிரதிபலிக்கும் உணவுகளும் ஒடியல் கூழும் இவ்விளையாட்டுப் பொட்டியைச் சிறப்பித்த சிறப்பம்சமாகும்.

அடுத்துவருகின்ற வருடங்களிலும் இதைவிடச் சிறப்பாக இவ்விளையாட்டுப் போட்டிகள் வெகு சிறப்பாக அமைய உங்களின் கரங்களை எதிர் பார்க்கின்றோம்.

- தகவல் TSSA குழுவினர்.

- Accountancy & Auditing
- Business Start up Advice
- Business Plans & Cash Flow Forecasts
- Personal tax Affairs & Self Assesment
- Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- Preparing VAT, Payroll for the Sale Trader
- Patrnership & Limited Companies
- Company Formation
- Attending VAT & PAYE visits
- CIS Voucher & Construction
- Industry Services
- Tax Investigations
- Solicitors Accounts & Accounts Reports

TAMSONS

Accountancy & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

கலை இலக்கிய மாலை

சர்வதேச புலம் பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் கடந்த 2.8.2008 அன்று Rheinische str.130, 44147 Dortmund என்ற முகவரியிலுள்ள மண்டபத்தில் ,, இலக்கியக் கலை மாலை ,, என்னும் நிகழ்வைச் சிறப்புற நடத்தியது.

மாலை 3.30 மணியளவில் ,மூத்த ஊடகவியலாளர் திரு.வீ.ஆர்.வரதராஜா அவர்களின் தலைமையிலே அக வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, தொடர் நிகழ்வுகளாக வரவேற்புரை, பிரதம விருந்தினர் உரை, கருத்தியல், பனுவல், வாழ்த்தியல் மற்றும் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.

பிரதமவிருந்தினர்கள்:

திரு.இரா.நாகலிங்கம் ஆசிரியர் யேர்மன் கல்விக்கழகப் பொறுப்பாளர்.

திரு.எம். அரியநாயகம் ,, ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்,,பிரான்ஸ்

கலாநிதி.முக.சு.சிவகுமாரன் வெற்றிமணி ஆசிரியர் ஆகியோர் விழாவைச் சிறப்பித்தனர்.

பனுவல்கள் (அறிமுகம்)

வாழநினைத்தால் வாழலாம் (ஆசிரியர் காசி) என்ற நூலை

கவிஞர் கதிர்ச்செல்வன் அவர்களும், அம்மா என் ஹைக்கூ (விக்னா)

என்ற பனுவலை நாடக ஆசிரியர் திரு.எம்.அரியநாயகம் அவர்களும் கவிதை சிந்தம் கண்ணீர் (கவிஞர் பாஸ்கரன் பிரான்ஸ்)என்ற பனுவலை எழுத்தாளர் திரு.இராஜவரோதயன் அவர்களும் ,எண்ணத்தில் பூத்த வண்ணங்கள் (விக்னா)என்ற பனுவலை திரு.ரவிமாஸ்டர் இயக்குநர்- ஐரோப்பிய தமிழ் வானெ ாலி அவர்களும் அம்மா சொல்லித் தந்த பாட்டு (புங்கையூர் ராஜா நெதர்லாந்து) என்ற பனுவலை எழுத்தாளர் கிருட்டினமூர்த்தி அவர்களும் சிறப்புற விமர்சனம் செய்தனர்.

ஈழத்து இளங்குயில்கள் இன்னிசை, சுவெற்றா தமிழாலய மாணவியரின் நடனம் என்பவற்றைத் தொடர்ந்து வாழ்த்தியல் அரங்கு நடைபெற்றது.

றறற.மயடயஎைடையமமர.நெவ இணையத்தளம் வெளியீடும் அன்றைய நிகழ்வில் முதன்மை பெற்றது.

2008 அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தொலை தூரக்கல்வி மூலம் முதுகலைமாணிப் பட்டத்தேர்வில் சிறப்புச்சித்தி (குசைளவ ஊடயளள) பெற்ற மைக்காகவும், உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் - அமெரிக்கா

மதிப்புறு முனைவர் (கௌரவ கலாநிதி) பட்டம் கிடைத்தமைக்காகவும்

திருமதி.விக்னா பாக்கியநாதன் அவர்களுக்கான வாழ்த்து நிகழ்வு இடம்பெற்றது.

மதிப்புறுமுனைவருக்கானசான்றிதழைகலாநிதிமு.க.சு. சிவகுமாரன் வாசித்து கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு.நாகலிங்கம், அவர்தம் இணையர் ஆசிரியை ஆயிலியம் நாகலிங்கம் அவர்களிடம் கையளிக்க அவர்களிடமிருந்து திருமதி.விக்னா பாக்கியநாதன் பெற்றுக் கொண்டார்.

எழுத்தாளர் திரு.சில்லையூர் சிங்கராஜா விழாவைச் சிறப்புறத் தொகுத்து வழங்கினார்.

உங்கள் நிகழ்வுகள் தொடர்பான விபரங்களையும்
பிரசுரிப்பதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
ஈழ பேப்பர்

அகதிகள்

நாடு விட்டு நாடு வந்தோம்
நலங்கள் பல தேடி வந்தோம்
நம்பினோரை விட்டு வந்தோம்
நயவஞ்சகரையும் விட்டு வந்தோம்

ஊர்விட்டு ஊர் வந்தோம்
ஊமையாய் அழுகின்றோம்
ஊனங்கள் நமக்கில்லை
ஊரைத்தான் நினைக்கின்றோம்

விமானங்கள்

ஊனமுது கொள்வதில்லை
ஊரவரை நினைத்துவிட்டால்
சயனிக்க மனமில்லை

சஞ்சலமே நிறைந்ததனால்

எண்ணற்ற ரகங்களிலே
எண்ணி விடமுடியாமல்
வானத்தில் வட்டமிடும்
வஞ்சகரின் விமானங்கள்

பறந்துசெல்லும் புக்காரா
பாராமல் குண்டு போடும்
பங்கருக்குள் இருந்தென்ன
பதம் பார்த்தே தீர்த்துவிடும்

வழமையான செய்திகள்

மனித நேயம் எங்கோ
பதுங்கிக்கொண்டபோது – வெறும்
மண்டை ஓடுகளே இங்கே
விதைக்கப்பட்டன
பூவும் கொடியுமாய்ப்
பூத்துப்பொலிந்த – எங்கள்
கிராமத்து மண்ணிலெல்லாம் – இன்று
எருக்கலை மட்டும் பூத்திருக்கு!
பச்சை மரங்கள்
காற்றசைவில் படபடக்கூட
அச்சப்பட்டு வாழ்கின்றது
எங்கள் அயலட்டம்..
இருண்டுவிட்ட தெருவோரத்தில்
இரவிரவாய்த் "தேடுதல்"நடக்கும்
இங்கொன்று அங்கொன்றாய்
எம்மவர் காணாமல் போவர்...
தேசத்தின் பிறிதொரு மூலையில்
அடையாளம் காணப்படாதவர்களாக
புலிச் சின்னம் பொறித்து – அவர்கள்
புதைக்கப்படுவார்கள்
தேசம் "வழமைக்குத் திரும்பியதாக"
தெற்கில் செய்தி வரும் – ஆம்
இவைகள் தான் வடக்கிலும் கிழக்கிலும்
வழமையான செய்திகள்

எங்களின் நாட்கள்

அஸ்தமனத்தை அறிவிக்கும் எங்கள்
அதிகாலைகள்
பூபாளத்திற்கு பதிலாக முகாரியையே
முன்வைக்கும்
பூ01கி1ல் கேட்கும் முழக்கங்களால்
மேகங்கள் மோதிக்கொள்வதை நிறுத்தி
வாய்பொத்தி நிற்கும்
துரத்திக்கொண்டுவரும் துப்பாக்கி
ரவைகளால்
தென்றல் காற்று கிழிபடும்.
"கெல்"லக்குழந்தைகள் மனித
பொம்மைகளின்

அங்கங்களை கழற்றி விளையாடும்
பொட்டிழந்த எங்கள் பெண்ணிலவுகளை
சோக மேகங்கள் ஆக்கிரமித்துக்கொள்ள
அமாவாசை அவர்களிடம் நிரந்தரமாகும்.
குருதியலைகள் மோதிப் பாய்ந்து
கீழ்வானை சிகப்பாக்கும்

மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற . . .

Ganesha Cash & Carry



உங்களுக்குத் தேவையான Sri Lankan, Indian, English, Groceries ஆபிரிக்கன் உணவு வகைகள் Fresh meat மற்றும் Off Licence பொருட்களை. . .

ஒரே இடத்தில் . . .

ஒரே நேரத்தில். . .

பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.

பிரமாண்டமான Parking வசதிகள் எம்மிடம்.

24 மணி நேரமும் திறந்திருக்கும்

Call:
Tel: **020 8597 9983**
Mob: **07946 058 177**

Ganesha Cash & Carry
112, Aldborough Road South, Newbury Park London 1G3 8EZ

இப்ப சொல்றன் கேளுங்கோ!

சாந்தி ரமேஸ் வவுனியன்
(ஒரு பேப்பருக்காக)

பெண்கள் சந்திப்பு தொடர்பாக அண்மையில் தமிழ்நதி எழுதிய கட்டுரைக்கான எதிர்வினை பெண்கள் சந்திப்பை அண்மையில் கனடாவில் நடத்தியவரின் காட்டமான பதிலுடன் இணையங்களில் வந்ததை யாவரும் அறிவோம். நாங்கள் அறியேல்லையே எண்டு யாராவது கேட்டால் இப்ப சொல்றன் கேளுங்கோ.

பெண்கள் சந்திப்பினை ஆரம்பித்தவர்களும் காலத்தின் தேவையறிந்து செயற்பட்டவர்களும் மௌனமாக இருக்கயானை பார்த்த குருடர்களின் கதைகள் பெண்கள் சந்திப்பு தொடர்பாக எழுதப்பட்டு வருவதும் பெண்கள் சந்திப்பை சில வருடங்களாக தலைமையேற்கும் தலைவிகளின் யானை பார்த்த கதை மிகவும் சுவாரசியமானதாகவே இருக்கிறது.

பெண்கள் சந்திப்பு என்ற பெயர் முதலில் ஒலித்தது யேர்மனியில் என்பதை இங்கு பலர் அறியார். யேர்மனிக்குள் அகதிகளாகக் குடிவந்த தமிழ்ப் பெண்களுக்குள்ளான தொடர்புகளை ஏற்படுத்தவும் பெண்கள் தங்கள் பிரச்சனைகளை ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளவுமாக பெண்கள் நலனில் அக்கறை கொண்ட பெண்களால் 19.03.1990 முதலாவது பெண்கள் சந்திப்பு நிகழ்ந்தேறியது. இச்சந்திப்பானது தேவிகா, உமா, இன்பா, கமலா, மல்லிகா, நிருபா, பிராங்பேட்றஞ்சினி ஆகியோரின் முழுமையான முன்னெடுப்பில் ஆரம்பமானது.

பெண்கள் சந்திப்பு பெண்கள் மட்டும் கலந்து கொள்ளும் சந்திப்பாக பெண்களின் சமூக குடும்ப பிரச்சனைகள் வரை பேசப்பட்டு வந்தது. பெண்கள் வட்டம் மகளீர் மன்றங்களென யேர்மனியில் ஆங்காங்கே குறிப்பிட்ட சிலபெண்களின் முயற்சியில் உருவான அமைப்புகள் சார்ந்த பெண்களும் இப்பெண்கள் சந்திப்பிற்குள் உள்வாங்கப்பட்டு அரசியல் முகங்கள் இல்லாமல் பெண்களுக்கான தளமாகியது. பல பெண்களின் உயிர்களும் இப்பெண்கள் சந்திப்புக் குழுவினரின் உதவியில் காக்கப்பட்டது.

1990 முதல் 1998 வரை (28.10.1995இல் சுவிஸ் பேணில் ஒரு முறை நடைபெற்றது) யேர்மனிக்குள்ளே நடைபெற்று வந்த பெண்கள் சந்திப்பு சுவிஸ், பிரான்ஸ் என தனது எல்லையை விரிவாக்கிக் கொண்டது. 1998இன் பின்னர் பெண்கள் சந்திப்புக்குள் புலிப்பினாத்தல் தலையெடுக்கத் தொடங்க பெண்கள் சந்திப்புக்கு வித்திட்டவர்களில் சிலர் விலகிக் கொண்டது மட்டுமில்லாமல் மௌனிகளாகவும் ஆயினர். பெண்களுக்கான சந்திப்பு என ஆரம்பமான பெண்கள் சந்திப்பு புலியெதிர்ப்புச் சந்திப்பாக மாற்றிய பெருமை சுவிஸ்சிலும், பிரான்சிலுமிருந்து கலந்து கொண்ட பெண்கள் சிலரின் கணவர்களின் அரசியல்பினாத்தல்களுக்கு வழியமைத்துக் கொடுத்தது. இதன் பிரகாரம் வீட்டுக்குள்ளிருந்து ஆண்கள் எழுதிக் கொடுக்க அல்லது சொல்லிக் கொடுக்க பெண்கள் சந்திப்பில் அவர்களின் அரசியல் சாயத்தை கரைத்துக் கொண்டனர் சில பெண்ணியவாதிகள். இதுவும் இவர்கள் தங்களுக்குத் தாங்கள் சூட்டிக் கொண்ட பேய்க்காட்டுவாதங்கள்.

கிழக்குச் சூரியனுக்கு விளக்குப் பிடிக்கும் இராயேஸ்வரியக்கா அதியுச்ச புலிக்காச்சலை லண்டனில் நடந்த பெண்கள் சந்திப்பில் வெளிப்படுத்தியது மட்டுமன்றி கிழக்குச் சூரியானியாகி மகிந்த மாத்தையாவுடனும் சங்கரித் தாத்தாவுடனுமான குலாவலாக மாறியுள்ளது வேறு கதை.

பெண்களின் பிரச்சனைகள் பேசப்படவும் தீர்வு காணப்படவும் ஆரம்பமான சந்திப்பு புலிக்காச்சலால் பீடிக்கப்பட்டு மார்புக்கச்சை தேவையா என்பது வரையும் நீண்டிருக்கிறது. கிழக்குச் சூரியனுக்கு விளக்குப் பிடிக்கும் இராயேஸ்வரியக்கா அதியுச்ச புலிக்காச்சலை லண்டனில் நடந்த பெண்கள் சந்திப்பில் வெளிப்படுத்தியது மட்டுமன்றி கிழக்குச் சூரியானியாகி மகிந்த மாத்தையாவுடனும் சங்கரித் தாத்தாவுடனுமான குலாவலாக மாறியுள்ளது வேறு கதை. இந்தப் பொரியல் சட்டிக் கண்ணகியின் கதை அப்பப்போ ஞாபகமாவது போக, இடைக்கிடை செருமிக் கொண்டிருந்த முன்னாள் போராளி பின்னாள் புலியொன்றைக் கவிழ்த்து புலியால் துரத்தப் பட்டவரின் ஆசைநாயகியாகிய இன்னாள் அக்கா நிர்மலாவின் புதிய புலம்பலில் வந்து நிற்கிறது பெண்கள் சந்திப்பு. இந்த நிர்மலா அக்கா மட்டக்களப்பு சிறையுடைப்பிலிருந்து மீண்டபோது சொன்ன கதைகள் மறந்து பின்னர் தான் ஏன் சாகவேண்டுமென எண்ணியதாக வெளிநாட்டு தொலைக்காட்சியொன்றில் மாயக் கண்ணீர் வடித்ததும் நினைவில் நிற்பவை.

நல்லகாலம் நிர்மலாக்கா புலிகளின் பெண்கள் படையணிக்கு தலைவியாக ஆகாமல் ஒழுக்காற்று நடவடிக்கையில் வெளியேற்றப் பட்டது. விடுதலைப் புலிகளின் தலைமை எதையுமே எதிர்காலத்தை முன்னரே கணித்து செயற்படும் திறமையால் தமிழ்ப் பெண்ணியம் தப்பித்தது. இல்லையேல் நிலமை மார்புக் கச்சைக்கு விடுதலை பெறுதலே பெண்ணியம் என்றதாகியிருக்கும். கருவறைகள் வெடிசுமக்கும் காவியங்கள் எழுதப்படாமல் காலத்தை கையிலேந்தி களமாடும் வீரப்பெண்ணியம் வித்திடப்பட்டிராது.

கனடாப் பெண்ணியவாதியால் கனடாவில் அண்மையில் நடாத்தப்பட்ட பெண்கள் சந்திப்பில் புலிக்காச்சல் இந்தவேலை வெட்டியில்லாப் பெண்ணியவாதிகளுக்கு எப்படியுள்ளது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. ஆனால் இந்தப் பினாத்தல் புலம்பல் வாதிகளுடன் தன்னை ஈடுபடுத்தி ஏன் தனது திறனை மழுங்கடிக்கிறாரோ தெரியவில்லை. சிலவேளை கிழக்குச் சூரியனின் ஒளியில் இவவும் ஒளிபெற விரும்புகிறாவோ தெரியாது.

பெண்களுக்கான சந்திப்பில் இம்முறை ஆண்களுக்கும் அனுமதிவழங்கிகனடா அக்கா தனது பெருமனதை வெளிப்படுத்தியுள்ளார். போன வருடம் ஆண்களையும் அனுமதியுங்கோ என லண்டனிலிருந்து எழுந்த குரலுக்கு கனடா அக்கா வழிதிறந்து குடுத்துள்ளார். இனி பெண்கள் சந்திப்பு என்ற பெயர் 'ஆண்களும் பெண்களும் சந்திப்பு' என மாற்றம் பெறுவதை 'கச்சைப் புரட்சிவாதி நிர்மலாக்கா' ஏகமன தாக ஏற்றுக் கொள்வார்.

தினமும் தமிழர் தேசத்திலும் சிங்கள தேசத்திலும் தமிழ்ப்பெண்கள் மீது சிங்களப் படைகளால் நடைபெறும் அவலங்கள் அத்துமீறல்கள் வன்புணர்வுகள் பற்றி இவர்களுக்கு எந்தவித அக்கறையுமில்லை. புலம்பெயர் நாடுகளில் பெண்கள் படும் இன்னல்கள் சிறுமியர்கள் மீதான அத்து மீறல்கள் என தமிழ்ப் பெண்களின் நிலமை சொல்லியழ ஆளில்லாத கதைகளோடு இருக்க, நாலு சுவருக்கு நடுவில் 10 அல்லது 20 புலிக்காச்சல் பிடித்த புலம்பல் பெண்ணியங்களின் அறிக்கை நிறைவேற்றுத் தீர்மானத்துடன் கலைந்து போய்விடுகிறது. ஊரில் இன்னல்படும் பெண்களுக்கு ஒருபத்துச்சதத்தைத்தானும் இரங்காத இவர்கள் உலகப் பெண்ணியத்தை பேசியென்ன ஆயிரம் சந்திப்பு நடத்தியென்ன ஒன்றையும் புடுங்கவும் ஏலாது படைக்கவும் ஏலாது.

நல்லகாலம் நிர்மலாக்கா புலிகளின் பெண்கள் படையணிக்கு தலைவியாக ஆகாமல் ஒழுக்காற்று நடவடிக்கையில் வெளியேற்றப்பட்டது. விடுதலைப் புலிகளின் தலைமை எதையுமே எதிர்காலத்தை முன்னரே கணித்து செயற்படும் திற மையால் தமிழ்ப் பெண்ணியம் தப்பித்தது.

ஜீன்ஸ் போட்டுக் கொண்டு பெண்ணியம் பேசுவதில இந்த அக்காக்களுக்கு வலு புழுகம். ஜீன்சிலைதான் புரட்சி இருக்கிற தாயும் பாவாடை தாவணி போடுவோரெல்லாம் பட்டிக்காடென்ற நினைப்பு. 'நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்கிறதாம்' பட்டிக்காடுகளும் இப்ப ஜீன்ஸ் போடுறோம் அக்கா. ஆனால் நீங்கள் புலம்பிற மாதிரி ஒரு மண்ணையும் காணம்.

நிர்மலாக்காவின் மார்புக்கச்சை அணியும் முறைமையை கொழுத்த தீப்பெட்டிகளாய் கிழம்பியுள்ள கனடிய ஐரோப்பிய பெண்ணிய வாதிகளெல்லாரும் உங்கள் உள்ளாடைகளை வீதியில் போட்டு எரியுங்கோ அல்லது உங்கள் சந்திப்பு அறைகளில் தொங்க விடுங்கோ நீங்கள் விரும்பும் பெண்விடுதலை விரைவில் கிடைக்கும் சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை யிரங்காரடி' பாரதியே நீயிருந்திருந்தால் இந்தப் பெண்ணியவாதிகளை மோதி மிதித்து முகத்தில் உமிழ்ந்திருப்பாய் நல்ல காலம் நீ செத்துப் போனாய். அதனால் தப்பித்தனர்.

சிங்களத் தீவினுக்காயிரம் ரேடார் கொடுப்போம்!

60 மில்லியன் தமிழர்கள், 70
மில்லியன் தமிழர்கள் உலகில்
உள்ளோம் என வாய் கிழிய
பேசுகிறோம். பேசி,பேசியே,
சும்மா எழுதிவிட்டு
புல்லரித்து போகிற இனங்களில்
உலகத்தில் நாம்தான் முதலில்
இருப்போம். இதை உணர்ச்சிவசப்பட்டு
சொல்லவில்லை இயலாமை
அளிக்கும் துயரத்துடன்தான்
சொல்கிறேன்.

சரி முக்கால்வாசித் தமிழர்கள்
சாதாரணமானவர்கள், நம்முடைய
தலைவர்கள் எப்படி என
பார்த்தால், துயரமும்,
அவமானமும் கூடி குறுக
வைக்கிறது.

பெரும்பான்மை தமிழர்கள்
வாழும், இந்தியாவின்
தமிழ்நாட்டு மாநிலத்தை 1967
ஆண்டு தொடங்கி மாற்றி, மாற்றி ஆண்டு
வரும் 'திராவிட கும்பல், அன்லிமிடட்
கொள்ளை நிறுவனங்களின்' தலைவர்கள்-
என்ன செய்கிறார்கள்..?

குற்றவுணர்வின்றி உயிர்
வாழ்கிறார்கள், accountability என்பதே
இல்லாமல் ஆட்சி செய்ய
அனுமதிக்கப்படுகிறார்கள்,
மன்னராட்சி நடப்பது போல,
தகுதியற்ற குடும்பத்தினர்களின்
முன்னேற்றங்களை
மட்டும் மனதில் வைத்து
செயலாற்றுகிறார்கள்? இப்படி
இன்னமும் சொல்லலாம். இப்படி
இருப்பவர்கள் மக்கள் நலனை
என்று முன்னிறுத்தி செயல்பட
போகிறார்கள்..?

மறுபடியும் - உணர்ச்சிவசப்பட்டு
சொல்லவில்லை..

அதுவும் நீங்களெல்லாம் மனதில்
ஒரு 'மென்னிடம்' கொடுத்து
வைத்திருக்கும், 80 வயதுகளிலிருக்கும்
முத்துவேல் கருணாநிதி எப்படி வெட்கமின்றி
உயிர் வாழ்கிறார்..

தமிழர்கள் இது போன்ற
தலைவன்களை எத்தனை காலம்
தேர்ந்தடுக்கப் போகிறார்கள்..

இது பெரிதும் வெட்கி வியக்க
வைக்கும் விதயம்.

இதற்கு மேலெழுத அலுப்பாக -
அவமானமாய் உள்ளது.

அன்புடன்
வாசன்

ARM ASSOCIATES
Financial Advice for Life

We have been helping our clients for over 35 years. Now we are proud to announce that you are able to receive advice from us by a

Chartered Financial Planner

Chartered Status is the highest benchmark in financial advice. If you require quality advice from one of the most qualified advisers in the country, feel free to contact:

Mr Suhan Srinivasan
(APFS, Chartered Financial Planner, Economics BSc)

Tel: 020 8763 2221

32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH.

Authorised and Regulated by the Financial Services Authority.

FINANCIAL PLANNER
CII
CHARTERED

கனடாவில் கடை விரித்தேன்

பாகம் 04

7. இனி டப்பாக்களில அடைக்கப்பட்ட சாப்பாடு கள (டிரக்குக்க வச்சு விக்கிற சாமாங்கள் - சிக்கன் போல்ஸ், சிக்கன் விங்க்ஸ்...கொண்டு வந்து வைக்கிறது.) ஆனால் முக்கியமான ஒரு விசயம் கவனிக்கவேணும். சிறீ லங்காவ விட இஞ்ச கள்ளர் கூட. ஒரு செக்கன் எங்கையாவது வாய் பார்த்தால் காணும். ஏமாத்திப் போடு வாங்கள். அப்ப நான் என்ன செய்யுறது எண்டால் இன்னொரு ஆள காவலுக்கு வச்சுப் போட்டுத்தான் உள்ளுக்க சாமான் எடுக்க போறது. இல்லாட்டி நான் உள்ளுக்க போய் திரும்பி வாறதுக்கு இடையில எண்ட சின்னக் கடையில இருக்கிற சாமாங்கள யாராவது காக்காமாதிரி கொத்திக் கொண்டு போயிடுவாங்கள்.

8. கடைசியா காசுப் பெட்டிய தூக்கிக் கொண்டு வாறது. எனக்கு குவாட்டர் (25 சதம்), அஞ்சு சதம், பெனி (ஒரு சதம்), பத்து சதம், லூனி (ஒரு டொலர்) டூனி (ரெண்டு டொலர்) எண்டு ஒவ்வொண்டுலையும் தாராளமா சில்லறைக் காசுகள் தருவீனம். பக்கற்று களுக்க காசு இருக்கும். ஒவ்வொரு பக்கற்றா உடைச்சு ஒவ்வொரு விதமான சில்லறைகளா தருவீனம்.

9. இனி என்ன? எல்லாம் வந்திட்டிது. யாவாரம் துவங்க வேண்டியதுதான்.

10. சுமார் ஒன்பது மணியில இருந்து ஆக்கள் வருவீனம். பத்து அரை சொச்சம் யாவாரம் சூடுபிடிக்க துவங்கும். இரவு ஒரு மணியுக்கு பீக் டைம் எண்டு சொல்லவேணும். இந்த நேரம்தான் எனக்கு ஆகவும் சரியான வேலையா இருக்கும். சனம் எண்ட கடைய ஈ மாதிரி மொச்சுக் கொண்டு இருக்கிங்கள். இந்த நேரம்தான் வாழ்க்கையே வெறுக்கும். ஏன் கனடாவுக்கு வந்தம் ஊருக்கையே இருந்து இருக்கலாம் எண்டு நினைப்பு வரும். இந்த நேரம் மிகவும் கிரவுடா இருக்கும்.

11. இந்தநேரத்தில எனக்கு வாறமிகப்பெரிய சலஞ்ச் என்ன எண்டால் குயிக்கா எப்பிடி ஆக்கள சமாளிக்கிறது எண்டுறது. வாறவன் போறவன் எல்லாம் அவசரப்படுத்திக்கொண்டு இருப்பாங்கள். தூசணத்தால கண்டபடி பேசுவாங்கள் (நானும் இஞ்சதான் தூசணம் பழகினது..). நான் மாத்திரம் என்ன சும்மாவே? ரெண்டு நாள் எல்லாருட்டையும் பேசாமல் கேட்டு படிச்சுப் போட்டு பிறகு யாராவது சேட்டை விட்டால் நானும் தூய ஆங்கிலத்தில திருப்பி ஆட்லறி தாக்குதல் செய்யுறது.

தும்படிப்பது எப்படி

முரளி (கனடா)

யாராவது ப.. எண்டு சொன்னால் நான் இன்னும் அழுத்தமாவும் தெளிவாவும் ப... யூ எண்டு சொல்லி அதோட ஆ.. ஹோ.. எண்டுற அடைமொழியையும் சேர்க்கிறது. எனக்கு யாருட்டையும் பேச்சு வாங்க வேணும் எண்டு தலைவிதி இல்லத்தானே? எண்ட படியால் நானும் திருப்பி தூசணம் சொல்ல பயப்படு றதோ வெட்கப்படுறதோ இல்ல.

இஞ்ச முக்கியமா என்ன கவனிக்க வேணும் எண்டால்.. வாற பெடியங்களில முக்கால்வாசி கள்ளர் கூட்டம். ஆக்களப் பார்த்தால் மட்டும் அந்தமாதிரி உடுப்புகள்... வாசனைகள் எண்டு இருக்கும். ஆனா செய்யுற கள்ள வேலைகள் கொஞ்ச நஞ்சம் இல்ல. ஒரு டொலர் காசுக்கு பத்து நிமிசம் நிண்டு வாதாடுவாங்கள். நிறையப் பேர் என்ன செய்வாங்கள் எண்டால் சரியான சனமா இருக்கிற நேரமா பக்கத்தில நிண்டுபோட்டு பிறகு காசு தராமலே நான் உனக்கு ஏற்கனவே காசு தந்திட்டன் எண்டு பொய் சொல்லி ஏமாத்துவாங்கள். சாப்பாட ஓடர் செய்துபோட்டு ஓடர் வந்த உடன சாப்பாட வாங்கேக்க காசு தராமலே நான் உனக்கு ஏற்கனவே காசு தந்திட்டன் எண்டு சொல்லி பம்மாத்து விடுவாங்கள். நான் மட்டும் என்ன விட்டனே? ஒரு ப... சொல்லி மிச்சம் ஏதும் பிரச்சனை எண்டால் உள்ளுக்க கடையுக்க போய் முதலாளியோட கதை எண்டு சொல்லிப் போடுவன். அவேள் எனக்கு திரும்பவும் கொஞ்ச நேரம் தூசணம் சொல்லி வெருட்டி எல்லாம் பாத்து போட்டு கடைசியில ப.. ப.. ப எண்டு சொல்லி பஜனை பாடிக் கொண்டு இடத்த காலி பண்ணுவீனம்...

மற்றது நிறையப் பெடிப் பிள்ளைகள் என்ன செய்வீனம் எண்டால் ஊரில சந்தையில மரக்கறி வாங்கிற மாதிரி.. சாப்பாட்ட குறைஞ்ச விலைக்கு தரச் சொல்லி டீல் பேசிக் கொண்டு இருப்பீனம். நான் சிலது பாவம் பார்த்து குறைஞ்ச விலைக்கு குடுக்கிறது. முதலாளியும் சொல்லுவான். சிலது அம்பது சதம் குறைஞ்சாலும் பரவாயில்ல வித்துவிடு எண்டு. இதால இப்பிடி செய்யுறது.

மற்றது... அவேள் காக்கா வலிப்பு வந்து மணித்தியாலக் கணக்கில ஆடுறது தானே? அப்ப அந்தநேரம் அவேக்கு சரியான பசியா இருக்கும். ஆனா பரதேசிகளிண்ட பொக்கற் றுக்க காசு இருக்காது. தெருப் பிச்சைக்காரங் கள் மாதிரி எண்ட கடையுக்க முன்னால வந்து நிண்டு கெஞ்சிக் கொண்டு இருக்கிங்கள். மனிதாபிமானமும் பார்த்து சிலருக்கு சும்மா வும் சாப்பாடு குடுத்து இருக்கிறன். பசியில ஆகவும் கெஞ்சி அழுதால் வேற என்னத்த செய்யுறது?

ஆனா ஒரு விசயம் சொல்ல வேணும். நான் பார்த்ததில வாற பெண்களுல ஒருவருமே இப்பிடி பிரச்சனை ஒண்டும் செய்யுறது இல்ல. காசக் குறைச்சும் சாப்பாடு கேட்க இல்ல. பிச்சைகாரரிண்ட விளையாட்டுகளும் காட்ட இல்ல. மற்றது எனக்கு டிப்சும் பெண்களிடம் இருந்துதான் ஏராளம் கிடைக்கும்.

12. சனம் ஆட்டம் பாட்டம் எல்லாம் முடிஞ்சு சுமார் அதிகாலை 1.30 சொச்சத்தில இருந்து மெல்ல மெல்ல கலையும். காலை 2.00 மணி அளவில சரியா குறைஞ்சிடும். மூண்டு மணி அளவில இன்னும் சரியா கிரவுட் குறை ஞ்சிடும்.

13. வேலை செய்யேக்க நான் எண்ட சின்ன க்கடையுக்க இருக்கிற சாமாங்கள் விக்கிற தோட மட்டும் இல்லாமல் ஓடருகளும் எடுத்து உள்ளுக்க குடுக்க வேணும். என்னோட இன்னொரு வெள்ளக்காரன் உதவிக்கு நிப்பான். அவன் உள்ள போய் ஓடருகள் செய்து முடிஞ்சதும் கொண்டுவந்து தருவான். ஆனா நாந்தான் காச டீல் பண்ணுறது. சேருற டிப்ஸ நானும் அவனும் பிரிச்சு எடுக்கிறது.

14. ஆக்களிண்ட எண்ணிக்கைய பொறுத்து நல்லா சனம் குறைஞ்ச உடன நான் எண்ட சின்ன பெட்டிக்கடைய மூடுறது. நேரஞ்செல்ல யாரும் வந்தால் அவேள பெரிய கடையுக்க போகச் சொல்லிறது.

15. பிறகு என்ன? ஆரம்பத்தில நான் இரவு 8.00 மணிக்கு வரேக்க எப்பிடி எல்லாம் இருந்திச்சிதோ அதுமாதிரி எல்லாத்தையும் திருப்பி கொண்டு போய் வைக்க வேணும். பெட்டி வண்டில்கள திரும்பவும் பழைய இடத்தில வைக்கிறது.

16. நான் சாமான் வித்த இடம் சரியான ஊத்தையா இருக்கும். பேப்பருகள், கஞ்சல கள், சாப்பாடுகள் எண்டு எல்லாம் ஒரே நரகமா இருக்கும். அப்ப அடுத்த வேல எல்லாத் தையும் கூட்டி துப்பரவு செய்யுறது.

17. கடைசியா எல்லாம் பழைய மாதிரி வந்தாப் பிறகு விளம்பர பலகைய உள்ளுக்க கொண்டுபோய் வச்சுப்போட்டு, விளம்பர லைட்டை நூத்துப் போட்டு (அது பெரிய வேலை... ஆயிரம் வயருகளும் லைட்டுகளும் எண்டு பத்து நிமிசம் மினக்கட வேணும்..) பிறகு இரும்புக் கதவ சாத்தி லொக்கை போட்டிட்டு உள்ளுக்க போறது.

18. உள்ளுக்க போய் செய்யுற முதலாவது வேல எண்ட காசுக் கணக்குகள சரிபார்த்து கடையில நிக்கிற மனேஜரிட்ட இல்லாட்டி பொறுப்பான ஆளிட்ட குடுக்கிறது.

19. சிலது இனி கடையடைக்க முன்பக்கத்தில நிண்டும் வேலை செய்யுறது, விக்கிறது, துடைக்கிறது, கூட்டிறது...மொப்பண்ணுறது... கழுவுறது (இதப்பற்றி - கனடா கக்கூஸ் கழுவின அனுபவங்கள் பற்றி பிறகு விரிவா சொல்லிறன்..). இப்பிடி வழமையான ரெஸ்டோரண்ட் வேலைகள் செய்யுறது..

- வேலைகள் தொடரும்

வீடெனப்படுவது யாதெனில் பிரியம் சமைக்கிற கூடு...

நாங்கள் முதலில் ஒரு சின்ன அறையும் ஒரு பெரியறையும் (சாமியறை)ஒரு விறாந்தையும் கொண்ட வீட்டில் குடியிருந்தோம்.. தனித்தனி அறைகள் கிடையாது.. அப்போதெல்லாம் தனித்தனி அறைகளும் தனிமையும் பெரும் வசதிகளைத் தரும் என்று நினைப்பிருந்து கொண்டிருக்கும்... ஆனால் அதெல்லாம் அமைந்த போது.. எங்களுக்குள் கொஞ்சம் விலகல் நிகழ்ந்துவிட்டிருப்பதை உணர முடிந்தது...

தனிமை வேண்டித் தவமிருந்த நாட்கள் என் வாழ்க்கையில் உண்டு.. ஒரு பாட்டுக்கேக்கிற பொட்டியோடும்(வோக்மேனோடும்)கொஞ்சப் புத்தகங்களோடும் எங்காவது தொலைந்து போய்விடவேண்டும் என்று விரும்பியிருக் கிறேன்.. அப்போதெல்லாம் நான் எழுதிக் கொண்டிருக்கும்போது..(அநேகமாக அது கணிணியிலாக இருக்கும்..) தட்டச்சும் என் கைகளுக்கு குறுக்கால் புகுந்து என் கதிரைநுனியில் தனக்கு போதுமான இடம் கிடைத்துவிட.. பூனைக்கு குட்டி டான்ஸ் ஆடுகிற அனிமேசன் காட்சியை உடனடினாகப் போடவேண்டும் என்று அடம்பிடிக்கிற ஒரு குட்டிப்பையனுக்கு நான் சித்தப்பாவா யிருந்தேன்... நான் போடமறுக்கையில்.. அய்லன் என்று என்பெயரை தனக்கேற்ற மாதிரி உச்சரித்துக் கொக்கரித்து விட்டு ஓடிப்போய்.. தன் அம்மாவின் சோட்டிக்குப் பின்னால் ஒழிந்து கொள்ளும்.. அவனை விரட்டிப்பிடித்து அவன்.. கத்தக் கத்த தலைக்கு மேலாய்த் தூக்கி வீசிப் பிடித்துக் கொஞ்சுகையில் அவன் எழுதுவதைக் குழப்புவதாகத்தான் நான் நினைத்துக்கொண்டிருந்தேன்..

இதோ இன்றைக்கு எந்த நிழலும் ஆடாத... என் அறையின் வாசற்கதவைப் பார்க்கிறேன்... ஒரு குட்டிப்பையனும்.. வருவதற்கில்லை.. காகிதம் பறந்து வெளியேறிப் போகிறது.. வெளியே விரவிக்கிடக்கும் கோடையின் தகிப்பு மட்டும் எஞ்சிக்கிடக்கிறது அறையுள்.. போராடுகிறது மின்விசிறி எனக்கு கொஞ்சம் காற்றைக் காட்டி விட.... நான்கு பல்லிகளும் திக்கொன்றாய் இரைதேடும் சுவர்களில் பெரிய பல்லியைக் காணோம்.. அவை ஒளித்துப்பிடித்து விளையாடுகின்றனவோ என்னவோ.. சுவர்களை விடவும் தகிக்கிறது மனம்.. கனவும் நிஜமும் சேரும் பிரமையின் புள்ளிகளில்.. துள்ளி ஓடுகிறது அய்லன் என்ற ழைக்கும் ஒரு குட்டிப்பையனின் குரல்... எனது சொற்களின் குதூகலம் அவனிட மிருந்திருக்கிறது என்பது புரிந்தபோது.. பாக்கு நீரிணையை நான் கடந்து விட்டிருந்தேன்...

வீடு என்பதன் வெறுமையான அர்த்தங் களைத் தாண்டி அது தரும் பாதுகாப்புணர்வை கடல் கடந்த பின்னர் நான் தீவிரமாக உணரத் தலைப்பட்டேன்.. வீடு என்பது கட்டிடம் அல்ல.. என்பதன் குருரம்.. சென்னை மாநகரில் எனக்கு புரிந்தபோது காலம் கடந்து விட்டிருக்கிறதோ என்னமோ...

எட்டாம் வகுப்புக் காலத்தில் சொந்த வீட்டை விட்டு இடம்பெயர்ந்து போகும் போது புரியாதது.. மீண்டும் கிளிநொச்சிக்குத் திரும்பி உடைந்த வீட்டை திருத்திக் கட்டிய போது புரியாதது... சிறிய வீட்டை பெரிய வீடாக்கி எல்லாருக்கும் தனித்தனி அறைகள் இருந்தபோது புரியாதது.. சென்னையில்.. தங்குவதற்கிடமில்லை என்றாகிய ஒரு இரவில் திடீரெனப் புரிந்தது.. வீட்டைக் காலி பண்ணச் சொல்லிக் கொண்டேயிருந்தார் வீட்டுக்காரர் காரணம் வாடகைப் பாக்கி யில்லை.. கரண்ட்பில் கட்டாமல் இல்லை.. தண்ணி அடித்துவிட்டு நாங்கள் அவர் வீட்டு மொட்டைமாடியில் பண்ணிய அலப்பறை யில்லை.. நான் சைற்றடிக்கக் கூடிய மாதிரி அவருக்குபொம்பிளைப்பிள்ளைகள் இல்லை.. அவரிடம் இருந்த ஒரே காரணம் நான் சிலோன் காரன்.. அந்த ஒற்றைக்காரணம் போதுமான தாய் இருந்தது அவர் என்னை அவசரமாய் வெளியேறச் சொல்வதற்கு....

போதெல்லாம் கனவினைப்போல்

சென்னையிலிருந்து **த. அகிலன்**

எங்காவது பேப்பரில் வருகிற இலங்கை வாலிபர் கைது என்று செய்தி வருகிறபோதெல் லாம் அவர் நான் இருக்கிறேனா என்று வீட்டிற்குள் வந்து பார்த்து உறுதிப்படுத்திக் கொள்வார்.. நான் வாடகைக் காசை நாள் பிந்தாமல் கொடுப்பதற்கு காரணம் நான் வெளிநாட்டில் இருக்கிற நண்பர்களின் உதவியோடு கிரடிட் காட் மோசடியில் ஈடுபடுவதுதான் என்று அவரது அறிவு அவருடைய கனவில் சொல்லிய நாளில் அவர் என்னை வெளியேறச் சொன்னார்... நான் 7 நாள் தவணை கேட்டேன்.. தந்தார்.. ஆனால் என்ன நினைத்தாரோ 5ம் நாளே நான் வெளியே போயிருந்த நேரமாய் எனது பூட்டுக்களை அறுத்தெறிந்து விட்டு தனது பூட்டால் நான் வசித்த அறையைப் பூட்டிவிட்டு வெளியேறி விட்டார். நான் வந்து பார்த்தேன் வீட்டு ஓனரில் பூட்டு என்னை வேளியேறச் சொல்லி இளித்தது. அடுத்து எங்கே போவது அன்றைய இரவை எங்கே கழிப்பது என்பது போன் பல பிரச்சினைகள் எனக்குள் முளைத்தது. எனக்குத் தெரியாமல் எனது பொருட்கள் உள்ளே இருக்கும்போது.. பூட்டை உடைத்ததற்கு நியாயம் கேட்டு போலீசில் புகார் கொடுக்கலாம் என்று நினைத்தேன்.. பிறகு சிலநாட்களிற்கு முன்பு தான் அந்த வீட்டிற்கு அருகில் இருந்த கடை ஒன்றில்.. திருடு போய்விட்டிருந்தது.. அந்த திருடனை இன்னமும் போலீஸ் தேடிக்கொண்டுதான் இருக்கிறது.. இந்த நேரத்தில் நான் அங்கு போக ஆகா சிக்கிட்டான்யா மாப்ள என்று என்பெயரில்.. அந்தக் கேசுகள் எல்லாவற்றை யும் போட்டுத்தாக்கிவிடும் வாய்ப்புகள் அதிகம் என்பதால்.. அந்த திட்டத்தைக் கைவிட்டேன்..

கேற்றை மெதுவாச் சாத்தப்பு பெரியம்மா வின் குரல் நினைவிலிருந்தும் மோட்டார் சைக்கிளால் உறுமியபடி கேற்றை இடித்துத் திறக்கிற நினைவெழுந்து படம் விரித்தாடியது.. இரண்டாம் சாமங்களில்.. எனது மோட்டார் சைக்கிள் உறுமும் சத்தத்திற்கு தூக்கக் கலக்கத்திலும் எழுந்து வந்து சாப்பாடு போடட்டேப்பு என்று கேட்கும் அண்ணியின் குரல் நினைவுக்கு வந்த அடுத்த கணம் பீறிட்டுக்கிளம்பியது அழுகை.. நான் நின்று கொண்டிருப்பது நடுத்தெருவென சட்டை செய்யாத அழுகை.. சென்னை மாநகரத்தின் ஒரு தெருவில் நின்று நான் அழுகையை விழுங்கி விழுங்கி அடக்க முயற்சித்துக் கொண்டிருந்தேன்... அடுத்த நேரப்படுக்கை க்கு இடமில்லாமல் போகும் என்று நான் ஒரு போதும் கற்பனை செய்து கொண்டதில்லை.. அது எனக்கு நிகழ்ந்ததென்று என்னால் நம்பமுடியவில்லை.. இடப்பெயர்வில் எத்த னையோ இரவல் வீடுகள் மரநிழல்கள்.. சங்கடங்கள் இருந்தன.

நான் என்ன மாதிரித் தனித்து விட்டேன் என்கிற அச்சம்பிரமாண்டமாய்எழநான்மட்டும் ஒரு தனித்தீவின் கரைகளைச் சுற்றி ஓடிக் கொண்டிருந்தேன்.. அநேக நாட்களில் வீடு திரும்புவதேயில்லை.. பள்ளிக் கூடத்து மேசை களிலோ.. நண்பர்கள் வீடுகளிலோ.. படுத்து விட்டு காலையில் பல்லு விளக்காமல் வீட்டுக்குப் போகையில்.. முதல் கேள்வி இரவு சாப்பிட்டாயா என்பதாய்த் தான் இருக்கும் அப்போதெல்லாம் வீடு எனக்கு அளிக்கும் பாதுகாப்புணர்வை இன்னதென்று அறியாதிருந்தேன்..

வெட்கத்தை விட்டு விட்டால் ஏதாவது தெருவில் படுத்துவிடலாம்.. நான் விட்டாலும் அது நம்மை விடுவதாயில்லை.. இந்தப் பெரு நகரில் ஒரு புழுப் பூச்சி கூட என்னைக் கவனிக் காது இருந்தும். கௌரவத்தின் கண்கள் என் னைக் கண்காணித்துக்கொண்டிருந்தன.. மன்மத மாசம் போட்டிருந்தார்கள் ஞாயிற்றுக் கிழமை சிறப்புக்காட்சி. (மேட்டர் படம் தான்) குமரன் தியட்டரில். தியட்டரை ஒரு அரை நாள் வீடாக்குவதெனத் தீர்மானித்தேன்..

நான் இதுவரை வசித்த வீட்டிற்கு கீழே சேட்டுக்காரர்கள் கடை வைத்திருந்தார்கள்.. அண்ணனும் தம்பியுமாக இரண்டு சேட்டுகள். அவர்களுடைய கடையின் கல்லாப்பொட்டி வரை போகும் அளவிற்கு நம்பிக்கையும் அன்பும் எங்களிடம் அவர்களிற்கு இருந்தன... நாங்கள் இந்த வீட்டிற்கு குடிவந்தபோது எங்களை இந்த வீட்டில் கொண்டு வந்து விட்ட ஆட்டோக்காரர் சொன்னார்.. சேட்டுக்காரன் ரொம்பக் குப்பையா இருப்பான்யா ராஜஸ்தான்ல தண்ணி கிடையாதுல்ல.. அதால பாத்தும்ம்ல டாய்லெட்ல எல்லாம் தண்ணியை சிக்கனப்படுத்துகிறேன் என்று அதன் மணத்தை அதிகப்படுத்தி விடுவான்கள் என்று.. அதையும் மீறி நாங்கள் அவர்களோடு பழகினோம்.. இராஜஸ்தானில் இருந்து தனது எடையைவிட அதிக எடையுள்ள உலோகங்களை தன் உடம்பிலே போட்டுக்கொண்டு வருகிற சேட்டுக்களின் அம்மா.. பேட்டா என்று எங்களை அணைக்கையில் பெரியம்மாவின் நினைவெழுவதைத் தவிர்க்க முடியவில்லை.. அவர்களுடைய வீடாக தண்ணீர் அதிகம் பாவிக்காத ஒரு அசுத்தமான வீட்டைக் கற்பனை பண்ணி வைத்திருந்தேன். ஆனால் அவர்களுடைய வீட்டுக்குள் போனதும் எனக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.. துடைத்து வைத்ததுமாதிரி அத்தனை சுத்தமாக இருந்தது சமையலையில் சமைக்கிறதற்காக சுவடுகளே தெரியாமல் அத்தனை சுத்தமாக இருந்தது.. நானே எனக்குள் அவர்களை அசுத்தமான வர்களாக கற்பனை பண்ணியதற்காக வெட்கப்பட்டுக்கொண்டேன்..

நான் குமரன் தியட்டரின் வாசலில் பீறிட்டுக் கிழம்புகிற அழுகையை வெட்கம் கருதி அடக்கிய படி படம் முடிவதற்காக தியட்டர் வாசலில் காத்திருந்தேன்.. யாரும் அவ்வளவு நெருக்கமான நண்பர்கள் கிடையாது.. யார் வீட்டிற்காவது போய் இன்றைய இரவைக்கழிக்கலாம் என்றால் எல்லா கல்யாணமாகாத இளைஞர்களின் வாழ்க்கையும். இட்டுமுட்டு அறைக்குள். தட்டுமுட்டுச் சாமான்கள் காலில் முட்டுப்படத் தூங்கும் வாழ்க்கைதான் இதில் நான் வேறு போய் ஏன் சிரமத்தைக் கொடுப்பான் என்று நினைத்தேன்...

டேய் பாடு என்னடா மேட்டர் படம் பாக்கப்போறியா என்றபடி சேட்டு தன் பைக்கை என்னருகில் நிறுத்தினான் சேட்டு.. ஆதரவான மனிதர்களை காணோம்.. என்று தவித்துக்கொண்டிருந்த அழுகை விடுவிடென ஊதடுகளில் விம்மித் தழும்பியது.. என்னடா வாடா.. என்று அவனது பைக்கில் போனே ன்.. அவனது வீட்டிற்குப் போனதும் அழுகை பீறிட்டுக்கிளம்பியது.. அடக்கமுடியாத அழுகை பாத்றூமில் நின்று அழுது தீர்த்தேன்.. லால்(சேட்டுகளில் அண்ணன்)இன் மனைவி ஹ்ந்தியில் ஏதோ சொன்னார்.. அநேகமாக வீட்டு ஓனரைத் சபித்து திட்டுகிறாள் என்று புரிந்தது.. டேய்.. நாங்க இருக்குமட்டும் நீ எதுக்கு யோசிக்காத எப்ப வேணா இங்க வா உன் வீடு மாதிரி இது.. ஹரி(சேட்டுகளில் தம்பி) சொன்னான்.. அவனது அண்ணி இன்னமும் போலீசில் சொல்லலாம் என்பது மாதிரி ஏதோ சொன்னாள்.. ஹரி என்னிடம் சொன்னான் இது எங்க ஊரு இல்ல மாப்ள நாங்க இங்க பிழைக்க வந்திருக்கம்.. இது நம்ம ஊரு கிடையாதுல்ல.. நாம எதுசொன்ன ாலும் வேலைக்காகாது அவன் சொல்றதுதான் எடுபடும். அதால பேசாம இருந்திட்டு நம்ம ஜோலியைப் பார்க்கணும்டா.. விடு ... எல்லாம் நல்லதுக்குத்தான்.. அவனது அண்ணி தேத்தண்ணி கொண்டு வந்து தந்தாள்.. அவளது குழந்தை என்னை நெருங்கி எனது தலைமுடியைப் பற்றி இழுத்தது..

வீடென்பது அறைகள் கொண்ட கட்டிடம் அல்ல.. அது மனிதர்கள்.. கவனிப்புகளும் கனிவுகளாலும் நம்மை ஆட்கொள்கின்ற மனிதர்கள் நிறைந்த சொர்க்கம். துயரங்கள் என்னை அண்டாமல் காத்துநிற்கிறவேலி..நான் விட்டுவிட்டு வந்திருப்பது கட்டிடத்தை அல்ல அந்த மனிதர்களின் கனிவை.. இனி எப்போது மறுபடி திரும்பமுடியும் என உறுதியாகச் சொல்ல முடியாத... தொலைவுக்கு வந்துவிட்டேன்.. உலகெங்கும் தன்மையின் கொடுநிழலில் வசிக்கநேர்கிற ஒவ்வோரு தனியன்களினதும் துயரம் இதுவாகத்தானே இருக்கும்..ஹரி எனக்காக ஒரு நான்கு சுவர்கள் கொண்ட கட்டிடத்தை வாடகைக்கு மறுபடி.. எடுத்துக்கொடுத்தான். அந்தகட்டிடமும் வீடாக முடியாது என்பதை நான் இப்போது உணர்ந்து கொண்டேன்.. நான் இனி எப்போது ஒரு வீட்டில் வசிக்கத்தொடங்குவேன்.. என் தம்பின்னு சொல்லியிருக்கேன்.. நீ சிலோன் அது இதுன்னு.. சொல்லாத.. ஹரி என்னிடம் சொன்னான். வீட்டுக்காரர் என்னை ஒரு சேட்டாக எண்ணுகிறார்.. அவரது விழிகளில்.. ஒரு சந்தேகம் முளைத்துக்கிடக்கிறது.. கறுப்பு நிறத்தில் ஒரு சேட்டிருப்பார்களா?... இந்தக் கட்டிடமும் என்னை வெளியே தள்ளலாம்.. அதுவரைக்கும் அதன் சுவர்களிற்குள்ளிருந்து கொண்டு....

Nallur Kumaran Party Time *All party needs under one roof!*

திருமணம், விருந்துபசாரம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள், அரங்கேற்றம், மண்டப அலங்காரங்கள், Marquees, Chairs, Tables, Party Products, Wedding Sarees, மாப்பிள்ளை சர்வாணி, தலைப்பாகை, பூமாலைகள், Video, and Photography!

Printed and plain balloons for all events
Saree blouses உடனுக்குடன் தைத்துக் கொள்ளலாம்!

1023 London Road
Thornton Heath
Surrey
CR7 6YN

Contact: Kumaran Open Mon - Sat 10AM - 7PM
07960 761 606 / 0208 684 1026
www.nallurkumaran.co.uk

ரத்தம்... சரணம்... கச்சாமி....

தினமும் வீட்டை விட்டுக் கிளம்பும் முன் அருகிலிருக்கும் கடையில் செய்தித்தாள்களை லேசாக மேய்ந்துவிட்டுப் புறப்படுவது வழக்கம். அன்றும் அப்படித்தான் எதேச்சையாக நாளிதழைக் கையில் எடுக்கிறேன். நெஞ்சில் பேரிடி ஒன்று இறங்குகிறது.

'இலங்கையில் தமிழர்கள் மீது கொலை வெறித்தாக்குதல்!'

'தமிழ்க் கைதிகளை கொடூரமாகக் கொன்ற கோரம்!!'

வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டிருந்த குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழ்ப் போராளிகளை அறை அறையாகச் சென்று தேடிப்பிடித்து நிராயுதபாணிகளான அவர்களை குத்திக் கொன்ற கொடூரமும்.... உயிரிழந்தவர்களை இழுத்து வந்து அச்சிறையின் புத்தர் பீடத்துக்குக் கீழே வீசியெறிந்துவிட்டு ஆர்ப்பரித்த அவலமும்.... விலாவாரியாக விளக்கப்பட்டிருந்தது அதில். எல்லாவற்றைக் காட்டிலும் ஏற்கெனவே சிங்கள அநீதி மன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை மூவரையும் குறிவைத்துக் கொன்றதோடு அவர்களது கண்களை நோண்டியெடுத்து தரையில் தேய்த்த ஈனச்செயல் இதயமுள்ள எவரையும் உலுக்கிப் போடும்.

அதற்கு முன்னர்தான் வழக்குமன்றத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்டபோது அம் மூன்று மாவீரர்களும் மரணத்தை துச்சமென மதித்து ஆற்றிய உரை மனதில் மீண்டும் ஒருமுறை ஒலித்தது.

'நாங்கள் இறந்த பிற்பாடு எங்களது கண்களை எடுத்து எமது தமிழ் இளைஞர்களுக்குப் பொருத்துங்கள். நாங்கள் அதன் மூலமாவது நாளை மலரப்போகும் தமிழ் ஈழத்தைக் காண்போம்' என்றார்களோ அந்தக் கண்களைத்தான் குதறியெறிந்து தரையில் தேய்த்தது புத்தரின் வழிவந்ததாகக் கூறிக் கொண்ட கூட்டம். இத்தகைய வாரிசுகளை வழிநடத்தக் கூடிய 'தலைமைபிட்சுவாக' இருந்தவர்தான் ஜெ.ஆர். ஜெயவர்த்தனா.

சிங்களக் காடையர் சகலருக்கும் 'புத்தம் சரணம் கச்சாமி' என்பது 'ரத்தம் சரணம் கச்சாமி' என்றே காதில் ஒலித்திருக்கிறது. விளைவு? வெலிக்கடைச் சிறை படுகொலைகளும்....கொழும்புநகரில்நடத்தியவெறியாட்டங்களும். தூயர செய்திகள் ஒவ்வொன்றாக வெளிவர மொத்த தமிழகமுமே கொதித்து எழுந்தது. ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என சகல கட்சிகளுமே இலங்கை அரசின் இனப்படு கொலைகளை வன்மையாகக் கண்டித்தன.

தமிழகத் தாத்தாக்களும் எழுத்து இளைஞர்களும்

உளறுவது தமிழகத்திலிருந்து **பாமரன்**

தமிழகமெங்கும் மாணவர் போராட்டங்கள்..... ஜெயவர்த்தனாவின் கொடும்பாவி எரிப்புகள்..... என எங்கெங்கு காணினும் சிங்கள இனவெறியர்களுக்கு எதிரான கோபம் பொங்கும் முகங்கள். மிகவும் உணர்ச்சி வசப்பட்டிருந்தேன் நான். தாள முடியாத கவலையும், கோபமும் மனதை ரணமாக்கிக் கொண்டிருந்தது.

கோயமுத்தூரில் ரயில் மறியலில் ஈடுபடுவ தென முடிவாகி இருந்தது. வீட்டை விட்டு வெறியோடு வெளியேறினேன். ரயில் நிலைய மறியலில் கலந்து கொள்ள எனது கல்லூரி மாணவர்களை அழைத்துக் கொண்டு ரயில் நிலையச் சாலையை நெருங்கும்போது அங்கு ஏற்கெனவே ஆயிரக்கணக்கில் மாணவர்கள் குழுமி இருப்பதைப் பார்க்கிறேன். இக்கூட்டத்தில் எண்ணிக்கையில் அடங்காத அளவுக்கு பள்ளி மாணவர்களும் கலந்திருந்தனர். போலீசார் கைகளால் வளையம் அமைத்து ரயில் நிலையச் சாலையின் முனையிலேயே மாணவர்களை தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தனர். சிங்கள அரசுக்கெதிரான முழக்கங்களும், மத்திய அரசை உடனடியாக தலையிடக் கோரிய முழக்கங்களும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது. மாணவர்கள் போலீஸ் வளையத்தை உடைத்துக் கொண்டு ரயில் நிலையத்தை அடைய எத்தனிப்பதும்.... போலீசார் அவர்களை பின்னுக்குத் தள்ளுவதுமான இழுபறியிலேயே நேரம் போய்க் கொண்டிருந்தது. மாணவர் தலைவர்கள் ஒவ்வொருவரையும் போலீஸ் வேனின் கூரை மீது ஏற்றிவிட்டு கூட்டத்தை அமைதிப்படுத்துமாறு கோருகிறார்கள் போலீசார். எந்த சமாதானத்தையும் எவரும் கேட்பதாயில்லை. நேரம் கடந்து கொண்டே போவதால் அந்த நேரம் பார்த்து வேறு ஒரு முடிவு எடுக்க வேண்டி வருகிறது மாணவர் தலைவர்களுக்கு.

ரயில்மறியல்என்றால்முன்வாசல்வழியாகத் தான் போயாக வேண்டுமா? ஊர் முழுக்க ஓடுகிற தண்டவாளத்தை அடைவதற்கு இது ஒன்றுதானா வழி? அவ்வளவுதான்..... அதுவரையில் போலீசாரிடம் முட்டி மோதிக் கொண்டிருந்த மாணவர் கூட்டம் எதிர்த் திசையில் திரும்பி கிடைத்த சந்துகளில் எல்லாம் புற்றீசலென ஓடத் துவங்குகிறது. போலிசாருக்கு என்ன நடக்கிறது என்பது புரிபடுவதற்குள்ளாகவே மொத்த இருப்புப் பாதையும் மாணவர்கள் கைவசம் வந்து சேருகிறது. வேறு வழியின்றி வந்து சேருகிறார் மாவட்ட ஆட்சித் தலைவர். அதே ரயில் நிலைய மாடியிலுள்ள ஹாலில் ஆரம்பமாகிறது பேச்சு வார்த்தை.

'ஈழத்தமிழர்கள் மீது எங்களுக்கும் அக்கறை இருக்கிறது. கவலை இருக்கிறது. அதற்காக நமது பயணிகளுக்கு சிரமம் அளிப்பது சரிதானா'? என்கிறார் மாவட்ட ஆட்சியர்.

'யாருக்கும் சிரமம் அளிப்பது எமது நோக்கமல்ல. ஆனால் ஈழத்தில் நமது மக்கள் பட்டுக் கொண்டிருக்கும் துயரங்களைப் பார்க்கும் போது இதுவொன்றும் பெரிய சிரமமில்லை. எங்கள் கோரிக்கை மத்திய அரசின் காதுகளில் விழ வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மறியல்' என்று மாணவர் தலைவர் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போதே வெளியில் கண்ணாடிகள் உடைபடும் சத்தம்.

'அதில்லை தம்பிகளா.... ரயில் சரியான நேரத்துக்கு வரலைன்னா மக்கள் என்னவோ ஏதோன்னு சந்தேகப்படுவாங்க' என்கிறார் டி.எஸ்.பி.

'ரயில் சரியான நேரத்துக்கு வந்தால்தான் மக்களுக்கு தேவையில்லாமல் சந்தேகம் வரும். நேற்றுக் கூட ஜெயந்தி ஜனதா எக்ஸ் பிரஸ் 12 மணி நேரம் லேட்' என்கிறேன் நான். முறைக்கிறது போலீஸ்.

மீண்டும் கண்ணாடிகள் நொறுக்கப்படும் சத்தம்....ஜெயவர்த்தனாவுக்கு எதிராக ஓங்கி ஒலிக்கப்படும் முழக்கங்கள்..... இதற்கிடையில் ரயில் எஞ்சினுக்கு எவரோ தீ வைத்துவிட எழுந்த புகை மண்டலம்.....

என வெளியில் நிலவரம் கலவரமாகிக் கொண்டிருக்கிறது.

'மாணவர்களிடம் சென்று அவர்களை அமைதிப்படுத்துங்கள்' என்கிறார் மீண்டும் மாவட்ட ஆட்சியர்.

'அது சாத்தியமேயில்லை அவர்கள் தூங்க வியலாத கவலையிலும், கோபத்திலும் இருக்கிறார்கள். வேண்டுமானால் எங்களைக் கைது செய்து கொள்ளுங்கள்' என்கிறோம்.

வேறுவழியின்றி இறங்கி வருகிறது நிர்வாகம். ரயில்கள் நிறுத்தப் படுகின்றன.

இதுதான்.....

வெறுமனே சினிமா பார்த்துக் கொண்டும்.....

கவிதைகள் என்ற பெயரில் கண்றாவிகளைக் கிறுக்கிக் கொண்டும்.....

இருந்த இளைஞனை வீதிக்கு அழைத்து வந்த முதல் போராட்டம்.

அதன் பிற்பாடு நாங்கள் உணர்ந்து கொண்டதுதான் ஈழத்தில் இன்றும் துவளாது தொடரும்.....

கற்பதற்கான போராட்டமும்

போராட்டத்துக்கான கல்வியும்.

(உளறல் தொடரும்)

MARKANDAN & CO

Solicitors & Administrators for Oaths

We are Specialised in....

Work Permit
(புதிய விண்ணப்பங்கள், மீளப் புதுப்பித்தல், காலவரை நீடிப்பு)

Student Visa
(புதிய விண்ணப்பங்கள், காலவரை நீடிப்பு)

Student Visa Appeal
(மேல் முறையீடு)

Asylum Appeal
(அகதி அந்தஸ்த்துக்கான விண்ணப்பம், முறையீடு)

Post Studies Work

முக்கிய குறிப்பு

பிரித்தானியாவில் அகதி அந்தஸ்து கோரி உள்ளவர்களுக்கு, பிரித்தானியாவின் 'LP' என்ற பிரபலமான இலங்கைத் தமிழரின் அகதி விண்ணப்பம் வெற்றி பெற்ற நிலையில் அதனை பிரித்தானிய நீதிமன்றம் (AIT) Country Guidance ஆக ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் இனங்கையில் குறிப்பிட்ட எந்தவொரு வித்தத்திலும் (12 விதமான Principle Risk Factors) பாதிக்கப்பட்டவர்கள் (Fresh Application) புதிய விண்ணப்பம் மூலம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

European Court Appeals
100% success

- House / Flat
- Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation
- Bankruptcy
- Divorce

பிற நாடுகளிலிருந்து பிரித்தானியாவிற்கு வருவதற்கான **Sponsors (Entry Clearance Sponsorships)**

Family Reunion
(கணவன் அல்லது மனைவி பிரித்தானியாவில் வசிப்பவராயின் அவரது குடும்பத்திற்கான visa நடைமுறைகள்)

Permanent Residency (நிரந்தர வதிவிடவுரிமை)

EEA Dependent Spouse Visa
(ஐரோப்பிய வதிவிடவுரிமை உள்ளவர்களுடைய கணவன் அல்லது மனைவியிற்க்கான விண்ணப்பங்கள்)

Same Day Visa Extension
(ஒரே நாளில் visa மீளப்புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்கள்)

ECHR Application (பிரித்தானியாவில் இருந்து நாடு கடத்த உள்ள ஒருவரின் நாடுகடத்தலுக்கு எதிரான விண்ணப்பம்)

100% Success in refund from college and universities (College, University களிலிருந்து பணத்தை மீளப்பெறுவதில் 100% வெற்றி கிடைக்கும்)

Personal Injury

Have you been given Payment Protection Insurance by your bank (Lender)? ***We may be able to reclaim the whole amount.***

No Win – No Fee

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் தயாராகவுள்ளன.

845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: **0208 514 8188** Fax: **0208 514 8303**
Mob: **07958 618 106**
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்...

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

அவள் தன் மகனுக்கு என் பெயர் வைத்தாள்.

சொன்னால் நம்பமாட்டியள். அவளைப் போய் பார்க்கும் வரைக்கும் அவள் தன்ரை குழந்தைக்கு என்ர பெயரைத்தான் வைச்சுக்கொண்டிருப்பாள் எண்டு நான் நம்பிக் கொண்டிருந்தன் எண்டால் நான் எவ்வளவு பெரிய லூசுப் பயல் எண்டு தெரிஞ்சு கொள்ளுங்கோ. அதை விடப் பெரிய பைத்தியக்காரனத்தனம் ஏதோ பந்தயம் கட்டிச் சொல்லுறதுபோல கூட வந்தவனுக்கும் அதைச் சொன்னது தான். அவன் ஏதோ அதிசயத்தை பார்ப்பது போல என்னை பார்த்தான். இதிலென்ன ஆச்சரியம் இருக்கு ஆட்டோகிராப் படத்தில கூட செந்தில் என்ற சேரனது பெயரைத்தான் கமலா தன்ரை பிள்ளைக்கு வைச்சிருந்தாள் என்று நான் அவனுக்கு சொல்லுவமோ என வெளிக்கிட்டு பிறகு சொல்லாமல் விட்டிட்டன். ஏனென்றால் கமலா தன்ரை இரண்டாவது பிள்ளைக்கு இன்னுமொரு பெயரை வைத்தாள் என்பதைச் சொல்லி அவன் என்னை நக்கலடிப்பான். என்னை நக்கலடிச்சாலும் பர்வாயில்லை அவளை நக்கலடிச்சாலும் பரவாயில்லை. எங்கடை காதலை ..

காதலோ .. ? இதே மாதிரித்தான் இதேயளவு ஆச்சரியத்தோடுதான் நேற்றிரவு அவனும் கேட்டான். அப்பிடிக் கேட்டதுக்கு அவன் சரியா கவலைப்பட்டிருப்பான். என்ரை கதையைக் கேட்டு இல்லை. காதலோ எண்டு கேட்ட ஒரே காரணத்திற்காக அவனைப் பிடிச்சு வைச்சு பின்னிரவு தாண்டிய பிறகும் நித்திரை கொள்ள விடாமல் அறுத்தெடுத்ததையெண்ணி சரியா கவலைப்பட்டிருப்பான். ஆனால் எனக்கு அதுக்குப் பிறகுதான் ஆறுதலாயிருந்தது. பின்னே - எட்டு ஒன்பது வருசமா மனதிற் குள்ளை வைச்சிருந்து பிசைந்து பிசைந்து களி கிண்டி - சொறி ஏதோ நினைப்பில சொல்லிட்டன் .- அப்பிடியே பிசைந்து பிசைந்து மாவாக்கி - அடச்சே - ஓகே முதலேயிருந்து எட்டு ஒன்பது வருசமா மனதிற்குள்ளை வைச்சிருந்து பிசைந்து பிசைந்து அப்பிடியே ரோசாப்பூ முள்ளாலை இதயத்தை சுத்தியிருக்கிற அந்த தசையை விறாண்டி எடுக்கிற வலியை இறக்கி வைச்சால் ஆறுதலா இருக்குமா இருக்காதா?

சரியடாப்பா உவ்வளவு டீப்பான காதல் பிற கெப்பிடி பிரிஞ்சு போனதென்று அவன் இப்ப கேட்கிறான். - அது ஏன் டீப்பான காதல் என்று முழுக் கதையையும் கேட்ட அவனுக்குத்தான் தெரியும். உங்களுக்குத் தெரியாது. -இந்தக் கேள்வியை நேற்றே கேட்டிருந்தால் விடியும் வரை சிவராத்திரிதான் என்று அவன் நினைச் சிருப்பான் போல. ஆனால் உண்மை என்ன வென்றால் இந்தக் கேள்விக்கு என்னட்டைப் பதிலே இல்லை. ஏன் பிரிந்தோம் ?

நான் பதிலேதும் சொல்லவில்லை. சொல்லனடா ஏன் பிரிஞ்சனியள் - நீ ஏமாத்திட்டு ஓடிட்டியா ?

என்ன வார்த்தையடா சொன்னாய் நண்ப, னாச்சே என்று அமைதியா இருக்கிறதும் சில நேரங்களில பிழைதான் போல இருக்கு. அதனால் நான் பேச்தொடங்கினேன்.

ம்.. ஏன் பிரிஞ்சோம்.. அதுக்கு முதல் ஏன் இணைந்தோம். காரணம் தெரியுமா? இல்லை.. இந்த உலகத்தில எதுக்குமே காரணம் இல்லை. நாங்கள் இணைந்ததற்கே காரணம் இல்லாமல் இருக்கும் போது பிரிந்ததற்கு எப்படி காரணம் இருக்க முடியும். ? சரி பிரிந்தோம் - ஏன்

தென்றல் வரும் தெரு

சனி - (ஒரு பேப்பர் சுவிஸ்)

காதல் கடல் இரண்டுக்குமே கே ஏ டி ஏ ஏ எல் தான். காதல் இணைத்தது கடல் பிரித்தது. காலம் பிரித்ததென்றும் சொல்லலாம். கடைசியா சொன்ன காலம் பிரித்ததென்றும் சொல்லலாமை கமலகாசன் மாதிரி சொல் லிட்டு அவனைப்பார்த்தேன்.

அவன் குழம்பியிருப்பான் எண்டு நம்பினேன். சான்சே இல்லை . அவன் தெளிவா அடுத்த கேள்வியைக் கேட்டான். டேய் கேட்டதுக்கு மட்டும் பதிலைச் சொல்லு. ஏன் உங்கடை காதல் இல்லாமல் போனது?

இதுக்குப் பதில் சொல்ல முதல் இவனிடம் நான் சில கேள்விகளைக் கேட்க வேணும். அப்பதான் இவனுடைய மனநிலை என்ன என்பதை அறியலாம். அதில்லாமல் இவன் ஒரு காதல் புனிதப் பெருமானாக இருந்தால் நான் நடந்ததைச் சொல்ல என்னை காதலரின் வரலாற்றுக் கறை ஆக்கிப் போடுவான்.

கால இடைவெளியும் தூர இடைவெளியும் காதலைக் கரைக்குமா என்பது தான் என்ரை முதற்கேள்வி. ஓம்.. அப்பிடிக் கரைச் சிருக்கு. கரைக்கும் தான். உப்பிடி நிறையக் காதல் அடிபட்டுப் போயிருக்கு. அதில யொண்டும் பிழையில்லை. இங்கை யாரும் யாரையும் ஏமாத்தேல்லை. இயல்பா நடக் குது. அதற்குரிய நேரத்தையும் கால அவ காசத்தையும் எடுத்துக்கொண்டு இயல்பா நடக்குது. உந்தப் பயத்திலதான் காதலிக்கிற வை எங்கையாவது பிரிஞ்சு வாழ நேர்ந்தால் ரகசியமா கல்யாணத்தைக் கட்டியோ அல்லது வீட்டை சொல்லி எல்லாருக்கும் அறிவிச்சுப் போட்டோ போறவை.

இதுக்குப் பிறகு அவனுக்கு நான் என்ன நடந்தது எண்டதை சொல்லலாம் பிரச்சனையில்லை- ஆனா அதுக்குடனை அவளின்ரை வீடு வந்திடும் எண்ட படியாலை உது தானடா எனக்கும் நடந்தது எண்டு சொல் லிக்கொண்டேன்.

காதல் கடல் இரண்டுக்குமே கே ஏ டி ஏ ஏ எல் தான். காதல் இணைத்தது கடல் பிரித்தது. காலம் பிரித்ததென்றும் சொல்லலாம். கடைசியா சொன்ன காலம் பிரித்ததென்றும் சொல்லலாமை கமலகாசன் மாதிரி சொல் லிட்டு அவனைப் பார்த்தேன்.

அவள் இப்ப எப்பிடியிருப்பாள்? முந்தி.. முந்தியெண்டால் ஒரு ஒன்பது பத்து வருசத்துக்கு முதல் வகுப்பில பெட்டையளில அவள்தான் வடிவு. பெடியங்களில ?.. வேண்டாம் .. அதையெதுக்கு இங்கை தேவை யில்லாமல் வடிவெண்டு மட்டுமில்லை. நல்லா படிக்கவும் செய்வாள். பிறகு .. பிறகென்ன பிறகு.. அப்பிடியே பின்னாலை முன்னாலை திரிஞ்சு கானா பிரபா சொன்ன எல்லா வழிமுறை களையும் கையாண்டு விழுந்து எழும்பி தட்டுத் தடுமாறி ஒரு ஆறுமாதத்துக்குப் பிறகு சிரித்துப் பதில் சொன்னாள். ம்.. இங்கை ஒரு பெரு மூச்சை நீங்களும் விட்டுக்கொள்ளுங்கோ. எல்லாம் அடுத்த ஆறுமாதம்தான். அந்த ஆறுமாசத்தில கோயிலுக்கு போறதும் ஒழுங்கை முகப்புகளில (மறைப்புகளில எண்டு வாசித்து தொலைக்காதீங்கோ) நிண்டு கதைக்கிறதுமா காலம் தன்னைத் தானே விழுங்கியது. பிறகு அதே காலம் இரு காதற் குருவிகளை கொடும்பற்கள் கொண்டு கவ்வி அங்கொன்றும் இங்கொன்றுமாகப் போட்டது.

இதோ அந்தக் காலம் இந்தப் புள்ளியிலும் வந்து நிற்கிறது. கொஞ்ச நாளைக்கு முதலே அவள் வேலை செய்யும் இடமறிந்து அவள் திருமணம் செய்த செய்தியறிந்து அப்போ தேவையே இல்லாமல் ஏற்பட்ட சின்னதொரு ஏமாற்றத்தையும் தாங்கிகொண்டு அவளைச் சந்திக்கும் விருப்பைச் சொல்லி பெற்றதிந்த சந்தர்ப்பம்.

மச்சான் நான் சொன்னதையொன்றும் அங்கை வைச்சு கேட்டுப்போடாதே. ஒண்டாப் படிச்ச பொடியன் எண்டுதான் போறன். என்று கூட வந்தவனுக்கு உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டு உள்ளை போனம்.

அந்தக் கணங்களை நீங்கள் ஒவ்வொருத்தரும் அனுபவித்தே புரிந்து கொள்ளுங்கோ. ஏனென்றால் அதை என்னால் விளக்க முடியாது. அவள் அவளின் அப்பா அம்மா குழந்தை எல்லோரும் அங்கிருந்தார்கள். அவர் வேலை விசயமாய் வெளிய போயிட்டதாய்ச் சொன்னாள். படங்களில் நின்ற அவரை எனக்கு முன் தெரிந் திருக்கவில்லை. அவளிடம் கேட்கவும் முயல வில்லை. அவளின் அப்பா இயல்பாக அளவளாவிக் கொண்டிருந்தார். அவருக்குப் பயந்த காலமொன்று எனக்கு உளது. இனி கேட்டுவிட வேண்டியதுதான் என நான் நினைத் தேன். அம்மாவின் சட்டைக்குப் பின்னால் ஒளிந்திருந்த குழந்தையைத் தூக்கி பெடியனுக்கு என்ன பெயர் என்றேன்.

அது என்ரை பெயர் இல்லை. கடவுளே பக்கத்தில் நிற்கிறவன் சிரித்துத் தொலைத்துவிடக்கூடாது. குழந்தையை இறக்கி விட அது திரும்பவும் அம்மாக்கு பின்னால் ஒளித்துக் கொண்டது. மதியம் சாப்பிட்ட பிறகு தொடர்ந்தும் அங்கு இருப்பதற்கு காரணமேதுமில்லை. கிளம்பும் போது அவள் மட்டும் வாசல்வரை வந்தால் நல்லாயிருக்கும் போலத் தோன்றியது. வந்தாள்.

இதை கேட்கிறது லூசுத்தனம் எண்டு தெரியும்தான். இருந்தாலும் கேட்கிறன். வேறெந்தக் காரணமும் இல்லாமல் ஒரு ஆவணப்படுத்தலுக்கு எண்டு நினைத்துக் கொள்ளும் என முடித்தேன். என்ன என பார்வையால் வினவினாள்.

இல்லை.. நான் முந்தி எழுதின கடிதங்கள் ஏதாவது இருந்தால் தாரும்.

திடீரென்று அவள் அமைதியாகி பிறகு கலகலப்பானாள். பிழையா நினைக்க வேண் டாம். ஒன்பது பத்து வருசமாச்சு. இப்ப வந்து கேட்டால்? சரி என்னை விடுங்கோ.. நான் கேட்டால் தாறதுக்கு நீங்கள் வைச்சி ருக்கிறியளோ என்றுகேட்டவளுக்கு நான் பதில் சொல்லவில்லை. ஆனால் பர்சை எடுத்து விரித்து அதன் அடியிலெங்கோ மடித்து வைத்திருந்த ரோசா படம் ஒட்டிய பழுப்பேறிய தாளைக் காட்டினேன். இந்த இடத்தில் அவள் கண்ணீர் வடிப்பாள் அல்லது விக்கித்துநிற்பாள் என நீங்கள் நினைத்தால் அது தவறு. அவள் சொன்னாள்.

இதை நீங்கள் ஆம்பிளையள் வைச்சிருக் கிறதுக்கும் நாங்கள் பொம்பிளையள் வைச்சி ருக்கிறதுக்கும் இந்த சமூகத்தில நிறைய வித்தி யாசம் இருக்கு.

அந்தத் தாளை மடித்து மீண்டும் உள்ளே வைத்தேன். உள்ளேவேறும் சில மங்கியதாள்க ளும் அம்பு கிழிக்கும் இதயத்தின் படங்களும் இருந்தன. அவை அவளுடையவை அல்ல.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- ✓ CRIME
- ✓ CONVEYANCING
- ✓ MATRIMONIAL
- ✓ IMMIGRATION
- ✓ TRAFFIC MATTERS
- ✓ LANDLORD & TENANTS
- ✓ POLICE STATION MATTERS
- ✓ EMPLOYMENT MATTERS
- ✓ WORK PERMITS



கீழே: ஒரு பேப்பர் காரன்கள் / காரிகள்

மேலே: ஐஸ்கட்டி

சீனாவுக்கென் வாழ்த்தும்... வைதலும்...

நேற்றுத்தான் (24 ஓகஸ்ட் 08) நிறைவு பெற்றிருந்தது சீனா பீஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள். சீனா அதிக தங்கப் பதக்கங்களை வென்று முதலிடத்திலும் அமெரிக்கா இரண்டாம் இடத்திலும் இரஸ்யா மூன்றாம் இடத்திலும் பிரித்தானியா ஒரு தங்கப் பதக்கத்தைத் தவற விட்டதில் நான்காம் இடத்திலும் உள்ளன. முதல் மூன்று இடங்களைச் சொல்வது தான் வழமை. பிரித்தானியாவில் நான் வாழ்வதால் நான்காம் இடத்தையும் சொல்லிவிட வேண்டும் என்று ஒரு 'சின்னப் பிள்ளை' ஆசை. மற்றும் பிரித்தானியா ஒலிம்பிக்கில் இந்த இடத்திற்கு வந்ததும் ஒரு சாதனை தான்.

இந்தச் சின்னப்பிள்ளை ஆசையை மீட்டுப் பார்க்கிறேன். ஓரளவு விபரம் தெரிந்த காலம். எனக்கு அமெரிக்காவை ஏனோ . பிடிப்பதில்லை. அமெரிக்காவின் எதிரியும் அமெரிக்கா போன்ற பலம் பொருந்திய நாடாக இருந்த படியால் இரஷ்யாவை எனக்கு மிகப் பிடிக்கும். (சோவியத் யூனியன் என்றால் இரஷ்யா என்றுதான் அப்போது என் நினைப்பு.)

மூத்த மாமாவுக்குக் கோபம் வந்தது. 'இஞ்சார் என்னையும் ஏரொப்பிளேனிலை ஏத்தி எங்கையும் கொண்டு போய் விட்டு விடு. இந்தா இதுதான் சந்திர மண்டலத்துக் கல்லு'

1969இல் அமெரிக்கா சந்திர மண்டலத்திற்கு நீல் ஆம்ஸ்ரோங் உட்பட மூன்று விண்வெளி வீரர்களை (அப்பாழுது விண்வெளி வீரர்கள் என்று தான் ஏனோ சொன்னார்கள்) அனுப்பிய போது நான் கொஞ்சம் கவலைப்படத்தான் செய்தேன். அட அமெரிக்கா முந்தி விட்டதே என்று. ஆனால் இறைச்சிக் குடலை கொண்டு நொண்டி நொண்டி வந்த மூத்த மாமா சொன்னார் சந்திரனுக்கு போறதென்ன லேசான காரியமே? உவங்கள் சும்மா புளுகுறாங்கள். நீயும் உதைப் போய் நம்பிக் கொண்டிருக்கிறாய்"

அம்மா உடனே மறுத்துச் சொன்னா 'அவங்கள் சந்திர மண்டலத்திலை இருந்து கல்லும் கொண்டு வந்திருக் கிறாங்கள். பிறகும் நம்பாமல் விட ஏலுமே?'

மூத்தமாமாவுக்குக் கோபம் வந்தது. 'இஞ்சார் என்னையும் ஏரொப்பிளேனிலை ஏத்தி எங்கையும் கொண்டு போய் விட்டு விடு. இந்தா இதுதான் சந்திர மண்டலத்துக் கல்லு' என்டு ஒரு கல்லை நானும் பொறுக்கிக் கொண்டு வாறனோ இல்லையோ பார். சும்மா விழல் ஞாயம் கதையாதை'

எனக்கு மூத்த மாமா சொல்வது சரியா இருந்தால் நல்லது போலப் பட்டது என்றாலும் இரஷ்யா தானே முதல் முதலாக 'கோயுஸ்' என்ற விண்வெளிக்கப்பலை (ரொக்கெற்றை விண்வெளிக்கப்பல் என்று தான் அப்போது சொன்னார்கள்) 'லைக்கா' என்ற நாயுடன் சந்திர மண்டலத்திற்கு அனுப்பியது என்றும் 'ஸ்புட்னிக்' என்ற செய்மதியை முதன்முதலாக விண்வெளிக்கு அனுப் பியது, என்றும் மனதைத் தேற்றிக் கொண்டேன். இவை யெல்லாம் சின்னத்தனமானது என்றல்ல சின்னப் பிள்ளைத்தனமான ஆசை என்று சொல்லலாம்.

இப்படிச் சின்னப்பிள்ளைத் தனமான ஆசைகள் வளர்ந்த பிறகும் இருந்தன. கொம்யுனிசத்தில் ஈடுபாடு வந்த போது கொம்மியுனிஸ்ற் நாடுகள் என்று அழைக்கப்பட்ட நாடு களிலும் ஓர் ஆர்வம் வந்தது. சோவியத் யூனியன், மக்கள் சீனம் என்று கொம்மியுனிஸ்ற் நாடுகள் பிளவுபட்டுக் கிடந்தது கவலையென்றலும், அந்தத் தருணங்களில் கொம்மியுனிஸ்ற் நாடுகளை ஆதரித்தேன்.

ஒலிம்பிக்ஸ் போட்டிகள் தான் எனக்கு மிகப்பெரிய வாய்ப்பு. அனேகமான ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் சோவியத் யூனியன் முதலாம் இடத்திலும் கிழக்கு ஜேர்மனி, சீனா ஆகிய நாடுகள் இரண்டாம், மூன்றாம், நான்காம் இடங்களிலும் வந்து விடும். அமெரிக்காவும் இதற்குள் இடம் பிடிக்கும் என்றாலும் சோவியத் யூனியன், கிழக்கு ஜேர்மனி, சீனா மூன்றும் கொம்மியுனிஸ்ற் நாடுகள் என்பதில் எனக்குப் பெரு மகிழ்வு.

சோவியத் யூனியனின் விமானங்கள் பறந்து வந்து சீனாவினது குண்டுகளை என் மீதும் என் மக்கள் மீதும் என் போன்ற ஒடுக்கப்பட்டோர் மீதும் போடுகின்ற போது, அவை கொம்மியுனிஸ்ற் நாடுகள் என்று எப்படி நம்புவேன்?

இப்போது யாவும் அபத்தமாய், விசர்த் தனமாய்த் தெரி கிறது. நான் முதிர்ந்தேனா, பக்குவம் பெற்றேனா என்பது எனக்குத் தெரியாது. ஒடுக்கப்பட்ட மக்களுள் நானும் ஒருவன். அடக்கப்பட்ட மக்களுள் அடியேனும் ஒருவன் என்று உணர்வு வரப்பெற்ற போது, யாவற்றையும் அதன் தளத்தில் நின்று புரிகின்றேன்.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

சோவியத் யூனியனின் விமானங்கள் பறந்து வந்து சீனா வினது குண்டுகளை என் மீதும் என் மக்கள் மீதும் என் போன்ற ஒடுக்கப்பட்டோர் மீதும் போடுகின்ற போது, அவை கொம்மியுனிஸ்ற் நாடுகள் என்று எப்படி நம்புவேன்? அப்படிப் போடப்பட்ட குண்டுகள் ஒடுக்கப்பட்ட மக்களை கொல்லாமலா விடப்போகிறது? லெனினும், மாசேதுங்கும் இப்போதும் உயிருடனிருந்தால் இவை யொன்றும் நிகழாது என்றாக நம்புவதற்கு எனக்கு ஒரு ஏதும் இல்லை. உண்மையில் நாங்கள் தான் மகா பாவிகள். கொம்மியுனிஸ்ற்றுகள் என்று சொல்லப்பட்டோரை, கொம்மியுனிஸ்ற் நாடுகள் என்று அழைக்கப்பட்டவற்றை விசுவாசமாக நம்பிய நாங்கள் தான் மாபாவிகள்.

ஆனாலும் பாருங்கள் நேற்று ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நிறைவுறுகிற தருணம் சீனா முதலிடம் பெற்றது என்பது மகிழ்வைத் தருகிறது. இவ்வளவு காலமும் நிகழ்ந்த ஒலிம்பிக்கில் சீனாவில் நிகழ்ந்த ஒலிம்பிக்ஸ் தான் மிகவும் சிறப்பானது என்று பிபிசி சொல்ல இன்னும் மகிழ்வு வருகிறது. முதல் நாள் ஒலிம்பிக்ஸ் விழா அன்று மனிதன் தன் ஆற்றல் சிறகுவைத்து வானில் ஏறி ஒலிம்பிக்ஸ் தீபம் ஏற்றினான். இறுதி நாள் நிகழ்வில் மனிதர்கள் குழுவாகத் திரண்டு வானில் கோபுரம் கட்டினர். இரண்டையும் கண்டு நான் சிலிர்த்தேன். மானுடத்தின் மேன்மையை உலகிற்கு எடுத்துக் காட்டியது சீனா. அதற்கென் மகிழ்வும் வாழ்த்தும். ஆனால் மானுடத்தையே உன் குண்டு களால், கொள்கைகளால் சிதைக்கிறாயே. அதற்காக ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களும் உன்னை வயிறெரிந்து வைவார்கள். புரிந்து கொள்.

சிங்கள வரலாற்றின் சீரின்மை

சி.மாசிலாமணி

(ஒரு பேப்பருக்காக)

வங்கத்திலிருந்து சகாக்களுடன் விரட்டப்பட்ட விஜயன் என்னும் இளவரசனும் அவன் சகாக்களும் பேசிய மொழிதான் இன்றைய சிங்கள மொழியாக வளர்ச்சி பெற்றது என்கிறார்கள். இது ஒரு சர்ச்சைக்கு உரிய விடயம்.

சிங்களம் ஒரு இந்திய ஆரிய மொழி. காலத்தை வைத்து அவற்றை பழைய, மத்திய, புதிய என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். இதில் புதிய பிரிவு என்ற கடைசி மாற்றம் ஏற்படு முன்னரே சிங்களம் அம்மொழிகளிலிருந்து விலகிவிட்டது என்பதைக்கூட நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார்கள். ஆனாலும் இந்த ஆரிய மொழிகள் இந்தியாவின் வடக்கு, மேற்கு, கிழக்கு என்று பாரிய பிரதேச வேறுபாடுகளுடன் பேசப்படுவதால், பிரதேச வேறுபாடுகளுக்கு ஒப்ப மொழிகளிலும் வேறுபாடுகள் காணப்பட்டது. இதை மையமாக வைத்து மொழி வல்லுனர்கள் அவற்றை கிழக்கு பரிவு, வடமேற்கு பிரிவு, தென் மேற்கு பிரிவு என மூன்று பிரிவுகளாப் பிரித்துள்ளார்கள். இதில் விஜயன் புறப்பட்ட பிரதேசத்தில் அப்போது பேசப்பட்ட ஒரிச வங்காளிய மொழிகள் கிழக்குப் பிரிவில் அடங்குகின்றன. விஜயனும் அவன் சகாக்களும் பேசிய மொழிதான் இன்றைய சிங்கள மொழியாக வளர்ச்சி பெற்றது என்றால் சிங்களமும் நிச்சயம் கிழக்குப் பிரிவினுள்தான் அடக்கப் பட்டிருக்க வேண்டும்.

சிங்களத்தை மேற்கு இந்தியாவின் குஜராத்தி கொங்கணி போன்ற மொழிகள் அடங்கிய தென்மேற்கு பிரிவினுள் அடக்கி உள்ளார்கள். சிங்களம் பேசும் மக்கள் இந்தியாவின் எந்தப் பகுயில் இருந்து வந்துள்ளார்கள் என்னும்போது, வங்காளத்தில் இருந்தும் வந்திருக்கிறார்கள் என்று சொல்லலாமே அன்றி அங்கிருந்து வந்த விஜயனும் அவனின் கூட்டாளிகளும் மட்டும்தான் வந்தார்கள். அவர்கள் பேசிய மொழிதான் சிங்களமானது என்று சொல்ல முடியாது. அத்துடன் குஜராத்தி கொங்கணி போன்ற மொழிகளுடன் தொடர்புடையவர்கள் விஜயனுக்கு முன் இலங்கைக்கு வந்திருக்கவேண்டும். தங்கள் மொழியின் கதையையே முறையாக ஆய்வு செய்யாது, சிங்கத்தின் வம்சா வழியினர் தாம் என்னும் கதையை நம்பி வாளா இருக்கின்றனர்.

சிங்களத்தை திராவிட மொழி என்றுகூடத் தப்புக்கணக்குப் போட்டிருக்கிறார்கள். அதற்கான காரணம் கி பி 11ம் நூற்றாண்டின் பின் இதன் வசன அமைப்பு தமிழின் செல்வாக்கால் சிறிது மாற்றம் கண்டது. இதை அவதானித்த சிலரின் தப்புக்கணக்குத்தான் அது. மொழி ஆராய்ச்சியாளர்கள் ஒரு மொழியின் இலக்கணத்தை வைத்தே அம்மொழி எந்தக் குடும்பத்தைச் சார்ந்ததென்று இனம் கண்டு கொள்ளுகிறார்கள். இந்த ரீதியல்? இதை ஆரிய மொழியாக வரிசைப்படுத்துவதில் அவர்களுக்கு சிரமமிருக்கவில்லை.

அவர்கள் மொழி மரபு ரீதியாக எம்மிலிருந்து எவ்வளவு வேறுபட்டுள்ளது என்பதற்கு உதாரணங்கள் சிலவற்றைப் பார்ப்போம். எனக்கு தெரியும் என்று நாம் சொன்னால் அவர்கள் நான் தெரியும் என்பார்கள் (மம தன்ன வா) அவனைக் கூப்பிடு என்றால் அவர்கள் அவனுக்கு கூப்பிடு என்பார்கள் (ஏயாட்ட கத்தாகறன்ன). வேடிக்கை, நாம் மரத்தில் ஏறினான் என்றால் அவர்கள் மரத்திற்கு ஏறினான் என்பார்கள். (கஸ்சட்ட நங்கா)

விஜயனும் அவன் சகாக்கள் (700பேர்) அனைவரும் பாண்டிய நாட்டின் தமிழ்ப் பெண்களை மணந்தார்களாம். ஒட்டு மொத்தும் தமிழிச்சிகளின் வம்சாவழி வந்தவர்கள் பேசும் மொழி அதுவும் திருக்குறளை தன்கெத்தே வைத்திருக்கும் அளவிற்கு வளர்ச்சி அடைந்த காலத்தில் வாழ்ந்த தமிழிச்சிகளின் வம்சாவழி வந்தவர்கள் பேசும் மொழி சிங்களம் என்றால் இரு மொழிகளுக்கும் எவ்வளவு ஒற்றுமை இருக்கவேண்டும். அப்படி இருக்கின்றதா?. அதனால் இந்த அர்த்தமற்ற கதைக்கு இத்தோடு முற்றுப் புள்ளி வைப்போம்.

பூகோள ரீதியாக உள்ள நெருக்கத்தையும் பழமை கொண்ட தமிழ் இலக்கியங்களின் செல்வாக்கையும் ஒப்பிடும்போது சிங்கள மொழி தமிழில் இருந்து எடுத்த சொற்கள் இன்னும் கூடுதலாக இருந்திருக்க வேண்டும். அப்படி இல்லாது போனதற்கு காலம்காலமாக இரு இனங்களுக்குமிடையில் இருந்த போட்டி காரணமாகவோ தெரியவில்லை. இதைவிட தமிழில் இருந்து அவர்கள் எடுத்த சொற்கள் எவையென்று கண்டுகொள்வது கடினம். காரணம் அவர்கள் இரவல் வாங்கும்போது இருந்த அர்த்தம் இப்பாழுது மாறி இருக்கலாம். எடுத்துக் காட்டிற்கு சம்பளம் என்பதை பக்கத்தில் நின்றவர் அத(இன்று)படி என்றார். எனக்கு புரியவில்லை. வேறொருவர் சொல்லித்தான் எனக்கு சம்பளத்தை படி என்னும் தமிழ்ச் சொல்லால் அவர் சொன்னார் என்பது புரிந்தது.

சிறிய வைபவங்களுக்கு ஏற்ற 40 இருக்கைகள் கொண்ட வசதிகளுடன் கூடிய உணவகம்... குடும்பத்துடன் வந்து சுடச்சுட உணவுகளைச் சுவைத்து மகிழுங்கள்.....

Open Daily:
Monday-Thursday 12pm to 11.30pm
Friday to Sunday 12pm to 12am

Spend £25...Then, a 'Free Bottle of Wine'

Free Delivery*

Tel: 020 8695 8625
* Orders over £12 within 3 miles 6-10pm
1 Sandhurst Market, Sandhurst Road, Catford, London SE6 1DL

20% Discount on all cost of take away

BIRAVENAAS
South Indian & Sri Lankan Restaurant and Bar

அழகு நங்கையரின் கோல நடனங்கள்

கழண்டு விழும் கழிசான் பெடியளின் குத்தாட்டங்கள்

கண்டறியாத காமெடிக்கள்

கழுத்தறுக்கும் பட்டிமன்ற கொடுமைகள்

அலட்டல் அறிவிப்பாளரின் அளவில்லா அறுவைகள்

இப்படியான மேலும் பல அற்புத நிகழ்வுகள்...

எவையும் இடம்பெற மாட்டாது.

ஒரு பேப்பர்

வாசகர்கள் வழங்கும்

ஒரு விழா

வாசகர்களுக்கேயான திருவிழா

தமிழீழ விடுதலைப் போருக்கு தமிழ் சினிமாவே காரணம்.

யாழ் இணையத்தளத்தில் சாந்தி ரமேஸ்வவுனியன் அவசரப்பட்டு தனிப்பட்ட ஆத்திரத்தில் எழுதிய விடயத்தை ஒரு பேப்பரில் பிரசுரித்திருந்தீர்கள். கே.எஸ். துரையின் படத்திற்கு மட்டுமல்ல புலம் பெயர்ந்த தமிழன் எவன் தனிப்பட்ட முறையில் ஒரு படத்தை தயாரித்தாலும், அவனை ஈவு இரக்கமின்றி அழிக்கும் செயலை நம் மவர்கள் செய்கிறார்கள் என்பதற்கு சாந்தி ரமேஷ் வவுனியனின் கட்டுரை நல்ல உதாரணம். இலங்கைத் தமிழரின் படங்கள் வெற்றி பெறாமல் போவதற்கு தமிழக சினிமாவின் வளர்ச்சியல்ல சாந்தி ரமேஸ் வவுனியன் போன்றவர்களே காரணமென இக்கட்டுரைக்கு யாழ் இணையத்தில் பதில் எழுதப்பட்டிருந்ததையும் படித்து விட்டே இதை எழுதுகிறேன். படத்தைப் பார்க்காமலே படத்தை பகிஷ்கரிக்கும்படி பிரகடனம் செய்திருப்பது சரியான செயலா என்பதை நினைக்கும்போது நீங்கள் செய்திருப்பது எவ்வளவு அபத்தமான செயல் என்பதை உணர முடிகிறது.

1. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சிங்களவர் காரணமல்ல தமிழ் சினிமாவே காரணம் என்று கூறியிருக்கிறார் என்று சாந்தி ரமேஸ் வவுனியன் குற்றச் சாட்டு வைத்திருக்கிறார்.

இதில் என்ன தவறு இருக்கிறது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு காரணம் சிங்கவளவர் அல்ல சிங்களப் பேரினவாதமே என்பதை தலைவரே பலதடவைகள் தனது மாவீரர் உரையில் சுட்டிக்காட்டியிருக்கிறாரே துரையும் அதைத்தான் கூறியிருக்கிறார். அவருடைய உரையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சிங்களப் பேரின வாதம் காரணமல்ல என்று சொல்லப்பட்டிருந்தாலும் மட்டுமே தவறு இருந்திருக்கும்.

சிங்களவருக்கும், சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடு இருக்கிறது. அதைப்புரிந்து கண்டனத்தை நிதானமாக எழுதியிருக்க வேண்டும்.

2.தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ் சினிமாவே காரணம் என்பதில் என்ன தவறு இருக்கிறது. விடுதலைப் போராடடம் பண்டைத்தமிழ் வீரத்தின் இலக்கணங்களை கொண்டுள்ளது. அவைகள்தான் அச்சமென்பது மட மையடா அஞ்சாமை திராவிடர் உரிமையடா - என்ற சினிமா வரிகளாக மலர்ந்தன. வீரபாண்டிய கட்ட பொம்மனில் சிவாஜிகனேசன் பேசிய வசனங்கள் போராட்டத்திற்கு உந்து கோலாக அமைந்தன என்று தலைவரே கூறியிருக்கிறார். பாசமலரில் தங்கைக்காக வாழ்ந்த அண்ணன் போலத்தான் இன்று புலம் பெயர் நாடுகளில் தங்கைக்காகவே தியாக தீபங்களாக உழைக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார். இவைகள் எல்லாம் போராட்டத்தினதும், நமது வாழ்வினதும் சிறந்த பக்கங்கள். இத்தகைய சிறப்புக்கள் ஒருவாக பழைய தரமான தமிழ் சினிமாக்களே காரணமென் அவர் கூறியதில் தவறென்ன இருக்கப் போகிறது. நமது போராட்டத்தின் உயர்வுகளுக்கு சிங்களவர் காரணமல்ல என்று சொன்னதில் என்ன தவறு, போராட்டத்திற்கு சிங்களவர் காரணமல்ல தமிழ் சினிமாவே காரணம் என்றால் அதன் கருத்து போராட்டத்தின் சிறப்புக்களில் தமிழ் சினிமாவின் பாதிப்பு இருக்கிறது என்பதுதான்.

தாயகத்தில் இனவாதத்திற்கு எதிராக ஒரு போராட்டம் நடைபெறுவது உண்மை. அந்தப் போராடடத்தின் வடிவம் தியாகம், எண்ணம் இலைகளுக்கு சிங்களவரே காரணமென சொல்லியிருந்தால் அது தவறு.

மேலும் தமிழ் சினிமாத்துறை நமது போராட்டதிற்கு ஆதரவளிப்பதற்கு பாரிய கடமை உண்டு என்பதை வலியுறுத்தவே இதை அவர் குறிப்பிட்டுள்ளார். முழுமையான ஒளிநாடாவைப் பார்க்காமல் சாந்தி ரமேஸ் வவுனியன் அவசரமாக இதை எழுதியிருக்கிறார்.

மேலும் துரை சினிமாவில் பணத்தை கொட்டி நாசமாக்குகிறரார் என்று கண்ணீர் வடிக்கிறார். தனது பணத்தை எப்படி செலவழிப்பதென்பது தனிமனித உரிமை. அதற்குள் பிரவேசிப்பது தவறுதான். 300 பேர் இணைந்து தயாரித்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் முட்டாள்கள் அல்ல.

வீரபாண்டிய கட்டபொம்மனில் சிவாஜிகணேசன் பேசிய வசனங்கள் போராட்டத்திற்கு உந்து கோலாக அமைந்தன என்று தலைவரே கூறியிருக்கிறார்.

எழுதுவதற்கு முதலில் நிகழ்வின் முழுமையான ஒளிநாடாவையும் பார்த்திருக்க வேண்டும்?. அடுத்து திரைப்படத்தைப் பார்க்க வேண்டும். அதில் உள்ள பாடல்களை கேட் வேண்டும். பின் ஆரோக்கியமாக விமர்சனம் எழுதி சினிமாவை வளர்க்க வேண்டும். எதுவும் தெரியாமல் காழ்ப்புணர்ச்சியை கொட்டுதல் விமர்சனமல்ல.

சினிமாவைத் தயாரிப்பது அதற்கு நிதியை திரட்டுவது, தொழில் நுட்பரீதியான சவாலை எதிர் கொள்வது போன்ற பெரும் நெருக்கடிகள் எமக்கு உள்ளன. சினிமாவை தயாரிக்காமல், அதில் வரும் வலிகளை உணராமல் இப்படி உணர்ச்சி வசனம் பேசி விமர்சனம் எழுதுவதும், அதை வியாபாரமாக்குவதும் மோசமான செயல். துரை செய்வது தவறானது என்றால் நீங்கள் சினிமாவை தயாரித்து செயலில் காட்ட வேண்டியதுதானே? இந்தக் கட்டுரையை சாந்திரமேஸ் வவுனியன் தனிப்பட பழைய விரோதத்தில் எழுதியுள்ளதாக யாழ். இணையத்தளத்தில் ஒருவர் எழுதியிருந்ததை வாசித்தேன். அது சரியானது என்றே நானும் உணர்கிறேன்.

சாந்தி ரமேஸ் வவுனியன் கட்டுரையில் பாவிக்க வேண்டிய பத்திரிகை விதிமுறைகளை மீறய தனிமனித அவதூறுகளை எல்லாம் எழுதியிருக்கிறார். அதையும் ஒரு பேப்பர் அனுமதித்து பத்திரிகையின் தரத்தையே வீழ்த்தியிருக்கிறது. இதுபோல தவறுகளை இனிமேலாவது விட வேண்டாம், தனிமனித குரோதத்தில் எழுதப்படும் ஆக்கங்களை கட்டுரையை பிரசுரிக்க முன்னர் பத்தராதிபர்குழு சம்மந்தப்பட்டவரிடம் கருத்துக் கேட்கும் வழமை ஐரோப்பாவில் உண்டு. அதைக் கூட கடைப்பிடிக்காமல் பிரசுரித்துள்ளீர்கள். இது தவறான செயல். சட்ட நடவடிக்கைக்கு உள்ளாகும் தவறுகள். ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் பல கட்டுரையில் உள்ளன. திரைப்படத்திற்கு நட்ட ஈடு கோரி உங்கள் பத்திரிகை மிது வழக்குத் தொடரவும் வழியிருக்கிறது. ஆகவே இதுபோல அவசர ஆக்கங்களை வெளியிட வேண்டாமென தாழ்மையுடன் கேட்கிறேன்.

இப்படிக்கு

- பாவலர் வல்வைத் தேவன்.

கடவுள் நம்பிக்கை

சமீப காலமாக 'ஒரு பேப்பரில்' கடவுள் நம்பிக்கை பற்றியும் போலிச் சாமியார்கள் பற்றியும் வாசகர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள். கடவுள் நம்பிக்கையும் அவற்றுடன் தொடர்புடைய சடங்குகளும் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட நம்பிக்கையைப் பொறுத்துள்ளது. வாழ்க்கையின் அடித்தளமே நம்பிக்கைதான். நம்புகின்ற எல்லாவற்றையும் தர்க்கபூர்வமாக ஆராயவும் முடியாது. நிரூபிக்கவும் முடியாது. நாம் இன்னாரின் பிள்ளை என்பதில் எமக்கு நம்பிக்கை. அதை நிரூபி என்று யாராவது கேட்கிறார்களா? எனவே கடவுள் உண்டு என நம்புபவனும், கடவுள் இல்லை என்று நம்புபவனும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாதாடுகிறார்கள். எனது நம்பிக்கையே சரியானது உனது நம்பிக்கை பிழையானது என எவராவது வாதாடுவரானால் அது அவர்களின் அறியாமையை அல்லது மமதையையே வெளிப்படுத்துகிறது.

இனி விடயத்திற்கு வருவோம். கடவுள் உண்டா இல்லையா? மனிதர்களைக் கடவுளாகத் தொழுவது சரியா பிழையா? இதற்குப் பதிலை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கலாம் என நினைக்கிறேன். இது ஒரு உதாரணமே தவிர உண்மைக்கும் உதாரணப் படுத்தப்படும் பொருளுக்கும் பாரிய வித்தியாசம் உண்டு என்பதை மனதில் இருத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

நாம் எங்கிருந்து நீரெடுத்தாலும் நீருக்கு உருவம் இல்லை. நாம் எந்தப் பாத்திரத்தில் நீரைச் சேகரிகின்றோமோ அப் பாத்திரத்தின் உருவத்தையே நீர் எடுக்கிறது. வாளியில் சேகரிக்கப் படும் நீர் வாளியின் உருவத்தைப் பெறுகிறது. குடத்தில் சேகரிக்கப்படும் நீர் குடத்தின் உருவத்தைப் பெறுகிறது. ஆனால் வாளியில் இருப்பதும் குடத்தில் இருப்பதும் நீர்தான். வடிவம்தான் சேகரிக்கும் பாத்திரத்தைப் பொறுத்து வேறுபடுகிறது. தனக்குத் தேவைப் படும்போது வாளியில் நீரைச் சேகரித்தவன் வாளியிலிருந்து நீரை எடுத்து அருந்துகிறான். குடத்தில் சேகரித்தவன் குடத்தில் இருந்து எடுத்து அருந்துகின்றான். இந்த வாளியும் குடமும் நீரைச் சேகரிக்க உதவும் பாத்திரங்களே ஒழிய அவை நீரல்ல. தேவையான போது அப் பாத்திரங்களிலிருந்து நீரை எடுத்து அருந்துகின்றோம். இது போன்றதே கடவுள் நம்பிக்கையும், கடவுளை உருவகப் படுத்தும் அடையாளங்களும். இவையெல்லாம் பாத்திரங்களேயன்றிப் பரம்பொருள் அன்று. பரம்பொருளைப் பக்தன் இப்பாத்திரங்களின் வடிவில் காணுகிறான். இப்பாத்திரங்களையே பரம்பொருளாக எண்ணுவதுதான் தவறு.

தண்ணீரினால் நிறைக்கப் பட்டிருக்கும் குடத்தை தண்ணீர் என யாரும் நம்புவது இல்லை. சிவலிங்கத்தையோ, திருவுருவங்களையோ கடவுள் என யாரும் நினைப்பதில்லை. இறைவனின் சின்னமாகவோ அல்லது குறியாகவோ நினைத்து வணங்குகிறோம். அதேபோன்று சாய்பாபா ஊடாகவோ அல்லது மற்றைய குருமார் மூலமாகவோ பரம்பொருளைக் காண்பதில் தவறில்லை. ஆனால் அப்பாத்திரங்களையே பரம்பொருளாக நினைப்பதுதான் தவறு. ஏனெனில் மனிதப் பிறவி எடுத்தவர் எவரும் தெய்வமாக இருக்க முடியாது. ஞானிகளாகலாம் சித்தர்களாகலாம் மந்திரவாதிகளாகலாம், கடவுளாக முடியாது. மனிதப் பிறவிகளினூடாக தெய்வத்தைக் காண்பதில் தவறு இல்லை. உயிரற்ற கல்லினால் செய்த சிவலிங்கம் ஊடாக நாம் சிவபெருமானைப் பார்க்கவில்லையா? எனவே சாய்பாபாவைக் கும்பிடலாமா எனக் கேட்பது தவறு வலிங்கத்தைக் கும்பிடலாம், சிலுவையைக் கும்பிடலாம், சாய்பாபாவைக் கும்பிடுவது மாத்திரம் எப்படித் தவறாக முடியும்? ஒரு பக்தன் தன் இறைவனின் அருளைத் தேக்கி வைத்திருக்கும் பாத்திரம் சிவலிங்கமாக இருந்தாலென்ன சிலுவையாக இருந்தாலென்ன சீரடிபாவாவாகத்தான் இருந்தால் என்ன. ஒவ்வொருவரும் தமது நம்பிக்கையை தேக்கி வைத்திருக்கும் பாத்திரம் என்னவோ அதனூடாக அந்தப் பரம்பொருளை வணங்குவதில் என்ன தவறு? அத்துடன் கடவைள நம்புவன் சில நிகழ்சிகளை அப் பரம்பொருளின் செயல் என நம்புகிறான். கல்லினால் செய்த பிள்ளையார் பால் குடிக்கிறர் என நம்புவனும் சாய்பாபா படத்தில் விபூதி விழுகிறது என நம்புவனும் கடவுளை நம்புகிறான். கடவுளின் சக்தியால் அவை நடைபெறுகின்றன என நம்புகிறான். அது அவனது உரிமை. அதைத் தடுப்பதற்கும் கேலி செய்வதற்கும் மற்றையவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது.

கண்ணுக்குத் தெரியாத பரம்பொருளின் அருள், பக்தியினாலும் தியானத்தினாலும் மழைபோன்று பொழியும்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாத்திரத்தில் அதைத் தேக்கி அனுபவிக்கிறார்கள். எனவே சிவலிங்கத்திலேயும் கடவுளைக் காணலாம், சிலுவையிலும் கடவுளைக் காணலாம், சீரடிபாபாவிலும் கடவுளைக் காணலாம். பாத்திரங்கள் தான் வேறே தவிர பரம் பொருள் ஒன்றுதான்.

- அகஸ்தியன்

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாத்திர வகைகள், தமிழ், இந்தி சினிமா DVD, CD, VHS போன்றவற்றை பெறுவது மாத்திரமன்றி

கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் அழையுங்கள்.... 020 8905 7765

MARUTHI CASH & CARRY

15 - 17
Queensbury Station Parade
Queensbury
HA8 5NR

Tel: 020 8952 66 55
020 8381 3442
Fax: 020 8905 7546

A **website** is equally important as a phone number for your business!

Get one today just for

£99.99

- ▷ FREE hosting
- ▷ Unlimited e-mails
- ▷ FREE technical mainteanace
- ▷ Quality customer service

Call us on

020 7043 4316

சங்க காலக் கோயில்களும் தெய்வங்களும்

அங்கம் 09

பெருங்கற்காலக் கருவூலங்களில் வெண்கலத்தாலும் இரும்பினாலும் செய்யப்பட்ட திரிசூலங்கள் காணப் படுகின்றன.

தென்னிந்தியாவில் சிவன் லிங்க வடிவிலேயெ நெடுங்காலமாக மக்களால் வணங்கப்பட்டு வந்திருக் கிறார். தமிழகத்தின் ஆதி ஆலயங்கள் சிவ ஆலயங்களே. இவற்றில் சிவன் லிங்க வடிவிலேயே கல்லினால் அமைக்கப்பட்டு பூசை செய்யப்பட்டு பூசிக் கப்பட்டிருக்கிறார். சங்க இலக்கியங்களில் இடம் பெறும் நடுகற்கள் லிங்கவழிபாட்டோடு சம்பந்தப்பட்டதென்பது சில அறிஞர்களது கருத்தாகும். பல நூற்றாண்டுகளாக ஆரியர்களால் ஏளனம் செய்யப்பட்டு வந்த லிங்க வழி பாடு கிறிஸ்தாப்த காலத்தின் பின்னரே இந்து மத சின்ன மாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

'கந்து வழிபாடு'

மக்கள் அடிக்கடி கூடும் மன்றுகளில் நடப்பட்டிருந்த கற்தூண்கள் கந்துகள் என அழைக்கப்பட்டன. நடு கற்களைப் போலிருந்த இத் தூண்கள் அமைக் கப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை. இக்கந்து களைச் சுற்றிவர உள்ள நிலம் சுத்தமாக்கப்பட்டு, சாணியால் மெழுகப்பட்டு, இக்கந்துகளைச் சுற்றிவர பெண்கள் தீபங்கள் ஏற்றி வழிபடுவார்கள்.

பூசை..

மலர்களைக் கொண்டு தெய்வத்தை ஆராதிக்கும் முறையே பூசை. இந்துமத வழிபாட்டின் முக்கிய அம்ச மாக இருப்பது பூசை. ஒரு காலத்தில் பூசை என்ற சொல் வடமொழி பூஜா என்ற சொல்லிலிருந்து தமிழ் வப்பட்டது என்கிற கருத்து நிலவியிருந்தது.

ஆரியர்களின் தெய்வ வழிபாட்டில் யாகமே முக்கிய பங்கை வகித்ததே ஒழிய பூஜைக்கு இடமில்லை. அடுத்து ஆரியரது மொழிக்குடும்பமாகிய ஐரோப்பிய, ஈரானிய மொழிகளில் இச் காணப்படவில்லை. இச் சொல் கன்னடத்தில் 'பூச' என்றும் தெலுங்கில் 'பூசே' என்றும் வழங்கப்படுகிறது. தமிழிலுள்ள 'பூ'வுடன் 'செய்' என்ற விகுதி சேர்ந்தே பூசெய் - பூசை என வந்தது எனலாம். - (சிற்றம்பலம், சி.க. :1999)

திராவிட மக்களின் தெய்வ வழிபாட்டில் தெய்வங்களை நீராட்டுதல் ஒரு முக்கிய பண்பாகும். மலர்களையும் நீரையும் கொண்டு 'அபிஷேகம்' செய்வதும் கோயிலின் அருகே குளங்கள் அமைத்து தெய்வச் சிலைகளை நீரா ட்டுவதும் இற்றைவரை தொடருகிறது. அக்கால மக்கள் தமது தெய்வங்களை நேரடியாக இடையில் ஒரு பூசாரி இல்லாமல் தாமே பூசை செய்து வழிபட்டார்கள்.

'வெறியாடல் (பரவச ஆட்டம்)

சங்க இலக்கியங்களில் காணப்படும் வெறியாடல் மலையகத் தெய்வமான முருகனுக்கு குறவர்கள் கொண் டாடும் முருக பண்டிகையில் இடம் பெறும் ஆட் டமாகும். முருகு என்றால் அழகு, இளமை, தெய்வீகம் எனப் பொருள்படும். முருகன் கையில் ஏந்திய வேல் அவனது அசாத்திய வீரத்தின் அடையாளச் சின்னம்.

குறவர்களின் முருக வழிபாட்டைக் கையில் வேலுடன் கொண்டு நடத்தும் தலைமைப் பூசாரியும் 'வேலன் என்றே அழைக்கப்படுவார். இவர்களி?ன் வழிபாட்டில் கிடாஆடு பலிகொடுக்கப்பட்டு., தேனும் தினை மாவும், கள்ளும் நைவேத்தியப் படையல்களாக வழங்கப்படும். பக்தி ப் பரவசத்தினால் பக்தர்கள் கூடி ஆடும் ஆட்டம் வெறியாடல் என அழைக்கப்பட்டது. இந்த ஆட்டத்தில் ஆண் களும், பெண்களும் பங்கு கொண்டார்கள். இப் பண்டிகைகளில் இளம் பெண்கள் மட்டும் ஆடும் ஆட்டம் குரவையாடல் எனப்பட்டது.

சங்க காலத் தமிழர் தெய்வங்கள் ஆரியமயமாக்கப்பட்டமை'

தொல்காப்பியம் எழுதப்பட்ட காலம் கி.மு.நான்காம் நூற்றாண்டு என இன்றைய மொழியியலாளர்களால் கணிக்கப்படுகிறது. ஆரியர்களின் சமயச் சிந்தனை களோ, தெய்வங்களோ காணப்படாத அல்லது அருகிக் காணப்படும் நூல் இது.

தொல்காப்பியம் - பொருளதிகாரம் - அகத்திணையில் இடம்பெறும் கீழ் காணும் பாடல் அக்காலத்தில் வழக் கிலிருந்த நானிலத் தெய்வங்களைப் பற்றிக் கூறுகின்றது.

தமிழரும் அவர்கள் மதங்களும்

எழுதுபவர்: **கலாநிதி சிவ தியாகராஜா**

'மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'

இப்பாடலில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களின் தலைமைத் தெய்வங்களாக மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். விண்ணகத் தெய்வமான விண்ணு - முல்லை நிலத்தோரின் முதற் தெய்வமாக - கருமை நிறம் கொண்ட மாயோனாகப் கூறப்படுகிறார்.

புராதன திராவிடர்களின் தெய்வமான விண்ணு - திராவிடர்களிடமிருந்து ஆரியர்கள் எடுத்துக்கொண்ட தெய்வமே ஒழிய வேத மதத்திலிருந்து தமிழகத்திற்கு அறி முகப்படுத்தப்பட்ட தெய்வம் என்பது தமிழகப் பிரா மணர்கள் கூறிவைத்த தவறான கருத்தாகும்.

இரிக் வேத்தின் ஆரம்ப மண்டலங்களில் விஷ்ணுவின் நாமமே இடம் பெறவில்லை. இரிக் வேதப்பாடல்கள் புனைய ஆரம்பித்து ஏறக் குறைய 500 ஆண்டுகள் கழித்து எழுந்த ஏழாம் மண்டலத்திலேயே 'விஷ்ணு' முதல் தடவை யாகத் தலை காட்டுகிறார்.

பின்னர் எழுந்த புராணங்களும், இதிகாசங்களும் விஷ்ணுவைப் பெரிய அளவில் பிரபல்யமாக்கின. கிறிஸ்தாப்த காலத்தில் எழுந்த பகவத் கீதையில் விஷ்ணு சர்வலோகக் கடவுளாக - மற்றைய கடவுள்கள் எல்லாம் அவரது அவதாரமாகச் சித்தரிக்கப்படுகிறார். வட இந்தி யாவில் எழுச்சி பெற்ற விஷ்ணுவழிபாடு-வைஷ்ணவமதம் எனத் தனியாக ஒரு சமயம் உருவானதற்கே வழிய மைத்தது.

தமிழரின் பழம்பெருந் தெய்வமான குமரன், குறிஞ்சித் தெய்வமான சேயோன் எனக் கூறப்படுகிறான்?. இங்கே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது குறிஞ்சிக் குமரன் வேறு, ஆரியர்களினால் சிருஷ்டிக்கப்பட்ட ஸ்கந் தன் வேறு என்பதாகும்.

(தொடரும்)

நரிக்கதையும் நம்ம பிரபலங்களும்

நரி மற்றும் திராட்சைக் கதை நம்ம எல்லாருக்கும் தெரியும். இதையே நம்ம பிரபலங்கள் சொல்லி இருந்தால் எப்படி இருக்கும். சும்மா!! உங்க கற்பனைக் குதிரைய தட்டிவிடுங்க!!

உலகநாயகன் கமல்ஹாசன்:

இன்று உங்களுக்கு சரித்திரத்தின் மடியில் சாகா வரம் பெற்ற ஒரு கதையைக் கூறப்போகிறேன். இது ஒரு நரிக்கதையும் கூட. 10-ம் நூற்ற ாண்டு. உலகத்தில் இஸ்லாத்துடன் திராட்சையும் அதிகம் விளைந்த காலம். கானகத்தின் வழியே சென்ற ஒரு நரிக்கு அங்கு கனிதிருக்கும் திராட்சைகள் ரொம்பவும் பிடித்துப் போனது. பல கோப்பை ரசம் பருகிய மதம் அதன் மனதினுள் ஏற்பட்டது. பகுத்தறிவுப் பரிணாம வளர்ச்சியடையாத நரியின் செய்கைகளும், முயற்சிகளும் திராட்சையைப் பெற்றுத் தருவதாயில்லை. எட்டியும் திராட்சை கிடைக்காமல் போனது இயற்கையின் சூழ்ச்சியும் அல்ல, கடவுளைத் துதித்தும் கிடைக்காமல் போனது நரியின் வீழ்ச்சியும் அல்ல. இது வெறும் மனித பரிமாணத்தை எட்டாத நரியின் கையறு நிலை. வாழ்க பாரதம்!! (திருவிளையாடல் தருமி: பேசும்போது அழுத்தம் திருத்தமா பேசு! படம் எடுக்கும் போது கோட்டை விட்டுடு!!!)

சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த்:

இப்ப ஒரு குட்டிகதை சொல்ல போரேன். ஒரு ஊர்லெ ஒரு நரி இருந்துச்சாம். அது ரொம்ப பசியில காட்டுவழியா போறப்ப, திராட்சை பலங்கலெ பார்த்துச்சு. அதெ எப்படியாவது சாப்பிடனும்னு ரொம்ப ட்ரை பண்ணுச்சு. முடியல. எவ்வளவு ட்ரை பண்ணியும் முடியல. கடசியா முயற்சி பண்ணிச்சி அப்பவும் கிடக்கல. பிறகு திராட்சைன்னாலே வெறுத்துப் போச்சி. சுத்தமா பிடிக்கல. இத நான் ஏன் சொல்லுரென்னா, 'அதிகமா ஆசைபடுர நரியும், அதிகமான உயரத்தில இருக்கிற திராட்சையும் உருப்பட்டதா சரித்திரமே கிடையாது'. 'கிடைக்கிரது கிடைக்கம இருக்கா? கிடைக்காதது எப்பவும் கிடைக்காது'.

கலைஞர் மு.கருணாநிதி:

உடன்பிறப்புக்குக் கடிதம். உடன்பிறப்பே கேளாய்! உலகத்தின் துயர் துடைக்க 'உளியின் ஓசை' படைத்த எனது கரங்கள், இன்று 'நரியின் ஆசை' என்றொரு மகத்தான காவியம் எழுதிவிட்டது. இக்கதையில் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் விபீடண நரியொன்று கான கத்தில் திராட்சைகளைக் கண்டு களிப்புற்றது. களிப்பின் விளிம்பில் நின்ற கபட நரியின் கோரப்பற்களுக்கு கிட்டாத திராட்சை ஒரு சீதை. தமிழினிமை கொண்ட திராட்சையை எட்டி எடுக்க முயன்ற தோற்றுப்போன நரி ஒரு குடிகார இராமன்.

வெண்ணிறாடை மூர்த்தி:

ப்ப்ப்ர்ர்ர்! ப்பாப்பா! கதைய கேளு! காட்டுப் பக்கமா ஒரு கட்டுமஸ்தான நரி கமுக்கமா வந்துதான். அங்க கொலகொலயா தொங்குன திராட்சைய பார்த்து, நரியோட கால்கட்டைவிரல்ல இருந்து கபாலம் வரை கபால்னு வேர்த்துப்போச்சி. குபீர்னு கௌம்புன குஷியில குதூகலமான் நரி திராட்சைய லபக்குனு லாவனும்னு மனிஷா கணக்கா மடார்மடார்னு குதிச்சிதான். பல தடவை குதிச்சும் பழம் கிடைக்காத நரி, குப்புற விழுந்ததுல, பலான இடத்துல அடிபட்டு ப்பரபேன்னு கௌம்பிச்சாம்.

கேப்டன் விஜயகாந்த்:

ஏய்! நான் இப்ப சொல்லப்போற கதை, நாட்டுப்பற்றுள்ள ஒவ்வொரு தமிலனும் தெரிஞ்சிக்க வேண்டியது. ஒரு பாக்கிஸ்தான் நரி, காஸ்மீர்ல இருக்கிர திராட்சைக்கு ஆசைப்பட்டு திருட்டுதனமா வந்தது. எவ்வளவு எட்டியும் திராட்சை கிடைக்கம போக, இன்னைக்கு தீவிரவாதியா மாறிடிச்சி. (ஒரு வேளை உங்கள போல சுவத்துலயோ,மரத்துலயோ காலை வச்சி எட்டி இருந்தா நரிக்கு திராட்சை கிடைச்சி இருக்கும்னு நினைக்கிறேன்!!!) இப்படி இந்த வருசத்துல பார்ட கிராஸ் பண்ண நரிங்க 305, திருடப்பட்ட திராட்சைங்க 2077. இதுல தீவிரவாதியா மாறிப்போன நரிங்க 201. இத உடன டியா நிறுத்தனும்னா எமர்ஜன்சி கொண்டுவரனும். இந்த நிலமய மாத்த ஒவ்வொரு தமிலனும் முன்னுக்கு வரனும்.

மேஜர் சுந்தரராஜன்:

ஹா..ஹா...For past 25 years, கடந்த 25 வருஷமா இந்தக் கதைய யார்கிட்டயாவது சொல்லனும்னு துடிச்சிட்டு இருக்கேன். A Fox, ஒரு நரி காட்டுவழியா போறச்சே, grapes அதாவது திராட்சைய பார்த்துச்சாம். எவ்வளவு try பண்ணியும், sorry! அந்த திராட்சை நரியோட கைக்கு கிடைக்கல. இதுக்குக் காரணம், அந்த நரி ரொம்ப short...அதாவது ரொம்ப குட்டை.

- குட்டிபிசாசு

HERBA NATURELLE

வழமையான உணவே நோய் தருமா?

தலையிடியுடன் கூடிய வயிற்று நோ. ஒற்றைத் தலைவலி மலச்சிக்கல் வயிற்றுப் போக்கு வாயுறுதல் தோல் அழற்சி சொறிவு உடல் சோர்வு களைப்பு அசதி தும்மல் ஆஸ்த்மா நித்திரையின்மை மனவருத்தம் அங்கலாய்ப்பு கவனக்குறைவு தொடர்பான நிலைகள்....
ஐந் நோய்களுக்கும் உணவுக்கும் ஏதாவது தொடர்புண்டா?
Food Intolerance Test மூலம் கண்டு கொள்ளலாம்.

Tel: +44 (0) 20 8765 9015
Email: sales@herbanaturelle.com
Web: www.herbanaturelle.com

மருத்துவ ஆலோசனைகளுக்கு. மூலிகை மருத்துவர் அஞ்சலா ஜெகநாதன் - 020 8765 9015

HERBA NATURELLE
Natural Health Centre

NORBURY 1410, London Road, Norbury SW17 4BZ

CROYDON 351a Whitehorse Road Croydon CRO 2HS

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orumanam.com

மணமகள் தேவை

1. In the UK, since 2000 on holiday working visa, 28 years, 5' 9" tall, a graduate from the East London Uni., and well-employed, seeking a bride in Europe with permanent residence status. Ref: 1326

2. In Norway since 1996 on 'Leave to remain status', 42 years, 5' 7" tall, A/L educated, seeks a bride in EU or Canada with permanent residence status. Ref: 1325

3. . வவுனியாவில் அரச பணியாற்றும் 30 வயதுடைய 5' 7" உயரமுள்ள மணமகன், கனடாவில் அல்லது பிரித்தானியாவில் தகுந்த மணமகனைத் தேடுகிறார். Ref: 1324

4. பிரித்தானியக் குடியுரிமை உள்ள 31 வயதும் 5'7" உயரமும் உடைய A/L படித்த மணமகனுக்கு கனடாவில் ஸ்பொன்சர் செய்யக்கூடிய மணமகள் தேவை. Ref: 1323

5. பிரித்தானிய குடியுரிமையுடைய பட்டதாரி, 47 வயது 5' 8" உயரம் உள்ள தாரமிழந்த மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1322

6. UK qualified professional, on 5 year-work-visa, 30 years, 6' tall, looking for a suitable bride. Ref: 1321

7. British born professional, 32 years, 5' 4" tall, seeking a matching bride. Ref: 1320

8. லண்டனில் 14 ஆண்டுகளாக வசிக்கும் 41 வயது 5'10" உயரமுள்ள படித்த மணமகனுக்கு UK யில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகளை எதிர்பார்க்கின்றார். Ref: 1319

9. Living in the U.K on Permanent Resident status, diploma holder and in permanent employment, 34 years old, 5' 7" tall, seeking an educated bride living in India. Ref: 1318

10. லண்டனில் 10 ஆண்டுகளாக வசிக்கும் 5'7" உயரமுடையவரும் 29 வயதுடையவரும் தன் முயற்சியில் நன்நிலையில் வளர்ச்சிகண்ட படித்த மணமகனுக்குதகுந்த மணமகள் தேவை *Ref: 1317*

11. Canadian Citizen, over there since 1993, 32 years, 5' 8" tall, Software engineer seeking a matching Bride. *Ref: 1316*

12. In the UK since 2000 on student-visa, Graduate in Accountancy, 34 years , 5' 10" well employed, seeking a suitable bride with permanent resident status. *Ref: 1315*

13. British citizen, here since 1995, City Uni. Graduate and well employed, 28 years, 5' 5" tall, seeking a matching bride who could speak Tamil. *Ref: 1314*

14. இந்தியாவில் தொழில் புரியும் படித்த 28 வயது 5"7" உயரமுள்ள மணமகனுக்கு Europe Canada நாடுகளில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகளை தேடுகின்றார். *Ref: 1313*

15. Software Engineer, working in India, 30 years, 5' 7" inches tall seeking a suitable bride in Canada or EU countries with permananant residence status. Ref: 1312

16. Eelam Tamil, now a citizen of Singapore, computer engineer, 31 years, 5' 10" tall seeks a suitable educated bride. Ref: 1311

17. லண்டனில் வேலை செய்யும் அனுமதியுடன் 12 வருடங்களாக வசிக்கும் A/L படித்த 31 வயது 5' 5" உயரமுள்ள மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1310

18. லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும் இந்திய பட்டதாரி 32 வயது 5'10" உயரமுள்ள மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1309

19. Student in Australia, already a Colombo Uni. LLB Graduate, 34 years, 5' 10", a divorcee seeking a uni-educated, matching bride in Canada. Ref: 1308

20. Senior Manager, with Master's degree, a citizen of USA, 36 years, 5' 9" tall, seeking a matching professional bride in USA, or one willing to migrate to USA. Ref: 1307

21. In the UK since 1998, a graduate from London Uni., 35 years, 5' 6" tall, seeking a suitable bride with permanent residence state. Ref: 1306

22. Canadian citizen, in Canada since 1989, 34 years, 5' 7" tall, self-employed, looking for a suitable bride. Ref: 1305

23. UK citizen, in the UK since 1991, a graduate, 34 years, 5' 6" tall, a divorcee, seeking a suitable bride. REF: 1304

24. British citizen, 39 years, 5' 7" tall, working as an IT consultant., seeking a suitable bride. Ref: 1303

25. UK citizen, since 15 years of age in England, Accountant well employed , 36 years, 5' 8", seeking a matching bride, a Graduate. Ref: 1301

26. Living in Colombo, 35 years, 5' 6", educated and well employed, looking for a matching bride. Ref: 1199

27. In the UK since 2001 on student-visa, 34 years, 5' 6", doing Master, in Law, seeking a suitable bride from Sri Lanka or UK. Ref: 1198

28. UK citizen, graduate in computer engineering, 44 years, 5' 10 '', looking for a suitable bride from Sri Lanka or abroad. Ref: 1197

29. British citizen, 35 years, 5' 7", Financial Accountant, well employed, seeking a matching bride. Ref: 1196

30. French citizen, graduate in Accountancy from UK-Uni, presently working in England, 30 years,5' 7", seeking a matching bride. Ref: 1195

31. French citizen, a graduate in computer communication, employed in England, 33 years, 6' tall, seeking a matching bride. Ref: 1194

32. Top professional in England, studied in Jaffna, originally, 46 years, 5' 7", a divorcee seeking a suitable bride. Ref: 1193

33. In the USA on work permit for the last 10 years, 29 years, 5' 6", a double degree holder, looking for a matching bride willing to move to California. Ref: 1190

34. In the USA since 2000, Green Card holder, Graduate, 42 years, 5'4" looking for a matching bride. Ref: 1189

35. Surrey Uni. Electrical Engineer, 32 years, 5' 7", on student visa, looking for a professional groom with permanency. Ref:1188

36. தற்போது வதிவிட உரிமை பெற்று சொந்த கடை வைத்து இருக்கும் 33 வயது 5'6" மணமகன் தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref:1187

37. Business man in Colombo, 48 years, 5' 7", A/L qualified, looking for a bride in Sri Lanka or abroad. Ref: 1184

38. British citizen, 30 years, 5' 7", an electronic engineering, looking for a suitable bride in the U.K. Ref: 1183

39. கனடா பிரஜாவுரிமை, 28 வயது, 5'6", Engineer மணமகனுக்கு, தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1136

மணமகன் தேவை

40. Canadian citizen, a graduate from Uni. of Toronto, well employed, 26 years old, 5' 3" tall, seeking a matching bride. Ref:1668

41. பிரித்தானிய குடியுரிமையுடைய, யாழ் பல்கலைக் கழகத்தின் கணிதப் பட்டதாரியான 44 வயது, 5' 4" உயரமுள்ள விதவைப் பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref:1667

42. கொழும்பில் வேலை செய்யும் 29 வயதுடைய 5' 6" உயரமுள்ள படித்த மணப்பெண்ணுக்கு ஐரோப்பாவில் தகுந்த மணமகனை தேடுகிறார்கள் Ref:1666

43. In Canada since 1990, a canadian citizen, A Graduate, well employed, 28 years, 5' 1" tall seeking a suitable groom. Ref: 1665

44. A graduate, 28 years, 5' 4" tall, born in the U.K, seeking a matching groom. Ref: 1664

45. Sri Jayewardenepura Accountancy Graduate, 27 years, 5' 4" tall, well employed in Colombo, seeks a matching groom, abroad. Ref: 1663

46. இலங்கையில் வசிக்கும் A/L படித்த 23 வயது 5' 3 " உயரமுள்ள மணப்பெண்ணுக்கு, நிரந்தர வதிவுடமை உள்ள தகுந்த வரனைத் EU நாடுகளில் தேடுகின்றனர் Ref: 1662

47. யாழ்ப்பாணத்தில் படித்துக்கொண்டிருக்கும் 23 வயதும் 5' 1"உயரமும் கொண்ட மணப்பெண்ணுக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நிரந்தர வதிவிட உரிமை கொண்ட மணமகன் தேவை. *Ref: 1661*

48. Professional, in USA on 5 year student visa, 32 years, 5' 3" tall, seeking a matching professional groom in Canada or USA Ref: 1660

49. British citizen, MSc (Hon) from one of the top universities, 34 years, 5' 3" tall, seeks a professional groom from the UK. Ref: 1659

50. கொழும்பில் தொழில் புரியும் CIMA கணக்கியல் படித்த 29 வயது, 5' 3" உயரமுடைய மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. சாதி கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. Ref: 1658

51. Professional qualified bride working in Colombo, 27 years, 5' 3" tall, seeking a matching educated groom, a UK / USA citizen. *Ref: 1657*

52. In Canada since her 12 years, a Science Graduate and a teacher in a public school, 33 years, 5' 1" tall, seeks a matching groom. *Ref: 1656*

53. Educated and well employed in Colombo, and also a carnatic-music teacher, 32 years, 5' 1" tall, seeks a suitable vegetarian groom, preferably in Canada or Australia. *Ref: 1655*

54. 8 வருடங்களாக இந்தியாவில் வசிக்கும் பட்டதாரி 27 வயது 5'7", மணப்பெண்ணுக்கு தகுந்த வெளிநாட்டு வதிவிடவுரிமை உள்ள வரனை தேடுகின்றனர். Ref: 1654

55. Canadian citizen, in Canada since 1991, 30 years, 5' 6" tall, Maths Graduate, well employed seeking a matching groom. *Ref: 1653*

56. கனடா பிரஜையும் 37 வயது 5'6" தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 1652*

57. கனடா பிரஜையும் 32 வயது 5'7" விவாகரத்து செய்த படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். *Ref: 1651*

58. Canadian citizen, over there since 1996, Engineering Graduate, 29 years, 5' 6" tall, seeking a matching groom in Canada. Ref: 1650

59. பிரான்சில் தற்காலிக விசாவில் இருக்கும் A/L படித்த 35 வயது 5' 7 " உயரமுள்ள மணப்பெண்ணுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர்Ref: 1649

60. மன்னாரில் வசிக்கும் O/L படித்த 20 வயது 5' 3 " உயரமுள்ள மணப்பெண்ணுக்கு வெளிநாட்டில் வதிவிட உரிமையுள்ள வரனைத் தேடுகின்றனர். Ref: 1649

61. Working in Colombo, ICMA Final, 24 years, 5' 1", looking for a well educated, matching groom in Sri Lanka or abroad. Ref: 1647

62. Living in Singapore, planning to migrate to USA, Diploma in Business Admin., 29 years, 5' 4" seeks a Groom, abroad with residence permanency. Ref: 1646

63. கனடாவிற்குப் 10 வயதில் வந்த 24 வயது 5'3"உயரமுள்ள பொறியியலாளராகப் பணிபுரியும் மணப்பெண்ணுக்கு கனடா அமெரிக்காவில் படித்த தகுந்த மணமகனைத் தேடுகின்றனர் Ref: 1645

64. Singaporean UK Citizen, a medical professional, 38 years, 5' 6" tall, seeking a matching groom. Ref: 1644

65. Medical professional., 8 years in the UK, a citizen, 37 years, 5' 7" tall, a divorcee seeks a suitable groom. Ref: 1643

66. In USA on HI Work visa since 2000, 31 years, 5' 2" tall, a Master's degree holder seeking a matching groom in USA. Ref: 1642

67. Qualified accountant working in Colombo, 30 years, 5' 3" tall, is seeking a matching groom in EU or Canada with permanency. Ref: 1641

68. கொழும்பில் வசிக்கும் யாழ் பல் கலைக்கழக பட்டதாரி '32 வயது 5' 5" உயரமுள்ள மணப்பெண் வெளிநாட்டில் தகுந்த வரனைத் தேடுகின்றனர். Ref: 1640

69. UK இல் சிறுவயதில் இருந்து வசிக்கும் UK பட்டதாரி 23 வயது 5' 5" உயரமுள்ள மணப்பெண் தகுந்த வரனைத் தேடுகின்றார் Ref: 1639

70. Jaffna Uni graduate, on student visa in the UK doing Masters, 33 years 5' 2" tall, seeks an educated groom with permanent residency. Ref: 1638

71. இந்தியாவில் 11 வருடங்களாக வசிக்கும் பட்டதாரி 27 வயது 5' 6" உயரமுள்ள மணமகளுக்கு UK இல் வதிவிட உரிமையுள்ள தகுந்த வரனைத் தேடுகின்றனர் Ref: 1637

72. In Sweden on student-visa, doing PHD, 34 years, 5'5" tall, is seeking a matching professional groom. Ref: 1636

73. MBBS, Sri Lanka, working in Kandy hospital, 29 years, 5' 7", looking for a matching groom abroad. Ref: 1635

74. Netherlands citizen (there since 1991), Physiotherapist, 26 years, 5' 2", looking for suitable groom in Europe. Ref: 1632

75. British citizen, 23 years in UK, 37 years, 5' tall, a graduate, looking for an educated groom in UK. Ref: 1630

76. கொழும்பில் பட்டதாரி ஆசிரியராக வேலை செய்யும் 31 வயது 5'3", மணப்பெண்ணுக்கு தகுந்த வரனை தேடுகின்றனர்.. Ref: 1629

77. Canadian citizen, in Canada since 1999, 39 years, 5' 6", a professional and well employed, looking for a matching groom. Ref:1627

78. UK born, accountancy degree holder, 25 years, 5' 4" tall, well employed, seeking a matching groom, those with no permanency, will also be considered. Ref: 1626

79. Canadian citizen, graduate in computer science, 25 years, 5' 11/2' tall, looking for a professional groom in Canada. Ref: 1625

80. UK born, a civil servant, 26 years, 5' 2" tall, seeking a matching groom, educated up to graduate level. Ref: 1624

81. Presently in Chennai, +2 studied, 28 years, 5' 0", also music & dance teacher, looking for a suitable groom from Europe. Ref: 1621

82. கொழும்பில் வசிக்கும் A/L படித்து தற்போது கம்பியூட்டர் படிக்கும் 27 வயது 5' 5" உயரமுள்ள மணப்பெண் தகுந்த வரனைத் தேடுகிறார் Ref:1623

83. திருமணம் செய்து 3 மாதங்களில் கணவனை இழந்த 30 வயது 5'4" A/L படித்த யாழில் வாழும் பெண் தகுந்த வரனை Canada EU நாடுகளில் தேடுகின்றார். Ref: 1620

84. British citizen, 10 years in the U.K, a final medical student, 25 years, 5' 3" tall, seeking a matching professional groom. Ref: 1616

85. British citizen, 10 years in the U.K, LLB Graduate, doing further studies, 24 years, 5' 4" tall, seeking a matching professional groom. Ref: 1615

86. British citizen, 15 years in U.K., 29 years, 5' 4" AL qualified looking for a matching groom in England. Ref: 1610

87. Civil Engineer, grew up in Germany, presently working in the UK, 28 years, 5'4", looking for a suitable groom. Ref:1495

88. In the UK since 1985, A British citizen, 25 years, 5'2" a graduate and well employed looking for a suitable groom. Ref: 1479

கெடும் அழிந்து போன கனாக்காலம்

நேரடித் தாக்குதல்கள் நின்று போனதாக மாயத் தோற்றம் காட்டியபடி நிழல் யுத்தம் நடந்து கொண்டிருந்த அந்தக் காலகட்டம், போருக்கு இரையாகாமல் தப்பி, பனி தேசங்களுக்குப் புலம்பெயர்ந்து மீண்டும் தாய் மண்ணுக்குத் திரும்பி வந்தவர்களுக்கு இனியதொரு கனாக் காலமாகவே இருந்தது. கனவுகளின் ஆயுள் குறுகியது. துயரம் நிழலெனத் தொடரும் யதார்த்தமோ எதிர்மறையாக நெடியது.

நாங்கள் ஊருக்குத் திரும்பிப் போனபோது கடைகளிலும் வீடுகளிலும் வானொலிகள் இடையறாது விடுதலைப் பாடல்களை இசைத்துக் கொண்டிருந்தன. வெறிச்சிட்டிருந்த வீதிகளை மோட்டார் சைக்கிள்களும், துவிச்சக்கர வண்டிகளும், கார்களும், டொல்பின்களும் எங்கெங்கோவிருந்து வந்து நிறைத்தன. தேடுவாரற்றுக் கிடந்த காணிகளின் விலைகளோ உச்சாணிக் கொம்பில் ஏறியிருந்துகொண்டு 'இறங்குவேனாபார்' என்று ஒய்யாரம் காட்டவாரம்பித்தன. போரில் சிக்கிக் கிழிந்தவர்களுக்கு நிலங்களை எட்டாக் கனியாக்கிப் புண்ணியத்தைக் கட்டிக்கொண்ட டொலர்களும் பவுண்ஸ்களும் பிராங்க்குகளும் மாடிவீடுகளாக மாற்றம் கண்டன. காலில் மண்ணொட்டா கார் விட வசதியான முற்றம் வைத்த வீடுகள். 'பத்தைக்குள் குந்தினால் தான் பத்தியம்' என்று இறந்த காலத்தை எள்ளியபடி, புதிதாய் வந்து சேர்ந்த தொந்திகளுக்கியைவான நவீன கழிப்பறைகளைக் கட்டினோம். வீடு கட்டும் மேசன் மார்களோவெனில் கடவுளுக்கு அடுத்த படியாக கையில் பிடிக்கவொண்ணாமல் விலை வைத்துத் திரிந்தார்கள். அதுநாள் வரை முட்டாள்களாய் இருந்தவர்கள் சாந்தேப்பையும் கையுமாக மேசன்களாய் திடீர் பதவியுயர்வு பெற்றார்கள். செவ்வரத்தை தன் பெயரின் பொருளிழந்து மஞ்சளும் செம்மஞ்சளும் வெள்ளையுமாய் முற்றங்களில் ஆடிற்று.

அமளிதுமளிப்பட்ட கடைத்தெருக்களில் தோல் மினுமினுத்த- உதட்டுச்சாயம் பூசிய- ஜீன்ஸ் அணிந்த இளம்பெண்களும், அவர்களுக்குச் சற்றும் குறைவில்லாத அம்மாக்களும், கட்டைக் காற்சட்டையும் தலையில் ஏற்றிய குளிர்க்கண்ணாடியும் ஆங்கிலத்திலோ பிரெஞ்சிலோ டொச்சிலோ குழந்தைகளை அதட்டிய அப்பாக்களும் நிறைந்திருந்தார்கள். கடைத்தெருக்களில் தத்தம் பழைய தோழ தோழியரை அடையாளம் கண்டுபிடித்துப் பழங்கதை பேசவும் வாய்த்தது. நள்ளிரவாகியும் திறந்திருந்த உணவகங்களில் பிட்சாக்களும் சான்ட்விச்சுகளும் சிவாஸ் றீகலும் கூடக் கிடைத்தன. பூச்செடிகள் அடர்ந்த திறந்தவெளி உணவகங்களில் காற்றுக்கும் காசு வைத்தாற்போல் மயில்கள் (ஆயிரம் ரூபாய்த்தாள்) கணக்கற்றுப் பறந்தன.

அவ்வாண்டுகளின் திருவிழாக்களை பல நிறக் கடவுச் சீட்டுகளைக் வைத்திருந்த, தமிழைத் தவிர வேறொரு மொழியும் தெரிந்த தமிழர்கள் நிறைத்தார்கள். பறவைக் காவடிகளில் பளபளக்கும் முகங்களுடன் பக்தர்கள் தொங்கினார்கள் பெண் பார்க்க வந்தவர்களின் கண் கவர்ந்த தேவதைகள் வேரைப் பிரிந்து வேறு தேசங்கள் ஏகவென தலைநகருக்குப் போயினர்.

பின்புறக் கண்ணாடி வழியாக பாரிய பயணப்பொதிகள் தெரிய, 'டொல்பின்'கள் வடக்கு நோக்கி ஏ-9 வழியே பறந்து போயின. 'முறுகண்டிக் கச்சானுக்கு மட்டும் அப்படியென்ன சுவையும் மணமும்' என்று வியந்தோம். மாதிரி நகரமாகிவிட்ட கிளிநொச்சியைப் பெருமிதம் பொங்கப் பார்க்கும் போது, வழக்கமான நிலச்சுவான்தார் ஆசை துளிர்க்கிறது. - 'இஞ்சையும் ஒரு நாலு பரப்பிருந்தால் பின்னுக்கு நல்லம்'- ஆனையிறவில் ஒரு நிமிடம் இறங்கிநின்று 'அழிவார் போய்த்துலைஞ்சாங்கள்' என்று சொல்லி உப்பு வெளிக் காற்றை ஆனந்தமாய் உள்ளிழுத்தோம். ஏதேதோ ஞாபகங்களுடன் இறுகி நிலைத்த இரும்பு நினைவுப் பேழையாய் நின்றிருக்கும் கவசவாகனத்தின் பக்கலில் நின்று புகைப்படமும் எடுத்துக் கொண்டோம். திடீரென தரத்தையும் கட்டணத்தையும் உயர்த்திக் கொண்ட குளிரூட்டப்பட்ட விடுதிகளில் தங்கி யாழ்.நூலகம் இன்னபிறவற்றில் உலவினோம்.

நான் பேச நினைப்பதெல்லாம்

நினைப்பவர் தமிழ்நதி (கனடா)

சாறமும் சேட்டுமாய் சைக்கிளில் உந்தித் திரிந்த காலங்களில் வடலிக்குள் சேர்ந்து கள்ளடித்த ஞாபகத்தில் நண்பரைப் பார்த்துப் புன்னகைக்கிறீர்கள். மெலிந்த- பல்விழுந்த- மூன்று அல்லது நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையாகித் தளர்ந்த அவர், கோழிக்கறி வைக்கும்படி மனைவியைப் பணித்துவிட்டு நெத்தலி பயில்வானாய் இருந்தாய் 'இப்ப இப்பிடி வண்டி வைச்சிட்டுது' என்று கூறியபடி உங்களுடன் வருகிறார். கள்ளடித்துவிட்டு ஆளற்ற வைரவர் கோயிலின் திண்ணையில் இருவரும் படுத்திருக்கிறீர்கள்.

அரசிலைகள் வயல் காற்றில் துடிக்கின்றன. போதை பழைய ஞாபகங்களைக் கிளர்த்துகிறது. நெஞ்சுக்குள் பாடலொன்று பெருகிப் பெருகி வழிகிறது. மனசின் ஆழத்திலிருந்த இழந்த காதல் புசுக்கென்று மேலெழுகிறது. உங்களுக்கு அழவேண்டும் போலிருக்கிறது. அழுகிறீர்கள்.

இப்போது ஆசுவாசமாக அழுவதற்கு நமக்கு நேரமில்லை. அலாரம் தலையிலடித்து எழுப்புகிறது. பணி தின்று துப்பிய நாளொன்றின் முடிவில் இணையத் தளங்களில் உலவுகிறோம். ஊர் குறித்த செய்திகளை வாசிக்கும்போது தேவதைகளும் கைவிட்ட காலத்தில் வாழ்வதாகவே உணர்கிறோம்.

மழைக்காலம் பகைவனுடன் நெருங்குகிறது. பெயர்ந்து பெயர்ந்து இனிப் பெயரும் இடமறியாது விக்கித்து திக்கற்று நிற்கும் அவர்களைத் தொலைவின் விழிகளால் வெறிக்கிறோம். மரத்தடிகளையும் கூட பிடுங்கிக் கொண்டு விரட்டுகிறது போர். பசியாலும் மரணத்தின் பயத்தாலும் உள்ளொடுங்கிய அந்தக் கண்களை மற்றுமோர் சமாதான காலத்தில் போய்ச் சந்திக்க எம்மில் எத்தனை பேருக்குத் திராணியும் தகுதியும் இருக்கிறது.

(http://tamilnathy.blogspot.com)

டீக்கடை இம்சைகள்

(இடம்: டீக்கடை இம்சைகள்: வெண்ணிறாடை மூர்த்தி, வினுசக்ரவர்த்தி, விஜயகாந்த்)

வெண்ணிறாடை மூர்த்தி: ப்ர்ர்ர்! குஜால இருந்த ஜம்மு-காஷ்மீரில் அமர்நாத் ஐஸ் கோயில் பிரச்சனை. அதோட தீர்வுக்காக நம்ம கலைஞர் கபாலத்தில் இருந்து கலக்கலா ஒரு ஐடியாவ தட்டி விட்டாராமே?

வினுசக்ரவர்த்தி: என்னத்த எழவு சொல்லி இருப்பாரு! 'சிவன் ஒரு கஞ்சாகுடி' ஆனால் அவர் எனக்கு எதிரியுமல்ல'னு சொல்லி மத்தவன் தலையையும் அவரோட தலை மாதிரி ஆக பிச்சிக்க வைப்பாரு!!

வெ.மூ: ஒலிம்பிக் போட்டியில அஞ்சு பாப்பா, அபாரமா ஆடும்னு பார்த்தா. இப்படி மண் தாண்டுரேனு தொபுக்கட்டீர்னு உழுந்து மண்ணை கவ்விடுச்சே!

வி.ச: அடி செருப்பால! அது என்னய்யா அஞ்சு மேல மட்டும் அப்படி ஒரு அக்கரை. ஒருத்தனைத் தவிர போன இந்தியன் எல்லாரும்தான் மெடலும் வாங்கம கொடலு தள்ள வரப் போறானுவ! பிறகு என்னதுக்கு அந்த கருமம்!

வெ.மூ: சரி அது இருக்கட்டும்! உலகநாயகன் உருவாக்கும் மர்மயோகி படத்தில நடிக்க நக்கல் நாயகன் சத்யராஜை கூப்பிட்டாங்களாமே! நெசமாவா?

வி.ச: என்னது உலகநாயகனா? அறுவாளை எடுத்தேன் கொலை விழுகும். முதல்ல தமிழ்நாட்டுக்கு படம் எடுக்கட்டும் அப்புறம் உலகம் அண்டம் பத்தி பேசலாம். வாழும் பெரியாரை கூப்பிட்டு நெப்போலியன் வந்தது போல இரண்டு சீன் நடிக்க சொன்னா எப்படி நடிப்பாரு! நமீதா கூட குத்தாட்டம் போடும்படி ஒரு சீன் வச்சா சரினு சொல்லுவாரு!!

உனக்கும் எதாவது தமிழ் வாத்தியாரு ரோல் இருக்கானு கேட்டியா? அப்படியே எனக்கும் 'எழவு' 'நாசமா போவ' அப்படினு சொல்லுற மாதிரி ஒரு ரோல் கிடைக்குமானு பாரு!

வெ.மூ: இப்படி குபீர்னு கோபம்பட்டா, கொடக்கு இருக்குற என்னோட வேட்டி லொடக்குனு கழண்டுக்கும். கத்தாதிங்க! அமைதியா அடுத்த சேதிய கேளுங்க!

(விஜயகாந்த் டீக்கடைக்கு வேகமா வந்துட்டு இருக்கார்)

வெ.மூ: என்ன புரச்சி கலஞரே! டீசர்ட்டுல வரீங்க!

வி.கா: நான் வெள்ளையும் ஜொள்ளையுமா வந்தேனா... சட்ட சபை போறேனு அர்த்தம். காக்கிசட்டையில வந்தேனா... படத்துல நடிக்க போறேனு அர்த்தம். டீசர்ட்டுல வந்தேனா... டீ சாப்பிட போறேனு அர்த்தம்.

வி.ச: என்ன எழவுயா இது! ஒரு கேள்வி கேட்டதுக்கு மூணு பதில் வருது! இவரு எப்பவுமே இப்படித்தான் பேசுவாரா?

வெ.மூ: படத்துல படப்படனு Dialogue பகிரங்கமா பப்பரபேனு பேசி இப்படி ஆகிட்டாரு! இவருக்கு Accroto Dialogomania-னு ஒரு வியாதி. அது இருந்தா இப்படித்தான். கண்டமேனிக்கு உளருவாங்க!

வி.கா: தமிழனுக்கு ஒரு டீ போடுப்பா! ஆங்ங்ங்!! (வெ.மூ-வைப் பார்த்து) நியுஸ்பேப்பர்ல பாக்கிஸ்தான் தீவிரவாதிகளைப் பத்தி ஏதாவது போட்டு இருக்கா?

வி.ச: என்னைய்யா? வந்ததும் வராதுமா தீவிரவாதிய பத்தி கேக்குராரு!

வெ.மூ: தீவிரவாதிகளைப் பத்தி திவ்யமா ஒன்னும் இல்லையே!

வி.கா: என்னது ஒன்னும் இல்லையா? இந்தியாவில மொத்தம் 2500 தீவிரவாதிங்க இருக்காங்க. மணிரத்னம் படத்தில் வர தீவிரவாதிங்க 1008. அர்ஜுன் படத்துல வரவங்க 90. என்னோட படத்தில் வரவங்க 1402. திருந்துர தீவிரவாதிங்க 2000. திருந்தாம சாவரங்க 500. Climax-ல item song பார்க்கிற தீவிரவாதிங்க 2300. பார்க்கதவங்க 200. நான் ஆச்சிக்கு வந்தேனா, தீவிரவாதிகள முமைத்கான் டான்ஸ் பார்த்துக் கொண்டிருக்கும்போது கண்டிப்பா பிடிச்சிக் காட்டுவேன்.

இப்படித்தான் 1942-ல காமராஜர் கால்ல முள்ளு குத்தினது. அதுக்கு காரணம் இந்தக் கருணாநிதி. 1980-ல் மவுண்ட் ரோட்டில் ஒரு நாய் கொலைச்சது. அதுக்கு காரணம், ஜெயலலிதா. ஆனா நான் ஆச்சிக்கு வந்தேனா எம்ஜிஆர் ஆச்சிய கொடுப்பேன்.

வெ.மூ: (வினுசக்ரவர்த்தியைப் பார்த்து) இதுக்குமேல இங்க நாம இருந்தா கபாலம் வெடிச்சி கட்டெரும்பு வெளிய வந்துடும். வா! கபால்னு கழண்டுக்குவோம்.

(இரண்டு பேரும் துண்டைக் காணோம், துணியை காணோம்னு எஸ்கேப்ப்ப்ப்...!! ஆனா இன்னும் நம்ம கேப்டன் நிறுத்தினபாடில்ல)

- குட்டிபிசாசு

Merton's **Week of Peace**

15-21 September 2008

Mertonல் சமாதான வாரம். பரந்துபட்ட, சமத்துவ, சமூக ஒற்றுமை எல்லாச் சமூகத்தினருக்காகவும் கொண்டாடப்படுகின்றது. சமாதானம் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்த ஒரு அரிய சந்தர்ப்பம்.

Merton Interfaith Forum | Week of Peace | merton partnership | merton

அறுவைப் பக்கம்

குசேலன் - ஒரு முன் நவீனத்துவ காவியம்!



பீவாசு, பெரும்பாலும் கமர்சியல் டைரடக்கராக அறியப்பட்டிருப்பதால், இந்த படத்தில் எங்கெனும் பரவியிருக்கும் முன் நவீனத்துவ கோட்பாடுகள் பலருக்கு புரிவதில்லை. மு.ன. என்பது பி.னா. வுக்கு முந்தியது. அதாவது பி.னா.வின் காலகட்டம் ஒரு காலகட்டத்தில் வரக்கூடும் என்பதை பி.னா. வின் காலகட்டத்திற்கு பல நூற்றாண்டு முந்திய காலகட்டத்தில் அறைகூவிய நிலை தான் மு.னா. என்பது சிலேவின் முன் நவீனத்துவ, இடை நவீனத்துவ, நவீனத்துவ, மற்றும் பின் நவீனத்துவ தந்தையான Adinga Gommala வின் அறுதியான வாதம்.

இந்த முன் நவீனத்துவமானது படம் ஆரம்பிக்கும் முன்னரே துவங்கிவிடுகிறது. இந்த படக்கதை மலையாளத்தில் முன்னரே வெளிவந்தது. கதானாயகன் முடிவெட்டி. முன் நவீனத்துவத்துவமும், முடிவெட்டுவதும் ஒன்றே என்பது (இரண்டும் 'மு' வில் ஆரம்பிப்பதை கவனியுங்கள்) படத்தை உற்று கவனிக்கும் எவருக்கும் புரியும்.

படத்தின் மிக முக்கிய கதாபாத்திரம் முகம் பார்க்கும் கண்ணாடி. கண்ணாடியை முன்னாடி பிடித்தால் தான் முகம் தெரியும். பின்னால் பிடித்தால் குண்டி தான் தெரியும். ஆனால் நீங்கள் அதை பார்க்க முடியாது. உங்களை பின்னாடி இருந்து பார்ப்பவர்களுக்கு கண்ணாடி இல்லாமலேயே உங்கள் பின்புறம் தெரியும். அவர்களுக்கு கண்ணாடி தேவையில்லை. ஆக, பின் நவீனத்துவமா, முன் நவீனத்துவமா என்று வாதிக்கும் முட்டாள்களுக்கு முன் நவீனத்துவமே என்று உணர வைப்பது பீவாசுவின் திறமை.

மற்றொரு முக்கிய பாத்திரமான மீனா, அறிமுக காட்சியில் சட்டியை போட்டு உடைக்கிறார். இதில் கவனிக்க வேண்டியது அவர் சட்டியை முன்பக்கமாக போட்டு உடைக்கிறார். பின்பக்கமாக போட்டு உடைக்கவில்லை. இடையிலும் வைத்து உடைக்கவில்லை. இது பி.னா. மற்றும் இ.னா வாதிகளுக்கு பீவாசு தரும் சவுக்கடி.

கதாபாத்திரங்களின் பெயரிலும் கூட, டைரடக்கர் தனது முன் நவீனத்துவ முத்திரையை பதிக்க தவறவில்லை. பால கிருஷ்ணன் என்ற பாத்திரம் படம் நெடுக துன்பத்திலும் துயரத்திலும் வாடுகிறது. பிள்ளைகள் கூட பேச மறுக்கிறார்கள். ஆனால், அசோக் குமார் என்ற பாத்திரம் செல்வம், செல்வாக்கு மிக்கதாக வருகிறது. இதை கவனிக்க வேண்டும். பால் எங்கிருந்து வருகிறது?? மாட்டின் பின்புறமிருந்து வருகிறது. ஆனால், 'அ' என்பது தமிழின் முதல் எழுத்து. எல்லாவற்றுக்கும் முன்னால் வரும் எழுத்து.

படத்தில் முதலாளியாக வரும் லிவிங்ஸ்டன் பின்புறத்தை அழுத்தமாக முடிவெட்டும் நாற்காலியில் வைக்க, நாற்காலி உடைந்து விடுகிறது. இது படத்தின் முக்கியமான காட்சி. பின் நவீனத்துவ பின்புறங்களால் பெரும் சேதமே என்பது குறிப்பால் உணரப்படுகிறது. இந்த காட்சி முதலாளித்துவ எதிர்ப்பு கம்யூனிசமும் பேசுகிறது!

ஆனால், அதே நாற்காலியை பால கிருஷ்ணன் மீண்டும் தேடி கண்டுபிடித்து கொண்டு வருகிறான். பின் நவீனத்துவத்தால் சேதமுற்றாலும், முன் நவீனத்துவம் மீண்டும் உயிர் பெறும் என்ற டைரடக்கரின் உள்ளக்கிடக்கை உள்ளங்கை நெல்லிக்கனி!

முதலாளியாக வரும் லிவிங்ஸ்டன் ஒரு காட்சியில் 'இங்க பாரு ஒம்பதாவது அதிசயம்' என்று தனது முன்புற வேட்டியை தூக்கி காண்பிக்கிறார். ஒன்பதாவது போன்ற அதிசயங்கள் முன் நவீனத்துவம் மட்டுமே காட்ட முடியும் என பின் நவீனத்துவ பிற்போக்குவாதிகளை புறம்காட்ட செய்யும் இடம் இது.

படத்தின் கிளைமாக்ஸ் முன் நவீனத்துவத்தின் உச்ச கட்டம். அசோக் குமாராக வரும் ரஜினிகாந்த் (அதாவது முன் நவீனத்துவம்) பால கிருஷ்ணனின் வீட்டுக்கு வருகிறார். இதில் கவனிக்க வேண்டியது, அந்த பாத்திரம் எந்த வழியாக வருகிறது என்பது. ஆம், அவர் வருவது வீட்டின் முன்புற வழி. மேலும் அந்த பாத்திரம் சொல்வது 'நான் முன்னாடி போய் ஒனக்கு ஏற்பாடு செய்றென்'. பின் நவீனத்துவ பதர்களுக்கு, முன் நவீனத்துவமே இன்றும், என்றும் வழிகாட்ட வேண்டும் என்று பீவாசு படத்தை முடிக்கிறார்.

இப்படி ஒரு முன் நவீனத்துவ காவியத்தை படைத்த பீவாசு சென்ற காலகட்டத்திய, காலம் சென்ற முன் நவீனத்துவ முன்னோடிகளான சிலேவின் Adinga Gommala, பெருவின் Masura-illa Usura, உப்ரான்ஸின் Dhaadi vachcha Thorge, சைனாவின் Oru Mayirum Meengo ஆகியோர் வரிசையில் இடம் பிடித்துவிட்டார், இது போல் ஒரு படம் இனி அவர் தனது வாழ்னாளில் செய்ய முடியாது, அவர் மட்டுமல்ல இனி எவராலும் செய்ய முடியாது என்பது உறுதி!!!

- அது சரி (முரண்தொடையில்)

மணிரத்னம் - மென்பொருள் நிபுணரானால்!!!

- கணிணித் திரையை கொஞ்சம் வெளிச்சமா வெச்சிக்கோங்க.. கண்ணு 'டொக்'காயிடப் போகுது.
- எதுக்கு அருமையான மென்பொருள் பண்ணிட்டு, லொகின் திரையிலே 'இந்த மென்பொருளில் வரும் அனைத்து திரையும் கற்பனையே' அப்படின்னு போட்டிருக்கீங்க?
- 100 வரிகள்லே எழுத வேண்டிய கோடிங்கை, எதுக்கு சின்ன சின்னதா எழுதி 1000 வரி வரைக்கும் இழுத்திருக்கீங்க?
- எதுக்கு அடிக்கடி கூகில்லே 'பழைய அமெரிக்க மென்பொருள்' அல்லது 'பழைய உலக மென்பொருள்' அப்படின்னு தேடிக்கிட்டிருக்கீங்க?
- உங்க மென்பொருள் வேலையே செய்யாமே சுத்தமா படுத்துடுச்சுன்னா, உக்காந்து அந்த பிரச்சினையை தீர்க்கப் பாருங்க. அதை விட்டுட்டு கணிணி பக்கத்துலே போய் 'ஏந்திரு (எழுந்திரு) மென்பொருள் ஏந்திரு'ன்னா, பிரச்சினை எப்படி சால்வாகும்?
- நீங்க எதுக்கு அந்த மீட்டிங்குக்கும் போனீங்க? கிளையண்ட் நீங்க மேனேஜரா, இல்லையான்னதுக்கு 'தெரியலியேப்பா'ன்னு வேறே சொல்லியிருக்கீங்க...
- உங்க மென்பொருளோட பயன்பாட்டைப் பாத்துதான் எல்லோரும் எழுந்து நின்னு கைதட்டணும். நடு நடுவே தேசிய கீதத்தைப் ஒலிபரப்பி எல்லோரையும் எழுப்பி நிக்க வெக்காதீங்க..
- மீட்டிங்லேயும் சரி.. உங்க அறையிலேயும் சரி... எப்பவும் விளக்கை அணைச்சியே வெச்சிருக்கீங்க. போற வர்றவங்கல்லாம் அடிக்கடி எதிலேயாவது இடிச்சிக்கறாங்க... எதுக்கு இப்படி இருக்கீங்க?
- நீங்க செய்யற எந்த மென்பொருள பாத்தாலும் - அதை முன்னாடியே வேறே எங்கேயோ பாத்தா மாதிரியே இருக்கே? ஏன் அப்படி?

- ச்சின்னப் பையன்

உங்க மெகா சீரியலைப் பார்த்ததும் எனக்குள்ளே எத்தனையோ கேள்விகள்..

அத்தனை விழிப்புணர்ச்சி தருதா.. நன்றிங்க..

அட அதில்லீங்க.. இதையெல்லாம் பாத்துக்கிட்டு நாம உயிரோட இருக்கணுமான்னு..!

ஏன் அந்தக் கைதி எனக்கு இந்த தண்டனை வேண்டாம்.. அதுக்கு தூக்குல போட்டுறுங்கன்னு கதறுகிறான்..?

கோலம் சீரியல் முடிபற வரைக்கும் சிறைன்னு நீதிபதி சொல்லிட்டாராம்..

எக்.. க்... இக்.. செல்லம்மா சீக்கிரம் தண்ணி கொண்டா..

கொஞ்சம் இருங்க.. விளம்பர இடைவேளை வரட்டும்..!

மானாட... மயிலாட...

டிவியில் எந்த சானலைத் திருப்பினாலும் போட்டி போட்டு பாடறாங்க அல்லது பேசுறாங்க அல்லது காமெடிங்கிற பேர்ல அறுக்கறாங்க அல்லது ஆடுறாங்க.. இதை தவிர வேறு நிகழ்ச்சிகள் எந்த டிவியிலாவது ஏதாவது வருகிறதா (சினிமாவையும் சீரியல்களையும் தவிர்த்து) என மன தைரியம் உள்ளவர்கள் பார்த்துவிட்டு சொல்லலாம். இவுங்க போட்டி போடுறது அவுங்களுக்குள்ள ஜெயிக்கிறதுக்காக என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. மக்களை டிவி பார்க்கும் கெட்ட பழக்கத்திலிருந்து மீட்க அரசும், தனியார் டிவிக்களும் திட்டமிட்டு ரகசியமாக கூட்டு சேர்ந்து போடும் போட்டியே அது. அதில் ஓரளவு அவர்கள் வெற்றிபெற்றுவிடுவார்கள் என்றுதான் தோன்றுகிறது.

மேற்குறிப்பிட்ட அனைத்து நிகழ்ச்சிகளிலேயும் தவறாமல் மூன்று மூன்று நடுவர்கள் (அவர்களை 'ஹானரபிள் ஜட்ஜ்' என்றுதான் அனைவரும் அழைக்கிறார்கள். ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட் ஜட்ஜகளுக்கெல்லாம் கிடைக்கும் மரியாதை என்ன மரியாதை அதையெல்லாம் தூசு என்று சொல்லுமளவில் இவர்களின் தேஜஸும், அதிகாரமும் நிகழ்ச்சிகளில் தூள் பறக்கிறது. ஒரு டிஸ்ட்ரிக்ட் கோர்ட் ஜட்ஜ் ஒருவர் நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு, நாமெல்லாம் என்னத்தை படித்துக் கிழித்தோம் என்று புலம்பியபடி வேலையை ரிஸைன் செய்துவிடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறாராம்.) இருப்பார்கள். நாம் குறிப்பாக இந்த ஆடுற நிகழ்ச்சியைப் பற்றி பார்க்கலாம். பங்கு பெறும் ஜோடிகள் (கன்டெஸ்டெண்ட்) ஆடி முடித்தவுடன் ஜட்ஜ்களின் முடிவை எதிர்நோக்கி பாவமாக நிற்பார்கள். அவர்கள் ஆடியது இவர்களுக்கு பிடித்திருந்ததோ அவர்கள் பிழைத்தார்கள்..! நீங்கள் இதுவரை கேள்விப்பட்டிராத வார்த்தைகளிலெல்லாம் பாராட்டு மழையாக பொழிவார்கள்.

கிழிகிழினு கிழிச்சுட்டீங்க, பின்னிட்டீங்க, சூப்பரிட்டீங்க, வறுத்திட்டீங்க, மார்வலஸ், அவுட்ஸ்டான்டிங், மைன்ட்புளோயிங், ஸ்டேஜ்புளோயிங், ரூ.:ப்புளோயிங், பையரிங், ராக்கிங்..

என்ட்ரில உள்ள வரும்போது உங்க சுண்டு விரல்ல கொசு கடிச்சுது, அதப் பாத்துட்டேன் நான். ஆனாலும் அதைப் பொறுத்துக்கிட்டு ஆடினீங்க.. எக்ஸெலண்ட்.! குரங்கு மாதிரி தவ்வும் போது உன்னோட எக்ஸ்பிரெஷன் கலக்கல்டா, அந்தக் கும்மாங்குத்து ஸ்டெப்ஸ் போடும் போது அவ கால மிதிச்சப் பாத்தியா.. சூப்பர்டா.. என்னம்மா உனக்கு வலிச்சிருக்குமே.. அதையும் பொறுத்துக்கிட்டு நீ அவனுக்கு ஈடு குடுத்து தவக்கா மாதிரி துள்ளி துள்ளி ஆடுனே பாத்தியா.. கிழிச்சிட்டீங்க..ரெண்டு பேரும். என்னா மாதிரி கொரியோகிரா.:பி பின்னீட்டிங்கடா.!

ஆட்டம் பிடிக்கவில்லையோ, அவ்வோதான்..

என்ன ஆச்சு.. ஸோ பேட்.! உங்ககிட்ட நிறைய திறமை இருக்குது, அதை நீங்க பயன்படுத்தவே இல்லை. அன்னிக்கு ப்ளூ கலர் ட்ரஸ்ல குடுத்தீங்களே ஒரு பெர்.:பாமென்ஸ், அதெல்லாம் ஒரு ஆர்டினரி டான்ஸர்ஸ் குடுக்கிற பெர்.:பாமென்ஸே இல்லை, அப்பிடி ஆடுன நீங்களா இன்னிக்கு..

ரெண்டாவது சாங்ல மூணாவது வரியில வாய அசைக்கவேயில்ல..ட்ரெஸ் யாரு செலக்ஷன்ம் ஊதா டாப்ஸூல பச்சைக்கோடு, ஒரே கலர் டிஸ்டர்பன்ஸ்.. செட் பிராப்பர்டிய யூஸ் பண்ணவேயில்லை. கடைசி பாட்டுக்கு அங்க ஒரு பாறாங்கல் இருந்துது பாத்தியா அதை அவ தலமேல நீ போட்டுருக்கணும். கிளாஸா இருந்துருக்கும். (இப்படி ஒருவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இன்னொரு ஜட்ஜ் 'ஏழாவது வரியை பாடும் போது கொட்டாவி வந்தது, ஆனா அடக்கிக்கிட்டாரு' என்று எடுத்துக்கொடுப்பார்.)

இது பிராப்பர்டி ரவுண்டுடா.. குடைய வெச்சு அப்பிடி ஆடக்கூடாது, நட்டுக்கா நிப்பாட்டி நீ அது மேல ஏறி நின்னுருக்கணும்.கான்செப்ட் புரியவேயில்ல. நீ குளிக்க போம்போது அவன் எட்டிப் பாக்கிறான், சரியா. இது எனக்கு புரிஞ்சுடுச்சு.. ஆனா ஆடியன்ஸுக்கு புரியாதே..

என்னோட மார்க் ஒம்போதே முக்கால்.

இவ்வாறாக கன்டெஸ்டன்டுகளும், ஜட்ஜுகளும் படுத்துறது பத்தாதுனு ஒரு ஜோடி இதை தொகுத்து வழங்குவதற்காக இருப்பார்கள். அடுத்து அவசரமாக பாத்ரூம் போகப் போவதைப் போல சொம்பை இங்கிலீஷில் (மறந்தும் தமிழ் பேசமாட்டார்) கொள கொளவென தொகுத்து வழங்குவார்.

மேலும் ஒரு கொடுமையாக 5 நிமிடத்துக்கு ஒருமுறை 10 நிமிடத்துக்கு விளம்பர இடைவேளை (பிரேக்) வரும். (பொழுது போகாத பொம்முவைப்போல கடிகாரத்தை வைத்துக் கொண்டு கணக்கு பண்ணினேன். 120 நிமிட நிகழ்ச்சியில் 85 நிமிடம் விளம்பரம் வருகிறது.)

நான் கொஞ்சம் கூட மிகைப்படுத்தாமல் சொல்லியிருக்கிறேன், பார்க்காதவர்கள் மேலும் தெரிந்துகொள்ள டிவியை நாடவும். இப்போது விஷயத்துக்கு வாருங்கள்.

இப்பிடியா பட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்கள், ஜட்ஜுகள் உட்பட அனைவரும் பெரும்பாலும் ஸ்டீரியோ டைப்பில் இயங்குவார்கள். இடையிடையே அழுகாச்சி நாடகங்கள் நடக்கும், செண்டிமென்ட் வசனங்கள் இடம்பெறும். செயற்கைத்தனமாக இருக்கும்.

ஆனால்.. இவ்வளவு கொடுமையிலும் ஒரு ஆறுதலாக, நான் பார்த்தவரையில் ஓரளவு இயல்பாகவும், வெகுளித்தனமாகவும், வெட்கத்தோடும், சிரித்த முகமாயும் கமெண்டுகளையும், தீர்ப்பையும் வழங்கும் ஜட்ஜாக ரம்பாதான் தெரிகிறார். அதோடு ஒருமுறை அவர் அனைவர் மாதிரியும் மிமிக் செய்து காண்பித்தபோது அவரது நகைச்சுவை உணர்வும் மிளிர்ந்தது.

- தாமிரா

என்னங்க உங்கம்மா ஏதாவது சீரியல்ல நடிக்கப் போறாங்களா..?

இல்லியே.. ஏண்டி கேக்கறே..?

அவளை வாழ விடமாட்டேன்.. எப்படி நிம்மதியா இருக்கறான்னு பார்க்கறேன்' ன்னு சொல்லிட்டு திரியுது..!

கமலின் பார்ப்பனிய முகம்

பார்ப்பனர்களை அப்பாவியாக சித்தரிக்கின்ற அரசியலுக்கு துணை போகின்ற கமல்ஹாசன் இந்துத்துவத்தின் இன்னொரு அரசியலுக்கும் தசாவதாரத்தின் மூலம் துணை போகின்றார். பாபர் மசூதி பிரச்சனைக்குப் பின் நடைபெற்றுவரும் இந்த அரசியலை சற்று சுருக்கமாகப் பார்ப்போம்.

'அறை எண் 305இல் கடவுள்' படத்தில் ஒரு காட்சி வரும். பிரகாஸ்ராஜ் ஒவ்வொரு மதத்தினதும் கடவுளின் வடிவத்தில் தோன்றுவார். இந்து மதத்தின் முறை வருகின்ற போது அங்கே விஸ்ணுவின் வடிவத்தில் பிரகாஸ்ராஜ் தோன்றுவார். இதுதான் அந்த அரசியல்.

சில பத்து ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த தமிழ் சினிமாவின் பக்திப் படங்களைப் பார்க்கின்ற போது விஸ்ணு ஒரு துணைப் பாத்திரமாகத்தான் இருந்தார். இரண்டு மூன்று வசனங்களுக்கு மேல் அவருக்கு இருக்காது. தெலுங்கிலிருந்து டப்பிங் செய்யப்பட்ட ?பக்த பிரகாலதா? போன்ற ஒரிரு திரைப்படங்களைத் தவிர மற்றைய பக்திப் படங்கள் அனைத்தும் ?சிவமயமாகவே? இருந்தன.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தமிழ்சினிமாவில் இந்துக்களின் முதன்மையான கடவுள் என்றால் அது சிவன்தான். இன்றைக்கு நிலைமை மாறி விட்டது. சிவன் பின்தள்ளப்பட்டு விஸ்ணு முன்னிறுத்தப்பட்டு வருகின்றார். அதுவும் பாபர் மசூதி விவகாரத்திற்கு பின்பு ராமர், விஸ்ணு, கிருஸ்ணர் போன்ற கடவுள்கள் முன்னிறுத்தப்படுவது அதிகரித்துள்ளது.

முன்பு தமிழ் சினிமாவில் நாமத்தோடு கூடிய முகங்களை வெகு குறைவாகத்தான் பார்க்கலாம். அப்படி வருகின்ற முகங்களும் அநேகமாக நகைச்சுவைப் பாத்திரமாகத்தான் இருக்கும். ஆனால் இன்றைக்கு கிராமத்தில் இருந்த வருவதாகக் காட்டப்படும் பாத்திரங்கள்தான் அநேகமாக விபூதியை பூசிக் கொண்டு வருகின்றன. நகரத்து நாயகர்கள் நாமத்தோடு வருகின்றார்கள். பார்ப்பனப் பாத்திரங்களைக் காட்டுவது என்றால் கிராமமோ, நகரமோ அங்கே நாமம்தான் இருக்கின்றது. கடந்த சில வருடங்களாக மெது மெதுவாக நடந்து வருகின்ற இந்த மாற்றம் தற்பொழுது யாரும் உணராத வண்ணம் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது.

மிகவும் திட்டமிட்டுச் செய்யப்படும் நுண்ணியமான அரசியல் இது. ராம ஜென்ம பூமி விவகாரத்தில் பார்ப்பனிய இந்துத்துவ சக்திகள் விரும்பியது போன்று இந்துக்கள் என்று கருதப்படுபவர்களில் பெரும்பான்மையான மக்கள் ராமருக்காக கொதித்து எழவில்லை. இதற்கு தந்தை பெரியார் போன்றவர்கள் ஏற்படுத்தியுள்ள விழிப்புணர்ச்சி ஒரு காரணமாக இருந்தாலும் வேறு ஒரு காரணமும் இருக்கிறது.

தம்மை இந்துவாக கருதி இந்துக் கடவுள்களை வணங்குகின்ற எததனையோ பேர் ராமனையோ, விஸ்ணுவையோ வணங்குவது இல்லை. ராமனை ஒரு கதையின் நாயகனாக மட்டும் கருதுகின்ற கோடிக் கணக்கான இந்துக்கள் இருக்கின்றார்கள். இவர்கள் சிவன் போன்ற வேறு கடவுள்களை தமது முதற் கடவுளாக வணங்கி வருபவர்கள். இவர்களுக்கு மத நம்பிக்கை இருந்தும், ராம ஜென்ம பூமி விவகாரம் இவர்களிடம் பெரிய தாக்கம் எதையும் ஏற்படுத்தவில்லை.

இந்த நிலையில் விஸ்ணு சார்ந்த கடவுள்களை மக்களிடம் முன்னிறுத்துவதற்கு பல வழிகளில் இந்துத்துவ சக்திகள் முயன்று வருகின்றன. இந்த திட்டத்தின் ஒரு பகுதிதான் சினிமாக்களில் விஸ்ணு, ராமர் போன்றவற்றை இந்து மதத்தின் பெரும் கடவுள்களாக முன்னிலைப் படுத்துவது என்பது. இந்த வேலையை 'தசாவதாரம்' திரைப்படம் மிகச் சிறப்பாகச் செய்கிறது.

மணிரத்தினத்தின் பம்பாய் திரைப்படம் இந்துத்துவத்திற்கு சார்பான படமாக சிலரால் விமர்சிக்கப்படுவது உண்டு. மணிரத்தினமும் 'துலுக்கச்சி' போன்று சொற்களின் மூலம் தன்னுடைய உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியிருந்தாலும், 'பம்பாய்' திரைப்படத்தை ஆழமாக ஆராயாது விட்டால், மணிரத்தினத்தின் இந்துத்துவ சிந்தனையை கண்டுபிடிப்பது மிகக் கடின மாகி விடும். அந்தளவிற்கு மணிரத்தினம் தன்னை நடுநிலையாளராகக் காண்பிக்கும் நோக்கோடு படத்தில் வரும் காட்சிகளை அமைத்திருப்பார்.

இஸ்லாமியர்கள் வன்முறையில் இறங்குகின்ற காட்சி வந்தால், அடுத்ததாக இந்துக்கள் வன்முறையில் இறங்கு கின்ற காட்சி வரும். ஒரு இஸ்லாமியர் கொல்லப்படும் காட்சி வந்தால், அடுத்து ஒரு இந்து கொல்லப்படும் காட்சி வரும். இப்படி இரு தரப்பும் சமமான முறையில் தாக்கப்படுகின்ற மற்றும் தாக்குகின்ற கட்சிகளை மணிரத்தினம் கவனம் எடுத்து உருவாக்கியருப்பார்.

இந்தக் குறைந்தபட்ச நடுநிலைமையைக் கூட கமல் தன்னுடைய தசாவதாரம் படத்தில் வெளிப்படுத்த வில்லை. முற்று முழுதாகவே வைணவ சார்பு நிலை எடுக்கின்றார்.

தசாவதாரம் திரைப்படத்தின் கதை எல்லோருக்கும் தெரிந்ததுதான். 12ஆம் நூற்றாண்டில் படம் ஆரம்பிக் கின்றது. சைவ மன்னனாகிய இரண்டாம் குலோத்துங்கன் பெருமாளின் சிலையை பெயர்த்து எடுக்கின்றான். அதை தடுக்க முயல்கின்ற வைணவப் பார்ப்பனராகிய ரங்கராஜன் நம்பி (கமல்) சைவ மன்னனாலும் சைவர் களாலும் துன்புறுத்தப்பட்டு பெருமாளின் சிலையோடு சேர்த்து கடலில் வீசி சாகடிக்கப்படுகின்றார்.

அந்தக் காட்சி முழுவதும் சைவர்கள் வில்லன்களாகத் தான் சித்தரிக்கப்படுகிறார்கள். 'கல்லை மட்டும் கண்டால்' பாடலின் வரிகளும் சைவத்தை தாழ்த்தி யும், வைணவத்தியும் உயர்த்தியும்தான் எழுதப்பட்டிருக் கின்றன. 'பெருமாள் புராணம்' அத்துடன் முடிந்து விடவில்லை. படம் முழுவதும் பெருமாள் வருகின்றார். கடைசியில் சுனாமி உருவாவதற்கு காரணமாக இருந்து சில இலட்சம் மக்களை கொன்று கோடிக் கணக்கான மக்களைக் காப்பாற்றுகின்றார்.

இந்த இடத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டும். தசாவதாரம் பற்றி புளகாங்கிதப்பட்டு விமர்சிக்கும் பகுத்தறிவு நண்பர்களும் உண்டு. கமல் மதத்திற்கு, கடவுளுக்கு எதிராக வசனங்களைப் பேசுகின்றார், பெருமாள் சிலையை சுடுகாடு வரைக்கும் தூக்கிக் கொண்டு ஓடுகின்றார், அதை தூக்கி எறிந்து விளையாடு கின்றார், 'கடவுள் இருந்தால் நல்லா இருக்குமே' என்று வசனம் பேசுகின்றார் என்றெல்லாம் தமக்கு சார்பான விடயங்கள் பற்றி எழுதியும் பேசியும் தசாவதாரம் பகுத் தறிவைப் பறைசாற்றும் ஒரு திரைப்படம் என்று அடித்துக் கூறுகிறார்கள்.

ஆனால் இவர்களின் விமர்சனத்தில் அடிப்படை யிலேயே ஒரு தவறு இருப்பதாக நான் கருதுகிறேன். படத்தின் நாயகனின் கோணத்தில் இருந்து விமர்சனத்தை செய்யக் கூடாது. பார்வையாளனின் கோணத்தில் இருந்துதான் ஒரு படத்தை விமர்சிக்க வேண்டும்.

பெருமாள் சிலை தூக்கி எறியப்படுவதைப் பார்க்கின்ற அதே பார்வையாளன்தான், அந்தச் சிலை ஒவ்வொரு முறையும் நிமிர்ந்த நிலையில் கம்பீரமாக பரவசப் படுத்தும் பின்னணி இசையோடு தரையில் வந்தமர்வதை யும் பார்க்கின்றான். அப்பாவிக் கோவிந்து (கமல்) 'கடவுளுக்கு' பக்கத்தில் தான் நிற்பதை அறியாமல் 'கடவுள் இருந்தால் நல்லா இருக்கும்' என்று வசனம் பேசுவதையும் பார்க்கின்றான்.

சுனாமி வந்தது பற்றி கமல் செய்யும் தர்க்கங்களை கேட்கும் கடவுள் நம்பிக்கையுள்ள பார்வையாளன் சுனா மி வந்ததற்கு காரணமான சில விடயங்களை படத்தில் கவனிக்கின்றான். கோடிக்கணக்கான மக்களை காப்ப தற்கும், தான் மீண்டும் வெளியில் வருதற்கும் சுனாமியை பெருமாள் கொண்டு வருகின்றார். ஆயினும் சுனாமியில் இலட்சக் கணக்கில் மக்கள் இறக்கின்றனர். அதற்கும் பார்வையாளன் சில காரணங்களை படத்தில் காண் கின்றான். பெருமாளை கடலில் வீசியதால் ஏற்பட்ட பாவத்தாலும், பார்ப்பான் ஒருவனை துன்புறுத்தி பெருமாளோடு கட்டி கடலில் வீசியதால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோசத்தாலும் இந்த அழிவு நேர்ந்தது என்பது அந்தப் பார்வையாளனுக்குப் புரிகிறது. புரியாது போய் விடுமோ என்ற அச்சத்தில் ரங்கராஜ நம்பியும் பூணுலை உயர்த்தி வசனம் வேறு பேசி வைக்கிறார்.

பெரும்பான்மையான பகுத்தறிவாளர்களை தன்னுடைய கோணத்திலும், பெரும்பான்மையான கடவுள் நம்பிக்கையாளர்களை பார்வையாளனின் கோணத்திலும் படத்தைப் பார்க்க வைப்பதில் கமல் கண்ட வெற்றிதான், இன்றைக்கு இந்தப் படம் இப்படித் தாறுமாறாக வசூலைக் குவித்துக் கொண்டிருக்கிறது.

பகுத்தறிவாளர்களை திருப்திப்படுத்தும் படத்தின் வசனங்களும் காட்சிகளும் இருக்கட்டும். கடவுளை நம்புபவர்களின் மனதில் கமல் பெருமாளை பதிய வைத்து விட்டார். அதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம். வெளிப்படையாகவே வைணவத்திற்கு போட்டியான சைவத்துடன் மோதி, தினைமாக்களில் வைணவம் வெற்றி பெறுகிறது.

பாபர் மசூதி பிரச்சனைக்குப் பிறகு அதிகரித்த அளவில் வைணவம் சார்ந்த கடவுள்களை முன்னிறுத்தி நடத்தப்பட்டு வரும் பல்வேறு விதமான பரப்புரைகளுக்கு சினிமாவும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்ற நிலையில், அதற்கு கமலும் தன்னுடைய தசாவதாரம் திரைப்படம் மூலம் துணை போய்விட்டார்.

(தொடரும்)

வி.சபேசன் (www.webeelam.net)

சத்யம்: ஒரு நிஜ விமர்சனம்



'சட்டமும் சாமியும் ஒண்ணு. சாமிதான் கண்ணை குத்தணும், சட்டம் தான் கடமையை செய்யணும்'ங்கற ஒரு அருமையான குழந்தைத்தன மான ஒரு கருத்தை 25கோடி ரூபாய் செலவு செஞ்சு நம்ம வெறுப்பேத்தியிருக்காங்க.

சின்சியரான போலீஸ் ஆபீசர் சத்யமாக விஷால். உடலை நன்ற ாககட்டுக்கோப்பாகவைத்திருக்கிற ார். விறைப்பாக நிற்கிறார். ரோபோ போல் அங்கும், இங்கும் திரும்புகிறார்.

இயக்குனர் ராஜசேகர் இவரை ஏத்தி விட்டே படம் வாங்கியிருக்கார் போலருக்கு

படத்துல ஹீரோவுக்கு ஒரு பந்தாவான அறிமுக காட்சி இருந்து பார்த்து இருக்கோம். ஆனா படத்தில் முதல் பாகத்தில் முக்கால் வாசி நேரம் அறிமுக காட்சி போலவே பத்து சீன் வந்தா.. ஆவ்...

நயந்தாரா.. விஷால் போலவே அவரும் நல்லா உடம்பை மெயின்டென்யின் பண்ணியிருக்காரு. அவங்களோட சம்பளத்தை ஏத்தியிருக்காங்க, அத தவிர நடிப்புல எந்த ஏத்தத்தையும் காணோம். அதுசரி கதையில் அவருக்கு ஏதாவது கொடுத்தாதானே ஏத்திக்கறத்துக்கு.

படத்துல வில்லன் போல வரும் கன்னட சூப்பர் ஸ்டார் உபேந்திரா.. சூப்பர். அவருடைய பாடி லேங்குவேயும், நடையும், சிம்பிளீ சூப்பர். அதோட அவரோட கேரக்டருக்கு கொடுத்திருக்கும் அழுத்தத்தை விஷாலுக்கு கொடுத்திருந்தா படமும் நல்லா இருந்திருக்கும்.

இசை: ஹாரிஸ் ஜெயராஜாம்...

ஒளிப்பதிவு: R.D. Rajasekar சும்மா சொல்லக் கூடாது, படத்துல அவருக்கு கொடுத்த காசுதான் பிரயோஜனம். நம்ம காசுக்கும் அது தான் ஓரத்.

பாயிண்ட் ஆப் வியூ இல்லாத கதையினால். விஷால் என்னதான் விழுந்து புரண்டு சண்டை போட்டாலும், ஒண்ணும் வேலைக்காகல, தேவையில்லாம, அவங்க அம்மாவையெல்லாம் சாகடிச்சு.. சசு..சசு...

மொத்தத்துல கொடுத்த குடுத்த காசு தண்டம்.

- கேபிள் சங்கர்

இதனைக் குறித்துக் கொள்ளுங்கள்

பிரித்தானியா வாழ் தமிழர்களின் வியாபார தகவல்களை அறிந்து கொள்ள
தமிழர்களுக்கு சேவை செய்யும் நிறுவனங்களை தெரிந்து கொள்ள
இந்த இணையத்தளத்திற்கு வாருங்கள்

தமிழ் ஒலைகள், முரசம் ஆகியன உங்கள் வீடுகளில் இல்லாத பட்சத்தில்...

www.orudirectory.com

உங்கள் நிறுவனங்களையும் இதில் சேர்க்க அழையுங்கள்

020 7043 4316



காலணியே கதாநாயகன்! (Children of heaven)

எத்தனையோ கோயில்களில், மண்டபங்களில் மற்றும் எங்கெங்கோ நமது செருப்பை, காலணியை தவற விட்டிருப்போம். அதனை பற்றி அந்த சமயத்தில் நினைத்து கவலை படுவோம். அதன் பிறகு புது காலணி வாங்கிய பின் தொலைந்த செருப்பை பற்றி நினைத்து கூட பார்க்க மாட்டோம். படம் முழுக்க காலணியே கதாநாயகனாக அல்லது முதன்மையான கதாபாத்திரமாக நடிக்க முடியுமா.... முடியும் என நிரூபித்திருக்கிறது மஜீதியின் படைப்பான இரானிய திரைப்படம் 'சில்ட்ரேன் ஆப் ஹெவென்' (Children of heaven).

ஒரு சிறுவன் ஒரு சிறுமி, ஒரு ஜோடி காலணி. இது தான் படமே. இதனை வைத்துகொண்டுபடம் முழுக்க இருக்கை நுனியில் அமர வைத்திருக்கிறார் இயக்குனர் மஜீத் மஜீதி.

ஒரு முதியவர் ஒரு ஷூவை தைத்து கொண்டிருக்கிறார். தைத்து முடித்தும் ஷூக்களை அருகில் வைத்து விட்டு அம்மா வாங்கி வர சொன்ன உருளை கிழங்கை எடுத்து கொண்டிருக்கும்போது குப்பை எடுக்க வந்த கண் இல்லாத ஒருவர் செய்தி தாளில் சுற்றி வைக்கப்பட்டிருந்த ஷூவையும் தவறுதலாய் எடுத்து போய் விடுகிறார்.

தேடிப்பார்க்கும் சிறுவன்.. அழுகையுடன் வீட்டுக்கு வருகிறான். அவர்கள் குடும்பம் ஏழை குடும்பம். தந்தை உப்பு கல்லை வாங்கி உடைத்து வீடுகளில் விற்று பணம் சம்பாதிப்பவர். அம்மாவுக்கோ சீக்கு. தங்கையின் ஷூவை தொலைத்து விட்டதாக அவளிடம் கூறுகிறான் சிறுவன். தங்கையோ அண்ணனை அப்பாவிடம் காட்டி கொடுத்து விடாமல் தான் ஷூ போடவில்லை என்றால் பள்ளியில் அனுமதிக்க விடமாட்டார்களே என வருந்த அதற்க்கு ஒரு யோசனை சொல்கிறான் அண்ணன். இரானில் காலையில் பெண்கள் பள்ளியும் மாலையில் ஆண்கள் பள்ளியும் இயங்கும்.எனவே காலையில் தங்கை அண்ணனின் ஷூவை போட்டு செல்ல வேண்டியது. மதியம் வேக வேகமாக ஓடி வந்து பாதி வழியில் பள்ளி செல்லும் வழியில் காத்திருக்கும் அண்ணனிடம் தங்கை கொடுத்துவிட வேண்டியது. இதற்கிடையில் காணாமல் போன ஷூவை கண்டு பிடிக்க வேண்டியது என முடிவு எடுக்கிறார்கள்.தந்தையும் தாயும் அருகருகே அமர்ந்து குடும்ப கஷ்டத்தை பேசி கொண்டிருக்க....அண்ணனும் தங்கையும் மாறி மாறி தங்கள் நோட்டு புத்தகத்திலேயே எழுதி இத்தனை விஷயங்களையும் பரிமாறிக்கொள் கிறார்கள். அப்பா இருக்கும் கஷ்டத்தில் அவரை புதிதாக ஷூ வங்கி தர சொல்லி நச்சரிக்க குடும்ப கஷ்டம் உணர்ந்த அந்த பிள்ளைகள் முயலவில்லை.

அவர்களின் திட்டப்படி காலையில் பள்ளி செல்லும் தங்கை, பள்ளி முடிந்ததும் அரக்கப் பறக்க ஓடி வந்து, வழியில் நிற்கும் அண்ணனிடம் ஷூவை கொடுத்து விட்டு அவன் அணிந்து வந்திருக்கும் செருப்பை அணிந்து வீட்டுக்கு வருகிறாள்.

ஒரு முறை தங்கை பள்ளி முடிந்ததும் அண்ணனை நோக்கி ஓடி வருகையில் அவளது ஷூ பறந்து சென்று ஒரு கால்வாயில் விழுந்து விடுகிறது. அதனை துரத்தி கொண்டு தங்கை அழுதபடி ஓடுகிறாள், நல்ல இதயம் படைத்த ஒரு பெரியவர் வந்து அவளுக்கு உதவி செய்து கால்வாயில் விழுந்த அவளது ஷூவை அவளுக்கு எடுத்து தருகிறார். அவள் வர தாமதமாகி விடுவதால் அண்ணன் தாமதமாக பள்ளி செல்ல தலைமை ஆசிரியரால் தண்டிக்க படுகிறான். இப்படி ஷூவினால் அண்ணனும் தங்கையும் கஷ்டபடுவதை அருமையாக காட்டி இருக்கிறார் இயக்குனர்.

கடைகளில் விலை உயர்ந்த ஷூவை பார்க்கும் வேலையில் எல்லாம் ஷூ இல்லாமல் தங்கை கஷ்டப்படுவதை உணர்ந்து மனம் வருந்துகிறான் அண்ணன்.

ஒரு நாள் தான் கூட படிக்கும் ஒரு பெண் தனது ஷூவை அணிந்திருப்பதை பார்த்து விடுகிறாள் தங்கை. உடனே அவள் தனது சகோதரனிடம் சொல்ல, அவர்கள் அந்தப் பெண்ணின் வீட்டுக்கு செல்கிறார்கள். அப்போது தான் அந்தப் பெண் தங்களை விட ஏழை என்றும் அவளது தந்தை தான் அந்த குப்பை எடுத்து செல்லும் கண் பார்வையற்ற அந்த பெரியவர் என்றும் உணர்ந்து அவளிடம் ஷூவை கேட்காமல் வந்து விடுகிறார்கள்.

அவர்களுக்கு அல்வா மாதிரி ஒரு சேதி கிடைக்கிறது. ஆம் அந்த சிறுவனின் பள்ளியில் நடக்கும் ஓட்ட பந்தயம் தான் அது. முதல் பரிசு மற்றும் இரண்டாம் பரிசு மேல் அந்த சிறுவனின் கவனம் செல்லவில்லை. மூன்றாம் பரிசு ஒரு விலை உயர்ந்த ஷூ. அனைவரும் முதலாவதாக வரவேண்டும் என தான் நினைப்போம். ஆனால் அந்த பாசம் மிகுந்த அண்ணனோ அந்த போட்டியில் எப்படியாவது மூன்றாவதாக வந்து அந்த ஷூவை பரிசாக பெற்று தங்கைக்கு பரிசளிக்க வேண்டும் என விரும்புகிறான்.

அடுத்து நடைபெறும் ஓட்டப் பந்தயம் தான் படத்தின் கிளைமாக்ஸ். கிளைமாக்ஸ் மட்டுமே படத்தில் இருபது நிமிடங்கள். நம்மை நகம் கடிக்க வைத்து அடுத்து என்னாகுமோ என மனம் பதைபதைக்க வைக்கிறது.

உலகின் பல விருதுகளை தட்டி சென்ற திரைப்படம். ஈரானிய திரைப்படங்களை உலக தரத்துக்கு எடுத்து சென்ற மிக எளிமையான திரைப்படம். இப்படத்தின் திரைக்கதை அமைப்பு பிரம்மிக்கத்தக்க வகையில் உள்ளது.

இத்திரைப்படத்தை அவசியம் உங்கள் வீட்டு குழந்தைகளுடன் பாருங்கள்.

- முகிலன்

முகிலன் இனி ஏன் படம் பாக்கணும்.

அருமையான விமர்சனம். இப்படியான படங்களை பார்க்கும்போது எங்கள் தமிழ்ப் படங்கள் சீ...சீ...சீ. எத்தனை கோடிகளைச் செலவு செய்து, வேற்று மொழி நடிகைகளைக் கூட்டி வந்து, அரைகுறை ஆடைகளுடன் ஆடவிட்டு..

ஐயோ வேண்டாம். விடுங்க.

சினித்துளி

பாலுமகேந்திராவிற்கு வந்த சோதனை

பாலுமகேந்திரா இயக்கவுள்ள 'அனல்காற்று' படத் துக்கு பூஜை போட்டு மாதங்கள் கடந்தும் இன்னும் படப்பிடிப்பு தொடங்கவில்லை. கதாநாயகியை மைய மாக வைத்து உருவாக்கப் பட்டுள்ள இந்தக் கதையில் முன்னணி ஹீரோயின் நடித்தால்தான் பொருத்தமாக இருக்கும் என எண்ணிய இயக்குநர். அஸின், த்ரிஷா, மாளவிகா, நக்மா உள்ளிட்ட பலரையும் கேட்டாராம். ஆனால் கால்ஷீட் தேதி, சம்பளம் போன்ற காரணங்களால் அவர்கள் நடிக்க இயலவில்லை.

இதனால் ஒரு புதுமுகத்தை அறிமுகமாக்கி அவரை முன்னணியாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் பாலுமகேந்திரா. படைப்புத் திறனும் அழகியல் தன்மையும் கொண்ட பாலுமகேந்திரா நினைத்தால் ஒரு புதுமுகத்தின் மீது மட்டுமல்ல.. திரையுலகிலும் அதிர்ஷ்டக் காற்று வீசக் கூடும்.

பாம்பாட்டி நளினி

சன், கலைஞர், ஜெயா என்று பாரபட்சம் இல்லாமல் டிவி பொட்டிகளில் வில்லத்தனம் பண்ணி வந்த நடிகை நளினி தமிழ் சினிமாவில் தலைகாட்டாமல் இருந்து வருகிறார். வடிவேலுவுடன் ஒரு படத்தில் செம காமெடி பண்ணிய இவருக்கு தெலுங்கு சினிமாவில் வில்லி கேரக்டர் கிடைத்துள்ளது.

பாடுகிறார் நடிகை திரிஷா

நடிகை திரிஷா இதுவரையில் தமிழ் சினிமாவில் தனது சொந்தக் குரலில் பேசி நடிக்கவில்லை என்பது தமிழ் ரசிகர்களுக்கு நன்றாக தெரிந்த விஷயம். ஆனால் அவர் பாத்ரூம் பாடகி என்பது யாருக்கும் தெரியாத விஷயம். இந்த பாத்ரூம் பாடகிக்கு தமிழ் திரைப்படம் ஒன்றில் இந்தியாவின் முன்னணி இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் இசையில் பாடப்போகும் பாக்கியம் கிடைத்துள்ளது.

செல்வராகவனுடன் இணைகிறார் தனுஷ்

இயக்குனர் கஸ்தூரி ராஜாவின் மூத்தமகன் செல்வராகவன் 'துள்ளுவதே இளமை' படத்தின் மூலம் தனது தம்பியான தனுசை தமிழ் திரைப்பட உலகிற்கு அறிமுகப்படுத்தினார். இருவருக்கும் அது முதல் படம் என்றபோதிலும் படம் இளைஞர்களுக்கான சூப்பர் ஹிட்டாக இருந்தது.

இதை தொடர்ந்து காதல் கொண்டேன்.. புதுப்பேட்டை படங்களை தனுசை வைத்து இயக்கினார் செல்வராகவன். இந்நிலையில் தனது ஆயிரத்தில் ஒருவன் படத்துக்கு பின்னார் தம்பி தனுசை வைத்து மீண்டும் ஒரு படத்தை இயக்க திட்டமிட்டுள்ளார் அவர். சுமார் 30 கோடி மதிப்பில் இப்படத்தை கஸ்தூரி ராஜா தயாரிக்கிறார்.

அஜித், நயன்தாரா நடிக்கும் 'ஏகன்' படத்தின் கதை

ஓர் உயர் ராணுவ அதிகாரியின் மகளுக்கு கொலை மிரட்டல் வருகிறது. அவரது பாதுகாப்பிற்காக ராணுவத்தில் பணிபுரியும் அஜித்தை அனுப்பி வைக்கி றார்கள். ராணுவ அதிகாரியின் மகளை அவர் எப்படிக் காப்பாற்றுகிறார் என்பது தான் கதை. அந்த மகள்தான் நயன்தாராவா? இல்லை. ராணுவ அதிகாரியின் மகள் படிக்கும் கல்லூரியில் புரொஃ. பசராக வேலை செய்கிறார் நயன்தாரா. அவரை அஜித் மீட் பண்ண, அப்புறம் என்ன காதல், டூயட்தான். ஹிந்தியில் ஷாருக், சுஷ்மிதா சென் நடித்த 'மே ஹூனா என்ற படத்தின் ரீமேக்தான் 'ஏகன்.' விறுவிறுப்பு குறையாமல் படமாக்கியிருக்கிறாராம் ராஜு சுந்தரம்.

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ

creative artwork from **concept to design**

MOST EXCITING OFFER
FOR ALL NEEDS OF RETAILERS

BUNDLE PACKAGE

£1,999*

- FREE DEMONSTRATION & CONSULTATION
- FREE PROGRAMMING
- FREE INSTALLATION & MAINTENANCE
- 24/7 TECHNICAL SUPPORT

Spread the cost through Easy Payment Scheme starting from £12.98pw**

GREAT OFFER
FOR RETAIL SHOPS

£499*

INCLUDES HAND HELD SCANNER

CASIO TE-2200

CASIO TE-8000F

AURES ODYSSE

AURES GALEO

- இந்த சலுகையை உடன் உபயோகித்து உங்கள் லாபத்தை பெருக்குங்கள்.
- வாரம் £12.98ல் இருந்து தவணை முறை கட்டணத்தை செலுத்தி 100% Tax Relief பெற்றுக் கொள்ளுங்கள்.

*Offers valid till August 31st 2008. Prices subject to VAT. **Subject to status

TILMAX®
Quality Comes First

0208 55 55 055

WWW.TILMAX.CO.UK

e-TOURS LTD.

T: 020 8429 5200
T: 020 8429 5201
F: 020 8429 5203
E: info@e2ours.co.uk
W: www.e2ours.co.uk

Talbot House, 204/226 Imperial Drive, Rayners Lane, Harrow, Midlesex HA2 7HH

• FLIGHTS WORLDWIDE • HOTEL BOOKING • TRAVEL INSURANCE
•PACKAGE HOLIDAYS •VISA SERVICES

Special offers to India on Specific dates from £250 (inc. TAX)

Bangkok / Hong Kong £255 +TAX

Singapore / Malaysia £333 +TAX

Bombay Delhi £210 +TAX

Dubai from **£130** +TAX

Colombo £325 +TAX

Chennai £185 +TAX

Canada from **£149**

Kerala Holiday

Very Special Offer By E-Tours Only

2 Nights Houseboat
3 Nights Kovalam Beach
2 Nights Munar Kerala

inc Flights, Transfer, Meals and Travel Insurance

All These Just For

£499 per person

Sri Lanka

five star hotel 7 nights

from **£510**

including flights & transfer

All Major Credit Cards Accepted

Maestro DELTA VISA MasterCard

Emirates ETIHAD QATAR AIRWAYS SriLankan

Your Magical Gateway Into The World

9308 ATOL PROTECTED

020 8429 5200

mobile Ragu: 07771 788 598

1st estate A & K Motors A1 Euro satillite A1 Party Service Abbey Training.Net ABI DIAMOND ABIRAMI Photographers Abra Whole Sale Ltd. Accountants & Tax Consultants Adora Financial Services Lts Ahaa Takeaway AJ Accountancy Amen Solicitors AMITY Angels Anthoorium ARM Associates AsianticTaste Avis Property Agents Ayngaran International BANA Tutors Banana Leaf Restaurant Best Foods Supermarket Biravenaas Restaurant Blue Moon Cars Blue Sky Fresh Food Business Finance Consultancy Caaveri Ltd. Capital Autos Ltd. Car Insurance Car Number Plates Car Tech Graphics Carpet Care Carrier Development Services CEYCO Shipping & Eng. Log Ltd Ceylon Gifts Ceylon Nights CFC Challenger Services Cheers Off-Licence & Grocery City Tech Clockwise Property Services Collier Row News Computer Palace Cost Cutter- Bromley Coulsdon Solicitors Cover Sure CRIBS Curry Leaves Dance Club Dentist Dr.Palanivel Devi Financial Services DK Electronics Dosa n Chutney Dulhania E J Transport Ltd e talk Eastern Fire EDMONTON SAYAS Edutec Training Centre EElavan Builders ELC Solicitors ENGINETEC MOTORS e-tours Euro Union Eyago Lingo Kid Farm Food Express FAST CASH Felix Fenix Property Investment Fine Arts Teachers Fine Italian Foods Flat for sale Forward Real Estate Fusion Plumbing Future Home G & M Builders G.K.Gardning Ganapathy Food & Wine Ganesha Cash & Carry Ganga Restaurant Geetham Food & Wine Genius Creaters Gerald & Co Gfm Design GLEN CARRIERS Ltd. Good Hope Property Goran Gates Estate Agents Gowri Tours & Travels GYPS Pest Control Services Habib Bank AG Zurich Harin Restaurant Harrow Convenience Store Hb Accountancy Services Herba Naturelle Herbal Ayur Massage Here & Now Hips Hiris Ltd. Holiday Air Hotel Westeern HSMP UK VISA HYPERTECH/Citytech Immigration IRO Indra Sebastian Solicitors Insight Systems IOM London IPOS Solutions J K Accountants Jacobs Solicitors Jaffna College OBA Jaffna Mini Market Jarlltheavy Wedding service Jegatheeswaram Temple Jey's Shop fitters Ltd JK Link Motors jk mithun JR PRINT JSN Plumbing and Electricals Ltd. Jubilee Food Wine Just Bedrooms JVDM Private Ltd K & R Enterprises Ltd K Autos Kanna Euro Enterprises Katpahaga Vinagar Ahalayam Kerala Ayurvedic Health Clinic KK Digital Video & Graphics Krish Accounting Service KS Suppliers KUMARANS TEXTILE Lakshmi Video & Decorations Learna LEWI- SHAM GOLD HOUSE Lexis Law Solicitors Linga & Co LINK AIR Local Community Housing London Accident Claims MalarSupermarket Man&Co Markandan& Co. Markanden & Uddin Solicitors Maruthi Cash & Carry Matrix Beauty Parlour Matrix Properties Services Ltd Metallic Motors Millennium Accountants Mini Bus for Hire Mithus MNP FINANCIAL CONSULTANTS Mollison Money EXpress Money Transfer- Rishi Agency MONTAG Swiss Watch Mortgage Link Mortgage Solutions Mo's Restaurant & Take Away NACS Kerala Ayurveda NAG & CO Nallur Kumaran NANTHA DIGITAL VIDEO Nathan & Chelva Solicitors Nathan & Co Nathan Repairs & Maintenance Nathan Suresh & Amirthan Solicitors National Legal Services NAVA Systems Nekkasat Ness & Co NEW ASHLEY CASH & CARRY New Lanka Hopper Hut New London College New Video Vision News Plus NIRU NS Motors NVS Cash & Carry On Track Academy (UK) Oxford College Oxygen Chettinhad Cuisine Palm Palace Party Crafts Party Point Party Services / Kurunji Restaurant PENTAVOX (U.K.) Ltd. Perfect Kitchens & Bedrooms PERMA Pitman Training Centre PORT LAND Portland Estate Agent UK Ltd. POS TECH Premier College Pre Uni (UK) Premier Marketing Priya Restaurant R.S. Finance Radiance Consultancy Ltd Ragarfield Ragu Travels & Estate agents RAINBOW RAJ LAW SOLICITORS Rama & Company Ramiy Record RANI TAILORING Rasia & Co Ratna & Co Solicitors RAVE CHANTHIRA Rising Sun Hotel Riyas Tailors Royal Saloon S R News S S Estate Agent Sadya Restaurant Safari Bar & Restaurant Sai Constructions Sai Divine Arts Sai MOT Centre SAM Solicitors Samaras Video Sangamam Jewellery Sara Solicitors Sarans Food & Wine Saraswathy Bavan SARATHA JEWELLERS Satha & Co Solicitors Select Mortgage Solutions Selvaraja Gold House Sharon Siva Business Training SK - Justicia Solicitors Sky Wings Ltd Solution 4 You Sona Tours Ltd South Lon. TWGroup SouthLondonTamilWelfareGroup SouthWestTamilTamilSportsPromotors SPECTRUM Spice Grove SPICE LAND Sri Kanth & Co Station Cars STS Mini Cabs Student Visa Suganthan STV Electrical Sudbury Hill Food & Wine Sun Shine Maintainence Sunny Estate Agency Ltd. Super Food & Wine Sydenham Cost Cutter Tamil Counselling Service Tamil Education Development Council Tamil Kalvikottam TAMNET TAMSONS Taroon Gold Smith TF Travels Thaayagam Groceries Thamil Community Thamil Community Law Centres Ltd. THARANY JEWELERY Tharisanam The Tamil Support Foundation - UK Thurai & Co Thurga Jewellers TILKO ESTATES Tilmax TLMS TNS Maintinance Service Top Marks for Maths Top Worth Financial Services TR TEC Travel Warehouse Trico International Shipping Tyre Check UKTSU UNIGLOBE Uniwest International UPSLINK URGAIN Uthayam Varathan Photograph Video For You VISION Vision Property & Mortgages Visual Business Retail Ltd Vx TELECOM LTD WEB School of Motering West Minister College Western Hut Western Jewellers & Textiles White Pigeon Worcester Park Mini Market Work Permit 4 You World Peace Organization Yall Builders

ஒரு பேப்பர் நூறு இதழ்கள்

இது எப்படி சாத்தியம்?

நீங்கள் இல்லையென்றால்

ஒரு பேப்பர் ஒன்றுதானும் இல்லை

நன்றி என்ற ஒரு சொல்லை

உங்களுக்குத் தர விரும்பவில்லை

உங்களை என்றும் நினைவில்

நிறுத்துகிறோம்.

இது வரை வெளியான 99 இதழ்களின் சாதனைகள் சில
(புகைப்படம் சாட்சியாக)

மாதத்தின் முதலாம் மூன்றாம் வெள்ளி சனி ஞாயிறு நாட்களில் உங்கள் அயலில் உள்ள கோயில்கள் தமிழ் கடைகளுக்கு செல்லுங்கள். ஒரு பேப்பரை அள்ளுங்கள். கிடைக்கக் கூடிய முழுப்பயனையும் அனுபவியுங்கள்.

அந்தக் காலத்தில இருந்து வீசயம் இருக்குதோ இல்லையோ டத்திரிகைக்கு என்று ஒரு தமிழை நாங்கள் கடைப்பிடித்தோம். எங்க கிடந்து வந்து சேர்ந்ததுகளோ? பேப்பர் அடிக்கிறம் போவழிகள் எண்டு எங்கட வயித்தில அடிக்குதுகள்.

- ஊடகச் செம்மல்

நான் தவறாமல் வாசிப்பது ஒரு பேப்பர். என்னைப் பற்றி இது மட்டும்தான் எழுதுது.

- பெண் ஈய வாதி

"ஓசி . . . ஈசி . . . பேப்பர். . ."
தமிழைக் கொல்ல வந்த ஈனப்பிறவிகள்.

- புலம் பெயர் தமிழ் வளர்ச்சிக்கழகம்.

எனக்கு விசா மட்டும் கிடைக்கட்டும் முதல் அலுவலா லண்டன் போய் உந்த பேப்பர்காரங்களுக்கு செய்வினை சூனியம் செய்யிறன் பார்.

- டென்மார்க் சூனியக்கார அம்மா.

பிரித்தானிய அரசுக்கும். பொலிசுக்கும் விடாமல் மொட்டைக் கடதாசி போட்டு ஒரு பேப்பரின் அருமை பெருமைகளை வெளிநாட்டவருக்கு தெரியப்படுத்திய பெருமை என்னையே சாரும்.

- மொட்டைக் கடதாசி ஆணையம்

உதுகள் திருந்தாதுகள்.

திருந்திறது எண்டா எப்பவோ திருந்தியிருக்குங்கள்.

நூறு இல்லை ஆயிரம் பேப்பர் அடிச்சாலும் உதுகள் நாசமாத்தான் போகுங்கள்

- டாவலர்